



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைர விழா

## சிறப்புமலர்

60

**03.03.1947 – 03.03.2007**


CP/NU/RAGALA TAMIL MAHA VIDYALAYAM
HALGRANOYA

**மமா/ நு/வ/ இராகலை தமிழ் மகா**
**வித்தியாலயம்**
**ஹல்கரனோயா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



சோதனைகளை சாதனையாக்கி !

அகரம் தொட்டு சிகரம் வரை

ஒளிகாட்டிய இத்தாயின்

மணிக்கொடி ....


பாரெல்லாம் புகழ்பரப்ப ....

மண்ணில் விதையானாலும்

இப்பள்ளியை விருட்சமாக்கிய

அனைவருக்கும் இந்நூல்

சமர்ப்பணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழினுள்ளே....

1. பாடசாலைகீதம்
2. தமிழ்மொழிவாழ்த்து
3. தமிழ்தாய்வாழ்த்து
4. ஆசிச்செய்திகள்
5. வாழ்த்துரைகள்
6. ஆசிரியர் குழாம் - 2007
7. முன்னுரை - வரலாற்றுப் பாதைகளில்
8. நூலாக்கக்குழு
9. இது எங்கள் மண்
10. இராகலை தமிழ் மகா வித்தியாலயத்தின் வரலாற்றுப் பின்னனி
11. அறுபதாம் ஆண்டில் கால்பதிக்கும் எமது பாடசாலை
12. மலையக வளர்ச்சியில் சமுக ஒன்றினைவதன் அவசியம்
13. நாட்டாரியல் ஓர் கண்ணோட்டம்
14. வாழிய நீ தாயே
15. உலகமயமாதல் எனும் எண்ணக்கரு
16. இராகலை என பெயர் வரக்காரணம்
17. பரீட்சை என்றால் அஞ்சுபவர்களுக்கு
18. காலப்பெருவெளியில்
19. என் அன்னை
20. சுனாமிப்பேரலை
21. தமிழ் இணையம்
22. புகழ் மாலை சூட்டிடுவோம்
23. வென் புறாவே
24. காத்திடுவோம்
25. சுனாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. பெருந்தோட்டக்கல்வி வளர்ச்சி எதிர்பார்த்த இலக்கை எய்திருக்கின்றதா? ( ஒரு பார்வை )

27. அடிமைத்தனம் அழிவது எப்போது

28. வரலாற்றின் அதிபர்கள்

29. பெருந்தோட்டத்துறையில் தொழிற்சங்க வரலாறு

30. தப்பு வாத்தியம் பற்றிய அறிமுகம்

31. முதல் மாணவர்கள்

32. குண்டூசிகள்

33. படித்துப்பார்

34. நாட்டார் பாடல் இலக்கியங்கள்

35. மாணவர் விபரம் - 2007

36. தாய்மை

37. அன்னை நினைவில் ஒருகனம்

38. இன்றைய இளைஞனே

39. இலக்கியம் கூறும் வாழ்க்கை நெறி

40. பாடசாலை வாழ்க்கையை பயனுள்ளதாக்குவோம்

41. உதயம்

42. நண்பனே

43. குருந்தோயா (கவிதை)

44. தொழில்நுட்ப கல்வியும் தொழில் பயிற்சியும்

45. இலங்கையில் மண்சரிவுகளும் எதிர்கால விளைவுகளும்

46. முத்திரை சேகரிப்போம்

47. தமிழ்மொழி வளர்ச்சியில் இணையத்தின் பங்களிப்பு

48. அகவை அறுபதில் ஆரம்பப்பிரிவு

49. இளைஞர்கள் அமைதியின்மை

50. சமாதானத்தின் பங்களிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51. நயன்மிகு நாட்டார்பாடல்கள்

52. பாடசாலை சுற்றாடல் சார்பான மனித உரிமைகள் பாதுகாப்பு நிலை

53. அன்பான் ஆசானே

54. வாழந்து காட்டு

55. நூல்

56. வைரங்கள் ஈடாக

57. மாணவர் பருவம்

58. முத்தமிழ்

59. அறுபதுகளின் விடியல்

60. வழிகாட்டலும் ஆலோசனையும்

61. அதிபர் திரு. கிருஸ்ணன் கால அனுபவங்கள் சில
(ஒரு மாணவனின் பகிர்வு)

62. சமூகக்கல்வி ஒரு பாடசாலை பாடமாக ஆரம்பிக்கப்பட்டமை

63. இலங்கையின் கல்வி வளர்ச்சியில் விளையாட்டின் பங்கு

64. ஆறுமுகநாவலரின் பணிகள்

65. எங்களையும் கூட்டிச்செல்

66. பாரதி இன்றிருந்தால்

64. நினைவுகளுடன்

65. போசிப்பதல்ல உன் வேளை

66. சமூகத்தில் பாடசாலை

67. இலட்சனை வைரவிழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை கீதம்

ஏற்றிடுவோம் ஒரு தீபம்
என்றும் சுடர்விடும் தீபம் ii
இராகலை தமிழ் மகா வித்தியாலயம்
இகந்தனில் உயர்ந்திட - நாம்
ஏற்றிடுவோம்......

மனவளமே உயர்வளமாம்
மானுடமே உன்னதமாம் ii
எழிலுடை உணர்வுடன் நாமே
இனியன செய்திடுவோமே !
என்றும் ஐயம் பெறவே
இன்பம் சூழ்ந்திடவே
வளமுடன் வாழ்வதன் மகத்துவம் சுடர்விட
வழியமைத்திடும் அன்னை
புகழ் வளர்ந்திட உறுதி கொண்டே
ஏற்றிடுவோம்......

மறைந்திருக்கும் திறைமைகளை
வளர்க்குமே நல் அறிவதனை
அவனியில் சுடர் விட செய்வாள்
ஆளுமை ஒளி பெற வைப்பாள்
பல கலை நாம் பெறவும்
பண்பாடமைவுறவும்
தாய் தந்தையருடன் சற்குருவும் - புவிச்
சகலரும் உயர்ந்திட நாம்
சத்திய வழி நடப்போம்.

ஏற்றிடுவோம்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழிய வே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வன் மொழி வாழிய வே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மனம் வீசி
இசை கொண்டு வாழியவே!

எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே!

வானம் அளர்ந்த அனைத்தும் அறிந்திடும்
வளர் மொழி வாழியவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் தாய் வாழ்த்து

காதொளிருங் குண்டலத்தாள்
கனிமொழியாள் வாழ்க
கைக்குவளை யாபதிகொள்
கன்னிகையாள் வாழ்க

மேதகு மென் மார்பிடைச் சிந்
தாமணியாள் வாழ்க
மின்னுமணி மேகலை சூழ்
மெல்லிடையாள் வாழ்க

சீத மலர் பாதமொளிர்
சீலம்புடையாள் வாழ்க
சேர சோழ பாண்டியதர் தம்
செல்வ மகள் வாழ்க
நீதியுறுஞ் செங்கோளாய்
தூயகுறல் தாங்கும்
நிகரறியாச் செந்தமிழ்த் தாய்
நீடுழி வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Minister : 081-2385373
081-4472879

Fax : 081-2387384

Secretary : 081-4473846
081-2384173

Fax : 081-2387410

**S. ARULSAMY J.P.**
**MINISTER**
**Ministry of Industries, Sports, Estate Infrastructurer, Rural Development, Womens Affairs, Hindu Cultural Affairs and Education (Tamil)**
**CENTRAL PROVINCIAL COUNCIL**


My Ref. Your Ref. Date

## ஆசிச்செய்தி

எழில் கொஞ்சும் மலையகத்தின் பனிபடர்ந்த மலைசிகரகங்களுகிடையில் அழகான கல்விச் சோலையாக அமைந்திருக்கும் இராகலை தமிழ் மகா வித்தியாலயம் பெருந்தோட்டத் துறையைச்சார்ந்த பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் பெரும்பங்கு வகித்து கல்வியின் முழுமையை வியப்புடன் நோக்கி 2007ம் ஆண்டு மார்ச் மாதம் மூன்றாம் திகதியுடன் தனது 60 ஆண்டுகளை பூர்த்தி செய்த இறுமாப்புடன் வைரவிழா கொண்டாடுவதையும் அதனை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்கு நான் ஆசிச் செய்தி வழங்குவதையிட்டும் மனநிறைவு கொள்கின்றேன்.

மனிதனாக பிறந்த நம்மிடம் படைப்பாற்றல், பகுத்தறிவு, செயல்திறன், சேவை உணர்வு, சிந்திக்கும் உணர்வு ஆகியன இருத்தல் வேண்டும். இவற்றை தகுந்த முறையிலே பயன்படுத்தினால் தலை நிமிர்ந்து தன் மானத்துடன் வாழலாம். நாம் வாழ்க்கை என்ற நல்ல நிலத்தை பெற்று அவற்றில் கல்விப் பயிரை நன்றாக வளர்க்க திறமை என்ற உரத்தை முறையாக இட்டால் நல்ல மனப்பாங்கு என்ற விளைச்சலை அறுவடை செய்யலாம்.

எனவே இலங்கை மாதாவின் மடியிலே தவழ்கின்ற நாம் அனைவரும் இந்த கல்வியின் சிறப்பினை உள்ளுணர்ந்து அதன் மெய் அறிவைத்தேடி எமது நாட்டிற்குத் தக்கதோர் நற்பிரஜையாக வாழ வழிசமைக்க வேண்டும். இவ்வாறான கற்றலின் சிறப்பில் மேலோங்கி மலையகத்தில் பல கல்விமான்களை உருவாக்கி தந்த இப் பாடசாலையின் அதிபர் உள்ளிட்ட ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருமே இணைந்து மிகவும் கடமையுணர்வுடனும், செயற்திறனுடனும் செயலாற்றி இவ்விழாவை ஏற்பாடு செய்துள்ளமை பாராட்டுக்குரியது.

எனவே இனிவரும் காலங்களிலும் புதுமைகள் பல படைத்து எமது மலையகம் கல்வித் துறையில் பிரகாசிக்க வேண்டுமெனவும், இவ்விழா சிறப்பாக நடந்தேறுவதற்கும், இம் மலர் சிறப்பாக வெளியிட அயராது உழைத்த இப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் அனைவருக்கும் எனது நல் வாழ்த்துக்களை கூறிக்கொள்கின்றேன்.

அன்புடன்

எஸ். அருள்சாமி
அமைச்சர்


**P. O. Box 41, Getambe, Peradeniya, Sri Lanka.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Muthu Sivalingam, M.P.

## Deputy Minister of Estate Infrastructure Development

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் நான் கல்வி கற்ற இராகலை தமிழ் மகா வித்தியாலயத்தினுடைய வைர விழா எதிர்வரும் 3.3.2007ம் ஆண்டு கொண்டாடப்படுவதையிட்டு மலையக பாடசாலைகளின் அடித்தள வசதிகளுக்கும் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். 1947ம் ஆண்டு இராகலை நகரில் அப்பிரதேச தமிழ் மக்களது கல்வி தேவையை பூர்த்தி செய்யும் முகமாக இராகலை தமிழ் வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலையை ஆரம்பிப்பதற்கு அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள் தனது சொந்த பணத்திலிருந்து ரூபா 5000/- இனை வழங்கியிருந்தார். மலையக மக்களின் கல்வி வளர்ச்சியில் அமரர் தொண்டமானும் இலங்கை தொழிலாளர் காங்கிரசும் கொண்டிருந்த அக்கறையினை இது வெளிப்படுத்துகின்றது. இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையானது கடந்த 60 ஆண்டு காலப்பகுதியில் இராகலை நகரை சுற்றி பரந்துபட்டு வாழுகின்ற பெருந்தோட்ட தொழிலாளர்களுடைய பிள்ளைகளின் கல்வி தேவையினை காத்திரமான முறையில் பூர்த்தி செய்துள்ளது. இப்பாடசாலையினுடைய வளர்ச்சியில் பலர் பங்காற்றியுள்ளனர். அரசியல் தலைவர்கள், தொழிற்சங்க தலைவர்கள், சமூக தொண்டர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் என பலர் பல்வேறுபட்ட காலகட்டங்களில் தங்களது பங்களிப்பினை நல்கியதன் மூலமாக நுவரெலியா மாவட்டத்திலே , அதிகமான மாணவர்களை கொண்ட தமிழ் பாடாசலையாக இப்பாடசாலை வளர்ச்சியடைந்துள்ளது. இப்பாடசாலையின் வளர்ச்சியில் பங்களித்த அரசியல், தொழிற்சங்க தலைவரான அமரர் தொண்டமான் என்றும் நினைவு கூறப்பட வேண்டியவர். இப்பாடசாலையின் அதிபர்களாக கடமை புரிந்த அமரர்களான செல்லதுரை, கிருஸ்ணசாமி, தியாகராஜா போன்றவர்களும் நினைவு கூறப்படவேண்டியவர்களாவர்.

இப்பாடசாலையில் கற்று வெளியேறிய பல பழைய மாணவர்கள் இன்றும் இலங்கையின் பல்வேறுபட்ட துறைகளில் பிரகாசித்து தமது வாழ்க்கை நிலையிலும் தொழில் நிலையிலும் உயர்ச்சிப் பெற்றுள்ளனர்.

1948ம் ஆண்டிற்கு பின்னர் மலையக மக்களுடைய குடியுரிமை பறிக்கப்பட்டதனால் இம்மக்கள் சகலதுறைகளிலும் பின்னடைந்தனர். குறிப்பாக கல்விக்கான வசதிகள் தேக்க நிலை அடைந்தது. இம்மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் தலைமைகள் இல்லாத காரணத்தினால் தேசிய நீரோடையில் சமபங்காளிகளாக தமது உரிமைகளையும் வளப்பகிர்வில் தமது பங்கினையும் பெறுகின்ற நிலைமையை எம்மக்கள் இழந்தனர். 1977ம் ஆண்டு மீண்டும் அரசியல் பிரதிநித்துவம் கிடைத்த பிறகே எம்மக்கள் அரசாங்கத்தினது அனுக்கிரகத்தினை பெறக்கூடியதாக இருந்தது. அமரர் தொண்டமான் அவர்களும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் இவ் அரசியல் பிரவேசத்திற்கு பிறகே எம்மக்களது தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய பணிகளை ஆரம்பிக்க கூடியதாக இருந்தது. 1977ம் ஆண்டிற்கு பிறகே இராகலை தமிழ் வித்தியாலயத்திற்கும், அரசாங்க நிதி கிடைக்கப்பெற்று விஞ்ஞான ஆய்வுக்கூடம், வகுப்பறைக் கட்டடங்கள், மனையியல், விஞ்ஞான, சங்கீத உபகரணங்களும் கிடைக்கப்பெற்றன. இவ் வளங்களை பெற்றுக்கொடுப்பதற்கு எனது பங்களிப்பை அரசியல் பிரதிநிதி என்ற வகையில் வழங்கியதை விட இப்பாடசாலையின் பழைய மாணவன் என்ற வகையில் பங்களிப்பு செய்துள்ளேன் என்று எண்ணியே பூரிப்படைகின்றேன். இப்பாடசாலையின் நிகழ்கால, எதிர்கால வளப்பற்றாக்குறைகளை நிவர்த்திப்பதிலும் நான் பங்களிக்க கடமைப்பட்டுள்ளேன். அதற்கான ஆக்கப்பூர்வமான வேலைகளையும் முன்னெடுத்துள்ளேன்.

இராகலை தமிழ் மகா வித்தியாலயம் பல நூறாண்டுகள் எம் மக்களுக்கு கல்வி பணியினை மேற்கொள்ளக்கூடிய தகைமையை உடையதாக மிளிர வேண்டுமென பிரார்த்திப்பதுடன், வைர விழா சிறப்புற நிகழ எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முத்து சிவலிங்கம், பா.உ.
தோட்ட உட்கட்டமைப்பு பிரதியமைச்சர்

Ministry of Nation Building and Estate Infrastructure Development
No. 177, Galle Road, Col 03
Tel : 2395757 Fax : 2542707



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Muttu Sivalingam, M.P.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை



மலையகத்தில் இராகலை தமிழ் மகா வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டு 60 வருடங்கள் ஆவதையிட்டு மிகவும் பூரிப்படைகின்றேன். இக்காலப்பகுதியில் மலையகத்தின் பல்வேறு பெறுமதிமிக்க பிரஜைகளை உருவாக்கி சமுகத்திற்கு நாட்டிற்கும் பெருமை தந்திருக்கின்றது.

இப்பாடசாலை வளர்ச்சியில் நான் அமைச்சராக இருந்த காலத்தில் என்னால் முடியுமான விஷயங்களை செய்திருக்கின்றேன். கல்வியிலும், விளையாட்டுத் துறையிலும் இப்பாடசாலை வளர வேண்டுமென பிரார்திக்கின்றேன்.

அன்புடன்

வி.இராதகிருஷ்ன்ணன்
முன்னால் மத்திய மாகாண கல்வி அமைச்சர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]

[illegible] புரிபடைகின்றன். [illegible]

[illegible]

[illegible] பிரார்த்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவில் ஆசிச்செய்தி



## இராகலை
## ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி
## தேவஸ்தானம்

இராகலை, தமிழ் மகா வித்தியாலயத்தின்
60ம் ஆண்டு வைர விழா சிறப்புறவும் இந்நூல் சிறப்புறவும்
இராகலை ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி ஆலயத்தின்
பரிபாலன சபையும் அறநெறி பாடசாலையும்
வாழ்த்துக்களை தெரிவிக்கின்றனர்.

ஆலய பரிபாலன சபை
அறநெறிப்பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## *Zonal Director Of Education - Walapane*

It,s my pleasure to have this message on diamond jubilee souvenir published by the N/W/Ragala Tamil Maha Vidiyalayam.I have no hesitation to state that this issue will maintain the high standards set in past.

As far as my pleasure to congratulate the organizers. So far this school have done great services in turning out the large number of people, Who contribute their share to the society. I wish all the success.

Feb 23, 2007

A.M.Thilakarathna,
Director of Education,
walapane.

ඒ. ඇම්. තිලකරත්න
කලාප අධ්‍යාපන අධ්‍යක්ෂ
කලාප අධ්‍යාපන කාර්යාලය
වලපනේ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இடுக்கண் வருங்கால் .......

சுதந்திர போராட்டக்காலத்தில் கல்வியறிவும் எழுத்தறிவும் ஒரு சமுகத்திற்கு மிகத்தொலைவில் காணப்பட்ட காலக்கட்டத்தில் இராகலை தமிழ் மகா வித்தியாலயத்தின்சமூகப்பிரவேசம் அன்றைய இந்திய வம்சாவளி மக்களின், எதிர்கால சந்ததியினரின் இலட்சிய பார்வைக்கு ஒரு வரப்பிரசாதமாகும். ஒரு சமூகத்தின் அடையாளமும் அதன் வாழ்வியல் அம்சங்களும் கலாசார பாரம்பரியமும் அந்த சமூகத்திற்கு வழங்கப்படுகின்ற கல்வியியல் கோட்பாடுகளே ஆதிக்கம் செலுத்துவது வரலாறு கூறும் உண்மை.

இப்பாடசாலை கடந்து வந்த பாதையில் எதிர்நோக்கிய சோதனையும் வேதனையும் சுமந்த துயரமும் அதிலிருந்து மீட்சிப்பெற்று புத்துணர்ச்சி பெற, போராடிய ஒவ்வொரு சந்தர்ப்ப சுவட்டையும் தடவிப்பார்க்கின்ற போது மனிதர்களின் பல முகங்களையும் அவர்களின் அர்ப்பணங்களையும் வாழ்வின் பல அடுக்குகளையும் இனங்காணுவது காலத்தின் கட்டாயமாகும்.

“இந்த பாடசாலை உருவாக்கிய ஒவ்வொரு ஆன்மாவும் எந்த நிலையிலும் தாழ்வு நிலையை அடையக்கூடாது” என்ற நிலையை உருவாக்குவதற்கு பலபேர் அடித்தளமிட்டு தம்மை அர்ப்பணித்திருந்தாலும் சிலரின் நாமங்களை இந்த வைரவிழாவில் மீண்டும் மீண்டும் உச்சரிக்காவிட்டால் “நன்றி” என்ற சொல் அகராதியில் அஸ்தமானமாகிவிடும். மறைந்த முன்னால் அதிபர்களான மதிப்பிற்குரிய சி.கே.ஆர்.தியாகராஜா, எஸ். கிருஸ்ணசாமி, எஸ். கிருஸ்ணன், ஆகியோருடன் தற்போதைய உட்கட்டமைப்பு மேலதிக செயலாளர் திரு. சி. நவரட்னம் ஆகியோர் இப்பாடசாலையின் உழைப்பின் அடையாளமாக நினைவு கூறப்பட வேண்டியவர்களில் முதன்மையானவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நிறுவனத்தின் தலைவர் என்ற ரீதியில் 'அதிபர்' என்ற பாத்திரம் ஓர சமூகத்தின் தேவையை நிறைவு செய்ய முடியாது. அதிபர் என்ற அந்த மாமனிதனுக்குப் பின்னால் அவரோடு இணைந்து சமூக உணர்வோடும், உழைப்பின் பாத்திரத்தின் உண்மையோடும் செயலாற்றும் ஆசிரியர் குலாம் மூலமே சாதனையின் எல்லையை அடைய முடியும் என்பதை உணர்த்திய இப்பாடசாலையில் பணியாற்றிய, பணியாற்றுகின்ற நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் இவ்வைரவிழாவில் மதிக்கப்படக்கூடியவர்கள், மரியாதைக்குரியவர்கள்.

இப்பாடசாலையின் முதல் பிரசவம் தொடக்கம் இன்றைய பிரவேசம் வரை பாதுகாவலர்களாக நின்று எந்த சறுக்கலின் போதும் சோர்ந்து போகாது, அர்ப்பணிப்புடன் செயலாற்றிய, செயலாற்றுகின்ற பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் இச்சந்தர்ப்பத்தில் பெருமைப்படுத்தப்பட வேண்டியவர்கள்.

வைர விழா என்ற உற்சாக கேடயத்தை ஏந்தி பெருமிதத்தோடு பெருமைப்படும் இப்பாடசாலையின் பலத்திற்கும், பாராட்டிற்கும் உரமூட்டியவர்கள், கடந்த 60 ஆண்டுகளில் இங்கு கல்வி கற்று, சமூகத்தின் உணர்வால் இன்றுவரை உழைக்கும் மாணவர்களுக்கே அர்ப்பணமாக அமையவேண்டும் என்பது எனது அவா.

இந்த சமூகத்திற்கும் இந்த பிரதேசத்திற்கும் ஒரு அடையாளத்தை அலங்கரித்த கல்வியாளர்கள், சட்டத்தரணிகள், வைத்தியர்கள், வர்த்தகர்கள், சுயதொழில் விற்பனர்கள், சாதனையாளர்கள் ஆகியோருடன் சமகாலத்தில் கல்வி பயிலும் சாதனை படைக்க துடிக்கின்ற இலட்சியப் பயணத்தை நோக்கிய மாணவர்கள் இதில் உள்வாங்கப்படவேண்டியவர்கள் என்ற வள்ளுவனின் வாக்கிக்கேற்ப இவ்விழாவின் ஒழுங்கிணைப்பாளர்களான அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், ஆசிரிய சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரின் செயலாற்றல் எதிர்காலத்தில் மென்மேலும் எம் பாடசாலையின் ஒவ்வொரு வளர்ச்சியிலும் புதுமை படைக்க கால்கோலாக அமைய வாழ்த்துகிறேன்.

எஸ். சுப்பிரமணியம்
மேலதிக கல்விப் பணிப்பாளர் (தமிழ்)
வலப்பனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



என் வாழ்வியல் வரலாற்றில் மறக்க முடியாத தடம் பதித்த ஆண்டு 1947. என்னை தோற்றுவித்ததும் கல்வி பாலூட்டி கற்க, வாழ வழிகாட்டி வைரவிழா காணும் ஆலயம் இராகலை தமிழ் மகா வித்தியாலயம் தோன்றியதும் இவ்வாண்டே என்று சொல்லிக்கொள்வதில் எனக்கு பெருமை.

பதினான்காயிரம் மாணவர்களின் கல்விக்கண்களைத் திறந்து வலப்பனைக்கு ஒரு வரப்பிரசாதமான இப் பாடசாலையில் 1952 ஆண்டு முதல் அரை நூற்றாண்டு களுக்கு மேலாக கற்பவனாக கற்றுக்கொடுக்கும் பேறு பெற்றவனாக தொடர்ந்து இன்று வரை இருந்து வருவதிலும் எனக்கு பேருவுவகை 60 ஆணடு கால சாதனை இன்னும் இருந்திருக்க வேண்டாமென்ற இதயத்தில் ஓர் ஏக்கமுண்டு.

கடந்து போன காலங்களில் எத்தனை இடர்பாடுகள் புறக்கணிப்புகள் இம்சைகளை எதிர்நோக்கிய இப்பாடசாலை அத்தனையும் துச்சமாக எண்ணி ஒரு உச்ச இலட்சியத்தை நோக்கி சவால்களுக்கு முகங்கொடுத்து வளர்ந்திருக்கின்றது. இப்பாடசாலைக்கு மேலும் எழுச்சிக்கான எதிர்காலமுண்டு.

கல்வி புறக்கிருத்திய செயல்பாடுகளில் காத்திரமான சாதனைகள் படைத்து பல நூற்றாண்டு விழாக்களைக் காண இவ் வைர விழா வழி சமைக்க சிறக்க வாழ்த்துவோமாக

டி. ஆர். செல்வராஜா.
முன்னாள் உதவி கல்விப் பணிப்பாளர்,
வலப்பனைஹங்குராங்கெத்த கல்வி வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அதிபரிடமிருந்து



கடந்தகால மலையக வரலாற்றினை எடுத்து நோக்கின் கல்வித்துறையில் பல புத்திஜீவிகளை உருவாக்கிய பாடசாலைகள் ஒரு சிலவே அவ்வாறான பெருமையை பெற்ற பாடசாலைகளில் ஒன்றாக எமது இராகலை தமிழ் மகா வித்தியாலயத்தினையும் நினைக்கும் போது எனது உள்ளம் பூரிப்படைகின்றது. கடந்த 03-03-1947 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையானது 03-03-2007 ஆம் ஆண்டுடன் தனது 60 வயதினை அடைந்துள்ளது. இவ் 60 ஆண்டுகளில் இப்பாடசாலையில் ஏறத்தாழ பதினான்காயிரம் மாணவர்கள் கல்வி பயின்றுள்ளனர். இவர்களில் பலர் இன்று பொறியியலாளர்களாகவும், வைத்தியர்களாகவும், சட்டத்தரணி களாகவும் கணக்காளர்களாகவும் , அரசியல் தலைவர்களாகவும் காணப்படுவது பெருமைப்பட வேண்டிய விடயமாகும். இதனைவிட இன்று எமது நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் பலர் இப்பாடசாலையின் பழைய மாணவர் என்று கூறும்போது அதன் ஆனந்தத்திற்கு அளவில்லை இதனைப் போன்றே கல்வித்துறை மட்டுமன்றி விளையாட்டுத்துறையிலும் தெற்காசிய நாடுகளில் பெயர் குறிப்பிடக்கூடிய அளவிற்கு விளையாட்டு வீரர்களை உருவாக்கியதும் இப்பாடசாலைக்குரிய சிறப்பம்சமாகும்..

இந்த பொன்னான நாளில் விருட்சமாக வளர்ந்துள்ள இராகலை தமிழ் மகா வித்தியாலயமானது இன்னும் ஆயிரக்கணக்கான புத்திஜீவிகளையும் , சிறந்த பிரஜைகளையும் உருவாக்கி இப்பாடசாலையினது பெருமைக்கும் இம்மண்ணின் புகழுக்கும் வழியமைத்திட வேண்டுமென மனதார வாழ்த்துவதுடன் கடந்த காலங்களில் இப்பாடசாலையின் புகழுக்கு காரணகர்த்தாக்களாக விளங்கிய அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழையமாணவர்கள், நலன்விரும்பிகள் போன்ற அனைவரையும் நன்றியுடன் இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூறுகின்றேன்.

எஸ் .யோகேஸ்வரநாதன்
அதிபர்
இராகலை த.ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை



60 ஆவது அகவையில் கால் பதிக்கும் இப்பள்ளியில் சேவை பல வகைகளில் இச்சமூகத்திற்கு பயன்பட்டுள்ளது. அந்த வகையில் வைர விழாவின் போது பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளராக இருப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இப்பள்ளியில் ஒரு பழைய மாணவனாகவும் ஒரு பெற்றோராகவும் நான் பெற்ற அனுபவங்களும் இப்பள்ளி ஒரு சிறந்த சமூக நிறுவனமாக செயற்பட்டு வந்துள்ளது. என்பதும் மறுக்க முடியாது. பல கல்விமான்களையும் புத்திஜீவிகளையும் ஈன்றெடுத்த இத்தாயின் வைர விழா நிகழ்வு சிறப்புறவும் வெளிவருகின்ற இந்த சிறப்பு மலர் ஆசிரியர், மாணவர், பழைய மாணவர் புத்திஜீவிகள் போன்றோரின் காத்திரமான ஆக்கங்களை தாங்கி வெளிவருவதையிட்டு பெருமகிழ்வு கொள்கிறேன்

வைரவிழா சிறப்புறவும் நூல் வெளியீடு சிறப்படையவும் வாழ்த்துக்கள் தெரிவித்துக்கொள்வதோடு என் செயலாளர் பதவி காலத்தில் எனக்கு உறுதுணையாகவும் ஆலோசனையாளராகவும் இருந்து உதவி செய்த அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

R. பாலுசாமி
பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளர்,
இராகலை தமிழ் மகா வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது வாழ்த்து மலர்கள்



இளைஞர் உழைப்பும் இயற்கை செல்வங்களும் நிறைந்த இராகலையில் அறுபதாவது ஆண்டு வைரவிழாவினை கொண்டாடுகின்ற எம் அன்னை பாடசாலை இராகலை தமிழ் மகா வித்தியாலயத்திற்கு இம்மலரினூடாக இராகலை தமிழ் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் சார்பில் வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஒழுக்கத்திலே சிறந்த உழைப்பார்வமிக்க நாட்டுப்பற்றுள்ள இன, மத, மொழி, அரசியல் வேறுபாடற்ற வகையில் மக்கள் செறிந்து வாழுகின்ற இயற்கை அழகும் இயற்கை செல்வங்களும் ஒருங்கே அமைந்து காணப்படுகின்ற குட்டி இலண்டன் என வர்ணிக்கப்படும் நுவரெலிய மாவட்டத்தின் கலைகளின் பிறப்பிடமாய் விளங்கி என்றும் இறாவா கலையுடனும் கல்வியுடனும் திகழ்ந்தது. இலுங்கையில் எங்கும் புகழ்பரப்பிவரும் இராகலை தமிழ் மகா வித்தியாலயத்தின் 60 வது ஆண்டு வைர விழா நிகழ்வுகள் யாவும் சிறப்புறவும் சிறந்த நல்ல பலனை தரவும் வேண்டுகின்றேன்.

இந்த 60 வது ஆண்டு வைர விழா எமது பாடசாலையில் நடைபெறுகின்ற வேலையில் பாடசாலை அதிபர் , ஆசிரியர்கள், மாணவர்கள், பழையமாணவர் சங்கத்தினர், நலன் விரும்பிகள், வைரவிழா ஏற்பாட்டுக்குழுவினர் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் எமது நன்றி மலர்களை தூவுகின்றோம்.

ஏவனொருவன் காலத்தின் போக்கில் செல்கிறானோ அவன் சுதந்திரமானவன் என்று கூறினார் சிந்தனையாளன் (மெனிடிக்ஸ்பினோசா) அவரின் கூற்றுக்கு இலக்கணமானவன் பாரதிர பாடிய பாரதி , சாக்கிரடிசின் அறிவு தெளிவு, பிளேட்டோவின் கூறிய நோக்கு, வால்டோரின் அஞ்சாமை பண்பு, ரூசோவின் சமுதாய பற்று நோக்கு, அனைத்தும் கொண்டு தமிழனின் மறுமலர்ச்சிக்கு அரும்பணியாற்றியவன் பாரதி எனவே அவர் காட்டிய வழியிலும் எமது பாடசாலை ஆசான்கள் கற்று தந்த அற வழியிலும் தூய்மையான எண்ணங்கள் தோன்றவும் வளரவும் அதன் மூலம் நற்பணிகளை தொடரவும் 60 ஆவது மலர்கள் பூத்த இவ்வேளையில் எமது அன்னை பாடசாலையை போற்றுவோம் - வாரீர்.

க. ஞானசேகரம் (செயலாளர்)
பழைய மாணவர் சங்கம்,
இராகலை த. ம. வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




FIRST ROW - ;Ms.R.Shanthi,(S.H)Ms.K.Amarawathi,(S.H)Ms.R.Vyjanthimala,(S.H)Mr.R.Chandren,(S.H)Mr.Ramachandren,(S.H) Mr.M.Panneerselvam(D.P)Mr.S.Yogeswaranathan(Principal),Mr.S.Franklyn(D.P),Mr.S.Selvarasu(V.P),Mr.R.Sriwathsan,(S.H) Mr.R.Dayakanthan,(S.H) Ms.I.Indranee,(S.H)Ms.M.Esther(S.H)

SECOUND ROW- ; Ms.J. Malarvili,Ms.S.Yogaranee,Ms.G. Vijaiyaabarathy Ms.A.Nesamalar, Ms.R.Shanthamala, Ms.S.Juliana Mrs. M.I.Ayesha bebee, Ms. R.K.G.Ramziya ,Ms.S.V. Priyadarshani, Ms.I.Jayaprakash ,Ms.P.Malarvili,Ms.K. Vemala, Ms.V. Nirmala, Ms.J.Jagatheeswrary,Ms.V. Vijayakala,

THIRD ROW Mrs.M. Rajeswary, Mrs.S.Punithawathy,Mr.N.S.S.D. Ranathunaga, Mr.L.Joseph,Mr.V.Vijendran,Mr.S.Krisnasamy Mr.V.Vijayabalan,Mr.S.Indiran, Mr.s.JeevanashanMr.S. Thuraiyarashan, Mr.S. Panneerselvam,Mr. S. J.Benadic,Mr.S.Thiyagaraja, Mr.J. Jayaraj, Ms.P.Shivayogeswary. D.P -(DIPUTY PRINCIPAL) V.P -(VICE PRINCIPAL) S.H -( SECTIONAL HEAD)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை ஆரம்ப நாளின்
# (1947-03-03)
# சம்பவதிரட்டுப்புத்தகத்தின் பதிவு

N/Ragalla Govt. T. M. School 1

3.3.47. This new school was opened today.
Mr. K. Kandappu is in charge as acting teacher.
This school fills a long felt need and I wish it all success.

[illegible]
Insp. of schools

.47 Today I visited this new school. Today is the opening day of this school and thereby the attendance is very poor. When I visit the school only 6 children were present. After closing the school I shall be visiting the parents with the Teacher Mr Kandappa with the idea of improving the attendance of this school.

[illegible]
A. I. of Schools
Ragala

19.3.47. [illegible]

[illegible]

28.3.47 [illegible] 29.3.47 [illegible] 7.5.47 [illegible]

K. Kandappu
Head Teacher

[illegible].5.47 Visited the school [illegible] the attendance is increasing day by day. 46/51 children were present yesterday.
I handed over some notices [illegible] to be distributed [illegible] children of school going age.
[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை



## வரலாற்றின் பாதைகளில்........!

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனை
சான்றோன் எனக் கேட்ட தாய்"

உலக வரலாறுகளில் சமூகமாற்றத்தின் அடிப்படையாக அமைந்தது சிந்தனையே .இவ் சிந்தனை புரட்சி கல்வி ஆயுதத்தால் கூர்மைப்படுத்தினாலும், ஆரம்ப காலங்களில் ஒழுங்முறைப்படுத்தப்படாத கல்வி முறையும் பின் இவை ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு வரன் முறையோடு கூடியதாக அமைந்தபோது நேரடியாக கல்விக்கும் சிந்தனைக்கும் இடையில் தொடர்பு ஏற்படலாயிற்று. உலகமயமாக்களின் கீழ் நச்சுக் கலாசாரம் ஒன்று மனித சமூகத்தில் புகுந்து அவனின் எல்லா அம்சங்களிலும் தாக்கத்தை விளைவித்துக்கொண்டிருக்கின்ற இந்த சந்தர்ப்பத்தில் கல்வி எனும் கூரிய ஆயுதம் சமூகத்தின் அடித்தள மக்களின் சிந்தனைகளை தூண்டி அடுக்காக்கத்தின் சமூக மாற்றத்தினை அடிக்கோலி நிற்கின்றது.இத்தகைய சமூக மாற்றம் உலகின் பல பாகங்களிலும் மெல்ல முகிழத்தொடங்கியுள்ளது.

மாக்சின் சமூக சிந்தனையும், டார்வினின் உயிரியல் சிந்தனையும், பாரதியின் இலக்கிய சிந்தனையும் மரபு ரீதியான கருத்தியலில் (Traditional ideal) பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தின. கல்வி வளர்ச்சியும் அறிவியல் சிந்தனையும் முனைப்புப் பெற பெற அடிமைத்தனங்களின் உரிமையின் விலாசம் மெல்ல மெல்ல கருத்தாக்கம் பெறத்தொடங்கியது. இத்தகைய வரலாற்று பரிமாணங்களில் மலையக மக்களின் வாழ்வியல் சார்ந்த சிந்தனை வரலாறு பல தடைகளுக்கு மத்தியில வெளிக்காட்டப்பட்டு வந்துள்ளது. 1815இல் ஆங்கிலேயர்களால் கண்டி கைப்பற்றப்பட்ட பின் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட இந்த சமூக குழுமம் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் பல நீண்ட பயணத்தை மேற்கொண்டுள்ளது. 1977 ஆம் ஆண்டு தோட்டப்பாடசாலைகள் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்படும் வரை தோட்டப்பாடசாலைகளுக்கு மாற்றான் தாய் மனப்பாங்கே வெளிப்படுத்தப்பட்டது. தேசிய கல்வித்தரத்தோடு ஒப்பிடும் போது தேசிய கல்விக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம் மலையக கல்விக்கு வழங்கப்படவில்லை என்பது வெளிப்படை 1947 இல் இலவசக் கல்வியின் தந்தை சி.டபிள்யு.டபிள்யு. கன்னங்கரா மலையக கல்வியின் பொறுப்பை இந்தியாவே பொறுப்பெடுக்க வேண்டும் என்று கூறிய கூற்று இதற்கு ஓர் உதாரணமாகும்.

இச்சூழ்நிலையில் 1947-03-03 இல் கால்கோலான இப்பள்ளி சுதந்திரத்திற்கு முன்னாக தனது பயணத்தை ஆரம்பித்து 60 ஆவது அகவையில் கால்பதித்துள்ளது. இதன் வரலாற்று பரிணாம வளர்ச்சியில் ஒரு வளர்முக பாடசாலைக்கான பல்வேறு நெருக்குதல்களையும் இன்னல்களையும் சந்தித்து வந்தபோதும் பல்வேறு முனைப்பான ஆழமான அகலமான சேவைகளை வழங்கிவந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1947-03-03 இல் திரு கந்தப்பு என்ற அதிபரின் தலைமையில் 34 பிள்ளைகளோடு ஆரம்பித்து 1948 இல் 95 பிள்ளைகளையும் 1949 இல் 149 பிள்ளைகளையும் கொண்டு இன்றைய நிலையில் 1500 க்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்டு மிளிர்கின்றது. 1960 ,1970 ,1990 ,2000 ஆண்டுகள் பாடசாலையின் வரலாற்றில் பல சாதனைகள் நிகழ்ந்த தசாப்தங்களாகும்.

வைத்திய , விஞ்ஞான , சட்ட ,கலை ,வணிக ,இலக்கியம், விளையாட்டு என பல்பரிமாண ஆளுமையோடு பலரை ஈன்றெடுத்துவந்துள்ளது. இவர்களால் சமூகத்திற்கு பல அளப்பரிய சேவைகளும் செய்து வருவதை பார்க்கின்ற போது இப்பள்ளி கால ஓட்டத்தால் அழிந்து போகாத அழித்துவிட முடியாத அதன் சுவடுகளை பதித்ததுடன் அதன் தாற்ப்பரியம் மிளிர்ந்து விளங்குவதைக் காணலாம்.

இற்றைவரை 20 க்கும் கீழ்பட்ட அதிபர்களின் சேவையையும் 300 க்கு மேற்பட்ட ஆசிரியர்களின் சேவையையும் இப்பாடசாலை பெற்றுள்ளதுடன், 12461 பழைய மாணவர்களுக்கும் களமாக விளங்குகின்ற இந்த பள்ளியின் அகவை 60 இல் நாமும் சேவையாற்றுகிறோம் என்று புலகாங்கிதம் அடைவதோடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த வைர விழா நிகழ்வுகள் எமக்கு வரலாற்றின் உன்னதமான நாளாகும்.

இப்பள்ளியின் வைரவிழாவை ஊடகங்கள் வாயிலாகவும் நண்பர்கள் வாயிலாகவும் நேரடியாகவும் கேள்விப்பட்டு பல திக்குகளிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் பழைய மாணவர்கள் ஆசிச்செய்திகளையும், வாழ்த்துக்களையும் வழங்கி இத்தாய்க்கு தமது வணக்கத்தை தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.அதற்காய் இத் தாய் ஈன்ற பொழுதிலும் பெரிதும் மகிழ்கிறாள்.

இப்பள்ளியின் 60 வருட பயணத்தில் இதன் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பலவழிகளிலும் பங்களிப்பு செலுத்திய ஜனாதிபதி, மத்திய அரசு அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மத்திய மாகாண அமைச்சர்கள், மத்திய மாகாண சபை உறுப்பினர்கள், வலப்பனை பிரதேச சபை தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள் நலன்விரும்பிகள், வர்த்தக பிரமுகர்கள், புத்தி ஜீவிகள், கல்விமான்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஆகியோருக்கு எமது பாடசாலை சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

"இது ஓர்
அதிசய நாள்
பிள்ளைகள் கூடி
தாயை ஈன்ற
நாள்"

இவ்வைர விழாவில் வெளிவருகின்ற இந்நூல் ஒரு தலை பிரசவத்திற்கானவலியாக எங்களுக்கு தெரிந்தாலும் இக்குழந்தை சிறப்புடன் பல அறிவு பொக்கிஷங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு மிளிர்கின்றது. நூலாக்கக் குழுவின் அயராத உழைப்பும் கணினி தட்டச்சு குழுவினரின் ஆக்கபூர்வமான சேவையை நன்றியுடன் நினைவு கூறுவதுடன், இந்த நூலை தனி ஒருவராக இருந்து இந்நூலுக்கான முழு பிரசுர செலவினையும் மனமுவந்து ஏற்றுக்கொண்ட பழைய மாணவரும் நலன் விரும்பியும் சமூக சேவையாளருமான திரு பாலசுப்பிரமணியம் (லயன்ஸ் கழகம்) அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியை பாராட்டுகின்றோம். இன்னும் இந்நூலுக்கு புகைப்படங்களைப் பெற்றுத்தந் தவர்களுக்கும் நூலின் முன் அட்டையை வடிவமைத்துத் தந்தவர்களுக்கும் இந்நூலுக்கு ஆசியுரைகள், ஆக்கங்கள் என்பவற்றை தந்தவர்களுக்கும். கல்லூரியின் நிர்வாகக்குழு, ஆசிரியர்கள், மாணவர்கள்,பெற்றோர் ஆசிரியர் சங்கம், பழையமாணவர் சங்கம் மேலும் இந்நூல் வெளிவர பல வழிகளிலும் உடல் உள நிதி ரீதியாக உதவி நல்கிய அனைவருக்கும் நூலாக்க குழு சார்பாக நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்நூல் உருப்பெறுவதற்கு நூலாக்கக்குழுவாக நாங்கள் இயங்க முற்பட்ட வேளையில் இராகலை தமிழ் மகா வித்தியாலயம் தொடர்பான ஆவணப்படுத்தலொன்று எமக்கு கிடைக்கவில்லை நாங்கள் நினைத்ததை விட தகவல் பெறுவதில் பாரிய இடையூறுகளை சந்திக்க நேர்ந்தது. பழைய மாணவர்களிடமிருந்தும் மூத்த அறிஞர்களிடமிருந்தும் பல தகவல்களைப் பெற்றுக்கொண்டபோதும் அவை போதுமானதாக அமையவில்லை. எனவே எமது அனுபவத்திற்கு அமைய நாங்கள் பல விடயங்களை தேடி ஆவணப்படுத்தினாலும் கூட இதுபோதுமானது அல்ல எனினும் இந்த நூல் 60 ஆண்டுகள் வரலாற்றை ஓரளவு கூறுகின்ற அதே வேளை பின்வருகின்ற காலங்களில் ஒரு வரலாற்று ஆவணமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இந்நூலுக்கு பல ஆக்கங்கள் கிடைத்தன. அவை அவ்வாறே பிரசுரிக்கப்பட்டுள்ளது. எனவே அவ் ஆக்கங்களுக்கான முழு பொறுப்பினையும் ஆக்கத்தாரிகளே பொறுப்பேற்றுக்கொள்வார்கள் என நம்புகின்றோம். குறுகிய காலத்திற்குள் இதனை வெளியீடு செய்வதால் எமது கவனயீனத்தால் இலக்கண, எழுத்து பிழைகள் ஏற்பட்டிருப்பின் பொறுத்துக்கொள்ளவும். இந்நூல் வரலாற்று ஆவணமாக திகழும் என்பதில் ஐயமில்லை.

மை.பன்னீர்செல்வம; பிரதி அதிபர்
(M.A.,Dip.in.Edu,Trd)
Certificate in Accontancy& Taxation
நு/வ/இராகலை த.ம.வி
நூலாக்க குழு சார்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



DIRECTOR (TAMIL SEC.) I.S.A, & PRINCIPAL--- WALAPNE ZONE



MAGAZINE PUBLICATION COMMITTEE - 2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1952 வருடம் இராகலை தமிழ் மகா வித்தியாலயத்தின் முதலாவது

## கா.பொ.த.சாதாரண தர பெறுபேறு மாதிரி

பரீட்சைப் பகுதி

1952ம் ஆண்டு ... மாதம் நடந்தேறிய

தமிழ் மொழி மூலக்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) ப் பரீட்சையில்

சுட்டெண் DT 65 கொண்ட

ந/ இராகலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, கல்கிறேயா

பிச்சைமுத்து நல்லதம்பி

என்பவருக்கு இத் தமிழ் மொழி மூலக்

**கல்விப் பொதுத் தராதரப் பத்திரம்**

(சாதாரண தரம்)

பின்வரும் ஆறு பாடங்களில்

சித்தியடைந்தமையைக் குறிக்கும் வகையில் வழங்கப்படுகின்றது.

1. தமிழ்ப்பாஷை (திறமை)  2. எண்கணிதம் ——————
3. தமிழ் இலக்கியம் (திறமை)  4. சரித்திரம் ——————
5. சுகாதாரமும் சரீர சுத்திரமும் ——————  6. இந்துசமயம் (சைவம்) (திறமை)
7. ——————  8. ——————

அத்துடன்

அவ்வியாபகம் தேர்ச்சியைக் குறிக்கச் செய்திருப்பதனால்

இரண்டாம் பிரிவில்

**சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரமும்**

வழங்கப்படுகின்றது

கல்விப் பணிப்பாளர் நாயகம்.

பரீட்சை ஆணையாளர்

கொழும்பு, ... 25, 1953

இலக்கம்: 56



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது எங்கள் மண் ..........

நண்டுகள் படம் வரைய,
வண்டுகள் பூ சுற்ற
மலைகள் மகுடம் சூட
இயற்கை எழில் தாங்கும்
தேசத்தில்...........

கடல் தாலாட்ட
மணல் சோறுட்ட
அலை உடல் தடவி
காற்று தலை சீவி
பேணி வளர்த்த
மண்.

வெள்ளை நிற கழுகுகள்
தின்று ஏப்பம் விட்ட நேரத்தில்

உதிரத்தை உரமாக்கி
வியர்வையை நீராக்கி,
தேயிலையே தேகமாக,
தேசம் வளர்த்த மண்.
இது கல்லறைகளல்ல
எம் கருவறைகள் !

இதில் ஏன் ? எமக்கு
பாடை தயாரித்து
ஒப்பாரி இசைக்கப்பார்க்கிறீர்.
இது அடுக்குமா ?
இனியும் நடக்குமா ?
மனம் தான் பொறுக்குமா ?

நாம் இந்த மண்ணுக்காய்
வாங்கிய சுதந்திரம்
கொடிகளைப் பறக்க விடவா ?
இல்லையேல்
குடிகளை சிறக்க விடவா ?
இதுவோ !
மணம் மாறி மணம் மாறி
ரணமாகி ரணமாகி
பிணமாகி பிணமாகி
எம் உடல் கலந்த மண் !
உயிர் கரைத்த மண் !
இரத்தம் சிந்திய செம்மண் !
வியர்வை சிந்திய வன்மண் !

உடல் சுமந்த தாய் மண் !
உணர்வு கலந்த உயிர் மண் !
இந்த மண்ணில் -எங்கள்
பாதம் பதிக்க என்ன
சட்டமா ?
எங்கள் கால்களை
வெட்டுவது தான் உங்கள்
திட்டமா ?

கனவுகள் கண்டு
காலம் கடத்தினோம்.
இனிமேல்
நனவுகள் என்று
பாதம் பதிப்போம்.

நாங்கள்
இந்த மண்ணின் மைந்தர்கள்.
எங்கள் கண்ணீர் துளிகள்
இந்த மண்ணில் தான்
மழையானது. !
வியர்வைகள் இந்த மண்ணில் தான்
விதையானது .!
இரத்தங்கள் இந்த மண்ணில் தான்
நீரானது .!
நம்பிக்கைகள் இந்த மண்ணில் தான்
வேரானது. !

உரிமையுள்ள மண்ணில்
புதைக்குழிகளின் புதல்வர்களா நாம்?
ஒரு பிடி மண்ணுக்காய் -நாம்
உயிர் விடவா?
மண்ணுக்குள் அடைந்தாலும்
மறுபடி உயிர் கொண்டு வா !
விடியல் எனும் சூரியனை
நட்டு வைப்போம் .
வெற்றி நிலவெடுத்து
பொட்டு வைப்போம் .
அறிவு உளி எடுத்து
சுதந்திரத்தின் விழி திறப்போம் !
இந்த மண்ணில்!

பொருப்பன்
நு/வ/ இ.த.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராகலை தமிழ் மகா வித்தியாலயத்தின் வரலாற்றுப் பின்னணி

இலங்கை இந்திய சுதந்திரத்திற்கு முற்பட்ட காலம். வெள்ளையர்கள் இங்கு தேயிலை தோட்டங்களை நிர்வகித்து வந்த நேரம்.அவர்களது நேரடித் தொடர்பில் ஐந்தாம் வகுப்புக்கள் வரையே தோட்டப்பாடசாலைகள் இயங்கி கொண்டிருந்தன.

அதுவும் எடுத்த எடுப்பிலேயே கல்வி போதனைக்காக ஏற்படுத்தப்பட்ட பாடசாலைகளல்ல. தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் தேயிலைச் செடிகளை சேதப்படுத்தி நாசப்படுத்தி விடக்கூடாதென்பதற்காக பிள்ளைகளை அறையில் அடக்கி ஒடுக்கி அவர்களது அறிவுத்திறன்களை முடக்கி மழுங்கடித்து வைத்திருந்த வரலாறுகளுமுண்டு. பின்னர் அந்நிலை படிப்படியாக மாறி ஏற்பட்ட பரிணாம வளர்ச்சியே பாடசாலைகளாகியுள்ளன என்பதை பலரும் அறிந்ததே.

இப்பாடசாலைகளில் ஐந்தாம் வகுப்புவரை கற்ற பிள்ளைகள் அதற்கு மேலாக படிப்பதனை தோட்டநிர்வாக அமைப்புகள் விரும்பவில்லை திட்டமிட்டு தொழிலாளர்களின் பிள்ளைகளை பன்னிரெண்டு வயதை அடைந்ததும் பிள்ளை தொழிலாளர்களாக ( child workers) மாற்றப்பட்டு மிகக்குறைந்த கூலி பெற்று வேலை செய்யும் தொழிலாளர்களாக மாற்றப்பட்டு வந்தனர். தோட்டப்பிள்ளைகள் ஐந்தாம் வகுப்பிற்கு மேல் கல்வி கற்காமைக்கு கற்க முடியாமல் போனமைக்கு கற்க முடியாத நிலையினை ஏற்படுத்தியமைக்கு பல்வேறு காரணங்களை வகைப்படுத்தி கூறலாம்.

இடைநிலைக்கல்வியும் உயர் நிலைக்கல்வியும் கிறிஸ்தவ திருச்சபை யினரால் மாத்திரமே குறிப்பாக பதினான்கு மைல்களுக்கப் பாலுள்ள நுவரெலியா 45 மைல்களுக்கப்பாலுள்ள கண்டி, குருத்தலாவ ஆகிய நகரங்களில் வகுப்புகள் நடைப்பெற்று வந்தன. பொருளாதார கஸ்டங்களினாலும் வெவ்வேறு காரணங்களி னாலும் தொழிலாளர்களின் பிள்ளைகள் ஐந்தாம் வகுப்புக்கள் வரை கல்விக்கு முழுக்குப் போட்டுவிட்டு தொழிலாளர்களாக தங்களை அடையாளப்படுத்திக் கொண்ட துரதிஸ்டமான வேதனைக்குரிய நிலையே மேலோங்கிவந்தன.

1900 களில் பெரும்பாலும் நாடளாவியரீதியில் கல்வித்துறை பலரால் சிந்திக்கப்பட்டு வந்துள்ளது. தனது சமூக எழுச்சிக்காக கல்வி வளர்ச்சிக்காக ஆறுமுகநாவலர் சுவாமி விபுலானந்தர் .டி.பி.ஜாயா அநாகரிக தர்மபால போன்றோர் முனைப்பாக செயல்பட்டு கொண்டிருந்தனர் ..

இவர்களது கல்வித்துறை சார்ந்த போராட்டங்களும், இலங்கையிலும், இந்தியாவிலும். எழுச்சி பெற்ற சுதந்திர போராட்டங்களும் மலையகத்தில் சேவா சங்கம் போஸ் சங்கம் இலங்கை இந்தியன் காங்கிரஸ் போன்ற வற்றின் அறிமுகம் மலையக மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை கொண்டுவந்துள்ள தென்பதுடன் கல்வித்துறை சார்ந்த பலதரப்பட்ட முயற்சிகளுக்கு களம் அமைத்து மலையகத் திலும் பல்வேறு பாடசாலைகள் தோன்றுவதற்கு காரணமாக அமைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுள் கண்டி இந்து சீனியர் (மகாத்மா காந்திக் கல்லூரி) மாத்தளை பாக்கியா வித்தியாலயம், புசல்லாவ சரஸ்வதி வித்தியாலயம் நாலப்பிட்டி கதிரேசன் கல்லூரி போன்ற கல்வி நிலையங்கள் குறிப்பிடத்தக்கவை.

இதே வேளை வடக்கு கிழக்கில் எழுந்த மலர்ச்சி இயக்கமானது அதன் பிரதிநிதிகள் மலையகப்பகுதிகளுக்கும் வந்து இப்பிரதேசங் களிலும் பாட சாலைகள் அமைக்கும் பணி ஆரம்பமானது.

1946 ஆம் ஆண்டளவில் இராகலையில் கந்தப்பு வாத்தியார் என்பவரும் நுவரெலியா பிரதேச பரிசோதகர் வித்தியாதரிசி திரு .வே.நடராசா உதவி வித்தியாதரிசி திரு.சி.க.கனகசபை வித்தியாதரிசி திரு. ஜே.எஸ்.அருமைநாயகம் ஆகியோர் உட்பட பலர் இப்பகுதி கல்வி வளர்ச்சிக்கான முயற்சிகளை மேற் கொண்டு வந்திருக்கின்றனர்.

இக்காலகட்டத்தில் இராகலையில் அஞ்சல் அலுவலகத்திற்கு அருகாமையில் தோட்டப்பாடசாலை ஐந்தாம் வகுப்பு வரை தலைமை ஆசிரியர் திரு .பாக்கியநாதன் அவர்களது தலைமை யில் நடைப்பெற்றுக் கொண்டிருந்தது. முழுக்க முழுக்க தோட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்த பாடசாலையில் உயர் வகுப்புகளை ஆரம்பிக்கவோ கட்டிட வசதிகளை விஸ்தரிக்கவோ வேறு அபிவிருத்தி செய்யவோ இயலாத நிலையே காணப்பட்டது.

## இராகலை அரசினர் உயர்தரத் தமிழ் பாடசாலை (கலவன்) படிவ வளர்ச்சி

கட்டிட வசதியேயின்றி மாதாந்தம் பதினைந்து ரூபா வாடகை செலுத்தி முதன் முதலில் இப்பாடசாலை உருப்பெற அத்திவாரமிடப்பட்டிருக் கின்றது.

இதே வேளையில் இராகலை மாதா கோவிலின் கட்டிடத்ததை (தற்போது கொண்வென்ட், முன்பள்ளி கட்டிடம் ) பரந்த எண்ணத்துடன் மனமுவந்து அப்போதைய ஆலய வன பிதா குண திலக்க வழங்கியுள்ளார்.

## அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான்

நுவரெலியா பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த கௌரவ எஸ். தொண்டமான் அவர்களது அயராத பெரும் முயற்சியின் பயனாகவே இராகலை அரசினர் உயர்தர தமிழ் பாடசாலை 03.03.1947 ல் ஆரம்பமாகியுள்ளது.அப்போது தலைமைப் பொறுப்பினை கந்தப்பு ஆசிரியர் ஏற்றிருக்கின்றார்.

இதனை தொடர்ந்து நடுக்கணக்கு ( சென்லியனாட்ஸ் ) தோட்டத துரையாக கடமையாற்றிய திரு.ஆர் பீடன் (Mr.R.BEEDAN) முதன் முதலாக இப்பாடசாலை சொந்தக்கட்டிடத்தில் இயங்க கால் ஏக்கர் காணியினை பெருங்கருணையுடன் வழங்கியிருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை தொடர்ந்து அந்நேரம் சூரியகாந்தி தோட்டத்துறையாகவிருந்த திரு.ஆர்சி.பி.அடம்ஸ் (Mr.R.C.Adams) டெல்மார் தோட்டத்துரையான சி.ஓல்டே (C.AUDAY) கட்டிடம் கட்டுவதற்கான பொருட்களை அன்பளித்துள்ளனர்.

கட்டிடம் அமைவதற்கான பெறுமதி வாய்ந்த பொருட்களையும் அமரர் கௌரவ எஸ் .தொண்டமான அவர்கள் நாலாயிரத்தி நூற்றி ஐம்பது ரூபா பெறுமதி வாய்ந்த புதிய தகரங்களையும் வழங்கியிருக்கின்றார்.

## நிதியுதவிகள்

காலஞ் சென்றவர்களான ம.க. விஜயசுந்தரம். எம்.எஸ்.இராமநாதன், எஸ் எம். கந்தசாமி, கணக்கப்பிள்ளை PR.PL இராமசாமி செட்டியார் , வா.ஆனந்த சபாபதி, எஸ்.ஆர்.எம்.செல்லையா பிள்ளை, வி.எஸ். பழனியப்பா ஆசாரி, கார்வாலோ எம்.சொக்கலிங்கம், செல்லத்துரைப் பிள்ளை, ராசு கங்காணி ஆகியோர் நிதி சேர்ப்பதில் முனைப்பாக ஈடுபட்டு வந்திருக்கின்றனர்.

இதற்கு இப்பகுதி வாழ் பிரமுகர்கள் தோட்ட உத்தியகஸ்தர்கள் பெற்றார்கள் பொது மக்கள் தலைமை ஆசிரியர்கள் ஆசிரியர்கள் வர்த்தகர்கள் இராகலை உடபுஸ்ஸல்லாவ ஹைபொரஸ்ட் தோட்ட பொதுமக்கள் வர்த்தகர்கள் உதவியிருக் கின்றனர்.

## தலைமையாசிரியர்

உத்தியோகப்பூர்வமாக தலைமையாசிரியராக 1948ல் திரு. அ.செல்லத்துரை பொறுப்பேற்றதுடன் 1949ல் அமைக்கப்பட்ட பெற்றோர் ஆசிரியர் சங்க பொதுக் காரியதரிசியாகவும் கடமையாற்றியிருக்கின்றார்.

இவரது காலத்தில் 09.01.1950ல் பாடசாலை பரிசோதகர். சி.கனகசபை உதவியுடன் முதியோர்களுக்கான வகுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக் கின்றன. காலப்போக்கில் போதிய புதியவர்கள் இதில் அக்கறை காட்டாமையினால் வகுப்புகள் நிறுத்தப் பட்டிருக்கின்றன காணி கட்டிடங்கள் இப்பாடசாலைக்கு கிடைக்க திரு.அ. செல்லத்துரை அவர்களின் முயற்சியே காரணமாகும்.

இந்தியாவிலும் இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் பல்வேறு சமயப் பெரியோர் களையும் வரவழைத்து சைவ சமய நெறியோங்க உழைத்து வந்துள்ளனர். இவ்வாசிரியர் 26.06.1954 ல் சுகவீனங்காரணமாக இடமாற்றம் பெற்று யாழ்ப்பாணம் திரு.நெய்வேலி சிவத் தொண்ட மடத்தில் இறைபணி மேற்கொண்டார். (இவர் கடந்த 2004 ஆம் ஆண்டிலேயே அமரத்துவம் அடைந்துள்ளனர்).

இவரைத்தொடர்ந்து 05.07.1954ல் திரு. கே.தாமோதரம் பிள்ளை அவர்கள் தலைமையாசிரியராக பொறுப்பேற்றுக்கொண்டார். இவரது காலத்தில் இரண்டு கட்டிடங்கள் இப்பாடசாலைக்காக கட்டப்பட்டப் பொழுதிலும் அவைகள், இராகலை பன்சல அருகில் நடைப்பெற்றுக் கொண்டிருந்த சிங்களப் பாடசாலைகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையளிக்கப்பட்டன. 03.01.1955 ல் முன்பு ஆரம்பிக்கப்பட்ட முதியோர் கல்வி வகுப்புகள் முதியோர்களின் வரவு குறைவால் நிறுத்தப்பட்டது.
இவரது சொந்த ஊரான மட்டக்களப்பு காரைத்தீவிற்கு புகையிரதத்தில் சென்று கொண்டிருக்கும் பொழுது எதிர்பாராத விதமாக புகையிரதத்திலேயே அகால மரணமடைந்ததைத் தொடர்ந்து இப்பாடசாலையில் சிரேஸ்ட உதவி ஆசிரியராக கடமையாற்றிக் கொண்டிருந்த திரு. கே. எஸ். பொன்னையா அவர்கள் தலைமைப் பொறுப்பினை ஏற்றுள்ளார்.

இப்பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் ஒன்றில்லாமலிருந்தது, மாணவர்கள் நடுகணக்கு புதைக்குழிக்குப் பக்கத்திலும், ஐந்து ரோடு சந்தியிலும், தற்பொழுது புதுலயங்கள் என்று கூறப்படுகின்ற நடுக்கணக்கு லயங்களுள்ள இடங்களிலேயே மாணவர்கள் பயிற்சி எடுத்து வந்தனர். இவரது அயரா முயற்சியினால் ஒரு மைதானம் இப்பாடசாலையில் அமைக்கப்பட்டது
வலப்பனை நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்த டி.பி.எம்.ஹேரத் அவர்களுடன் தொடர்பு கொண்டு அயராமுயற்சி எடுத்து இப்பாடசாலையினை தமிழ் மகா வித்தியாலயமாக தர முயர்த்த முயற்சிகள் எடுத்துக் கொண்டிருந்த பொழுது. ஆது கைகூடும் சூழலில் இடமாற்றம் பெற்று செல்ல நேர்ந்தது.

இவரைத்தொடர்ந்து திரு.சரவணமுத்து அவர்கள் சிறிது காலம் கடமையாற்றிக் கொண்டிருக்கும் பொழுது இராகலை தமிழ் கலவன் பாடசாலை, இராகலை தமிழ் மகா வித்தியாலயமாக இப்பாடசாலை தரமுயர்தப்பட்டது.

திரு.சி.கே.ஆர்.தியாகராஜா (M.A. Dip in Ed) 01.09.1965 தொடக்கம் புதிய முதல் அதிபராக பொறுப்பேற்றார். இவரது நியமனத்திற்கூடாக புதிய கல்விப் பரப்புக்குள் பாடசாலை பிரவேசித்தது .க.பொ.த. உயர்வகுப்பும் அறிமுகம் செய்யப்பட்டது .முதற்தடவையே மாணவன் பி.சுதந்திரராஜா பல்கலைக்கழகம் பிரவேசித்தது குறிப்பிடத்தக்கது.

விளையாட்டுத்துறைக்கு மிகவும் ஊக்கமளித்து மாவட்டரீதியில் வெற்றிகளைப்பெற வைத்தது ஹொக்கி மற்றும் INDOOR OUT DOOR GAMES அறிமுகப் படுத்தப்பட்டது. மாணவர்களுக்கு சீருடை அமுல்படுத்தப்பட்டது. மிகப் பெரிய தொரு விளையாட்டு மைதானமாக ஏற்கனவேயிருந்த மைதானம் விஸ்தரிக்கப் பட்டது. இவரது அயரா முயற்சியிலேயே விளையாட்டு மைதானம் மேற் பகுதியில் கண்ணாடி மாளிகை எனும் கட்டிடம் எழுந்தது. காத்திரமான கல்விப்பணிகள் தொடர்ந்தன. இவர் வட்டாரக் கல்வி அதிகாரியாக பதவியுயர்வு பெற்று சென்றதும், திரு.எஸ் கிருஸ்ணசாமி அதிபராக 02.05.1967 ல் பொறுபேற்றார்.

இவரது அரும்பணிகளில் ஒன்றாக பெற்றார்களின் உதவியுடன் கட்டிட மொன்றை பாடசாலைக்கு அமைத்ததாகும் ஆங்கிலக்கல்விக்கு முக்கியத்துவமளிக்கப்பட்ட துடன் மாவட்ட ரீதியில் விளையாட்டுத்துறை பல Distric Champion ஆக வர முடிந்தது சாரணியம் (Scouts) கழுத்தணி மாணவர்களுக்கு அறிமுகப்படுதப்பட்டது.

இவர் 31.07.1974 ஆம் ஆண்டு மாற்றம் பெற்றுச் சென்றதும் 11.02.1975 ல் திரு.எம் முத்து சிவஞானம் அதிபரானார். இவரது முயற்சியினால் பேண்ட் வாத்திய இசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டதுடன் அதற்கான உபகரணங்களும் வாங்கி வைக்கப்பட்டன. சமூகக்கல்வி ஆய்வு கூடம் உயர்வகுப்பு மாணவர்களை கொண்டு உருவாகப்பட்டது.

இவருக்குப்பிறகு செல்வி வேலுப்பிள்ளை ஆசிரியை அதிபராக பொறுப்பேற்றார். இவர் சமய நிகழ்வுகளுக்கு முக்கியத்துவமளித்து வந்தார்.

அவருக்குப் பிறகு திரு.சி.நவரட்ன அவர்கள் 01.02.1977 ல் அதிபரானார் மங்கி மறைந்திருந்த ஆங்கில்கல்விக்கு இவர் புத்துணர்வளித்தார். இதற்காக ஆங்கில் இலக்கிய மன்றத்தை ஏற்படுத்தினார்.

1979 ல் மாவட்ட ரீதியில் க.பொ.த.சாதாரணப்பரீட்சை பெறு பேறு முதலிடம் பெற உந்து சக்தியாகவிருந்தார். இப்பாடசாலைக்கு பெருந்துணையாக விருக்கும் இரண்டு ஏக்கர் காணியினை நடுக்கணக்கு தோட்ட அதிகாரியுடன தொடர்ந்து உறவு கொண்டு பெற்றுக் கொடுத்தார். இதற்கு பா.அ.செயலாளர் திரு.எஸ் . அருளானந்தம் ஜனாப் நிசாம் பாய் மற்றும் பலரும் துணை நின்றனர். இக்காணியின் வருமானம் பாடசாலை அபிவிருத்திக்கு இன்றுவரை பயன்படுத்தப்பட்டு வருகின்றது கட்டிடங்கள் பல அமைய காணி பயன்படுத்தக்கூடியதாக விருக்கின்றது. இவர் வேறொரு பாடசாலைக்கு இட மாற்றம் பெற்றுச்செல்ல நேர்ந்ததும் திரு.எம்.சுந்தரலிங்கம் 28.02.1981ல் அதிபரானார். இவரது காலத்திலேயே இப் பாடசாலைக்கொரு விஞ்ஞான கூடம் அமைக்கப்பட்டது.

பின்னர் இவர் கலஹா த.ம.விக்கு அதிபரனார். மீண்டும் திருசி..நவரட்ன அவர்கள் SLEAS பரீட்சை சித்தியுடன் இதே பாடசாலையினை பொறுப்பேற்றார் ( 05.11.1981) பல்வேறு கல்விப்பணிகளைத் தொடர்ந்ததுடன் உயர்பதவி பெற்று மாற்றமானார்.

திரு.பி.மரியதாஸ் அவர்கள் 06.04.1984 ல் அதிபரானார். இவரது காலத்தில் கல்வித்துறைக்கு ஊக்கமளிக்கப்பட்டது மஹாபொல நடந்தது. இப்பாடசாலை எல்லையை சுற்றி நிரந்தரமான வேலி அமைக்கப்பட்டு இன்னும் சில பாதுகாப்புகளுக்கு காரணங்களாகவுள்ளன.

இவரின் இடமாற்றத்தை தொடர்ந்து 24.01.1986 திரு.எஸ்.கிருஸ்ணன் அவர்கள் அதிபரானார்.

இவரது காலத்தில் இரட்டை மாடிக்கட்டிடம் உட்பட பல கட்டிடங்கள் கட்டப்பட்டன. பல இலட்சம் பெறுமதி வாய்ந்த பொருட்கள் வாங்கப்பட்டன.

இப்பாடசாலை கொத்தணி பாடசாலையானது. இவரும் கொத்தணி அதிபரானார். நீண்ட காலமாக பெரும் பிரச்சினையாக விருந்த இராகலை கனிஸ்ட தமிழ் வித்தியாலயம் இணைப்பு தொடர்பாக முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு சிங்கள கனிஸ்டப் பாடசாலைக்கு அஞ்சல் அலுவலகத்திற்கருகிலும் கனிஸ்ட தமிழ் பாடசாலை இராகலை தமிழ் மகா வித்தியாலயத்துடனும் இணைக்கப்பட்டது.
1987 ஆம் ஆண்டு இப்பாடசாலையின் 40 வது ஆண்டு விழா மாண்புமிகு அமைச்சர் கௌரவ அமரர் எஸ் தொண்டமான், இந்து கலாசார இராஜாங்க அமைச்சர் கௌரவ எஸ். இராஜதுரை அதிதியாக அழைக்கப்பட்டு 03.03.1987 தொடக்கம் 22.03.1987 வரை விமர்சையாக கொண்டாடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் ஓய்வு பெற்றுச் சென்றதும் திரு.டி.ஆர்.செல்வராஜா 01.01.1991 அதிபர் பொறுப்பினை ஏற்றிருந்த வேலையில் கல்வித்திணைக்களம் 18.03.1991 திரு. எஸ் சுப்ரமணியம் அவர்களை அதிபராக நியமித்தது. இவரும் கல்வித் திணைக்களத்திற்கு உதவி கல்வி பணிப்பாளராக பதவியுயர்வு பெற்றுச்சென்றதும் திரு.பி.அருள்மொழிச்செல்வன் பொறுப்பேற்று சிறந்ததொரு இல்ல விளையாட்டு போட்டியினை நடாத்தினார்.

பின்னர் திருமதி பூமணி தாயுமானவன் 14.06.1991 ல் அதிபராக நியமிக்கபட்டார். துரதிஸ்டவசமாக இவர். ஓராண்டு காலத்திற்கு முன்னதாக 07.09.1992 ல் அமரத்துவமானதையடுத்து மீண்டும் திரு பி.அருள்மொழிசெல்வன் அதிபர் பொறுப்பினை ஏற்றார்.

28.10.1992 ல் திரு.ஆர்.நடராஜ் அவரகள் அதிபர் பதவியை ஏற்றார் 25.02.1993 ல் மீண்டும் அதிபர் பொறுப்பினை திரு.பி.அருள்மொழிச் செல்வன் பெற்றார்.

பின்னர் 06.10.1993 ல் திருஎஸ் சுந்தரம் பிள்ளை அதிபராக நியமிக்கப்பட்டார். அப்போது நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக விருந்த கௌரவ முத்து சிவலிங்கம் அவர்களிடம் இருந்து லட்ச கணக்கு பெறுமதி வாய்ந்த பேண்ட் வாத்திய இசையினை பாடசாலைக்கு பெற்றுக் கொடுத்துள்ளார். கொடிக்கம்ப மேடை அமைக்கப்பட்டது. இவரது காலத்தில் க.பொ.த. உயர்தர விஞ்ஞான வகுப்பு ஆரம்பிக்கப்பட்து. மத்திய மாகாண முன்னாள் கல்வியமைச்சர் வி.புத்திரசிகாமணி அவர்கள் இந்த வகுப்பினை ஆரம்பித்து வைத்தது குறிப்பிடத்தக்கது.

இந்த காலக்கட்டத்தில் 1997 ல் பாடசாலை 50 ஆம் ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு பொன்விழா கொண்டாட ஏற்பாடுகள் மேற் கொண்ட பொழுது பல்வேறு காரணங்களால் இப்பொன்விழா கொண்டாட ஏற்பாடுகள் மேற் கொண்ட பொழுது.பல்வேறு காரணங்களால் அப்பொன்விழா நடைப்பெறவில்லை இவரும் மாத்தளை நாவல கல்வி வலயத்திற்கு பதவியுயர்வு பெற்று சென்ற பின்னர் 01.10.1997 திரு.டி.ஆர் செல்வராஜா அதிபராக பொறுப்பேற்றார்.

பின்னர் 1998.05.06 திரு.வி. சிவசுந்தரநாதன் அதிபரானார். இவர் கல்விக்கு முன்னுரிமையளித்து செயல்பட்டார். இவராலே இப்பாடசாலைக்கு நிரந்தரமாக கிணறு மூலம் குடிநீர் பெற்றுக்கொடுக்கப்பட்டது. இவரும் இடம்பெற்றுச் சென்ற பின்னர் திரு.டி.ஆர்செல்வராஜா பாடசாலையையினை பொறுப்பேற்றார்.இவரது பதவிக்காலத்தில் மாபெரும் கல்வியியல் கண்காட்சி ஒருவாரம் நடாத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து திரு. சிவராம் அவர்கள் அதிபராகி பாடசாலைகளில் பல வேலைத்திட்ங்களை முன்னெடுத்து சென்றார்.

திரு.பி.ரெங்கசாமி திரு.சிவராம் அவர்களுக்கு பின்னர் அதிபராகி பாடசாலையினை ஓர் அமைதி வழியில் தனது பாணியில் கொண்டு நடாத்தினார்.தகவல் தொழில் நுட்பவகுப்புகள் ஆரம்பமானது. இவரது மாற்றத்தின் பின்னர் திரு.எம் சோமசுந்தரம் அவரகள் பாடசாலை அதிபராக கடமையாற்றினார். கல்வித்துறை உயர்தர மாணவர்கள் கல்வியில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். பாரதி கேட்போர் கூடம் அமைய காரணமாகவிருந்தார். வலப்பனை தமிழ் பாடசாலைகளில் சிறந்ததொரு கேட்போர் கூட மண்டபம் மாண்புமிகு முன்னாள் மத்திய மாகாண கல்வி அமைச்சர் வி.இராதாகிருஸ்ணன் அவர்களால் இந்த அதிபரின் காலத்தில் கிடைக்கப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.சோமசுந்தரம் ஹங்குரான்கெத்த தமிழ் பிரிவு கல்விப்பணிப்பாளராக பதவியுயர்வு பெற்றுச் சென்றதையடுத்து பிரதி அதிபராக விருந்த திரு.எஸ.யோகேஸ்வரநாதன் 24.06.2005 ல் அதிபர் பொறுப்பினை பெற்றார்.

பிரமாண்ட முறையில் பாரதி மண்டபம் திறப்பு விழா, க.பொ.த சாதாரன தர, உயர் தர பரீட்சை விசேட வகுப்புகள் ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கான விசேட வகுப்புக்களுக்கு ஊக்க மளித்துள்ளார்.

மத்திய மாகாண கல்வியமைச்சர் கௌரவ எஸ். அருள்சாமியுடன் தொடர்பு வைத்து இந்திய உதவிதூதுவர் மேதகு இராஜன் பிள்ளை அவர்களை அணுகி பாடசாலைக்கு சில வளங்களை பெறுதல் பாடசாலைக்கு சில வளங்களை பெறுவதில் முயற்சித்துள்ளார். இதே வேளையில் பெற்றார். பழைய மாணவர்களின் உதவியை நாடி சில உதவிகனை பாடசாலைக்கு பெற்றுக் கொடுத்துள்ளார். 60 வது ஆண்டு வைர விழா இவரது காலத்தில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

பல்வேறு வசதியற்ற பல பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்து வந்தப் பாடசாலை சட்டத்தரணிகள், டாக்டர்கள் பொறியிலாளர்கள், எழுத் தாளர்கள், கல்வி பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், கவிஞர்கள், அரசியல் தொழிற்சங்கத் தலைவர்கள், அமைச்சர்கள் நாடாளுமன்ற, மாகாண, பிரதேச சபை உறுப்பினர்கள் சமுகசிந்தனையாளர்கள், விரிவுரையாளர்கள், விளையாட்டு வீரர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் பலரும் தோற்றுவதற்கு ஓர் உன்னத இடமாக இருக்கின்றது.

இப்பாடசாலை வளர்ச்சிக்கு, கட்டிடங்கள் அமைத்து, சில வளங்களை அளித்து பல்வேறு வழிகளில் பலரும் உதவியுள்ளனர். அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள், முன்னாள் அமைச்சர் திருமதி ரேணுகா ரணவீர , தோட்ட உட் கட்டமைச்சர் கௌரவ முத்து சிவலிங்கம், கால்நடை அபிவிருத்தி அமைச்சர் கௌரவ சி.பி.இரத்னாயக்கா. முன்னாள் மத்திய மாகாண கல்வியமைச்சர்கள் கௌரவ எஸ்.சதாசிவம், கௌரவ வி.புத்திரசிகாமணி. அமரர் இராமநாதன் தொண்டமான், கௌரவ இராதகிருஸ்ணன், மாகாணசபை உறுப்பினர்கள், பிரதேச உறுப்பினர்கள், தொழிற்சங்கத்தலைவர்கள், கல்விப்பணிப்பாளர்கள், பாடசாலை அபிவிருத்திசங்கம், பழைய மாணவர்கள், பெற்றார்கள், நலன் விரும்பிகள், வர்த்தகர்கள் பலரும் பல்வேறு வழிகளில் உதவியுள்ளமையே இப்பாடசாலை இன்று இவ்வாலயம் மிக கம்பீரத்துடனும், பெருமையுடனும் வைர விழாவினை கொண்டாடி மகிழ்கின்றது.

பாடசாலையாகவும் நவோதய பாடசாலையாகவும் திகழும் இப்பாடசாலையினை மத்திய மகா வித்தியாலயமாக தர முயர்த்த மத்திய மாகாண கல்வியமைச்சர் எஸ். அருள்சாமி அவர்கள் உறுதியளித்துள்ளார்.

இப்பாடசாலை தேசிய பாடசாலை அந்தஸ்த்துக்கு நாடளாவிய ரீதியில் உயர்வு பெற்று பல நூற்றாண்டுகளைக் கண்டு பல்வேறு துறைகளில் முத்திரை பதிக்கும் சிற்பிகளை உருவாக்க வேண்டுமென்று பலரும் எதிர்பார்த்து வைரவிழா இப்பாடசாலையின் வரலாற்றில் ஒரு புதிய தடம் பதிக்க அனைவருமே வாழ்த்துகின்றோம்.

டி.ஆர்.செல்வராஜா
முன்னாள் உதவி கல்வி பணிப்பாளர் - ஆங்கிலம்
வலப்பனை - ஹங்குரன்கெத்த,
கல்வி வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுபதாம் ஆண்டில் கால்பதித்துள்ள எமது பாடசாலை

மலையக சமுதாயம் இலங்கைக்கு வந்துக் குடிபுகுந்து சுமார் இருநூறு வருடங்களுக்கு மேல் கடந்தோடிவிட்டது. அன்று எமது சமுதாயம் கல்வியை எதிர்பார்த்த வண்ணம் இருந்தனர்.இவர்களின் கல்வி தேவைகளை ஓரளவு பூர்த்தி செய்ய தோட்டபாடசாலைகளை ஆங்கிலேயர் ஏற்படுத்தினர். அவ்வாறு 1947 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட மலையகத்திலேயே பெரிய பாடசாலையாக எமது இராகலை தமிழ் மகா வித்தியாலயம் விளங்கியது. கீழ் மட்டத்திலேயே எமது சமுதாயம் இருந்த போது இன்று ஓரளவுக்கு உயர்ந்துள்ள தென்றால் அதற்கு எமது பாடசாலை தந்த கல்வியும் ஒருகாரணமாகத்தான் இருக்க வேண்டும்.

எட்டாக்கனியாக இருந்த கல்வி எமது சமுதாயத்திற்கு எட்டியதும் பல்கலைக்கழகம் வரை செல்லும் அளவிற்கு வளர்ச்சி அடைந்தனர். அதற்கு எமது பாடசாலையும் அப்போது இருந்த ஆசிரியர்களும் கற்பித்த கல்வியின் விளைவாக பல்வேறுபட்ட மாணவர்கள் பல்வேறான துறைகளில் இன்று மிளிர்கின்றனர். அவ்வாறு மிளிரச்செய்து ஒரு நல்ல நிலைக்கு இட்டுச்சென்ற எமது பாடசாலைக்கு இன்று 60 வயது. பல சந்ததிகளை கண்ட எமது பாடசாலை எமது மலையக சமுதாயத்தின் ஆலமரம் என்று கூட சொல்லலாம். அந்த அளவிற்கு அனுபவம் மிக்க உயர்ந்த பாடாலை இது.

ஆலமரமாக திகழும் எமது பாடசாலைக்கு அன்று முதல் இன்று வரை தரமான ஆசிரியர்கள் கிடைத்ததன் விளைவாக சட்டத்தரனிகள், வைத்தியர்கள், ஆசிரியர்கள், கணக்காளர்கள், அதிபர்கள் என பல துறைகளில் இன்று எமது பாடசாலைப் பெயர் சொல்லக்கூடிய அளவிற்கு முன்னேறியுள்ளனர்.60 வருடம் உருண்டோடியப் பின்னும் எமது பாடசாலையின் கல்வித்தரம் இன்றும் குன்றாது இருக்கின்றது. ஜாதி, மதம் பாராமல் எல்லோரையம் ஒன்றாக இணைத்து மாணவர்கள் மத்தியில் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தி நல்ல கல்வி, சிறந்த பழக்கவழக்கத்தினை சொல்லிக் கொடுத்து சமுதாயத்தில் ஒரு பொக்கிஷமாக வெளியேற்றுகின்றது எமது பாடசாலை.

முதல் முதலாக பாடசாலைக்கு வரும் போது அ முதல் அரசாங்கம் வரை இட்டுச்செல்ல எமது ஆசிரியர்கள் படும் கஸ்டம் அது சிறிய விடயமல்ல ஒவ்வொரு ஆசிரியரும் எம்மை சிற்பமாக செதுக்கி ஒரு நல்ல நிலையில் கொண்டு வைக்கின்றனர். சம்பளத்திற்காக வேலை பாராது நமது சமூகத்தை முழுமையாக உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்ல வேண்டும் என்ற அவா ஆசிரியர்களிடம் காணக கூடியதாக இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த 60 ஆண்டும் வெற்றி நிறைந்ததாக இருக்க ஒவ்வொரு ஆண்டுகளிலும் இருந்த அதிபர்கள் , ஆசிரியர்கள் எல்லோரும் காரணகர்த்தாக்களே. ஏனெனில் குறிப்பிட்டவர்கள் மட்டும் நல்ல செயற்பாடுகளை செய்திருந்தால் நமது பாடசாலை இந்த அளவிற்கு உயர்ந்திருக்காது எனலாம். இவ்வாறெல்லாம் கஸ்டப்பட்டு வளர்த்த வைரம் போன்ற எமது பாடசாலை இப்போது வைர விழாவை கடந்து வெற்றிநடை போட்டுக்கொண்டிருக்கின்றது.

அறுபதாம் ஆண்டில் கால்பதித்துள்ள எமது பாடசாலை இன்னும் பல்வேறுபட்ட மாணவ மாணவிகளை உயர்த்த வேண்டும். என்ற அவா மாணவர்கள் உட்பட எல்லோரிடமும் காணப்படுகின்றது. அவ்வாறு செய்வதால் மற்றைய சமுதாயத்தை விட எமது சமுதாயம் மேல் மட்டத்திற்கு செல்லும். 60 ஆண்டுகளல்ல 100 ஆண்டுகள் போனாலும் எமது பாடசாலை மென்மேலும் வளர்ந்து பல்வேறான மாணவர்களுக்கு கல்வியை தந்து ஒரு முன்னோடியான பாடசாலையாக விளங்க வேண்டும் என நமது மலையக சமுதாயமே இறைவனை பிராத்திக்கின்றது.

*60 வயது நிரம்பிய எமது அன்பான பாடசாலைக்கு*
*என் நல்வாழ்த்துக்கள்.*

சி.சுபா
12 கலைப்பிரிவு
இராகலை த.ம.வி.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக வளர்ச்சியில் சமூக ஒன்றிணைவின் அவசியம்

இலங்கையின் இன ரீதியிலான பாகுபாட்டின் அடிப்படையில் நோக்கின் சிறுபான்மை இனத்தவர்களில் பெரும்பான்மையினர் தமிழர்களே எனலாம். இவ் தமிழர்கள் பல்வேறு காலக்கட்டங்களிலும் அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் நாட்டில் பொது மக்களுக்காக ஏற்படுத்தப்படும் கட்டமைப்பு வசதிகள் தொடர்பாகவும் பின்தள்ளப்பட்டு இரண்டாம் நிலை பிரஜையாகவும் காணப்படு கின்றனர். மேலும் இங்கு தமிழர்களையும் மலையக தமிழர் , இலங்கை தமிழர்கள் என நோக்க முடியும் இங்கு வடக்கு கிழக்குப் பகுதிகளில் காலம் காலமாக வாழ்ந்து வரும் தமிழர்களின் வாழ்க்கை நிலைமைகளிலிருந்தும், பிரச்சினைகலிருந்தும் மாறுப் பட்ட தன்மையை கொண்டதாகவே மலையகத் தமிழர்களின் நிலை காணப்படுகின்றது.

அரசியல் ரீதியாக மலையகத் தோட்டத்தொழிலாளர்கள் ஓரளவு உரிமைகளும் சலுகைகளும் பெற்றிருந்தமை. 1931 ஆம் ஆண்டு டொனமூர் அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்ததைத் தொடர்ந்து பரிபோகலாயின 1935 இல் நிறைவேற்றப்பட்ட காணி அபிவிருத்திச்சட்டம் 1948 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தேர்தல் திருத்தச்சட்டம் 1956 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அரச கரும மொழிச்சட்டம் போன்ற பலவற்றின் மூலம் இம் மக்கள் பல வகையிலும் பாதிக்கப்பட்டனர். 1970 ஆம் ஆண்டு வரை இலங்கை இந்திய அரசுகளுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் மூலம் பல இலட்சம் தொழிலாளர்கள் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டனர்.

இவ் மலையக தமிழர்களின் கடந்த கால வரலாற்று நிகழ்வுகளும் இம்மக்களது துயரங்களும் பொதுவான ஒரு கண்ணோட்டத்தில் இது வரைக்காலமும் பல்வேறு ஆய்வுகளும் கட்டரைகளும் பிரசுரமாகியுள்ளன. ஏனவே இக்கட்டுரையானது மலையக தமிழர்களில் ஏறத்தாள 50 % த்திற்கு மேற்பட்ட மக்களை தன்னகத்தே கொண்டிருக்கும். நுவரெலியா மாவட்டத்தினை அடிப்படையாகக் கொண்டே எழுதப்படுகின்றது.

இப்பிரதேசங்களில் காணப்படுகின்ற பொதுவான சில பிரச்சினைகளை இக்கட்டுரையின் முதலாவது பகுதியிலும் இவ்வாறான நிலையிலிருந்து இம்மக்களை மீட்டெடுப்பதற்கான சில வழிமுறைகளை இரண்டாவது பகுதியிலும் நோக்குவது பொருத்தமாக அமையும் என எதிர்பார்க்கின்றேன்.

இப்பிரதேச மக்களுக்கு மிக ஆரம்பகாலம் தொட்டே இடறலாக காணப்பட்ட பாரிய பிரச்சினை இனப்படுகொலையாகும். இம்மக்கள் எவ்வித தவறும் செய்யாமலே தண்டிக்கப்பட்டணர். 1977 ஆம் ஆண்டிலிருந்து மலையகத் தமிழருக்கு எதிராக மூன்று இனக்கலவரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் மிக கொடூரமான இனக்கலவரம் 1983 ஜீலை 23ஆம் திகதி வட பகுதியில் கண்ணிவெடிக்கு இலக்காகி 13 படையினர் பலியானதை இனவாத அரசியல்வாதிகள் மலையகப்பகுதிகளிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் கொழும்பிலும் வாழ்ந்த தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத கலவரத்தை தூண்டிவிட்டனர். இதன் விளைவாக 1983 ஜீலை 24ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதல்கள் தமிழ் மக்களது வீடுகளையும் வியாபார ஸ்தாபனங்களையும் வாக்காளர் பட்டியல் சகிதம் இனங்கண்டு ஏற்கனவே திட்டமிட்ட குழுக்களால் நடாத்தப்பட்டது. என்பதும் இலங்கை அரச படை இவற்றினை கண்டுக்கொள்ளாது சில இடங்களில் தமது பங்களிப்பினை வழங்கினர் என்பதும் அரசு உடனடியாக இவ்விடயத்தில் தலையிடாது மௌனம் காத்தது என்பதும் மறக்க முடியாத கசப்பான அனுபவங்களாகும்.

இதனை விட ஆரம்ப காலம் தொட்டே இலங்கையின் பொருளாதார பலத்தில் அதிக பங்களிப்பு செய்யும் பகுதியினர் மலையக பெருந்தோட்ட மக்களாகும். அத்துடன் இன்று மற்றுமொரு துறையாக காணப்படுவது ஆடைத்தொழிற்சாலை யாகும் ஆனால் இங்கு தொழில்புரியும் மக்களது வருமானத்தினை நோக்கின் அவர்களது வாழ்க்கைச் செலவுடன் ஒப்பிடும் போது வெறுமனே 25 % இனையேனும் நிவர்த்தி செய்ய முடியுமா என்பது கேள்விக்குறியாகும். நாட்டில் காணப்படும் அனைத்து மக்களது வாழ்வாதார உரிமைகளை பெற்றுக் கொடுப்பது அரசின் பொறுப்பாகும். ஆனால் இப்பெருந்தோட்ட மக்களது நிலையில் மட்டும் அரசினது பொறுப்புனர்வு என்பது ஏனோதானோ என்ற நிலையிலேயே இன்றும் காணப்படுகின்றது. காலத்திற்கு காலம் பதவிக்கு வரும் அரசாங்கங்கள் தமது கொள்கையில் கிராம மக்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்ததல் என்ற நோக்கில் பல செயற்றிட்டங்களை முன்னெடுத்து செல்கின்றன உதாரணமாக மகிந்த சிந்தனையில் "கமநெகும" எனும் செயற்றிட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. ஆனால் இவையெல்லாம் எந்தளவில் பெருந்தோட்ட துறையில் வாழும் மலையக மக்களுக்கு கிடைக்கின்றது என்பது சிந்தனைக்குரிய விடயமாகும்.

நாட்டில் பொதுவாக ஒருவர் தொடர்ந்தேர்ச்சியாக 5 வருடங்களுக்கு மேல் ஓரிடத்தில் வசித்தால் அவ்விடம் குடியிருப்பாளருக்கு உரித்துடையதாகும். ஆனால் பெருந்தோட்ட துறையில் காணப்படும் லயன் குடியிருப்புகளில் இன்று பல பரம்பரைகள் குடியிருந்த போதிலும் அதன் உரிமையை தானும் வழங்க முடியாத நிலையில் இம்மக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் எனினும் இது பற்றிய வாக்குறுதிகள் மட்டும் அனைத்து தேர்தல் திருவிழாக்களிலும் தவறாமல் முன்மொழியப்படுவது வேடிக்கையான விடயம் இதனைப் போலவே பெருந்தோட்ட பகுதிகளில் காணப்படும் வைத்தியசாலைகளை அரசு பொறுப்பேற்று அரசாங்க வைத்தியசாலையாக தரமுயர்த்தும் செயற்றிட்டமும் காணப்படுகின்றது. பெயரளவில் அரசாங்கம் பொறுப்பேற்றாலும் அங்கு போதியளவு வசதிகளும் வளங்களும் ஏற்படத்திக் கொடுப்பதில்லை. இவை ஒருபுறமிருக்க அரசாங்கத்தில் தம்மை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் தலைவர்களிடையே ஏற்படுகின்ற போட்டியின் விளைவாக பல தோட்டப்பகுதிகள் எவரும் கவனிப்பாரற்று கிடக்கின்றது. அத்துடன் பெருந்தோட்டப்பகுதியின் அபிவிருத்திக்கென வரவுசெலவு திட்டத்தில் ஒதுக்கப்படுகின்ற பல லட்ச ரூபாய்கள் பயன்படுத்தப்படாமல் மீளவும் திறைசேறிக்கு அனுப்பப்படுவதும் இங்கு குறிப்பிட்டுக்காட்டக்கூடிய விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக பகுதியில் மற்றுமொரு அம்சம்தான் மக்கள் தமக்கிடையே சாதி அடிப்படையில் பிளவுண்டு காணப்படுவதும் போதைப்பொருட்களுக்கு அடிமையாவதும் பெருந்தோட்டப்பகுதியில் ஒரு சிலரால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி நோக்கிய செயற்பாடுகளை முடக்குவதற்காக பிராயத்தனம் கொண்டு செயற்படுவதாகும். இதனைவிட முக்கியமானது மலையக மக்களின் இளைஞர்களுக்கு அரச தொழில் வாய்ப்பினை வழங்கும் ஒரு துறையாக ஆசிரியர் நியமனம் மட்டுமே காணப் படுகின்றது. இவர்களுக்கு குறைந்த ஒரு கல்விதர அடிப்படையிலே நியமனம் (க. பொ. த. சா/த) , (க. பொ. த. உ/த) கிடைக்கின்றது. இவர்களும் இவற்றுடன் தாம் கற்று முடிந்து விட்டதாக கருதி அதற்கு மேல் தமது நிலையினை உயர்த்திக்கொள்ள விரும்பாதவர்களாக பலர் காணப்படுகின்றனர் இதன் விளைவாக இன்று உயர்கல்வி கற்பிப்பதற்கு விறல்விட்டு எண்ணக்கூடிய தொகையினரே மலையகத்தில் உள்ளனர் எனலாம்.

மேற்குறிப்பிட்டவாறு இன்று மலையக பிரதேசங்களில் பல்வேறு மட்டங்களின் அடிப்படையில் பிரச்சினைகள் மலிந்து காணப்படுகின்றன. இவற்றினை வெற்றிக் கொண்டு எதிர்கால மலையக சமூகத்திற்காவது சுதந்திரமான ஒரு தனித்துவமான நிலையினை உருவாக்க வேண்டுமாயின் இன்று விரும்பியோ விரும்பாமலோ மலையகத்தில் பல்வேறு மாற்றங்கள் உருவாக வேண்டிய தேவை காணப்படுகின்றது.

உலகில் பல்வேறு சமூக அமைப்பினது விடுதலைக்கும் சுதந்திரத்திற்கும் அடிப்படையான அம்சமாக விளங்கியது, அவ்வவ் சமூகத்தில் உருவாகிய சமூக இயக்கங்களே எனலாம். இங்கு சமூக இயக்கம் என்பதனை ஒரு நெறிப்படுத்தப்பட்ட கூட்டு நடவடிக்கை எனக் குறிப்பிலாம்.

இவ் சமூக இயக்கமானது தமக்கு ஏற்படுகின்ற அநீதிகளை வெளிப்படுத்துகின்ற ஒரு மக்கள் கூட்டமாக அல்லது தாம் வாழும் சமூகத்தில் மாற்றங்களை கொணர்ந்து தமக்கெதிரான அநீதிகளை தடுக்கின்ற கூட்டமாகவே காணப்பட்டுள்ளது. எனவே மலையகத்திலும் இத்தகைய ஒரு நிலை உருவாக வேண்டும். இதற்காக இம்மக்கள் ஆயதம் தாங்கி போராட வேணடிய அவசியம் இல்லை. மாறாக அகிம்சை ரீதியான வழியில் அதாவது மறு வார்த்தையில் குறிப்பிடின் மலையகத்தினை வாழ்விடமாக கொண்ட அனைவரும் தத்தம் கடமைகளை சரியாக மேற்கொள்வார்களாயின் இன்னும் சில வருடங்களில் நிச்சயமாக மலையகம் விளிப்படையும் என்று கூறலாம். ஏனவே மலையக அரசியல் தலைவர்கள் , இளைஞர்கள், தொழிலாளர்கள் பாடசாலை போன்ற பல்வேறு தரப்பினர் மத்தியிலும் மாற்றம் ஏற்படுதல் அவசியமாகும்.

மேற்கூறியவற்றில் பாடசாலையினது பங்களிப்பு மிக முக்கியமானதாகும். எந்தவொரு சமூகம் கல்விப்புரட்சியினை அடைகின்றதோ அந்த சமூகம் மிக விரைவில் தமது சுதந்திரத்தினை அடைந்துக்கொள்கின்றது என்பது வரலாற்று உண்மையாகும். எனவே மலையக மலர்ச்சிக்கு பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர்கள் அதிபர்கள் என்போர் தம்மை முழுமையாக அர்ப்பணித்து சேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பான்மையுடன் கடமையாற்றுவதுடன் மாணவர்களை தம் நிலையை உணர்ந்து கல்வி கற்கும் சூழ் நிலையை உருவாக்க வேண்டும். இன்று மலையக சமூகத்திலும் டியசன் கலாசாரம் உருவெடுத்துள்ளது. மாணவர்களை தமது பிரத்தியேக வகுப்பரைக்கு வரவழைப்பதில் கவனம் செலுத்துமளவிற்கு பாடசாலைகளில் பல ஆசிரியர்கள் கவனம் செலுத்தாமை மகவும் கவலைக்குரிய விடயமாகும். இதனை விட ஆசிரியர்கள் தமது அறிவினை விருத்தி செய்து கொள்ளுமளவிற்கு உயர்கல்வியை பெறுவது அத்தியாவசிமாகும்.

இவ்வாறே பாடசாலையானது காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 2.00 மணி வரை மட்டும் திறந்திருக்கும் நிறுவனம் என்ற நிலை மாறி 2 மணிக்கு பின்னரும் பாடசாலைகளில் முறைசாரா கல்விச் செயற்பாடுகள் ஏனைய இடைவிலகிய அல்லது கல்வியை தொடர முடியாத நிலையில் காணப்படும். பலருக்கு வழிகாட்ட வேண்டும்.

மலையகத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் தமது போட்டி கட்சி மனப்பான்மையை கைவிட்டு தம்மால் இந்த மக்களுக்காக எத்தகைய வேளைத்திட்டங்களை முன்னெடுக்க முடியுமோ அவற்றினை செய்ய முன்வர வேண்டும். தோட்டங்கள் தோறும் அம்மக்களுக்கு பயன்படக்கூடிய வகையில் தொழில் பயிற்சி திட்டங்களை அறிமுகப்படுத்தி சுயதொழில் முயற்சிகளை ஊக்குவிக்க வேண்டும். வெறுமனே தேயிலைச் செடியை மட்டும் நம்பி வாழும் நிலையை மாற்றி ஏனைய விவசாய கைத்தொழில் துறைகளில் ஈடுபட்டு இம்மக்கள் தமது பொருளாதார நிலையை ஸ்திரப்படுத்திக்கொள்ள அவசியமான ஏற்பாடு களைச் செய்து கொடுக்க வேண்டும். அத்துடன் எப்படி ஊருக்கொரு கோயிலாவது காணப்படுகின்றதோ அதனைப்போல ஊறுகள் தோறும் நூல் நிலையங்களை அமைத்து ஆகக்குறைந்தது செய்தித் தாள்களையாவது தினந்தோறும் வாசிப்பதற் கான வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். இங்கு வேடிக்கையான அம்சம் யாதெனில் தோட்த் தொழிலாளர்களுக்கென்று வாங்கப்படும் செய்தித் தாள்கள் தோட்ட எழுதுவிளைஞர்களது வீடுகளில் அல்லது தோட்ட மேற்பார்வையாளர்களது வீடுகளிலே தமது சொந்த பாவனைக்காக பயன்படுத்தப்படுகின்றது. இந்நிலை மாற வேண்டும். இதனைவிட தமக்கு அரசாங்கம் ஒதுக்கும் வருடாந்த நிதியினை அபிவிருத்திக்காக பயன்படத்தாமல் மீள் அனுப்பாது ஏதாவது ஒரு அபிவிருத்தி திட்டத்திற்காக முழுமையாக பயன்படுத்த வேண்டும்.

அடுத்ததாக தற்கால அரசாங்கமானது மது, போதை பாவனையை தடுக்கும் முயற்சியோடு பல நடவடிக்கைகள் எடுக்கின்ற போதும் திட்டமிட்டு பெருந்தோட்ட பகுதிகளில் மதுபானசாலைக்கான அனுமதி பத்திரம் விநியோகிக்கப்படுகிறது யாவரும் அறிந்த உண்மையே இந் நிலையை மாற்றி மதுபானசாலைகளின் எண்ணிக்கையை குறைக்க நடவடிக்கை எடுத்து இம் மக்களது சுய சிந்தனையை உருவாக்கும் நிலையை தோற்றுவிப்பதும் அரசியல் தலைவர்களது பாரிய பொறுப்பு என்பதனை அவர்கள் உணர வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டங்களிடையே வாழுகின்ற அனைத்து மக்களிடையே ஒற்றுமையை வளர்க்கக்கூடிய செயற்றிட்டங்கள் ஏற்படுத்தப்படுவதுடன், மக்களிடையே காணப்படும் சாதி மனப்பான்மை இல்லாதொழிக்கப்பட வேண்டும். இக்கருத்தினை எதிர்ப்பவர்கள் பலர் இருக்கலாம். ஆனால் இன்று சில மலையக அரசியல் தலைவர்கள் கூட தம்மை நாடி வரும் மக்களிடையில் "இவர் நம்ம ஆளா" என கேட்டு உதவி செய்யும் நிலையையும் இதனைப் போலவே சில பதவி உயர்வுகளை வழங்கும் போதும் செயற்படுவதனை எவரும் மறுக்கவியலாது.

எனவே மலையகத்தில் விடிவுக்காலம் உருவாக வேண்டுமாயின் மலையகத்தில் வாழும் பல்வேறு தரப்பினர்களிடையேயும் ஒரு சமூக உணர்வு ஏற்பட்டு, ஒரு சமூக இயக்கமாக செயற்பட முன்வருவது காலத்தின் அவசியமாகும். ஒவ்வொருவரும் தமது கடமைகளை உணர்ந்து தமது பொறுப்பினை சரியாக நிறைவேற்ற முன் வருவார்களாயின் மலையக சமூகமும் ஏனைய சமூகத்திற்கு நிகராக வாழ முடியும். இந்த சமூகத்தினை ஏமாற்றி பிழைப்பவர்களையும் , சுரண்டி வாழ்வோரையும் இல்லாது ஒழிக்க முடியும். என்பது எனது நிலைப்பாடாகும்.

அறிவை வளர்த்திட வேண்டும் - மக்கள்
அத்தனை பேருக்கும் ஒன்றாய்
சிறியாரை மேம்படச் செய்தால் - பின்பு
தெய்வம் எல்லோரையும் வாழ்த்தும்.

-பாரதி-

L.ஜோசப். (M.A,Dip.in.Edu,Tamil Trd)
இராகலை த.ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நாட்டாரியல் ஒரு கண்ணோட்டம்....."

நாட்டார் இயல் என்பது கிராம மக்களின்அனுபவத்தின் பொக்கிஷம். மனிதனோடு மனிதனை அது நேரடியாக மட்டுமல்லாது இதயத்தோடு இதயத்தைப் பினைத்து வைக்கின்றது.அவர்களுடைய தனித்தன்மையைக் குலைக்காமல் ஒற்றுமையை வளர்க்கின்றது. இயற்கையோடு இயைந்து வாழும் சமூகத்தின் ஒட்டுமொத்தமான அல்லது தனிப்பட்ட உணர்ச்சிகளை அது பிரதிபலிக்கின்றது என்பார் நாட்டாரியல் என்னும் கல்கத்தாவிலிருந்து வெளிவரும் சஞ்சிகையின் ஆசிரியர் திரு. சங்கர் செனகுப்தா என்பவர்.

நாட்டுபுற மக்களின் கலைகளையும், இலக்கியங்களையும் நம்பிக்கை களையும் பற்றி அறிந்து கொள்ளும் இயலே நாட்டுபுற இயலாகும். ஆங்கிலத்தில் நாட்டுபுற இயலை Folk Lore என்று அழைக்கின்றனர்.

சார்லஸ் பிலான்சிஸ் போட்டர் (Charles Francis Potter) என்பவர் நாட்டுபுற இயல் என்பது உயிரோடுள்ள புதை வடிவம் (Lively Fossil) அது மரணமடைய மறுப்பது. மனித சமுதாயத்தின் இலட்சக்கனக்கான ஆண்டு வாழ்வுள்ள அனுபவங்களின் பண் பாட்டின் அறிவியலின் படிமங்கள் என்று கூறலாம். என்பார்.

ஜேக்கப் கீரிம் (Jacob Grimm) என்பவரே நாட்டுபுற இயலின் தந்தை என்பர். அறிவியல் அடிப்படையில் நாட்டுபுற இயலை ஆராய்ந்தவர்.

இலங்கையில் இத்துறையின் பிதாமக்களாக வட்டுக்கோட்டை மு. இராமலிங்கத் தையும், பேராசிரியர் மு.கணபதிப்பிள்ளையையும் முன்மொழியலாம். இதனைத் தொடர்ந்து கலாநிதி, மகாவித்துவான்,பேராசிரியர் கா.வித்தியானந்தன், பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் சிவத்தம்பி பேராசிரியர் தில்லைநாதன் போன்றோரும் இவ்வாய்வுகளை தொடர்ந்தவர்களாவர்.

நாட்டாரியலில் இடம்பெறும் சொற்கள் அன்புணர்ச்சியைப் புலப்படுத்தும் வார்த்தைகள் ஒரு சமுதாயத்தின் பின்னனியையும், சமூகப்பண்பாட்டு நிலமையையும் அறிவதற்கு அவை உதவுகின்றன. என்ற கருத்தை சே. அந்தனிஜான் அழகரசன் என்ற நாட்டாரியல் ஆய்வாளர் தனது நாட்டுபுறப் பாடலும் பண்பாடும் என்ற நூலில் பின்வருமாறு கூறியுள்ளார்.

"எழுத்துவாசனை அறியா மக்களினால் பாடப்பட்ட வாய்மொழி இலக்கியம் ஒரு நாட்டின் நாகரிகத்தை பண்பாட்டின் மேம்பாட்டை அறிவதற்கு துணைச்செய்யும் கருவிகளுள் ஒன்றாகும்"

பாமர மக்கள் மத்தியில் வாய்மொழி இலக்கியங்களே காலங்காலமாக வழக்கிலிருந்து வருகின்றன.இவை உயிர்த்துடிப்புள்ள இலக்கியங்களாகவே இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. மனித வாழ்வின் பல்வேறு உணர்ச்சிகளுக்கேற்ப பண்டைய வாழ்க்கை முறை ,போரியல் முறை, பண்பாடு சமுகப் பொருளாதார சூழல் பற்றியெல்லாம் எளிய பாடல்களாகவும், கலை வடிவங்களாகவும் பேசப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையன்னை தன் முகம் பார்த்துக் கொள்ள கிராமம் என்ற கண்ணாடியைத் தான் எடுத்துக் கொள்கின்றாள். அவள் ஒப்பனை உருப்பெறுவதும் இதன் மூலம்தான் ஆண்டவன் ஓய்வு நேரங்களில் வரைந்து தள்ளும் ஓவியத்திரைச் சீலைகள் தான் இந்த கிராமங்கள். அவள் தனது தூரிகைகளை அடிக்கடி பசுமை வண்ணத்தில் நனைத்துக் கொள்வதால் தான் இந்த கிராமங்கள் செழிப்பாய் தோன்றுகின்றன. அழகு மகள் தன் ஆடலுக்கு அமைத்த மேடைகளே இந்த கிராமங்கள். எனவேத்தான் அவள் கால்பட்ட இடங்களிலெல்லாம் இத்தகை கொள்ளையழகில் கொட்டி கிடக்கின்றன. போலும்,

இத்தகைய கிராம மக்களின் இலக்கியங்கள் "விண்ணைப் போன்று உயர்ந்தும், விரிகடலைப் போன்று பரந்து விளங்கினாலும் வண்ண மலர்களைப் போல் மனக்கின்றன. கிராம வாசிகளின் இலக்கியம், அவர்கள் பேசும் மொழியிலேயே கிடைக்கின்றது. இந்த இலக்கியம் மிகப் பழமையானது. பல தலைமுறைகளாக வந்து கொண்டிருப்பது" என்று அதன் பண்பையும்: இவைகளை நன்கு தொகுத்துப் பயிலுதல் நகரங்களையும் கிராமங்களையும் இணைத்து அவைகளுக்கு இடையேயுள்ள ஆழத்தையும் அகன்ற மடுவையும் கடக்க உதவும் என்று அதன் பயனையும் திரு. சத்தியார்த்தி கூறுகின்றார்.

இந்நாட்டார் இலக்கியங்கள் நீர்ச்சுனைப் போன்றவைகள். ஐயமும், ஆயாசமும் ஏற்படுகின்ற போது மக்கள் இவைகளில் மூழ்கி புத்துணர்வு பெற்றனர். "என்று பேராசிரியர் ஸ்ரேலிங் பிரவுன் குறிப்பிடுகின்றார். அவை புட்டியில் அடைக்கப்பட்ட வைன் அல்ல . தேவையானவர்கள் கவனித்து தேடி குடித்து களிப்புற இவை இயற்கையான தெளிந்த நீர். நமக்குத் தெரியாமலேயே நம் நாளாந்த தாகத்தைத் தணிப்பவை. ஏன்று கூறுகின்றார். சோவியத் சகர் வஸ்லி வோர்னால் சமூக உணர்வுகளின் கைகாட்சி சின்னங்களாக கருதப்படக்கூடியவைகள் இந்த நாட்டார் இலக்கியங்கள் கடந்தகால வாழ்க்கையின் இருள் படர்ந்த காலப்பகுதியில் ஒளிவீசக்கூடிய ஆற்றல் இவைகளுக்குண்டு என்று கறுப்பின வாய்மொழிப் பாடல்களை ஆராய்ந்த அவன்வோமா என்ற இன்னொரு ஆய்வாளர் குறிப்பிடுகின்றார்.

சங்க காலத்தில் இருந்து இன்று வரை கிராமிய மக்களின் வாழ்வோடு இணைந்து விட்ட பள்ளு, அம்மானை, குறவஞ்சி, ஊஞ்சல், கும்மி முதலிய நாட்டார் இலக்கிய வடிவங்கள் செய்யுள்களினூடாகவே பின்பற்றப்பட்டு வருவதை காணலாம். உள்ளத்து உணர்வுகளின் வெளிப்பாட்டை சுவைப்பட வெளிப்படுத்துவதற்கான சிறந்த ஊடகம் பாட்டு வடிவமே ஆகும்.

அன்று சாதாரண அடிநிலை மக்களின் சின்னங்களாகவும், உணர்வுகளின் வெளிப்பாடாகவும் விளங்கிய நாட்டார் பாடல்களின் பரந்துபட்ட வியாபகமே பிற்காலத்தில் தனித்துவமான நாட்டாரியலாக பரிணமித்தள்ளது என்றால் மிகையாகாது.

சாட்விக், குமுறே, மில்சன் முதலிய நாட்டாரிலக்கிய ஆய்வாளர்கள் மொழிகளில் செந்நெறி இலக்கியங்கள் தோன்றுவதற்கும் வளர்ச்சி பெறுவதற்கும் நாட்டார் இலக்கியங்களே முன்னோடிகளாகவும, கருவூலங்களாகவும், அமைந்தன எனத் தமது ஆராய்ச்சிகளின் மூலமாக நிறுவியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாட்டுபுற பாடல்களின் உயிர் என்று ஒன்றைக் கூறவேண்டுமானால் அது இசைத்தான். "ஆடையில்லா மனிதன் அரை மனிதன்" என்றால் இசையில்லா பாடல் பாடலே அன்று. பாடற் பறவைகளுக்கு இந்த இசைதான் சிறகுகளாகும். எனவேதான் திரு சத்தியார்த்தி "பண்ணோடு பாடப்படாத பாடல்கள் இறகில்லாத பறவைகள் போன்றவை" என்கின்றார்.

"பாட்டினைப் போல் இன்பம் பாரின்மிசை இல்லையடா" என்றார் பாரதி. ஆனால் நாட்டுபுறப்பாடலினைப் போல் இன்பம் எங்குமில்லை என்றுமில்லை. எல்வின் கூறுவது போன்று "விண்ணையும், மண்ணையும், மலைகளையும், தொழில்களையும், நதிகளையும், மாறுப்படும் பருவங்களையும், வர்ணிப்பதோடு மனித உள்ளத்தெழுகின்ற வெவ்வேறான உணர்ச்சி பாவங்களையும் வெளியிடுகின்றன.

புலவர்களால் உருவாக்கப்பட்டு கற்றவர்களால் காப்பாற்றப்படுபவை இலக்கியங்கள். பாமர மக்களால் உருவாக்கப்பட்டு அவர்களாலேயே காப்பாற்றப்படுபவை நாட்டுப்புற பாடல்கள். இலக்கிய வரலாறு என்னும் கடலில் சங்கமம் ஆகும் ஆறுகளில் நாட்டுப்பாடல் என்ற ஆறும் ஒன்றாகும். என்பார் திரு ஆறு. ஆழகப்பர் என்பவர் ஆவார்.

பிறப்புமுதல் இறப்புவரை என்ற ஒரு வரையறையோடு நாட்டுப்புறப் பாடல்களின் வகைகளைப் பார்ப்பது மிகப் பொருத்தமாக இருக்கும்.

தாலாட்டுத்தான் மனிதன் கேட்கும் முதல் பாட்டு, தொட்டில்தான் மனிதனின் ஆரம்ப பள்ளி, அவன் தாய்தான் அவனுக்கு ஆசிரியர், புரியாத வார்த்தைகளாக இருந்தாலும் இசையானது குழந்தையை தூங்க வைக்கிறது. என்பதை அறிந்த தாய்,

"கண்ணே கண்ணுறங்கு என்
கண்மணியே நீயுறங்கு"

என்று தாலாட்டுகின்றாள் -

அக்குழந்தை அழுது அடம் பிடிக்குமானால்,

"ஆரடித்தார் நீயழுதாய்
அடித்தாரை சொல்லியழு"

என்ற தாய் கேட்பதாக அமைகிறது.

குழந்தைகள் பாடும் பறவைகள் என்றும் ஆடிவரும் பூந்தோட்டங்கள் என்றும் கூறலாம்.கவலைக் கரையான்கள் அரிக்காத மனம் குழந்தைகள் மனம். மகிழ்ச்சிகளையே உருட்டி திரட்டியது போன்று எப்பொழுதும் சோர்வின்றி இருப்பார்கள்.இக்குழந்தைகளின் விளையாட்டு பாடல்களை சற்று நோக்குவோமாயின்,

"ஓடுகிற நரியிலே ஒரு நரி சிறுநரி
சிறுநரி முதுகிலே ஒருபிடி நரைமயிர்"

மேலும்,

"ஒரு குடம் தண்ணி எடுத்து ஒருப்பூ பூத்தது
இருகுடம் தண்ணி எடுத்து இருபூ பூத்தது"

என அமைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாகி தொழில் செய்யும் உள்ளத்தில் இருந்து தொழிற்பாடல்கள் உருப்பெருகின்றது.

"ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது." என்பார்கள். பாடலின் மகிழ்ச்சியில் வேலைப் பளுவானது உள்ளத்தைப் போலவே உடலையும் பாதிக்காது. தொழில் துன்பங்களுக்கு இப்பாடல்கள் வேது ஒத்துவதாக அமைந்திருக்கும். செய்யும் தொழில்கள் தெய்வமென்றால் அத்தெய்வத்துக்குச் சாற்றும் பூமாலைகளே இப்பாடல்கள்.

பயிருக்கு நீர் பாய்ச்சக் தலைவன் கமலை அடிக்கும் போது, தலைவி,

"பொட்டலிலே கிணறு வெட்டிப்
போர்க்காளை ரெண்டும் பூட்டிக்
காப்புப் போட்ட கருத்த மச்சான்
கமலைகட்டத் தெரியலையே" என்று பாடுகிறான்.

மேலும்,

"பொலி வளரப் பொலி வளர
பொலியான பொலி பொலி
பொலி மேலே பொலி வளர்ந்திருக்கனும்;"
என்று பாடுவர்.

தொழிற் பாடல்களில் காதலியைப் பற்றியும் பாடுகிறார்கள்.

காதலர் உள்ளங்கள் இன்பவானில் சிறகடிக்கும் போது இனிய பாடல்கள் பிறக்கின்றன.நாட்டுப்புறங்களில் ஏற்படும் காதல்கள் நகர்புற காதலைப் போன்று போலியானவை அல்ல "பட்டிக்காட்டு காதலுக்கு கெட்டியான உருவமப்பா" என்று சொல்வதுபோல் இவர்களின் காதல் சுத்தமானது இவர்கள் பாடும் பாடல்களுள் சுவையானவை.

"மறந்தாலும் மறந்திடுவேன்
மருந்து தின்னால் ஆறிடுவேன்
மறந்தே இருப்பதற்கு சண்டாளா
மதி இருக்கக் கூடுதில்லை"

மேலும்,

"ஆலமர முறங்க
அடிமரத்துக் கொப்பசைய
ஊரு உறங்காதோ
ஊங்கமடி நானுறங்க"

என்றெல்லாம் காதற் பாடல் அமைகிறது.

காதல் உள்ளங்களை திருமணத்தை எதிர் நோக்கும் போது கிராம புறங்களில் பாடல்கள் பாடுகிறார்கள்.

"கரண்டகம் போலே
உருண்ட முகரனுக்கு எங்கள்
காராள வங்கியம்
எங்கிருந்து வாச்சுதோ"
என்று பாடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவள்ளுவர் முதற் கொண்டு பல்வேறு தமிழ்ச் சான்றோர்கள் குடிப்பழக்கத்தின் தீமையைச் சுட்டிக்காட்டி அதனைத் தவிர்க்குமாறு அறிவுரை கூறி வந்துள்ளனர். அவர்களின் கருத்துக்கள் எழுத்தறிவற்ற அறியாமை மிக்க ஏழை எளிய மக்களைச் சென்றடைந்திருக்குமா என்பது ஐயத்திற்குரியதே. ஆனால் நாட்டுபுறப் பாடல்களோ எழுத்தறிவில்லாத மக்களிடையே செல்வாக்குடன் திகழ்வதால் அவர்களுக்கு நீதி புகட்டும் செயற்பாட்டினைச் செய்வதில் பெரும்பங்காற்றுகின்றன. சான்றாக சில பாடல்களை காணலாம்.

குடிகாரக் கணவனிடம் குடிக்காதே'' என்று பலமுறை புத்தி கூறுகின்றாள் மனைவி அப்படியும் அவன் முடிப்பதை நிறுத்தவில்லை அவள் மனம் வெறுத்து வசைச் சொற்களால் அர்ச்சனை நடத்துகிறாள். இப்படி ஒரு குடும்பக் காட்சியைப் பின்வரும் பாடலில் காணலாம்.

" எத்தனையோ புத்திகள
எடுத்துரைத்தேன் சாராயத்த
நித்தம் போய் குடிக்கிறிய
நீயும் ஒரு ஆம்பளையா?

மேலும்,

நித்தம் கள்ள குடிக்காதடா
பித்தம் போயி சிரசிலேறும்
கள்ளெல்லாம் குடிக்காதடா

(பாடியவர் :- வேலம்மா)

என அமைகிறது.

பாடலோடு தொடங்கும் மனிதனின் வாழ்க்கை பாடலோடுதான் முடிகிறது. "ஆரம்பமாவது மண்ணுக்குள்ளே, அவன் ஆடி அடங்குவதும் மண்ணுக்குள்ளே'' என்பார்கள் இது போலவே ஆரம்பமாவதும் பாட்டிலேதான் அவன் ஆடி அடங்குவதும் பாட்டிலேத்தான;'' என்பார்கள். இறந்தவர்களுக்காக பாடும் ஒப்பாரி பாடல் சோகச்சுமையுடன் விளங்குகின்றது.

"கும்பிடுகிறோம் கும்பிடுகிறோம்
குருவென்று வந்தவரைக் கும்பிடுகிறோம்
அன்பு படைத்தவரை மீண்டவரைக் கும்பிடுகிறோம;''

என பாடுவர்.

இவ்வாறு மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை பலவிதமான பாடல்கள் நாட்டார் மக்களிடையே ஊற்றெடுக்கின்றது.

இத்தகைய நாட்டார் பாடல்களில் நெஞ்சை பறிகொடுத்த பாரதியின் பாவிக்குயில் போல நாமும் இந்நாட்டார் பாடல்களில் நெஞ்சை பறிக்கொடுக்காமல் இருக்கமுடியாது. ஏனெனில் கலை சாமானிய மக்களின் வாழ்க்கையில் பிண்ணி பிணைந்து காணப்படுவதுடன் அவர்களின் உணர்ச்சிகளுக்கு வடிகாலாகவும் அமைகிறது என்றால் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே நாம் நவீன நாகரிகத்தில் மூழ்கி நமது அரும்பெரும் சொத்தாகிய நாட்டார் இலக்கியங்களை புறக்கணித்தலாகாது. இந்த வகையில் பேராசிரியர் வித்தியானந்தன், வானமாமலை, பாலசுந்தரம், மக்கள் கவிமணி இராமலிங்கம, வித்துவான் நடராசா, சதாசிவ ஐயர் முதலிய நல்லறிஞர் பலர் ஆற்றிய தொண்டினையும் நினைவுக்கூறுதல் நலம் ஆகும். நாட்டார் பாடல்களை இயன்றவரை பாதுகாப்பது தமிழரின் தலையாய கடமையாகும். தமிழ் என்னும் நித்திய சிரஞ்சீவி மொழி என்பது தெள்ளத்தெளிவாக உணரவைக்கின்றது.

எனவே தேய்பிறை நிலவு போலிருக்கும் நாட்டார் இலக்கிய மரபை வளர்பிறை நிலவாக மாற்ற வேண்டியதும் பாதுகாக்க வேண்டியதும் எமது கடமையாகும்.

- உசாத்துணை நூல்கள்
- நாட்டுபுற இயல் ------ டாக்டர் சு. சண்முகசுந்தரம்
- நாட்டுபுற இயல் ------ஆறு. இராமநாதன்
- மலையக வாய்மொழி இலக்கியம்.--- சாரல்நாடன்
- நாட்டு பாடல்கள்

கணேசன். விஜயபாரதி ஆசிரியை
இராகலை தமிழ் மகா வித்தியாலயமம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## SCHOOL DEVELOPMENT SOCIETY

**Mrs.K.Amarawathi,Mr.K.Gnanasegaram,Mr.Jothilingam,Mr. M. Viythylingam, Mr.R.Balasamy (Secratory),Mr.M.Panneerselvam(D.P),Mr.S.Yogeshwaranathan (Principal),Mr.S.Franklyn (D.P),Mr.S.Selvarasu (V.P),Mr.P.Ganeshan, Mr.S.Thamotheram,Mr.N.Noordeen,Mrs.S. Sureshkumari,Ms.S.Yogarani**

ABSENTIES

**Mr .S. Pawalanadan ,Mr .P .Paramanathan**



## OLD BOY'S ASSOCIATION

**Mr.S.Anandakumar,Mr.K.Gnanasekaram,(Sec.)Mr.D.R.Selvaraja (A.D) Mr.S.Yogeswaranathan (Principal),Mr.P.Mariyadas (A.D) Mr.L.Joseph(Tre) Mr.A.Sabithkumar,**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**PRINCIPAL & DISCIPLINE COMMITTEE**



**BOARD OF PREFECT 2007**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழிய நீ தாயே

என்னிரு கரங்களை கூப்பி
என்னை ஈன்றவளுக்கு
வணக்கம் செலுத்துகிறேன்
என் அங்கம் முழுவதையும்
கரங்களாக்கி கூப்பி
என்னை வளர்த்து ஆளாக்கி
ஆட்படுத்திய- என் வளர்ப்பு தாய்க்கு
வணக்கம் சொல்லி பணிந்து
மகிழ்கிறேன்

விண்ணை தொடுமந்த
வண்ணாத்தி கோட்டை மலையை
என் வீட்டு முற்றத்திலிருந்து
இரசித்துக்கொள்கிறேன் - அதன்
தென்கிழக்காய் அமைந்துள்ள
என் வித்தியா கோட்டையை
என் வாழ்நாளில்
என்றென்றும் நேசித்துக்கொள்கிறேன்.

மல்லிகையின் வாசனையாய்
வித்தியா மணம் பரப்பும்
அன்னை சாலைக்கு - இந்த
ஊமத்தம் பூவும்
வாழ்த்துரைக்க விழைகின்றேன்.
தரமான பல
பூக்களின் சொந்தக் காரிக்கு
தாழம் பூ நானும்
புகழ் பாடிட புறப்படுகின்றேன்.

அரிச்சுவடியை ஆரம்பித்து வைத்து
அறிவின் ஆழ அகலங்களை
அளந்து நோக்கும் அறிவைத்தந்த - என்
வளர்ப்புத் தாயே !
ஆறுக்கும் ஐந்துக்கும் இடையிலான
வேறுப்பாட்டை உணர்த்தி
ஆறு சென்று சங்கமமாகும்
ஆழியின் ஆழமதை அறியும்
அறிவு தந்த அன்னை சாலையே
வீரத்திலும் விவேகம் பெரிதென
விளக்கம் சொல்லி
விவேக வித்துக்களை
என்னுள் விதைத்தவளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரத்திலே பெரிய பாரம்
ஏழை பாமரனின் மனப்பாரம் என்பதையும்
நேரத்திலே கொடிய நேரம்
நீதியின் பார்வைக்கு
நெருப்பைக் கொட்டும்
நியாயமற்றவர்களின் அதிகார நேரமென்பதனை
நிறுவிக் காட்டிய நித்திய தாயே

சோகத்திலே பெரிய சோகம்
எம் மக்கள் சுதந்திரம் சோரமாதல்
என்பதை சொல்லித் தந்தவளே

அரசியலுக்கும்
ஆசிரியம், ஆன்மீகத்திற்கும்
கலை, கலாசாரத்திற்கும்
சட்டம். வைத்தியத்திற்கும்
பொறியியல்.நிர்வாகம்
வர்த்தகம் வாணிபம் என்று
பலரை உருவாக்கிய பெருமிதத்துடன்
வைர விழாக் காணும்
என் வித்தியா தாயே
உனக்கு வாழ்த்து சொல்வதில் பெருமிதமடைகின்றேன்.

தாயே
நின் அனுபவங்களின்
அகவை வேண்டுமானால் அறுபதாக இருக்கட்டும்
நின் சேவையின் அகவை மட்டும்
என்றென்றும் இருபதாகவே இருக்கட்டும் என்று
என் இனிய வைர விழா வாழ்த்துக்களை
வழங்குகிறேன் அம்மா.
வாழிய நீ.

சு.சுசிதா ஆனந்தகுமார் (ஆசிரியர்)
பழைய மாணவர் சங்க உறுப்பினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகமயமாதல் எனும் எண்ணக்கரு

உலக நாடுகள் தனது எல்லை என்ற கட்டுப்பாட்டுக்கோட்டை நிராகரித்து விடுவதன் மூலம் எல்லா நாடுகளும் உலக ரீதியாக சிந்திப்பதையும் அதற்காக உள்ளூர் மட்டத்தில் செயலாற்றுவதையும் இது குறிப்பிடுகின்றது. உலகம் முழுவதையும் ஒரு நாடு தன் பொருளாதார செயலாற்றுகைக்கு தேசிய பொருளாதாரத்தை உலக சந்தைக்கு விஸ்தரிக்கும் செயற்பாடு உலகமயமாதல் எனப்படும்.

இதன் மூலம் உள்நாட்டு உற்பத்தி தொழில்நுட்பம் சந்தைவாய்ப்பு நாணயம் மற்றும் நிதி போன்றவற்றை தடையற்ற வகையில் திறந்து விடப்பட்டு உலக உற்பத்தி உலகதொழினுட்பம் , உலக சந்தை , சர்வதேச நாணயம் என்ற வகையில் கட்டுப்பாடுகள் எதுவுமற்ற வியாபார நடைமுறைகளை ஊக்குவிப்பதன்மூலம் நாடுகளை அவற்றுக்கிடையிலான போட்டி முறையை மிகவும் உயர்ந்த நிலையில் இது இட்டுச்செல்கின்றது.

தொழில்நுட்பமும் முயற்சியான்மையும் நாடுகளுக்கிடையில் தடையின்றி இடம்பெறுகின்றன. இவை எல்லாவற்றையும் விட மனித மூலையின் பயன்கள் தகவல்தொழில்னுட்ப விரிவாக்கத்தினால் எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றி பரவ வாய்ப்பு ஏற்படுகின்றது. அறிவுசார் உற்பத்திகள் (**knowledge product**) மூலம் அறிவும் திறனும் எல்லைகளைக் கடந்தும் பரவுகின்றன. இவற்றுடன் மனித வளம் என்பதும் உலக நாடுகளுக்கிடையே தாராளக் கொள்கையைப் பின்பற்றல் தனியார் மயம் முதலீட்டு சந்தை வாய்ப்பு பெறும்.

சந்தை முறைமையில் முழு அனுமதி பொருளாதாரத்தில் சீரமைப்பு போன்ற புதிய நடைமுறை சீரமைப்புக்களை தோற்றுவிப்பதனாலும் வழிவகுப்பதனாலும் பொருளாதார தோற்றத்தை உருவாக்குவதில் முழுப்பங்கேற்கின்றது.

1990 களில் டங்கள் அறிக்கையைத் தொடர்ந்து கட் (**gatt**) அமைப்பை உலக வர்த்தக நிறுவனம் பிரதியிடத்தொடங்கியதிலிருந்தே உலக மயமாதல் என்பது நடைமுறை விடயமாகியுள்ளது.

இவ்வுலகமயமாதல் எனும் கொள்கையானது பொருளாதார ரீதியில் பல நன்மைகளை தருகின்றனதென கூறலாம். நாடுகளுக்கிடையே அதிகரித்துவரும் உலக நெருக்கடி களைக் குறைத்துக் கொள்ளவும் நீண்டகால வளர்ச்சியை உறுதிப்படுத்துகின்றது. புதிய முறையிலான கைத்தொழில், சேவைக்கைத்தொழில் வளர்ச்சி பன்முகப் படுத்தப்படல். இதனால் வளரும் நாடுகளும் வளர்ந்த நாடுகளும் மாற வாய்ப்புண்டு. நவீன தொழில்நுட்பப் பயன்பாடு அதிகரித்தல் மற்றும் வேலைவாய்ப்பு விரிவுபெறல் போன்ற நன்மைகளாகக் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறப்பட்ட வகையில் பல்வேறு நன்மைகளை ஏற்படுத்தியுள்ள உலகமயமானது இன்று பல்வேறு சவால்களை எதிர்நோக்குகின்றது. நாடுகள் உற்பத்தியில் தங்கியிருக்கும் நிலை ஏற்படும். பல்தேசிய கூட்டு நிறுவனங்களின் ஆதிக்கம் வலுப்படும். தொழில் நிறுவனங்களின் உலகமாதற் செயன்முறையில் மிக உயர்ந்த இலாபத்தை ஈட்டுகின்றன. ஆனால் மறுதலையாக பணியாற்றுவோருக்கு தொழில் உத்தரவாதம் எதுவுமில்லை

பொருளாதார வளர்ச்சிக்கான மையத்தளங்களை நிலைபெறச்செய்தல் உலகமாமாதல் தீவிரமாக செயற்படுகின்றது. உலக மயமாதல் பல நாடுகளில் புதிதாக வேலைவாய்ப்புக்களை விட அவை இல்லாமல் செய்த வேலைவாய்ப்புக்கள் அதிகம்.

இவ்வாறான பல தீமைகளும் இருந்தது அதை தீர்ப்பதற்கு விவசாயம் சூழலைப் பாதுகாத்தல் குடும்ப திட்டமிடலை மேற்கொள்ளல் என்பனவற்றை மேற்கொண்டனர். இவற்றின் ஊடாக உலகமயமாதல் பிராந்திய கட்டமைப்பு நன்மைகள் , சவால்கள், அவற்றுக்கான தீர்வுகளையும் கொண்டு காணப்பட்டது.

செ.இலங்கேஸ்வரி
12 கலைப்பிரிவு
இராகலை த.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







**MEMORY IN HISTORY**









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராகலை ஆள்கரனோயா பெயர்வரக்காரணம்

இதிகாச வரலாற்றுக் காலத்தில் இராமயணக்கதையில் வரும் இராவணன் மன்னன் சீதையை கடத்தி அசோக வனத்தில் (சீதாஏலிய) சிறைவைத்தப் போது அனுமன் படைகள் சூழ்ந்த வனத்தை தேடிய போது சீதையை இராவணன் இராகலையிலிருந்து 6 கி.மீ தூரத்திலுள்ள கரடபட்சி சோலையில் நிறுத்தினான். சீதையை கண்காணிக்க இராகலை மலைத்தொடரை காவலரணாக்கினான். இந்த இராவணன் கலை மலை பின் இராகலை மலையானது இது பின் நகருக்கு இராகலை என பெயர் பெற்றது.

## ஆள்கரனோயா

இராகலைக்கு ஆள்கரனோயா எனும் பெயரும் உண்டு. அதற்கு காரணம் புராதன காலத்தில் கதிர்காமம் செல்லும் யாத்திரிகர்கள் இவ்வழியே பயன்படுத்தினர். அவர்கள் செல்லும் வழியில் அங்கு உணவு தயாரித்து உண்டு பின் சென்றனர் இது சிங்கள மொழியில் ஆல் (அரிசி) கர (அரித்தல்) ஓயா (ஆறு) அரிசி அரிக்கும் ஆறு இதுவே பின் ஆற்றிற்கு ஆல்கரனோயா என பெயர் பெற்றது இதுவே இராகலைக்கு நிர்வாக பெயராக ஆள்கரனோயா எனப் பெயர் பெற்றது.

ஆசிரியர் எல். இராமச்சந்திரன்
இராகலை த.ம.வி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சை என்றதும் அஞ்சுபவர்களுக்கு

இன்றைய கல்வியமைப்பில் ஒருவனுடைய கல்வித் தர நிர்ணயிப்புக்கு பரிட்சையே முக்கிய களமாக அமைந்து காணப்படுகின்றது. இப்பரீட்சை முறையில் எழுத்து மூலம், செயன் முறை பரீட்சைகள் இடம்பெறுகின்ற போதிலும், எழுத்து மூல பரீட்சையே முக்கியத்துவம் வாய்ந்தாக காணப்படுகின்றது. இவ்வெழுத்து மூல பரீட்சையை எதிர்கொள்ளும் மாணவர்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கும், பதற்றத்திற்கும் உள்ளாகியவர்களாகக் காணப்படுவது இன்று அவதானிக்கக்கூடிய ஒரு விடயமாக காணப்படுகின்றது.

எனவே எழுத்து மூலப்பரீட்சை ஒன்றுக்கு தயாராகும் மாணவன் ஒருவன் கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்களை நோக்குவோமாயின் அதனை பின்வருமாறு கூறலாம்.

ஒரு குறிப்பிட்ட பாடமொன்றை அல்லது பல பாடங்களைப் பரீட்சையில் சந்திக்க வேண்டுமாயின் அதற்கான ஆயத்தம் முதலில் வகுப்பறை கற்றலுடனேயே ஆரம்பமாகின்றது. வகுப்பறை கற்றலின் அதிவுச்ச பயன்பாடானது அவற்றை மீளப்படிப்பதிலேயே தங்கியுள்ளது. ஏனெனில் வகுப்பறைக்கற்றல் குறிப்பிட்ட சில மணித்தியாலங்களில் அல்லது நிமிடங்களில் முடிவடைந்து விடுகின்றமையும், அதனை மீட்டி தமக்கு புரிந்து கொள்ளும்படியாக அதனை ஆக்கிக்கொள்வதும் அவற்றை மீளப்படிப்பதிலேயே தங்கியுள்ளது.

மீளப்படித்தல் என்பது பாடநெறிக்கட்டுரைகள், குறிப்புகள், பாடப்புத்தகங்கள் என்பவற்றை வாசித்து புரிந்துக் கொண்டு படித்தவற்றை நினைவில் வைத்திருப்பதைக் குறிக்கும். இதற்கு சரியான குறிப்பெடுத்தலும் சரியான திட்டமிடலும் அவசியமாகும். ஒரு பாடத்தை மீளப்படிக்கும் போது நன்கு வாசித்து முக்கியமானவற்றைத் தனித்தனியான தலைப்புக்களின் கீழ் குறித்துக்கொள்ள வேண்டும். தலைப்புக்கள், குறிப்புக்கள் இலகுவில் கண்ணில்படுவதற்காக வர்ணங்களை பயன்படுத்தலாம். இக்குறிப்பெடுத்தலானது மீள்ப்படித்தலின் போது, சுறுசுறுப்பாக இயங்கச்செய்யும் ஒரு விடயத்தில் அதிக ஆர்வம் செலுத்தவும், அதனைப்புரிந்துகொள்ளவும் உதவும். பாடங்கள் அனைத்தையும் புரட்டிப்படிக்க வேண்டிய அவசியத்தை நிவர்த்தி செய்ய இது உதவும்.

மீளப்படித்தலுக்கும்,பரீட்சை நுணுக்கங்களைப் புரிந்துகொள்வதற்கும் உதவும். முக்கிய அம்சங்களைப் புரிந்துகொள்ள முடியாது போனால் அதனை புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டுமே தவிர தட்டிக்கழிக்க முனையக்கூடாது. முடியாது என்று ஒதுக்கிவிடாது தெரிந்த ஒருவரிடம் கேட்டு தெரிந்துக்கொள்வது சாலச்சிறந்தது.

மேலும் மீளப்படித்தலுக்கு முன் தமக்கேற்ற வகையில் மீளப்படித்தல் அட்டவணை ஒன்றை தயாரித்துக்கொள்ள வேண்டும் அன்றாடம் இதற்காக போதியளவு நேரத்தை செலவிட வேண்டும், எந்த நேரத்திலும் உற்சாகமாகப் படிக்க முடியும் என்பதைத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும், நித்திரைக்குப் போகும் முன்னர் சற்று நேரம் ஓய்வாக இருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

குறிப்புகள் புரிந்துக்கொள்ளக்கூடியவாறு சீரான முறையில் காணப்பட வேண்டும். தேவைப்படும் போது இவை எளிதில் புரிந்துக் கொள்ள உதவும். குறிப்புக்களை கவனமாக எடுத்து வைப்பது அவசியமாகும். இது வேலையின்றி ஓய்வாக இருக்கும் போது அதனை தட்டிப்பார்த்து மீட்டிக்கொள்ள உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மீளப்படிப்பது எங்கே?**

மீளப்படித்தலின் போது காணப்படும் நிலைமை மீளப்படித்தலின் திறனில் தாக்கத்தை ஏற்படுத்தும். அமைதியான ஆழ்ந்த கவனம் செலுத்திப் படிப்பதற்கு குடும்பத்தாரின் ஒத்துழைப்பும் மிகவும் அவசியமாகும். படிக்கும் போது ஒரே இடத்தை தெரிவு செய்வது கூடிய நன்மை பயக்கும். படிப்பதற்காக தெரிவு செய்யப்படும் இடமானது

- அமைதியான, வசதியான ,காற்றோட்டமுள்ள, ஒளி நிறைந்த இடமாக இருத்தல் வேண்டும்.
- புத்தகங்கள், சஞ்சிகைகள், எழுதுகருவிகள் மற்றும் தேவையான அனைத்துப் பொருட்களும் அருகில் வைத்திருக்க வேண்டும்.
- வானொலி, இசைக்கருவி மற்றும் படிப்பதற்கு இடைஞ்சலை ஏற்படுத்தும் பொருட்களை ஒதுக்கி விட வேண்டும்.
- வசதியான ஒரு கதிரையும் , விசாலாமான ஒரு மேசையும் பயன்படுத்தல் வேண்டும்.

இவை அனைத்தையும் கவனத்திற் கொண்டு ஒரு பரீட்சைக்கு தயாராகுவோமானால் சிறந்த பெறுபேற்றினை சிரமமின்றி பெற்றுக்கொள்வோம் என்பது வெள்ளிடைமலையாகும்.

ம.குமுதுமலர்
12 கலைப்பிரிவு
இராகலை த.ம.வி.

# காலப் பெருவெளியில்

நாற்பத்தேழில் சிறு கொட்டில் குழந்தையாய் - நீ
ஈராயிரத்தேழில் பாரோங்கும் மன்னனாய்
அறிவுப் பசி தேடி வரும் மாணாக்கரை - நீ
அறிவென்ற ஒளியூட்டி அரவணைப்பாய்!

இராகலைக்கோர் அணிகலனாய் இருக்கின்றாய் -நீ
இருளகற்றும் ஒளி விளக்காய் மிளிர்கின்றாய்
பாரதியும் வள்ளுவரும் நாவலரும் - நீ
வியந்திடவே மேடையேற்றி வெற்றி கண்டாய்!

மலையகத்து மண்ணின் பெருமையினை - நீ
மங்காது காத்து வரும் மணிமகுடம்
எண் திசையிலும் கற்றறிந்த ஆசான்களை - நீ
வரவேற்று நலம் பெற்று வளர்க்கின்றாய் !

எண்ணோடு எழுத்தையுமே எடுத்துரைப்பாய் - நீ
வெறும் ஏட்டு சுரைக்காய்களை கிள்ளி எறிவாய்
வைர விழா கொண்டாடப் புறப்பட்டாய் - நீ
வாழ்வாங்கு வாழ வாழ்த்துகின்றேன் !

திருமதி.இரா.சாந்தி (ஆசிரியர்)
நு/வ/இராகலை த.ம.வி ,ஆள்கறனோயா .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அன்னை

தாயே உன்னை வாழ்த்துகிறேன்
என்றும் உன்னைப் போற்றுகின்றேன்
அம்மா உன்னை என் கோயிலாக
மாண்பு கொள்கிறேன்

எத்தனை பிறவிகள் எடுத்தாலும்
உன்னை என் கோயிலாக நினைந்து
மாண்பு கொண்டு வாழ்த்துவேன்

உன் குழந்தையான எனக்கு
அன்பும், அறனும்,அறிவும
பண்பும் பழக்கவழக்கமும்
சொல்லித்தரும் என்
அன்னையே உன்னை
வாழ்த்துகிறேன் அம்மா

உன்னை என்றும் மறவேன்
உனக்கு என்றும் ஆசி கூறுவேன்
உன்னதமான என் கோயில் உன்னை
இருகரம் கூப்பி வாழ்த்துகின்றேன்

என் அன்னையே வாழ்க நீடு

செல்வி எஸ். சர்மிளாருபி
தரம் 7 B
இராகலை தமிழ் மகா வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமிப்பேரலை

உலகம் தோன்றி பல நூற்றாண்டுகள் வருட காலம் கடந்துவிட்டது. அந்த வகையில் இவ்வுலகில் ஆங்காங்கே பல கொடூர அசம்பாவிதங்களும் இயற்கையின் சீற்றமும் அடிக்கடி ஏற்படுவது வழக்கம். அதற்கு இனங்க ஆசியா மட்டுமல்ல அண்ட சராசரத்தையும் கலக்கிய ஒரு இயற்கையின் சீற்றமே அன்மைக்காலத்தில் தோன்றிய சுனாமி ஆகும்.

அந்தவகையில் இச்சுனாமி எனப்படுவது ஜப்பானிய மொழியாகும். அதற்கினங்க (Tsunami) என்ற தன்மையில் (T) டி எனப்படுவது துறைமுகத்தினையும் (sunami) எனப்படுவது பேரலையாகவும். கருதப்பட்டு தமிழில் இது "துறைமுக பேரலையாக " மருவி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்சுனாமியை பற்றி நாம் ஆராய்வோமானால் இப்பேரலையானது கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளுக்கு முன் அதாவது இரண்டாயிரத்து நான்காம் ஆண்டு திசம்பர் இருபத்து ஆறாம் திகதி நிகழ்ந்தது. இது சுமார் 9.5 ரிச்டர் அளவு கடல் பகுதியில் புவியினை நடுக்கத்திற்கு உள்ளாக்கியது.

மேலும் இப்பேரலையில் பாதிக்கப்பட்ட பிரதான இடமாக இந்தோனேசியா என நம்பப்படுகின்றது. சமுத்திர ஓடுகள் என்று சொல்லப்படும் ஓடுகள் விலகி சென்றமையால் இப்பேரலை தோன்றியது. இப்பேரலையால் இந்தியாவில் திருப்பரங்குன்றம் என்ற கடல் பரப்பில் சுமார் 10.05-1.45 மணிவரை இப்பேரலை தாக்கியது அதிசயிக்க வைத்தது.

அதுமட்டுமன்றி இலங்கையும் பாதிப்புக்குள்ளாகியது. இச்சுனாமி தாய்வான் , இந்தோனேசியா, இந்தியா, இலங்கை, சோமலியா போன்ற நாடுகளை தாக்கியதுடன் சிறிய அளவில் தென் அமெரிக்காவையும் தாக்கியுள்ளது.

அத்துடன் வள்ளுவர் போன்ற அறிஞர்கள் சுனாமியை பற்றி அன்றே கூறியுள்ளனர். அத்துடன் நாவலன் தீவு எனப்படுவதும் தவமூரியாக் கண்டம் என தமிழில் இதனை அழைக்கப்படும். பெயர் புதிதாக இருந்தாலும் " கடல்கோல்" என்று பண்டைய காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து அழைக்கப்பட்டது.என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது தென்மதுரை , கபாடபுரம் , தற்காலமாதுரை ஆகியவற்றால் தோற்றம் கண்ட இலக்கியங்கள் இந்த சுனாமி எனப்படும் கடல் கோலினால் அழிவுற்றமையை காணலாம்.

அந்த வகையில் இலங்கையில் இச்சுனாமி பாதிப்பினை நாம் அறிவது மரபு அதற்கினங்க இலங்கையில் காணப்பட்ட சுமார் 6 கரையோர மாவட்டங்களான அம்பாறை யாழ்ப்பானம், திருக்கோணமலை, மட்டகளப்பு , கொழும்பு , அம்பாந்தோட்டை போன்ற பிரதேசங்கள் முழுமையாக அழிக்கப்பட்டது

இது மாத்திரம் அல்லாமல் இச்சுனாமி தாக்கத்தின் காரணத்தினால் சமூக, அரசியல், பண்பாட்டு, பொருளாதார போன்றவற்றில் பல்வேறு தாக்கங்களையம் ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. 30000 50000 ற்கும் அதிகமானோர் தன் உயிரை இழந்தமையும் 15000 பேர் அகதிகளாகியமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் பிரதானமாக அமெரிக்க கடற்கரையைச்சுற்றி காடுகள் வளர்த்தல் , மாலைத்தீவில் உள்ளது போன்று தடுப்பு சுவர்களை அமைத்தல் அத்துடன் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட 100 மீற்றருக்கு அப்பால் வீடுகள் கட்டப்படுதல் இவ்வாறான திட்டங்கள் மேற்கொள்ளுதல் அவசியம. சுனாமியைப் பற்றி அறிவிக்கவும் முன் அறிவித்தல் சமிக்ஞை கட்டாயத் தேவையாகவுள்ளது.

ச.இந்துமதி
தரம் 11c
இராகலை த.ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



MANAGEMENT & COUNSELLING UNIT



GUILD SOCIETY



MANAGEMENT & NON EDU. HELPERS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இணையம்

நன்றி மறப்பது நன்றன்று என்ற திருக்குறளுக்கு இணங்க வேல்வைட் வெப்பை (www) கண்டுபிடித்த தி மோதி ஜோன் பெர்னஸ் லீ என்பவருக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும் ஏன் என்கிறீர்களா? இன்று நம் அனைவருக்கும் உலகம் உங்கள் கையில் என்ற பெருமை இவரையே சாரும். இணையத்தளத்தில் அனைத்து நாடுகளுடனும் தொடர்புகொள்ள நமக்கு உதவும் www யைக் கண்டுபிடித்தவர் இவரே. இவரின் உன்னதமான கண்டுபிடிப்பானது தற்போது உலகில் சராசரி நிகழ்வுகள் தொட்டு சரித்திர நிகழ்வுகள் வரை தகவல் தொழில்நுட்பத்தின் பிந்திய உருவாக்கமான இவரின் இணையம் என்பதனைக் கொண்டு செயற்படுத்தப்படுவது தகவல் யுகத்தின் பெருமையை வெளிக்காட்டி நிற்கின்றது.

அந்தவகையில் இணையம் என்பது internet எனும் ஆங்கிலச் சொல்லிலிருந்து பெயர்சூட்டப்பட்டது. ஆங்கிலத்தில் international network என்பதை அதாவது சர்வதேச வலைப்பின்னல் எனக்கொள்ளப்பட்டு இணையம் என வழங்கப்படுகின்றது. 1950களில் IBM பெரிய நிறுவனத்தால் உருவான கணனிகளின் விரிவான தகவல் வழங்கள், தொடர்பாடல் கோவையாக இணையம் காணப் படுகின்றது. இணையமானது வரலாற்றில் குறைந்த காலத்தைக் கொண்டிருந்தப் போதிலும் கூட இது உலகை பிரமாண்டத்தால் ஆழ்த்தி யுள்ளமை வியக்கத்தக்கதாகும்.

இவ்வாறு 1990 களில் கண்டுபிடிக்கப்பட்ட www எனும் ஆங்கில வார்த்தையால் அகில இணையம் என அடையாளப் படுத்தப்படுகின்றது. அதாவது www என்பது தகவல்களை ஆராச்சியாளர்கள் மத்தியில் பங்கீடு செய்து அப்டெட் செய்யும் வகையிலான புரொட்டோ டைப் சிஸ்டம் என்டுயர் என்ற பெயரில் ஏற்படுத்தப்பட்டது. தற்போது வெப்சேவருக்கு http என அழைக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு உலகின் சகலதரப்பட்ட மனித வெளிப்பாடுகளும் இந்த தளத்தில் வீழ்ந்து யந்திரமயம் கொண்டபோது மொழிமட்டும் அதனை விடவில்லை இதன்படி காலத்தின் தேவையாக கருத்திற் கொண்டும் எதிர்கால சந்ததியினருக்கு வரலாற்றில் தமிழினம் மறையாமலிருக காமல் தமிழ் மொழியையும் காலத்தின் தேவையான இணையத்தில் சேர்ந்து ஒரு யுகமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்றால் தமிழரின் மொழிப்பற்று உயர்ந்தது என்றால் மிகையாகாது. கணனி தோற்றம் கண்ட காலங்களில் ஆங்கில மொழியே முதன்மைக்கண்டது. ஆனால் ஆங்கில மொழி 56 ஆண்டுகளில் நிகழ்த்திய சாதனைகளை தமிழ்மொழியானது இணையத்தில் 6 ஆண்டுகளிலேயே சாதனையை நிலைநாட்டி உள்ளதென்றால் தமிழ்மொழியின் அளப்பறிய சாதனை தெளிவாகின்றது.

இவ்வாறு பன்மொழி ஊடகமாக காணப்பட்ட தமிழர்களை ஒன்று சேர்ந்தது இந்த தமிழ் இணையமே என்றால் அது மிகையாகாது. இவற்றுடன் ஆங்கில மொழியில் காணப்படும் வன்பொருள் , மென்பொருள் , நிகழ்ச்சித்திட்டங்கள். மொழி ஊடகம் , MS office, HTML, URC, HTTP கோட்கள் என்பன மிக சொற்பளவான ஆண்டுகளில் இதனை தமிழ்மொழியில் புகுத்தப்பட்டுள்ளதென்றால் தமிழ் இணையமானது ஆங்கில இணையத்தளங்களுக்கு நிகராகின்றது என்றால் அது தமிழரின் உன்னதமான முயற்சியே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்துடன் தமிழ் இணைய வளர்ச்சியை மேலும் மெருகூட்டுவதற்காக இலங்கை, கனடா, மலேசியா ,சிங்கப்பூர் , இந்தியா போன்ற நாடுகளிலுள்ள தமிழறிஞர்கள் ஒன்றினைந்து நடாத்தும் தமிழ் இணைய மகாநாடு , தமிழ் கூடல் என்பன மொழிவளர்ச்சிக்கூறாகும். இணையத்தளத்தில் தமிழ் மொழியானது www என அழைக்கப்படும் வெப்தளத்தில் தனது இணைப்பை முதன்முதலாக தமிழகத்திலுள்ள e.dec எனும் தமிழ் மென்பொருள் மூலம் ஏற்படுத்திக்கொண்டது .பின்னர் படிப்படியாக தமிழ்நெட் தெ 99. இவற்றுடன் கம்பன் கழக இணையத்தளம், இஸ்லாமிய கலாச்சார பேரவை இணையத்தளம் என்பனவும். கனடா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, நியுசிலாந்து, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலுள்ள இணையத்தளங்கள் செயற்பட்டுவருகின்றன. இவற்றுடன் தெற்காசிய நாடுகளில் 56க்கு மேற்பட்ட வெப்தளங்களை தமிழ் இணையம் கொண்டுள்ளதன் மூலம் தமிழ் இணையத்தின் சர்வதேச வளர்ச்சி தெட்டத்தெளிவாகியுள்ளது.

இவற்றோடு 1999 களில் இந்தியா, இலங்கை , மலேசியா, சிங்கப்பூர், மொரீசியஸ் எனும் நாட்டிலுள்ள கணனி அறிஞர்களால் உருவாக்கப்பட்ட கணனி மகாநாடு 2002 களில் சிங்கப்பூரில் நடந்தமையும் 2005 அறிமுகப்படுத்தப்பட்ட தாளம் FM வெப்தளம், தீபம் TV வெப்தளம் என்பவற்றிலிருந்து இணையத்தில் தமிழ் மொழியின் வளர்சசியை தெட்டத்தெளிவாக குறித்து நிற்கின்றது.

மேலும் நவீனத்தில் காணப்படும் Digital அதாவது எண்மானம் எனும் தன்மைக்கு ஏற்ப தமிழ் மொழியும் தன்னை மாற்றிக் கொண்டதை இணையப்பல்கலைக்கழகம் எடுத்தியம்புகின்றது. அது மட்டுமல்லாமல் தமிழ்நெட், மின்னஞ்சல், மின்வர்த்தகம், அறிக்கைகள், சஞ்சிகைகள், மென்பொருள், அகராதி ,அலைவரிசைகள், டென் தொலைக்காட்சி வலைப்பின்னல், இணைய சொற்களஞ்சியம் தமிழில் ஏற்பட்டுள்ள மையைக் கண்டு நாம் ஆனந்த கண்ணீர் கொட்டினாலும் அதன் சிறப்பு மிகையாகாது.

இவ்வாறு மொழியினுடைய வரலாற்றினை மேன்மைப்படுத்து வதற்காகவும் தமிழினுடைய தன்மானத்தை மேலோங்கச் செய்வதற் காகவும், இனப்பற்று, தேசப்பற்று, விழுமியம், தமிழ் கலாச்சாரம் என்பனவற்றையும் உலகலாவிய ரீதியில் உயிருள்ள மொழியாக வளரும் ரீதியில் தமிழாரால் உருவாக்கப்பட்ட தமிழ் இணையம் வழிவகுத்துள்ளது. அதுமட்டுமன்றி மாறிவரும் நாகரீக உலகில் புதிய சந்ததியினரின் உள்ளார்ந்த சிந்தனைகளை பூர்த்தி செய்து தமிழை நாம் காக்க தமிழ் இணையம் பங்காற்றியுள்ளது, பங்காற்றிவருகின்றது என்றால் அது தமிழ்மொழியின் அதீத பற்றே இதன் காரணமாகும். எனவே இணையத்தில் புகுந்த தமிழை நாமும் கற்று எந்நாளும் தமிழ்மொழியை உயிருள்ள மொழியாக வாழ்விப்போமாக.

*வாழ்க தமிழ்மொழி*
*வாழ்க நிரந்தரம்*
*வாழிய வாழியவே*

ந.ராமகிருஸ்ணன்
கலைப்பிரிவு
இராகலை த.ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழ்மாலை சூட்டிடுவோம்

வைகறையில் துயிலெழுந்து
வாகாய் உடையணிந்து
கல்விச் சாலையில் கால் பதித்து
கருத்துடனே நாம் கற்றிட
களம் அமைத்திடும் கல்விக்கூடம்

காலமெல்லாம் நாம் வணங்கும் ஆலயம்!
இராகலை தமிழ் மகா வித்தியாலயம் - எம்
அறிவிற்கு அத்திவாரமிடும் ஆலயம்
எண்ணற்ற சுடர்களை
ஏற்றம் பெற அவனியில்
ஏற்றிவிட்ட எங்கள் ஆலயம்!

ஏழைகளும் ஏற்றம் பெற
ஏற்றத் தாழ்வின்றி அனைவரையும்
அரவணைத்தே அறிவு பெற
அரண் அமைக்கும் ஆலயம்!

சட்டம் மருத்துவம் பொறியியல்
பட்டம் பெற்று பலரும் திகழ்ந்திட
பாங்காய் பங்களித்த பாசறை
பாரினில் நாம் போற்றும் ஆலயம்!

எஸ்.மேனகா
தரம் 10B
இ.த.ம.வி

# வெண் புறாவே

எம் தேசத்தின் காற்றை - நீ
சுவாசிக்க வருகையில்
எதற்கும்...........
அடையாள அட்டையும்
எடுத்து வா
அடிக்கடித் தேவைப்படும்!

வி.சஞ்சை
தரம்- 11A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திடுவோம்

விடிவு இன்னும் தொலைவில் இல்லை
விடுதலை எங்கள் தோலின் மாலை
கலாசாலை எங்கள் வசந்த சோலை
இலக்கியம் ஒன்றே விடுதலை
நாளை எமது ஏட்டுக் கலை
நடத்தி முடிக்கும் ஒரு
புரட்சிக்கலை என்றே
மனங் கொண்டு மலர் தூவி எங்கள்
கல்லூரி கல்விதனை
காதலிப்போம் காலந்தோறும்
காத்திடுவோம்!

என்.வினோதன்
தரம் 11
இ.த.ம.வி

# சுனாமி

சுனாமி என்ற மூன்றெழுத்தில்
யுகம் முழுவதும் அழிந்ததோ
பேய் வடிவில் வந்த சுனாமியானது
பார் முழுவதையும் தாக்கியதே !

பாசம் என்ற கயிற்றினில்
கட்டியிருந்த வாழ்க்கையும்
உப்பு நீராய் கரைந்ததே
சுனாமி என்ற அலையால்!
அன்னை என்ற தெய்வமும்
தந்தை என்ற கோயிலும்
காண இன்று இல்லை
சுனாமி தானோ காரணம் ?

அழகான இலங்கை மீது
பேரலைகள் மோதியதால்
நாசமாக்கப்பட்ட வீடுகளும்
உயிர்களும் கொடூரமாக போய்விட்டதே!

இப்படியான
ஆழிப்பேரலை
இனி வேண்டாம் .........!

ந.நிஷாந்தி
கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**MANAGEMENT & COLLEGE OF ED.Tr.**



**MANAGEMENT & SCHOLARSHIP STUDENTS--2006**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தோட்ட கல்வி வளர்ச்சி எதிர்பார்த்த இலக்கினை எய்திருக்கின்றதா? (ஒரு பார்வை)

இன்றைய நவீன யுகத்தின் போக்கிற்கு ஈடுகொடுக்கக்கூடிய வகையில் காலத்தின் கட்டாயத் தேவையாக கல்வித்துறை அமைகின்றது.

இதனைக் கருத்திற்கொண்டே உலக வங்கியும் உலக நாடுகளும் பாரியளவிலான நிதியினை செலவிடுகின்றது. அந்தவகையில் எமது நாடும் பெருமளவிலான நிதியினை கல்வி வளர்ச்சிக்காக வருடந்தோறும் செலவிடுகின்றது.

பெருந்தோட்டத்துறைகளில் முன்பிருந்ததை விட தற்பொழுது மாடிக்கட்டிடங்களும், கோடிக்கணக்கான வளங்களும் கிடைத்திருக்கின்றன. ஆன போதிலும் ஆசிரியர் பற்றாக்குறை பாரியளவில் அரசோச்சிக்கொண்டிருக்கும் வேளையில் வெறுமனே கட்டிடங்களும் வளங்களும் கிடைத்திருக்கின்றன. என்பதால் இவையே கல்வி வளர்ச்சிக்கு கருக்கோலாக அமைந்து விட முடியாது என்பது யதார்த்தம்.

இவ்வாறான நிலையில் கல்வி வள்ர்ச்சி ஒரு வரையறைக்குட்பட்டதாகவே இருக்க முடியும். பெரும்பாலும் பெருந்தோட்டப் பாடசாலைகளில் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரண, தரம் உயர்தர பரீட்சை வருடந்தோறும் பல்கலைக்கழகத்திற்கு செல்லுகின்ற தொகை என்பவற்றை அளவீடாகக் கொண்டே பாடசாலை கல்வி வளர்ச்சியினை அளவிடுகின்றோம்.

இரண்டு நூற்றாண்டுகளை இச்சமூகத்தின் வரலாறு எட்டிப்பிடித்துக் கொண்டிருக்கும் வேளையில் பல்கலைக்கழகத்திற்கு செல்வோர் தொகையினை நோக்கும் போது நிச்சயமாக கல்வி வளர்ச்சி ஒரு வரையறைக்குட்பட்டதாகவே இருந்துவருகின்றது.

பல்கலைக்கழகத்திற்கு இச்சமூகத்திலிருந்து தெரிவு செய்யப்படும் தொகை 1% கூட அடையமுடியாமலிருப்பது கல்வி அதன் இலக்கை இன்னமும் எய்தவில்லை என்பதையிட்டு நாம் நிச்சயமாக வருத்தமடைய வேண்டிய நிலையிலேயே இருக்கின்றோம்.

இதற்கான மாற்றீடுகளை கண்டறிந்து காத்திரமான கல்விக்கு உடன் வித்திடுவது கல்விமான்களினதும் கல்வியியலாளர்களினதும் கவனத்திற்குறிய விடயமாகும்.

பெருந்தோட்டப் பாடசாலைகளின் கல்வித்தர வீழ்ச்சிக்கு எடுத்துக்காட்டாக வலப்பனை கல்வி வலய தமிழ் பாடசாலைகளை மட்டும் நோக்குவோமானால் கல்வித்திணைக்கள ஆய்வு மதிப்பீட்டின் படி 2005 ஆம் ஆண்டு ஐந்தாமாண்டுப் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய 200 மாணவர்களில் 10 மாணவர்கள் மட்டுமே சித்தி பெற்றுள்ளனர். இதற்கான காரணத்தை நாம் கருத்திற்கொள்வது அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**க.பொ.த.சாதாரன தரம்**

பாடரீதியாக வலப்பனையிலுள்ள 7 க.பொ.த. சாதாரன தரமுள்ள தமிழ் பாடசாலைகளில் பார்க்கின்ற போது கல்வித்தரம் கணிசமானளவேனும் வளர்ச்சியடைந்துள்ளது என கூற முடியாத நிலையேயுண்டு அதற்கான ஆதாரமாக கீழ்வரும் க.பொ.த.சாதாரன தர பெறுபேறுகளைக் காட்ட முடியும்.

| பாடம் | தோற்றியோர் தொகை | சித்திபெற்றோர் தொகை | சித்தி பெற்றோர் வீதம் |
|---|---|---|---|
| தமிழ்மொழி | 550 | 441 | 80.18 |
| சைவசமயம் | 540 | 430 | 79.63 |
| விஞ்ஞானம் | 547 | 155 | 28.34 |
| கணிதம் | 549 | 107 | 19.48 |
| சுமூகக்கல்வி | 548 | 316 | 57.66 |
| ஆங்கிலம் | 553 | 108 | 19.53 |
| சித்திரம் | 222 | 70 | 31.53 |
| தமிழ்மொழி | 434 | 237 | 54.61 |
| விவசாயம் | 250 | 127 | 50.8 |
| வுர்த்தகம் | 239 | 99 | 41.42 |
| சுகாதாரம் | 545 | 466 | 85.50 |
| புவியியல் | 186 | 72 | 38.71 |
| சிங்களம் 2ம் மொழி | 128 | 08 | 6.25 |
| இயந்திரவியல் | 07 | 02 | 28.57 |

**க.பொ.த சாதாரணதரத்தில் 8 பாடங்களிலும் சித்தி பெற்றோர் தொகை**

| பரீட்சைக்கு தோற்றியோர் தொகை | கணித பாடத்துடன் உயர்தரத்திற்கு சித்திபெற்றோர் | உயர்தரத்திற்கு சித்திபெற்றோர் வீதம் |
|---|---|---|
| 23 | - | - |
| 75 | 02 | 03 |
| 112 | 19 | 17 |
| 22 | 04 | 18 |
| 154 | 08 | 05 |
| 148 | 07 | 05 |
| 16 | 05 | 31 |
| மொத்தம் 550 | 45 | 8.1 % |

2005 ம் ஆண்டு க.பொ.த.சாதாரண தரத்திற்கு தோற்றிய 550 மாணவர்களில் 45 மாணவர்கள் 8 பாடங்களிலும் சித்திபெறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**க.பொ.த உயர்தரம்**

| பரீட்சைக்கு தோற்றியோர் தொகை | கணிதபாடத்துடன் உயர்தரத்திற்கு தேர்ச்சி பெற்றோர் தொகை | உயர்தரத்திற்கு செல்ல தேர்ச்சிபெற்றோர் வீதம் |
|---|---|---|
| 16 | 04 | 25 |
| 154 | 37 | 24 |
| 23 | 05 | 22 |
| 75 | 14 | 19 |
| 148 | 13 | 09 |
| 112 | 05 | 05 |
| 22 | 01 | 05 |
| 550 | 80 | 12 |

2005 ம் ஆண்டு க.பொ.த.சாதாரன தரத்திற்கு தோற்றிய 550 மாணவர்களில் 80 மாணவர்கள் மட்டுமே உயர்தரத்திற்கு சித்திபெற்றுள்ளனர். அது 14.5 % ஆகும்.

**(வலப்பனைக் கல்வி வலய தரவுகள் -2005)**

எனவே பெருந்தோட்டப் பாடசாலைகளின் கல்வி நிலை பரவலாக இவ்வாறான பாரியளவிலான வீழ்ச்சி நிலையிலேயே காணப்படுகின்றது. சிங்கள மொழி மூல பாடசாலைகளுடன் ஒப்பிடுமிடத்து தமிழ்மொழி மூல பாடசாலைகளின் புள்ளி விபரங்களும் ஒத்தவகையான ஏற்றத்தாழ்வுகளைக் கொண்டே காணப்படுகின்றது.

இத்தகைய வீழ்ச்சி போக்கிற்கு பல்வேறு காரணிகள் ஏதுவாக அமைகின்றன. ஆசிரியர் பற்றாக்குறை விசேட பாடங்களுக்கெனத் தனியான சிறப்பு தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் இன்மை. வளப்பங்கீட்டின் குறைபாடு, ஆளனி குறைபாடு , நிர்வாக குழறுபடிகள் ,முகாமைத்துவத்தில் ஏற்படும் சிக்கல்கள் கற்றல் கற்பித்தலில் காணப்படும் குறைபாடுகள் போன்ற பல்வேறு காரணிகளுடன் பொருத்தமற்ற சூழல், சூழ்நிலைகள், கஸ்டப்பிரதேச ஆசிரியர்கள் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளான போக்குவரத்துப்பிரச்சினை, மேலதிக வகுப்புகளுக்கான வாய்ப்புகளின்மை , பொருளாதார சிக்கல்கள் என்பனவும் சேர்ந்து பெருந்தோட்ட கல்வித்துறை வளர்ச்சிக்குத் தடைக்கற்களாக அமைகின்றன எனலாம்.இத்தகைய குறைபாடுகள் மகிழ்ச்சிகரமான கற்றலுக்குறிய சூழலையும் சூழ்நிலைகளையும் அற்ற நிலையினைத் தோற்றுவிக்கின்றது எனலாம்.

மேலும் கல்வித்திட்டத்தின் குறைபாடுகளும் பாதகத்தையே தோற்றுவிக்கின்றது. வளர்ச்சியடைந்த நகரங்களுக்குப் பொருந்தக்கூடிய பாடத்திட்டங்களில் பெருந்தோட்டப்பகுதிகளுக்கு பொருத்தமற்ற சில அம்சங்கள் அடங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலும் ஆரம்ப பிரிவு பாடத்திட்டத்தினை குறிப்பிட முடியும். இத்தகைய காரணிகள் மிகவும் பின் தங்கிய வறிய மாணவர்களின் அறிவுக்கு பெரும் சுமையாக அமையும் பட்சத்தில் அவர்கள் பாடசாலைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நிலையும் ஏற்படுகின்றது.

எனவே அத்திபாரமாக அமையக்கூடிய ஆரம்பப்பிரிவிற்கு கூடிய முன்னுரிமை வழங்கி அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதுடன் இடைநிலை கல்வி வரை சீரான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மகிழ்ச்சிகரமாகவும் மாணவர்களைக் கவரும் வகையிலும் அவர்கள் மனதில் பதியும் வகையிலும் கற்பித்தலை மேற்கொள்ளுதல், ஆசிரியர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்தல், பாடசாலை சூழலை விருப்பத்திற்குறிய இடமாக மாற்றியமைத்தல். விசேட திறமைகள் கொண்ட மாணவர்களை ஊக்குவித்தல் , ஆசிரியர்கள் தங்கள் கற்றல் கற்பித்தலை இடையூறுகளின்றி மேற்கொள்ள வழிசமைத்தல் என்பன போன்ற செயற்பாடுகளால் சில நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள முடியும்.

ஒரு சமூகத்தின் விடிவிற்கு வித்திடுவது கல்வியாகும். எனவே காலத்தின் தேவை கருதி காத்திரமான கல்வி வளர்ச்சிக்கு வழி சமைப்பது தலையாய கடமையாகும்.

பெருந்தோட்டத்துறைகளில் கல்வித்துறையை ஊக்குவிப்பதன் ஊடாகவே அச்சமூகத்தின் வளர்ச்சிக்கும் சமூக மாற்றத்திற்கும் ஒரு பலமான அத்திபாரத்தை இட முடியும்.மேலும் ஏனைய சமூகங்களோடு ஒப்பிடக்கூடிய அளவிற்கு சிறந்த நிலையை இயல்பாகவே ஏற்படுத்தக்கூடிய சிறந்ததும் உயர்ந்ததுமான பணியை புரிந்த பயனையும் ஆத்ம திருப்தியையும் பெற முடியும் என்பது திண்ணமாகும்.

S.V. பிரியதர்சினி (ஆசிரியர்)
இராகலை த.ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமைத்தனம் அழிவது எப்போது ?

மனிதனை மனிதனே அடிமையாக்கி வேலை வாங்கும் கொடுமை நீண்ட நாட்களுக்கு முன்பே ஒழிக்கப்பட்டுவிட்டது. என்று கூறிக்கொண்ட போதும் இன்றும் நமது சமூகங்களில் பல வழிகளில் மனித அடிமை முறை நிலவத்தான் செய்கின்றது. இந்த மனித அவலத்தை உலகுக்கு எடுத்து கூறும் வகையில் ஐக்கிய நாடுகள் சபை டிசம்பர் 2 ஆம் திகதியை சர்வதேச அடிமை ஒழிப்புத்தினமாக பிரகடனம் செய்துள்ளது.

பண்டைய ரோம சாம்ராஜ்யத்தில் அடிமைகள் மனிதர்களாக கருதப் படவில்லை. அவர்கள் பண்டப் பொருட்களாகவே கணிக்கப்பட்டனர். அவர்களுக்கு சமூகத்தில் எந்த வித அந்தஸ்தும் உரிமையும் வழங்கப்படவில்லை எஜமானர் களுக்கு வியர்வை சிந்தி உழைப்பது மட்டும்தான் அவர்களது வேலை. அதனை மீறினால் கடும்தண்டனை கிடைக்கும். சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன் அமெரிக்க கண்டம் கண்டுபிடிக்கப்பட்ட போது ஐரோப்பியர் அங்கு பரவலாக குடியேறினர். இத்தகைய குடியேற்றத்துடன் ஆபிரிக்க கறுப்பு மக்களை பலாத்காரமாக பிடித்து கடத்தி சென்று அமெரிக்க ஏலச்சந்தையில் விற்கும் வியாபாரம் வளர்ச்சியடைந்தது. சுமார் 400 ஆண்டு காலம் இவ்விதம் அம்மக்கள் கொடுமைக்கும் சித்திரவதைக்கும் உட்படுத்தப்பட்டனர்.

இன்றும் அத்தகைய கொடுமை மற்றும் சித்திரவதையின் எச்சங்களை நமது சமூகங்களில் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. இன்றைய சமூகத்தில் காணப்படுகின்ற அடிமை முறையை ஐக்கிய நாடுகள் சபை பின்வருமாறு வரைவிலக் கணப்படுத்துகிறது. சம்பளம் வழங்கப்படாமல் வன்முறைகள் அச்சுறுத்தி பெறப்படும் உழைப்பு அடிமை முறையாகும். இன்றைய இலங்கையிலும் இந்தியாவிலும் பரவலாக மூன்றாம் உலக நாடுகளிலும் இத்தகைய அடிமை முறை காணப் படுகின்றது. குறைந்த வேதனத்துக்கு அதிக வேலை வாங்கும் செயல் எல்லா நாடுகளிலும் காணப்படுகிறது.

ஐக்கிய நாட்டு புள்ளி விபரங்களின் படி இன்று 22 மில்லியன் பேர் அடிமைகளாக இருக்கின்றனர். என்றும் 246 மில்லியன் சிறுவர்கள் அடிமைகளாக்கப்பட்டு வேலை வாங்கப்படுகின்றனர். என்றும் தெரியவந்துள்ளது. இவர்களில் 171 மில்லியன் சிறுவர்கள் சுரங்கமறுத்தல், இரசாயன பொருள் உற்பத்தி, பட்டாசு வெடிப்பொருள் உற்பத்தி, தீப்பெட்டி தொழிற்சாலை முதலான ஆபத்தான தொழில்களில் ஈடுபடத்தப் பட்டுள்ளனர். இன்னும் நிறைய பேர் இத்தகைய தொழில்களில் ஈடுபடுத்தப் பட்டிருப்பது கண்ணுக்கு தெரியாமலும் அறியப்படாமலும் இருக்கிறது.

மேலும் லட்சகணக்கான சிறுவர்கள் கிருமி மற்றும் களைநாசினி கைத்தொழில் , அபாயகரமான இயந்திர பாவனை, உள்நாட்டு யுத்தம் ,விபசார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் முதலான வற்றில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன். பெரும் தொகையானோர் கொத்தடிமை களாக்கப்பட்டு பரம்பரை பரம்பரையாக அடிமை தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

இலங்கையை பொருத்தமட்டில் இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாகவுள்ள தேயிலை கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் 750,000 பேர் அரையடிமை நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளதனை ஐக்கிய நாடு சபை கூட கணக்கிலெடுத்துக்கொள்ளவில்லை. இலங்கையில் ஏனைய துறைகளை சார்ந்த தொழிலாளர்கள் நாட்கூலியாக சராசரி 5000 ரூபா பெறும் போது தேயிலை பெருந்தோட்டத்துறை கம்பனிகள் 125 ரூபா மட்டமே இவர்களுக்கு வழங்கி வருகின்றது. இத்தகைய குறைந்த வருமானத்தில் வாழ்ந்துவரும் அவர்கள் தமது பிள்ளைகளை காப்பாற்ற முடியாதவர்களாகி சிறு வயது முதலே வீட்டு வேலைக்காரர்களாக அனுப்பி விடுகின்றனர்.

அடிமைமுறை எங்கே காணப்பட்டாலும் என்ன உருவத்தில் காணப்பட்டாலும் அது மனித குலத்திற்கு எதிரானதாகும். ஐ . நா போன்ற அமைப்புகள் ஆய்வில் ஈடுபட்டு புள்ளி விபரங்களையும் திரட்டி வருடாந்தம் அறிக்கை தயாரித்து அழகாக அச்சிட்டு வெளியிட்டு தம்பட்டம் அடித்து கொள்கிறதே தவிர அந்தந்த அரசாங்கங்கள் மீது அழுத்தங்கள் கொண்டு வந்து அடிமைத்தனத்திலிருந்து பாதிக்கப்பட்டோருக்கு விமோசனம் பெற்றுத்தர முன்வருவதில்லை. இந்த நிலை தொடர்ந்தால் உலகில் அடிமை முறை தொடர்ந்தும் இருந்து கொண்டுதானிருக்கும்.

த.கலாபேபி
12 கலைப்பிரிவு
இராகலை த.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை வரலாற்றின் அதிபர்கள்

| | |
|---|---|
| திரு. க. கந்தப்பு | 1947-1948 |
| திரு. அ. செல்லத்துரை | 1948-1954 |
| திரு. கே. தாமோதரம் | 1954-1963 |
| திரு. S. பொன்னையா | 1964 |
| திரு. சரவணமுத்து | 1965 |
| திரு. K.R. தியாகராஜா | 1965-1967 |
| திரு. சி. கந்தசாமி | 1967 |
| திரு. கிருஷ்ணசாமி | 1967-1974 |
| திரு. M. முத்துசிவஞானம் | 1975-1976 |
| செல்வி. பா. வேலுப்பிள்ளை | 1976 |
| திரு. சி. நவரட்ன | 1977-1980 |
| திரு. M. சுந்தரலிங்கம் | 1981 |
| திரு. சி. நவரட்ன | 1981-1984 |
| திரு. P. மரியதாஸ் | 1984-1986 |
| திரு. S. கிருஷ்ணன் | 1986-1990 |
| திரு. D.R. செல்வராஜா | 1991 |
| திரு. S. சுப்பிரமணியம் | 1991 |
| திரு. P. அருள்மொழிச் செல்வன் | 1991-1992 |
| திருமதி. P. தாயுமானவர் | 1992 |
| திரு R. நடராஜா | 1992 |
| திரு. S. சுந்தரம்பிள்ளை | 1993-1997 |
| திரு. D.R. செல்வராஜா | 1997 |
| திரு. V. சிவசுந்தரநாதன் | 1998-2002 |
| திரு. M. சிவராம் | 2002 |
| திரு. R.ரெங்கசாமி | 2002 |
| திரு. M. சோமசுந்தரம் | 2003-2005 |
| திரு. S. யோகேஸ்வரநாதன் | 2005 ..... |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தோட்ட துறையில் தொழிற்சங்க வரலாறு

19ம் நூற்றாண்டில் இலங்கையில் தோன்றிய முதலாளித்துவம் பெருந்தோட்டதுறையில் இருந்தே ஆரம்பித்தது. பெருந்தோட்டத் துறையில் 19ம் நூற்றாண்டின் முடிவில் ஏறக்குறைய 2 இலட்சம் தொழிலாளர்கள் இருந்த போதும் (அதே வேளையில் நகர்புறத்தில் 75000 தொழிலாளர்கள் இருந்தனர்) 1931ம் ஆண்டுவரை அப்பகுதியில் ஒழுங்கான முறையில் தொழிற்சங்கம் உருவாகவில்லை அதற்கும் பல காரணங்கள் பொறுப்பாக இருந்தன.

தொழிற்சங்கம் அமைக்கப்பட வேண்டுமாயின் சுதந்திரமான தொழிலாளராக உழைப்பாளிகள் இருத்தல் வேண்டும். ஆனால் பெருந்தோட்டத்துறையில் வேலை செய்தவர்கள் அரை அடிமைகளாக வேலை செய்தனர். அவர்கள் தம் இஸ்டப்படி தமக்கு விருப்பமான இடத்தில் விரும்பிய வேலையை செய்வதற்கு சுதந்திரம் இருக்கவில்லை. பல்வேறு தளைகளால் அவர்கள் கட்டப்பட்டிருந்தார்கள். அவர்கள் வதிவிடமான லயன் அறைகளைத் தோட்ட நிர்வாகம் வழங்கி இருந்தது. இது ஒரு வகையில் தோட்டத்தோடு தொழிலாளர்களை நிரந்தரமாகப் பிணைக்கும் கட்டுப்பாடாகும். ஏனெனில் தோட்டத்தில் வேலை செய்யாதவர்கள் லயன் அறையை விட்டு வெளியேற வேண்டும் அவ்வாறு வெளியேறின் அவன் வேலை செய்வதற்கு வேறு இடம் இருக்கவில்லை 1865 ம் ஆண்டில் இயற்றப்பட்ட தொழிற்சட்டத்தின் படி வேலையை விட்டு நீங்குவது கூட தண்டனைக்குறிய குற்றமாக கருதப்பட்டது எவராவது தோட்டங்களை விட்டு வெளியேறினால் அவர்களை சிறையில் அடைக்கவும் சட்டம் வழிவகுத்தது. வெளியேறினாலும் பக்கத்தில் உள்ள கிராமங்கள் சிங்கள கிராமங்களாக இருந்ததால் மொழி தெரியாமல் ஒன்றும் செய்ய முடியாமல் இருந்தது. இவ்வாறான அரைக்குறை அடிமையில் இருந்தவர்களால் தொழிற்சங்கம் ஏற்படுத்துவதென்பது நினைத்தும் பார்க்க முடியாத காரியமாக இருந்தது.

பெருந்தோட்டங்களில் வேலை செய்த தொழிலாளர்கள் இந்தியாவில் இருந்து கிராம வாரியாக அப்படியே பெயர்த்துக்கொண்டுவரப்பட்டு தோட்டங்களில் குடியமர்தப் பட்டிருந்தனர். அவர்கள் இந்தியாவில் வாழ்ந்த அதே உறவினர்கள் மத்தியில் இங்கும் வாழ்ந்தனர். எனவே அவர்களது உறவுத் தொடர்புகளும் கூட சாதி, குடும்பம் என்ற எல்லைக்கு அப்பால் பரவவில்லை இதனால் நாட்டின் ஏனைய பகுதிகளில் ஏற்பட்ட மாற்றங்களை கூட இவர்களால் தெரிந்துக்கொள்ள முடியவில்லை. இதனால் நகர்புற தொழிற்சங்கங்கள் உருவாகிப்பல ஆண்டுகளின் பின்பே இங்கு தொழிற்சங்கம் உருவாக முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் தொழிற்சங்கத்தில் அங்கத்தவர்களாக சேரவேண்டுமாயின் சந்தாப்பணம் செலுத்தவேண்டும் ஆனால் பெருந்தோட்ட தொழிலாளர்கள் கொடிய வறுமையினால் வாடினர். இலங்கையில் ஆகக்குறைவான சம்பளம் அவர்களுக்கே வழங்கப்பட்டது ஆண்களுக்கு ஒரு நாளைக்கு 33 சதமும் பெண்களுக்கு 25 சதமும் கூலியாக வழங்கப்பட்டது. இச்சம்பளம் கூட ஒழுங்கு முறையாக வழங்கப்படவில்லை சில சமயங்களில் 3 மாதங்களுக்கு ஒரு முறை சம்பளம் வழங்கப்பட்டது. கங்காணிமார்கள் தொழிலாளர்களின் சம்பளத்தில் மோசடிகள் பல செய்தனர். கங்காணிமார் இந்தியாவில் இருந்து தொழிலாளர்களைக் கூட்டிக்கொண்டு வந்த முறையினால் தொழிலாளர்கள் கங்காணிமார்களுக்கு எப்போதும் கடனாளிகளாக இருந்தனர்.தொழிலாளர்கள் தங்களுக்கு தேவையான பொருட்களை கங்காணியோ தோட்ட நிர்வாகமோ வைத்து நடாத்தும் கடைகளில் இருந்தே கடனுக்கு பெற வேண்டியிருந்தது. இக்கடன் தொகையினை கழித்த பின்பே மிகுதிச் சம்பளம் கொடுக்கப்படும் பொருட்களின் விலை கூட்டி விற்கப்பட்டதால் தொழிலாளர் சம்பளத்தில் மிகச் சிறிய பகுதியையே பெற்றனர் இதனால் சந்தாப்பணம் செலுத்த முடியாத நிலையில் இருந்தனர்.

மேலும் 19ம் நூற்றாண்டு முழுவதிலும் 20ம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களிலும் மலையகத் தமிழர் மத்தியிலும் தேசிய உணர்வு வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. அவர்கள் இந்தியாவுடனான தொடர்பை முழுமையாக துண்டித்துக் கொண்டிருக்காத காரணத்தினால் இவர்களின் ஒரு பகுதியினர் அடிக்கடி இந்தியா சென்று வந்தனர் இதனால் இங்கு தொழிற்சங்கதில் சேர வேண்டும் என்ற எண்ணமும் இருக்கவில்லை 1920களில் இநதியத் தொழிலாளர்கள் இலங்கையில் பெருமளவு வேறூன்றி இருந்த போதும் அவர்களிட் தேசிய உணர்வு காணப்படாத காரணத்தினால் ஏ. ஈ. குணசிங்க போன்றவர்கள் ஆரம்பத்தில் தோட்டத் தொழிலார்களை தொழிற்சங்கத்தில் சேர்த்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தையும் கொண்டிருக்கவில்லை.

மேலும் பெருந்தோட்ட தொழிலாளர்கள் இயந்திர கைத்தொழிலாளராகவோ தேர்ச்சி பெற்ற தொழிலாளராகவோ இருக்கவில்லை சமூக விஞ்ஞான பற்றிய சர்வதேச கலைக்களஞ்சியத்தின் படி

“இவர்கள் தேர்ச்சியற்ற தொழிலாளர்கள் என்பதும் இவர்களது முக்கிய தகைமை மேற்பார்வையாளர்களுக்கும் முகாமையார்களுக்கும் கீழ்படிவதாகவும்” என்று கூறுபடுகிறது. மலையகத் தொழிலாளரைத் பொறுத்தவரை இத்தன்மை மிகவும் தெளிவாக காணப்பட்டது. தேயிலைத் தொழிற்சாலைகளை இயக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களாக கூட இவர்கள் பணியாற்றவில்லை இத்தகையவர்கள் தொழிற்சங்கம் அமைப்பது கடினமான காரியமாகும் ஏனெனில் தொழிற் சங்கம் சுதந்திர உணர்வு மிக்க தொழிலாளர்களால் அமைக்கப்படுமே ஒழிய கீழ் படிவுத் தன்மைக்கொண்ட தொழிலாளர்களால் அல்ல என்பதாகும்.

அடுத்து வெளி உலகமோ நடப்பு நிலைகளோ தெரியாமல் தோட்டத் தொழிலாளரின் அறிவு வளர்ச்சியை நிர்வாகமே திட்டமிட்டு தடைப்படுத்தி வந்தது இவர்களால் கோயில்கள் அமைக்கப்பட்டன மது கடைகள் திறக்கப்பட்டன ஆனால் பாடசாலைகள் உருவாக்கப்படவில்லை இதன் விளைவாக 1911 இல் கூட தோட்டப்பகுதியில் கல்வி அறிவற்றோர் வீதம் ஏறக்குறைய 100 ஆக இருந்தது. பத்திரிகைக் கூட வாசிக்க முடியாத கையெழுத்துக் கூட போடத்தெரியாத தொழிலாளர்கள் எவ்வாறு தொழிற்சங்கத்தினை உருவாக்குவர்கள் என நாம் எதிர்பார்க்க முடியும்.

மேலும் தோட்டத்துரைமாரும் தோட்டப்புறங்களில் தொழிற்சங்கங்கள் தோன்றுவதை தடைசெய்வதில் கண்ணும் கருத்துமாக இருந்தனர். கொழும்பில் வேலை நிறுத்தம் மற்றும் போராட்டங்கள் நடைபெற்றுக்கொணடிருக்கும் போது அதனை அறியவிடாமல் தொழிலாளரை தனிமைப்படுத்துவதில் தோட்டதுரைமார் கவனம் எடுத்திருந்தனர் உதாரணமாக 1923 இல் கொழும்பில் பொது வேலைநிறுத்தம் நடந்த போது பெருந்தோட்ட சொந்தக்காரர்கள் தமது தொழிலாளர்கள் நகரத்திற்கு செல்வதை தடுத்தனர். மேலும் வெளியாட்கள் தோட்டப்பகுதிக்குச்சென்று சமூக அரசியல் கல்விப்பணிகள் செய்ய முடியாது அத்துமீறல் சட்டம் அதனை தடை செய்தது. 1957 இல்தான் இச்சட்டம் நீக்கப்பட்டது மேற் கூறிய காரணங்களினால் தோட்டப்பகுதியில் தொழிற்சங்கத்தின் ஆரம்ப காலத்தில் பிந்தியதாக இருந்தது.

வெ. விஜயபாலன் ஆசிரியர்
இராகலை தமிழ் மகா வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தப்பு வாத்தியம் பற்றிய அறிமுகம்

மலையக மக்களின் கலையான “தப்பு” எனும் இசை வாத்தியமானது சங்ககாலம் முதல் நடைமுறையில் இருந்து வருகிறது. பல வகையான தப்புக்கள் அதாவது பறைகள் பற்றி சங்ககால இலக்கியங்கள் பேசுகின்றன, அதன் அடிப்படையில் “பின்னைத்தமிழ்” பாடுவோர் “சிறு பறை கொட்டும் பருவம்” என ஒன்றை உள்ளடக்கியுள்ளனர். “தப்பு” எனும் தாளக்கருவி தமிழகத்திலும், இலங்கையிலும் மட்டும்மின்றி உலகின் பல்வேறு நாடுகளிலும் மலைவாழ் மக்களின் செய்தித் தொடர்புச் சாதனமாக இருந்து வந்திருக்கிறது. என்பதுடன் வாழ்வின் பல்வேறு செயற்பாடுகளில் இணைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். இதை “டிரம் லேங்வேஜ்” (Drum Language) அதாவது “பறை மொழி” என மேலை நாட்டு ஆய்வறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தம்பட்டம் என்பது தற்காலத்தில் தம்பட்டை அல்லது “தப்பு” என வழங்கப்படுகிறது. தம்பட்டம் - தப்பு ஒலியின் வழிப்பெயர் இது வட்ட வடிவமாக அமைந்துள்ளன, அகன்ற தோற்கருவி, இதை ஒரு கையால் கக்கத்தில் இடுக்கிப்பிடித்துக் கொண்டு மறுகையின் குச்சியால் அடித்து முழக்கப்படுவது (A small one hand drum hung from the shoulder and tapped with a pair of small sticks) என்றும்,

“தப்தப்” என்று ஒலிப்பதால், ஒலியின் அடியாகத் “தப்பு” என பெயர் பெற்றது. (one octopi) கோயில் திருவிழா, திருமணம், இறப்பு, மங்கள நிகழ்வுகள், தோட்டப்புற, நகர்புற திருவிழாக்களின் போது வினோத வேடமிட்டு ஆடப்படும் கூத்துகளிற்கு முதன்மை வாத்தியமாகம் தப்பு விழங்குகின்றன.இத் “தப்பு” வாத்தியம் பதினெட்டு விதமாக வாசிப்பதால் 18 தப்புகள் (வகைகள்) என்று பெயர் பெறுகிறது. மேலும் தப்பை முழக்கிய வண்ணம் ஆடும் ஆட்டத்தைத் “தப்பாட்டம்” என குறிப்பிடுகின்றனர்.

தப்பு + அட்டை = தப்பட்டை
தப்பு + ஆட்டம் = தப்பாட்டம்

தப்பு என்ற தோற்கருவி இலங்கையின் மலையக மண்ணில் மட்டுமல்லாமல் தமிழ் நாட்டிலும், இந்தியாவின் இதர மானிலங்களிலும், உலகநாடுகள் பலவற்றிலும் பயன்படுத்தப்பட்டது. இன்று அறிவிக்கவும், ஆடல் பாடல் வகைகளிலும் பயன்படுத்தப்படுகிறது. மேலும் இந்தியா இலங்கையைத் தவிர வேறு எங்கும் தப்பு தீண்டாமைக் கருவியாக்கப் படவில்லை. இக்கருவியை இசைக்கும் மனிதர்கள் “பறையர் என்றும், “அருந்ததியினர்" என்றும் அழைக்கப்படவில்லை இருப்பினும் பறை (தப்பு) தோற்றத்தினை பற்றி வடமொழியில் ஒரு புராணக்கதை உண்டு. பறை என்பது பல்பொருள் தரும் இனிய இலக்கிய சொல், என தொல்காப்பியர் கருப்பொருள்களைச் சுட்டிக்காட்டுக்கின்றார்.

“தெய்வம், உணாவே,யா,யாம்,புள்,பறை,
சேய்தி,யாழின் பகுதியொடு தொகைஇ,
ஆவ் வகை பிறவும் கரு' என மொழி (தொல், அகத் 18)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று குறிப்பிடும் போது, பண்ணிற்குரிய கருவிகளை எல்லாம் யாழ் என்பதில் அடக்குகின்றார். பறை என்பதில் தாளத்திற்குரிய அனைத்துக் கருவிகளையும், கொட்டு முறைகளையும், தாள வகைகளையும் உள்ளடக்குகின்றார். இசைத்துலாக் கோலில் யாழ் ஒரு தட்டிலும் பறை ஒரு தட்டிலும் வைத்து நிறுத்திக்காட்டுகிறார்.

"தப்பு" என்று அழைக்கும் பறையின் மாட்சியைச் சொல்ல இது போதுமே, வேறு ஒரு சான்று வேண்டுவதே இல்லை. இவ்வாறு தப்பு உயர் பொருட் பேறு பெற்றிருந்தது. (High & Rich Semantic Status) பின்னர் தீமை செய்யும் உள்ளங்கள் சேர்ந்து தப்பை தாழ்த்தித் தள்ளிவிட்டார்கள்.

பறை / தப்பு என்பன இரண்டு ஒன்று என்பதை அறிந்த நாம் "பறை" என்ற சொல்லினை நோக்குகையில் பற + ஐ = பறை - "பறபற" என்று ஒலித்தது அல்லது "பா பா" என ஒலித்தது. பறை என்பது முதன்மைப்பொருள் (primary meaning) "பறை" எனும் பெயர் ஒலியினடியாகப் பிறந்தது. "பறைதல்" என்ற சொல் சொல்லதல், உரைத்தல் அறிவித்தல் என வழிப்பட்ட பொருளை (secondary meaning) உடையது "பறைதல்" என்ற சொல் வழக்கு இன்று மலையாளத்திலும் யாழ்ப்பாணத் தமிழ் மக்களிடையேயும் இன்று வழக்கில் உள்ளது. "பறை" என்ற சொல் பேச்சைக்குறிப்பதாகும். "பேசு" எனப் பொருட்படும் 'அறை' என்ற சொல்லினின்று "பறை" தோன்றிற்று.

ப + அறை = பறை, அறை பேசு அற்(அடங்கியிருந்து நெருங்கிச் சேர்) + [- அறை, அடிஅடித்து உரக்க ஒலி எழுப்புவது போலச் சொல் 'அறை' (பெயர்) சொல் (நன்னூல் $_{458}$)

பேசுவதை இசைக்கவல்ல தாளக்கருவி "பறை" எனப்பட்டது ஒரு செய்தியைப் பலரிடத்தும் சொல்லிக் கொண்டு திரிவதைப் "பறை அடித்தல்", "தப்படித்தல்", "டமுக்கடித்தல்" என்று கூறுவது மலையகப்பகுதியின் வழக்கு, இவற்றால் செய்தி அறிவித்தல் என்ற பொருளில் வழங்கிய 'பறை' என்ற சொல் நாளடைவில் செய்தியறிவிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட தோற்கருவிக்கு உரிய சிறப்புப் பெயராகி வழங்கியுள்ளமை புலனாகின்றது. காலவோட்டத்தின் அதன் பழக்க மிகுதியால் பறையுடன் தொடர்புடைய பலவித தோற்கருவிகளின் பொதுப்பெயராக ஆகிய ஒரு பரந்தப் பொருளைப் பெற்றிருக்க வேண்டும். என்ற கருத்தையும் நாம் அறிதல் வேண்டும்.

பண்பாடுகள் பலவும் மேலைத்தேய கலாசார ஊடுருவல் காரணமாக எமது தனித்துவங்களை இழந்து கைநழுவி செல்லும் நிலையினை அடைந்து வருகின்றன.இவ்வாறு மலையகத்தில் அழிந்து செல்லும் பண்பாடுகளைக் கட்டிக் காக்க வேண்டிய தேவையும் இன்று எமது சமுகத்தில் எழுந்துள்ளது. இதன் முதற்படியாகவே நு/இராகலை தமிழ் மகா வித்தியாலய வைரவிழாவில் மலையக மக்களின் பாரம்பரிய இசை வாத்தியங்கள் அடங்கிய இன்னிய அணி முத்தாய்ப்பாய் அமைகின்றது.

சு.கமலஹாசன் (நுண்கலைத்துறை-சிறப்பு இறுதியாண்டு)
சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்
கிழக்குப் பல்கலைக்கழகம். மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ.த.ம.வி

# பாடசாலை ஆரம்ப நாள்

# 03.03.1947

முதலாவது நாள் அனுமதிக்கப்பட்ட மாணவர்கள்.

| பெயர் | சுட்டிலக்கம் | வசிப்பிடம் |
|---|---|---|
| 1. சிதம்பரம் வெள்ளையன் | 01 | கணிக்கா தோட்டம் |
| 2. சின்னமுத்து பழனிசாம | 02 | இராகலை ,, |
| 3. சின்னமுத்து வேலுசாமி | 03 | இராகலை ,, |
| 4. கருப்பையா கிருஸ்ணசாமி | 04 | சின்னப்புராசி ,, |
| 5. லாசரஸ் கிறே பாக்கியம் | 05 | சின்னப்புராசி ,, |
| 6. கந்தையா மேனகா தேவி | 06 | சின்னப்புராசி ,, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குண்டூசிகள்

அன்றவன் இந்நிலம்
முற்றுகையிட்ட போது - அவன்
உயர்ந்திட எங்களை ஏற்றினான்
தோணியிலே.........
சுருங்க சுருங்க கொண்டு வந்து
ஒடிய ஒடிய தூக்கி எறிந்து
சேர்த்து விட்டான்
மலைநாட்டில்
உச்சி வெயிலிலே
உருகும் மெழுகுகளாய்
கடும் பனியிலே
உறையும் உழைப்பாளர்களாய்
ஓட்டை வீட்டில்
ஒட்டிய துணிகளோடு
உறுப்பறுந்துப் போனோம் !

நாட்டின் ஜனநாயகம் ஓட்டிட
நாங்களும் தேவைப்பட்டோம்
நிறைவேறாத பேச்சைக் கேட்டு
கொடுத்து விட்டோம்
எங்கள் வாக்கை
நாங்கள் கொடுத்தது
வாக்கு மட்டுமல்ல
வாழ்க்கையையும் என்பதை
இன்றுதான் கண்டு கொண்டோம்!

கண் வழி புகுந்து
கனவொன்று கண்டேன்!
ஓட்டைகள் நிறைந்த சட்டியை
குண்டூசிகளால் குத்தி குத்தி
துளைக்கத் துணிந்தோம்!

ஒருவர் மேல் ஒருவரேறி
உயர்ந்து நின்று
உரிமைக் குரல் எழுப்பினோம்
என் கனா நிலைப்பதற்குள்
என்னை கேட்காமல்
பொழுது ஏன்
விடிந்து விட்டது
சூரியனே நீ கூட
எந்தன் கனா நீடிக்க
துணை நிற்காயோ ?

ச. யோகப்பிரியா
கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படித்துப்பார்

தந்தையிடம் படி உழைப்பின்
மகிமையை!
தாயிடம் படி அன்பின் மகிமையை
மூத்தோனிடம் படி
உனை ஆளாக்கியதின்
கடினத்தை!

இளையோனிடம் படி பண்பின்
உச்சத்தை
பாடசாலையில் படி
ஒழுக்கத்தின் மேன்மையை
ஆசானிடம் படி அனுபவத்தின்
தரத்தை !

சினேகிதனிடம் படி
நட்பின் விளிம்பை
உறவினர்களிடம் படி
தேவைகளின் சங்கமத்தை
அறிஞர்களிடம் படி
உலகின் உயர்வை!
ஏழையரிடம் படி
பசியின் கொடுமையை!
ஒதுக்கப்பட்டவனிடம் படி
உள்ளத்தில் உண்டான
வலியை!
காகத்திடமாவது படி அவை
காத்து வரும்
குல ஒற்றுமையை!
வீரனிடம் படி
தோல்வியின் ஜீரணத்தை

உன்னைப் படி
உலகைப் படி
உரிமையைக் கேள்
உத்தமனாய் வாழ் !

வீ . விஜேந்திரன் (ஆசிரியர்)
இ. த. ம. வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டார் பாடல் இலக்கியம்

இலக்கியங்கள் காலத்தை காட்டும் கண்ணாடி என்றால், நாட்டுப்புரவியல் சமூதாய வளர்ச்சியைக் காட்டும் கண்ணாடி எனலாம். என்று கூறுமிடத்து நாட்டுப்புற பாடல் இலக்கியம் சிறப்படைந்துள்ளது. இது உயாத் துடிப்புள்ள இலக்கியங்களாகவேஇன்றம் வாழ்ந்துக்கொண்டிருக்கின்றன. முனித வாழ்வில் எற்பதும் பல்வேறு உணர்ச்சிகளுக்கு ஏற்ப பண்டைய வாழ்க்கைமுறை, போரியல் முறைகள்,காண்பா,சமுக பொருளாதாரச் சூழல் பற்றியெல்லாம் எளிய பாடல்களாகவும், கலை வடிவங்களாகவும் பரம்பரை பரம்பரையாகப் பேசப்பட்டு வருகிண்றன, நாட்டாரிய கிராமப்புற வாய்மொழி இலக்கியங்களை ஆய்வுக்குறிய இலக்கியங்களாக அனைத்துலக கல்விப் புலத்திற்குக்கொண்டு வந்த பெருமை 'ஜேக்கப் கிரீம்' என்ற ஜேர்மன் மொழியாலாளரையே சாறும் பல்வேறு அறிஞ்சர்கள் பல்வேறு வடிவங்களில் வரைவிலக்கணங்களை வகுத்துச் சென்றுள்ளனர். இவற்றில் சங்கர் சென்குப்த,டாக்டர், சு. சக்திவேல்,எம். ஏஸ். ஜினோசு என பலரை குறிப்பிடலாம். நூட்டார் இலக்கியம் தனது தனித்துவத்தையும் இயல்பான உணர்ச்சிகளையும் இழந்து இன்று நவீன இலக்கியத்துக்குள் கலந்துவிடுகின்ற ஒரு போக்கையும் காணமுடிகிறது.

நாட்டாரியானது கிராமிய இலக்கியம் நாட்டாரிலக்கியம், நாடோடிப்பாடல்கள், பாமர பாடல்கள்,எமுதாக் கவிதைகள், வாய்மொழி இலக்கியம் பொதுப்புராணவியல் என்ற பல்வேறு பெயர்களினால் அழைக்கப்பட்டுவருகின்றது. 'நாட்டுப்புறவியல்' என்ற சொல்லை 1846 இல் 'வல்லியம் தோமஸ்' என்'பவரே மதன் முதலில் ஆங்கிலத்தில் "FOLK LORE" என்ற ஆங்கிலப் பதம் மூலம் குறிப்பிட்டார். இவரை தொடர்ந்தே நாட்டாரியல் தொடர்பான ஆய்வாளர்கள் இதனை பயன்படுத்த தொடங்கினர். இதற்கு முன்னர் இ பொதுமக்களைச் சார்ந்த மரபு முறைகள் என அழைக்கப்பட்டது. இவ்வரைவிலக்கணங்களின் ஊடாக ஒரு கிராமத்து பாரம்பரியங்கள் கறி காட்டிகளாக விளங்கும் கிராமத்துமக்களின் நாகரீக வரலாற்றையும் யதார்த்தமாக எடுத்து கூறுவதையே நாட்டார் இலக்கியங்கள் எனக் கொள்ளலாம்.

நாட்டார் இலக்கியத்தின் தோற்றுவாயை எடுத்து நோக்குவமாக இருந்தால் கிராமப்புரங்களில் வாழ்கின்ற மக்களின் தேவைகளை ஒப்பிட்டு எழுந்த தொழில் முயற்சிகள் குடும்ப உறவுகள், வாழக்கைத் தேவைகள் சுயப்பாதுகாப்பு, அதனால் எழுந்த நம்பிக்கைகள் சகுனம் பாாத்தல், சடங்குகள் நிமிர்த்தம் என்பவற்றை அடியோற்றியே நாட்டார் இலக்கியங்கள் தோற்றம் பெற்றன இத்தகைய இலக்கியங்கள் சுயமாகத் தோற்றுவதற்கு கிராமிய மக்களின் பாண்பாட்டு விழுமியங்கள் அவர்கள் உள்ளத்தில் ஊற்றெடக்கும் நவரசங்களுக்கம் ஏற்ப அசலியக்கத்தை ஏற்படுத்தும் போக்குமே காரணங்களாக அமைந்திருந்தன. இந்த நிலையிலிருந்து இம்மக்களின் பண்பாட்டு விழுமியங்கள். அவாகள் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் நவரசங்களுக்கும் ஏற்ப இசவியக்கத்தை ஏற்படுத்தும் போக்குமே காரணங்களாக அமைந்திருந்தன அந்த நிலையிலிருந்து அம் மக்களின் தேவையை அடியோற்றி எமுந்த இலக்கியங்களின் தோற்றுவாய்க்கான பின்னணியைப் பார்ப்போமாயின் பிறரது துன்ப துயரங்களில் பங்கேற்று அவர்களது துன்பங்களைக் குறைத்தல்,உடல் உலைப்பில் உதவும் பாங்கும், தொழில் முயற்சியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்சாகத்தை ஏற்படுத்தலும். சமுதாய எறவுகளைப் பேணும் வகையில் அணபுணர்ச்சி அல்லது காதல் உணர்ச்சியை வெளிக்காட்டும் நோக்கில் பாடப்படும் நாட்டு நடப்புகளைப் பரிமாரிக் கொள்ளுதல் போன்ற வற்றிற்காகப் பாடப்படும் பாடல்கள், ஒடுக்கப்படும் சுதந்திரம் பரிக்கப்படும் வாழ்ந்த மக்களின் உரிமை குரலாக ஒலிக்கும் வகையில் விடுதலை நோக்கிய பாடல்கள் என ஒரு தனி மனிதனின் அல்லது ஒரு சமுகத்தின் தேவையை ஒட்டியே நாட்டார் பாடல்கள் தோற்றம் பெற்றன.

சங்ககால ஐந்திணை ஒழுக்கத்தில் நெய்தல் நிலத்துக்குறிய பிரதான தொழிலாக மீன்பிடித்தலே விலங்கியது பிரிவுத்துயரையும், பிரித்து பின்னர் சேரும் பொழுது ஏற்படும் மகிழ்சியையும் ஒரு சேர நுகரும் மக்களை நெய்தல் நிலத்தில் காணலாம் கடலுக்குப் போன கணவன், திரும்பி வரும்வரைகலையில் நின்றப்படியே வானத்தையும் கடலையும் பார்த்தப்படியே ஏக்கத்துடன் காத்துநிற்கும் பெண்களை இந்த நெய்தல் நிலத்தில் தான் பார்க்க முடியும் அங்கே கழிவிரக்கம் துயரம் மகிழச்சி,காதல் உணர்ச்சி பொங்கும் நிலை காணப்படுவதனாலோ என்னவோ கடற் தொழிலாளர் தொடர்பான பல பாடல்கள் உள்ளத்தை நெகிழவைக்கும் தன்மை உடையனவாகக் காணப்படுகின்றன. குடற்றொழிலாளர்களின் அவல வாழ்வைச் சித்தரிக்கும் பின்வரும் பழமொழி ஒன்றுஇன்னும் வடப்புலத்தில் பேசப்படுகின்றது.

> "மரத்தில் ஏற்றியவனை மரத்தின் கீழ் பார்க்கலாம்,
> கடலில் போனவனை கரையிலும் காணமுடியாது"

படகோட்டி என்ற திரைப்படத்தழல் இடம் பெற்றுள்ள கவிஞர் கண்ணதாசனின் பாடல் வரும்.

> "தரைமேல் பிறக்க வைத்தான் - எங்களைத்
> தண்ணீரில் மிதக்க வைத்தான்
> ஒருசான் வயிறை வளர்ப்பவர் உயிரை
> ஊரார் நினைப்பது சுலபம்."

என்ற அடிகள் அவர்களது அவல நிலையைக் காட்டுவதற்காக அமைந்துள்ளது. இவிவாறு கடலில் மீன் பிடிக்கும் பொழுதம் கரைவலை இழுக்கு பொழுதும் பாடப்படும் இப்பாடல்கள் நாட்டார் பாடல்களே ஆகும்.

நாட்டாரியல் என்பது கிராமிய மக்களின் அனுபவத்தின் போக்கிலும் மனிதனோடு மனிதனை அது நேரடியாக மட்டுமல்லாதுஇதயத்தோடு இதயத்தைப் பிணைந்து வைக்கின்றது அவர்களுடைய தனித்தன்மையைக் குலைக்காமல் ஒற்றுமையை வளர்க்கின்றது இயற்கையோடு இணைந்து நாமும் சமுகத்தின் ஒட்டுமொத்தமான அல்லது தனிப்பட்ட உணர்ச்சிகளையும் அது பிரதிபலிக்கின்றதுஎன அறிஞர் சங்கர் சென் குப்தாகுறிப்பிடுகின்றார். அதனைப் போன்றே நாட்டாரிலக்கியத்தில் பல்தரப்பட்ட ஆய்வுகளை மேற்கொண்டுள்ள டாக்டர். சு. சக்திவேல் ஒரு நாட்டு மக்களின் நாகரீகத்தின் பண்பாட்டை பழக்க வழக்கங்களை, வரலாறை, நாட்டு நடப்பை உண்மையான முறையில் படம் பிடித்து காட்டுவதே நாட்டுப் பறவியலாகும் பழங்காலப் பண்பாட்டின் எச்சம் நாட்டுப் புரவியலாகும் நாட்டுப்புற இயல் என்பது நாட்டுப்புற மக்களின் மரபு வழிப்பட்ட படைப்புகள் எனலாம் எனறார் அறிஞர் ஔரலியோ எம்.எஸ்.பினேசோ என்பவர் மனித சமுதாயம் என்பதை அனுபவித்ததே எதைக் கற்றதோ, என்பதைப் பயிற்சி பெற்றதோஅவற்றைக் குவித்து வைத்திரக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேமிப்பு அறையாகும் என்று குறிப்பிட்டதானது நாட்டாரிக்கியத்தின் தன்மை பண்பு என்பன துல்லியமாக விளக்குகின்றது.

நூட்டார் பாடல்கள் வகையில் தொழல் சாந்த பண்பகளை இயற்றுவதற குரியமரவழிப்பட்ட சொல்லாட்சியும் உவமையும் உருவாக்கங்களும்,ஏற்ற சூழலும் இயல்பாகவே அமைந்திருப்பதனால் காலச் சூழ்நிலைக்கும், தேவைக்கும் ஏற்ப இயைபு படுத்திப்பாடும் போது சொறகளையும் கருத்துக்களையும் மாற்றி மாற்றி பாடக் கூடியதாக உள்ளது.

தமிழ் சினிமா பேசாப் படமாக ஆரம்பித்துப் பின்னர் பேசும் திரைப்படமாக வளர்ச்சி யடைந்த காலங்களில் இருந்து இன்றுவரை ஆயிரக்கணக்கானதமிழ்ப்பாடல்கள் பல்வேறு கவிஞர்களினால் எழுதப்பட்டு இசையமைக்கப்பட்டுள்ளன. இப் பாடல்களுக்கான கருப்பொருள் மக்களின் நாளாந்த வாழ்க்கை முறைகள் சங்க இலக்கியப் பாடல்கள், பிர மொழிகளில் இருந்து பெறப் பட்ட தழுவல்கள், தமிழ் மக்களிடையே காலங்காலமாக வழக்கில் இருந்து வந்த நாட்டவர் பாடல்கள் எவருக்கும் சொந்தமானவையாகவோ அல்லது ஒரு பிரதேசத்துக்கு மட்டும் உரியவையாகவோ இல்லாத காரணத்தினால் எவரது அனுமதியுமின்றியே கவிஞர்கள் தமது பாடலில் சில அடிகளையோ அவற்றைக் கருப்பொருளாகஎடுத்து மாற்றியோ இல்லது முழுமையாகவேதமது பாடல்களை ஆக்கி வருகின்றனர். அந்தவகையில் பல நாட்டார் பாடல்கள் திரைப்படங்களில் இடம் பொற்றிரக்கின்ற போதும் சில பாடல்களை உதாரணமாக கூறலாம்.

தஞ்சாவூரு மண்ணெடுத்து
தாழியொன்று செய்யச் சொன்னேன்
தாழியிருக்குபம் மட்டத்திலே நான்
தங்கியிருப்பேன் திட்டம் போல்

என்ற பாடல் அடிகள் பொற் காலம் படத்திலும்.

உச்சிவகிந்தெடுத்து
பிச்சிப் பூ வைச்சகிளி
பச்சை மலைப்பக்கத்திலே
மேயுதென்று சொன்னாங்க

என்ற பாடல் ரோசாப்பூரவிக்கைகாரி படத்தில் இடம் பெற்ற பாடல்களையும்குறிப்பிடலாம் நாட்டாரிலக்கியப் பாடல் களைக் கருப்பொருளாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தோற்றம் பெற்று பல பண்புகளையும் கொண்டமைந்து பல்வேறு வடிவங்கள் நிறைந்த தமிழகம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகத் தமக்கென ஒரு தனித்துவத்தையும் வரலாற்றையும் கொண்டுள்ள. ஆனால் அன்றுஅருந்த அளவுக்கு அன்று இல்லாமல் போய்விட்டது. அதற்கு பல்வேற தடைக்காரணிகள் அருந்துள்ளன. துமிழகம் பெரும் வழக்குப் பெற்றிருந்த நாட்டாரிலக்கியம், தனது தனித்துவத்தையும் இயல்பான உணர்ச்சியையும் இழந்து இன்று நவீன இலக்கியத்துக்குள் கலந்து விடுகின்ற ஒரு போக்கையும் காணமுடிகிறது, அன்றுநாட்டாரிலக்கியம.

எதிர்நோக்கியிருந்த தடைகள் பல வாய்மொழியாகப் பேசப்பட்டு வந்தமையால் காலவோட்டத்தில் திரிபுகளுக்குள்ளானமை அக்கால சமுக ஒழுங்கமைப்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடாக வெளிப்படுத்தப்பட்ட மரபுகளில் பல வழக்கிழந்து போனமை இலக்கண வரம்புக்குட்படாத வாய்மொழிப் பாரம்பரியமாக வந்த இலக்கியங்கள் அவற்றின் பண்ப காரணமாக செந்நெறி மரபு பேணுவோரது அங்கிகாரத்தைப் பெறத் தவரியமை நவீன இலத்திரனியல் சாதனங்களின் வருகை பண்டைய நாட்டார் ரலக்கிய வளர்ச்சி தொடர்பாக முழுமையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டமை அந்நியராட்சியில் நாட்டுப்புற வழிபாடுகளுக்கு ஏற்படத்தப்பட்டிருச்த தடைகள் வாய் மொழிப்பாடல்கள் நூலுருப் பெறும் பொழுது அறிஞர்களின் திருத்தங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றமை எனபவற்றைக் கூறலாம்.

சினிமாவின் தாக்கம் கிராமப்புர மக்களை மட்டும் மல்லாது இன்றுபடித்த நடுத்தர மட்டமக்களையும் பெரும் பாதிப்புள்ளாக்கி வருகின்றது சினிமா படங்களில் நாட்டார் பாடல்களின் அமைப்பம் மெட்டுகளும் தமது தனித்துவத்தை அழந்து வேறுவகை மெட்டுக்களாக்கப்பட்டு அவையே கிராம மக்களின் மனதில் ஆழமாக பதிந்து விடுகின்றன. இந்த நிலையில்கிராம மக்களால் ணேப்பட்டு வந்து தூய நாட்டார் கலை வடிவங்கள் சிதைவுக்குள்ளாக்கப்பட்டு மரபு வழிப்பட்ட அலக்கியங்கள் மறை போகின்ற அபாயத்தை சினிமாக்கள் ஏற்படுத்துகின்றன. நாட்டார் பாடல்களைச் சினிமாப் பாடல்களிலும் இசைக் கச்சேரிகலும் புகுத்துவோர் அவற்றின் மூலவடிவத்தையும் அவற்றிற்கு உரித்தான இசை வடிவங்களையும் சிதைக்காது உள்ளதை உள்ளப்படியே எழுதவும் இசைக்கவும் முன்வர வேண்டும்.

தமிழ் நாட்டில் உள்ள மதுரை,தஞ்சாவூர் மதலிய பல்கலைகழகங்களிலும், பாழையங் கோட்டை புனித சாவேரியார் கல்லுரியில் “நாட்டார் விழக்காற்றியல்” என்பது தனித்துரையாக இயங்துடன் அவை தொடர்பான ஆய்வுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. புனித சாவேரியார் கல்லுரியில் இருந்து “நாட்டார் வழக்காற்றியல்” என்னும் தரமான ஒரு சஞ்சிகையும் வெளிவருகின்றது.

ஆனால் இலங்கையில் பல்கலைகழகங்களிலோ அல்லது கல்லுரிகளோ ‘நாட்டாரியல்’ ஒரு தனி துறையாக வளர்ந்துச் செல்லப்படவில்லை இது ஒரு விருப்பத்திற்குறிய கற்கை நெறியாகவே பெரும்பாலான பல்கலைக் கழகங்களில் முன்னெடுத்து செல்லப்படுகின்றது.

‘நாட்டாரியல்’ என்ற துறையைத் தனித்துவமான ஒரு துறையாக அங்கீ கரிப்பதுடன் பல்கலைகழக பட்டப்படிப்புக்கான ஒரு பாடமாகவும் அங்கிகரிக்க வேண்டும். இத்துறை சார்ந்த ஆய்வுகளை மேற் கொள்வதற்கான வள நிலையம் ஒன்றையும் நாட்டாரியல் தொடர்பான ஆவணக்காப்பகம் ஒன்றையும் உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கெள்ளப்பட வேண்டும் .
எல்லாம் மாகாணத்தில் உள்ள பல்கலைக்கழகங்களின் கூட்டு மயற்சியினால் உருவாக்கப்படும் போது அதன் வெளியீட்டு பயனறதியுள்ளதாகும். அதே வேளை கல்வி அமைச்சும் மாகாண கல்வித்திணைக்களமும் நாட்டார் பாடல் போட்டிகளை மாணவர் மட்டத்தில் நடாத்த வேண்டும்அப்போது தான் தமிழின் பாரம்பரியத் கலை வடிவங்களையும் இலக்கியங்களையும் அழிந்து விடாது பாதுகாத்துக் கொள்ள முடியும்.

எஸ். கோகிலபுஸ்பகுமாரி.
12 கலைப்பிரிவு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## N/W/Ragala Tamil Maha Vidiyalaya
## Halgranoya-2007
## Children Details

| Grade | Male | Female | Total | Religion | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | Hindu | Non R.C | R.C. | Islam |
| 1 A | 23 | 15 | 38 | 35 | 02 | - | 01 |
| 1 B | 18 | 19 | 37 | 34 | 01 | - | 02 |
| 1 C | 23 | 12 | 35 | 33 | - | | 02 |
| 2 A | 19 | 19 | 38 | 33 | - | 02 | 03 |
| 2 B | 18 | 22 | 40 | 31 | 03 | 04 | 02 |
| 2 C | 21 | 18 | 39 | 34 | 03 | - | 02 |
| 3 A | 30 | 20 | 50 | 43 | 02 | 02 | 03 |
| 3 B | 28 | 22 | 50 | 41 | 02 | 01 | 06 |
| 4 A | 15 | 27 | 42 | 36 | 03 | 01 | 02 |
| 4 B | 23 | 16 | 39 | 36 | 01 | | 02 |
| 5 A | 25 | 25 | 50 | 46 | 02 | 01 | 01 |
| 5 B | 22 | 26 | 48 | 40 | 02 | 02 | 04 |
| **Total** | **265** | **241** | **506** | **442** | **21** | **13** | **30** |
| 6 A | 23 | 20 | 43 | 33 | 02 | 04 | 04 |
| 6 B | 27 | 16 | 43 | 37 | 01 | 01 | 04 |
| 6 C | 12 | 15 | 27 | 26 | 01 | - | - |
| 7 A | 26 | 20 | 46 | 41 | 02 | 02 | 01 |
| 7 B | 22 | 25 | 47 | 38 | 01 | 02 | 06 |
| 7 C | 22 | 17 | 39 | 36 | 02 | 01 | - |
| 8 A | 12 | 20 | 32 | 28 | 01 | 01 | 02 |
| 8 B | 12 | 22 | 34 | 29 | - | 02 | 03 |
| 8 C | 21 | 13 | 34 | 28 | 02 | 03 | 01 |
| 9 A | 26 | 17 | 43 | 34 | 05 | 04 | - |
| 9 B | 13 | 27 | 40 | 36 | 01 | 01 | 02 |
| 9 C | 19 | 26 | 45 | 42 | - | 02 | 01 |
| 9 D | 06 | 08 | 14 | 12 | 02 | - | |
| 10 A | 18 | 15 | 33 | 26 | 03 | 02 | 02 |
| 10 B | 17 | 19 | 36 | 25 | 01 | 04 | 06 |
| 10 C | 15 | 17 | 32 | 30 | 01 | 01 | - |
| 10 D | 18 | 22 | 40 | 36 | - | 04 | - |
| 11 A | 15 | 31 | 46 | 39 | 04 | - | 03 |
| 11 B | 17 | 17 | 34 | 31 | 01 | | 02 |
| 11 C | 17 | 21 | 38 | 30 | 02 | 04 | 02 |
| 11 R | | | | | | | |
| **Total** | **358** | **388** | **746** | **637** | **32** | **38** | **39** |
| 12 A | 24 | 39 | 63 | 55 | 02 | 06 | |
| 12 C | 07 | 01 | 08 | 08 | | - | - |
| 13 A | 11 | 13 | 24 | 23 | 01 | | - |
| 13 C | 08 | 05 | 13 | 12 | - | - | 01 |
| 13 A II | | | | | | | |
| 13 C II | | | | | | | |
| **Total** | 50 | 58 | 108 | 98 | 03 | 06 | 01 |
| **Grand Total** | **673** | **687** | **1360** | **1177** | **56** | **57** | **70** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மை

பத்து மாதங்கள் கருவோடு எமை தாங்கி
கனம் என்று பாராமல் களிப்புடன்
ஈன்றெடுத்த தாயே நினக்கெந்தன் வந்தனங்கள் !

உதிரத்தை பாலாக்கி உணர்வை கல்லாக்கி
உருவம் தந்தவள் நீயே !
ஏழேழு ஜென்மங்கள் எடுத்தாலும்
எனக்கென்று ஒருறவு நீ தானே !

துன்பத்தை இன்பமாய் நீ மாற்றி
துயரங்களை தூரமாய் நீ தள்ளி
துணையாய் நிற்பவள் நீ !

பல நூறு ஆண்டுகள் உனை வேண்டி நின்
பாதத்தில் சரண் கொண்டேன் !

மெ. மனோகரன்
தரம் - 12 (கலைப்பிரிவு)
இ.த.ம.வி

# அன்னையின் நினைவில் ஓர் கணம்

தினமும் உன் நினைவலைகள்
என் மனமுன் தினதந்தி அடிக்கிறதே !

நீலக் கடல் தனிலே முத்துச் சுடர் நிலவே
சோக மனதனையே நின் முன் இறக்கி வைத்திடவா ?
தீயாய் எரியுமிந்த துயரைத் தீர்த்து வைத்திட வா !

தாயின் மடி தேடி தானழுது நிற்கையிலே
ஆறுதல் யாருமில்லை அழுவதற்கும் நீரில்லை
ஈரைந்து மாதங்கள் எனைதாங்கி நீ பெற்று
எடுத்து வளர்த்தவள் நீ !

எனக்கின்பம் தந்து விட்டு
நின் வாழ்வை நீ முடித்தாய்
வாழ்வின் பாதையில் நான்
வாகை பெறும் வேளையிலே நீயில்லை !

உள்ளத்தில் அழுகிறேன் உதடுகள் சிரிக்கவிட்டு
சந்தோசம் எனக்கில்லை சரித்திரத்தில் இது விதியா ?
பதினொரு அகவை பின்னும்
பணிகிறதே என் கண்கள் !

எஸ்.பிரியதர்ஷினி
உயர்தரம் (கலைப்பிரிவு)
இ.த.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய இளைஞனே

எமது நாட்டின் அபிவிருத்தியில் முக்கியமாணவர்களாகவும் ஆக்க நடவடிக்கைகளில் முதுகெழும்பாகவும் விளங்குபவர்கள் இளைஞர்கள். இன்றைய காலக்கட்டத்தில் இளைஞர்கள் எம்மத்தியில் ஒரு கேள்விக்குறியாகவும், விவாதத்திற் குறியவர்களாகவும் விளங்குகின்றார்கள், இந்நிலை உலகில் எல்லா நாடுகளிலும் காணப்படும் பெரும் பிரச்சினையாகும், குறிப்பாக ஆசிய நாடுகளிலேயே மிகவும் உக்கிரமாக இருக்கின்றது

எமது நாட்டை பொருத்தவரை இளைஞர்கள் இந் நாட்டுச் சரித்திரத்தையே மாற்றியமைக்க கூடிய நிலையில் உள்ளவர்கள்.நம் நாட்டை கட்டியெழுப்ப எவ்வெவ் வகையில் இளைஞர்களை பயன்படுத்தலாம் என்று பெற்றோர்களோ, அரசியல் தலைவர்களோ கருதுவதில்லை, பெற்றோர்கள் தம் பிள்ளைகள், ஒரு டாக்டராகவோ, ஒரு எஞ்சினியராகவோ, அல்லது கணக்காளராகவோ, வரவும் ஏதாவது தொழிலினை எதிர்பார்த்து அதற்கு தேவையான வழி வகைகளை செய்கிறார்களே தவிர தம்பிள்ளைகள் அறிவாளியாக நாட்டின் அபிவிருத்திக்கு பங்கு செலுத்துபவனாக சமூக சிந்தனை உள்ளவனாக வேண்டுமென்று நினைப்பதில்லை.அரசியல் தலைமைகள் தம் சுயநலத்திற்காக. இளைஞர்களை பயன்படுத்தி தம்முடைய அபிலாசைகளை அடைவதற்காக எம் இளைஞர்களை பகடைக்காய்களாக நினைக்கிறார்கள். இதனால் இளைஞர்கள், வாழ்கையில் குறிக்கோள் இல்லாத வர்களாய் நல் வழிகாட்டிகள் இல்லாதவர்களாய்,இலட்சியம் இழந்து, ஏமாந்து விரக்தி மனங்கொண்டவர்களாய் உள்ளனர்.

நம் இளைஞர்கள் பொறுமையிழந்து வெறுமையிலும் வாழ நினைக்கின்றார்கள் , வாழ்க்கை இன்று இயந்திரமயமாகி இயற்கையை விட்டு விலகி செயற்கையாகிவிட்டது, இச்செயற்கை வாழ்க்கையில் சிக்கித்தவிக்கும் இளைஞர்கள் பாலியலில் தம்முடைய சக்தியையும் முயற்சியையும் திசைதிருப்புகிறார்கள்.

ஆண்களும் சரி பெண்களும்சரி பாலியல் புரட்சியில் ஈடுப்பட்டு ஒரு வெறுமையான தனிமைக்கு தள்ளப்பட்டு விடுகிறார்கள் இந்நிலையில் சிலர் அமைதி, பக்தியை, பக்குவநிலையை நோக்கி தேடி ஓடுகிறார்கள், சிலரோ விரக்தியடைந்து வன்செயல் புரட்சி, தற்கொலை, போன்றவற்றில் ஈடுபட்டு தன்னை சார்ந்தவர்களுக்கும் பெரும் தலையிடியினை உண்டுபண்ணி புது புதுக்கோலங்களை அடைகிறார்கள். இன்று உலகிலே நம் நாடு உட்பட இளைஞர்கள் பல குற்றச் செயல்களிலும், வன்செயல்களிலும் மிக விருப்போடு ஈடுபடுகிறார்கள். பயங்கரமான ஆயுதங்களைச் சிறு வீட்டுச் சண்டைகளிலும் கூட பாவித்து உயிர்ச்சேதம் செய்கிறார்கள்.

சிந்தனையும் நோக்கமுமின்றி பிரதிபலனில்லாத வன்செயல்களை செய்து, உயிரையும் கொடுக்கத்தயாராக இருக்கின்றார்கள் இந்தநிலை ஏன்வந்தது, அவர்களாக தேடிக்கொண்டார்களா? அல்லது இந்த இழிநிலைக்கு தள்ளப்பட்டார்களா? இதனை ஒவ்வொரு இளைஞனும் சிந்தித்து ஆராய வேண்டும்? நாட்டின் ஆக்கத்திற்கும் பொருளாதர பெருக்கத்திற்கும் எவ்விதம் இளைஞர்களை, இளைஞர் சக்தியை பயன்படுத்தலாம் இவர்களை, பொறுப்புள்ள , தேசப்பற்றுள்ள, மனிதநேய தலைவர்களாக்கலாம் இவர்கள் காணும் நவீன உலகை நாம் எவ்வாறு உருவாக்கலாம் ஒவ்வொரு இளைஞனும், இந்நாட்டின் நம் சமூகத்தின் நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசையாக அபிவிருத்தியின் அடித்தூண்களாக ஆக்குவதற்கு,பெற்றோர்கள் அறிவில் சிறந்த ஆசிரியர்கள் சமூக நலனோம்புனர்கள், ஆராய்ந்து முயற்சிக்க வேண்டும்.

இன்றைய இளைஞர்களே, வருங்கால தலைவர்கள் எதிர்காலத்தில் எமது சமுதாயத்தை வளரத்தெடுக்கவிருக்கும் சிற்பிகள் இளைஞர்களே. முற்போக்கு உள்ளங்களின் முன்னோடிகள் புதுமை வேகத்துடனும் புரட்சிகர எண்ணங்களுடனும், பொங்கியெழும் இலட்சிய துடிப்புடனும் பொது நல நோக்குடனும் வாழ்வாங்கு வாழ வேண்டியவர்கள், புது மலராகி இளம் பருவத்திலேயே மறுமலர்ச்சி சிந்தனைகள் கொணடு வளர்தெடுக்க வேண்டியது சமூகத்தில் உள்ளவர்களின் தலையாய கடமையாகும். தகுந்த சமூக வழிக்காட்டல், அவர்களின் ஆக்கத்திறன்களை வளர்த்தல் தொழில் வழிக்காட்டல் , சமூக நல்வழிகாட்டலிலும் அக்கறை உள்ள அனைவரும் இவர்களுக்கு களம் அமைத்து கொடுக்க வேண்டும்.

இளைஞர்களின் இயற்கையான ஆக்கத்திறன் வளர்ச்சிக்கும் திறமைக்கும் பெற்றோர்களும், ஆசிரியர்களும் , சமூகசேவையாளர்களும் நற் சூழ்நிலைகளை உருவாக்கி கொடுக்க வேண்டும் 'மன்னர்கள் எப்படியோ மண்ணுயிரகளும் அப்படியே என்பது போல " தலைவர்கள் எப்படியோ தரணியும் அப்படியே" என்று ஆகிவிடும். .ஆகவே இளைஞர்ளை சிறந்த சிந்தனை சிற்பிகளாய் உருவாக்கும் போது சிறந்த சமூதாயத்தை நாம் உருவாக்கிட முடியும்.

பெருந்தோட்ட பகுதி எமது இளைஞர்களுக்கு சிறந்த கல்வி அறிவூட்டுதல் மூலம் சமூகசிந்தனை சமூக வழிகாட்டல் மூலமும் சமுதாய வளர்ச்சிக்கான மன நிலையை உருவாக்கமுடியும் , சமுதாய வளர்ச்சிப்படிக்கான தகுந்த தகவல்களையும், அறிவுரைகளையும் நாம் பரப்புவதன் மூலம் மக்களை அறிவுடையவராக்க முடிகிறது , பெருந்தோட்ட பகுதி சுயமுயற்சி சமுதாயம் பற்றிய தெளிவான அறிவு, சிறந்ததிட்டம் ஆகியன சமுதாய அபிவிருத்திக்கு உதவும்.

இன்றைய அரசாங்கம் இளைஞர்களுக்கு தேவையான சகல வசதிகளையும் வாய்ப்புகளையும் தனியான அமைச்சுகளின் ஊடாக ஏற்படுத்தி கொடுத்துள்ளது. மலையக இளைஞர்கள் வாயப்புககளை சரியாக பயன்படுத்தி பயனுற வேண்டும். அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற அமைப்புகள் சமூக அபிவிருத்தி அமைப்புகள் பல இளைஞர் அபிவிருத்தி, சமூக அபிவிருத்திமேம்பாட்டு திட்டங்களை நடைமுறை படுத்தி வருகின்றது பெருந்தோட்ட சமூகத்தை விட்டு படித்த இளைஞர்கள் நகர் புறத்தை நோக்கி நகர்வதால் பல பாதிப்புகளும், சில நன்மைகளும் உள்ளன பெருந்தோட்ட பகுதியினர் நகர்புறத்தை நோக்கி நகர்வதை தடுக்க பெருந்தோட்ட துறையினை சிறந்த பொருளாதார சிறப்புடையதாக மாற்றினால் அல்லது பின்வரும் நடவடிக்கையினை மேற்கொண்டால் எதிர்காலத்தில் நல்ல பயனைத்தரும் என எதிபார்க்கலாம்.

(01) பெருந்தோட்ட தொழில்களில் உறுதியான வருமானம் பெறவழி அமைத்து கொடுத்தல் வேண்டும்.

(02) நகர பெருந்தோட்ட வேலைக்கிடையிலான வேதன ஏற்றத்தாழ்வு நீக்கி சம சம்பளம் திட்டங்களை நடைமுறப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(03) மலையக பகுதி வேலைகளுக்கு மாதச்சம்பளம் வழங்கல்.

(04) ஆனைவருக்கும் விடுமுறை நாட்கள் சமமாக இருத்த

(05) இளைஞர்களுக்கு பெருந்தோட்த்தில் இயங்கும் காரியாலயம், தொழிற்சாரல , நிறுவனங்களில் தலைமைப்பதவி பதவிகள் வழங்கல்.

(06) சிறு கைத்தொழில்லை உருவாக்கல் , வங்கிக்கடன் குறைந்த வட்டியில் வழங்கள், பழச்செய்கை, மரக்கறி செய்கையில் நவீன தொழில்நுட்ப உபகரணங்களையும் விவசாய இராசாயணங்களையும் அறிவூட்டி பயன் படுத்தல் வேண்டும்.

(07) ஊள்ஞர் எமது மூல வளங்களை உச்ச பயன்பாட்டிற்கு உட்படுததல்

(08) அரச, அரசசார்பற்ற, பெருந்தோட்ட தொழிலாளருக்கு இடையில் உள்ள ஏற்றத்தாழ்வை படிப்படியாக நீக்க வேண்டும்

(09) விவசாய பயிர்ச் செய்கைக்கு உகந்த நிலங்களை இளைஞர்களுக்கு பகிர்ந்தளித்து விவசாயத்ததை ஊக்குவித்தல்

(10) வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காக பெருந்தோட்ட பகுதி இளைஞர்களை தேர்ந்தனுப்பி, மலையக பொருளாதாரத்தை உயர்த்துதல்

(11) பெருந்தோட்ட பகுதி சமூக தனித் தேசிய இனமாக பிரகடனப்படுத்தி, சுகாதாரம் , கல்வி , வீட்டு , பொது வசதிகளை அமைத்துக் கொடுத்தல் வேண்டும்.

(12) நவீன கருத்துக்களையும் அனுபவமிக்கவரின் ஆலோசனைகளையும் இளைஞர்களுக்கு வழங்கி, அவர்களை நல்வழி நடத்த வேண்டும் இயற்கை வளத்திலும் செல்வ செழிப்பிலும், சிறப்பிலும் எமது சமூகத்தை ஓர் உண்ணத நிலைக்கு கொண்டு வருதலும், கல்வி, கலாசார , பண்பாட்டு, பொருளாதாரத் துறை, விளையாட்டுகளில் சிறந்து மிளிர்ந்திட, செய்யவேண்டியது இளைஞர் களாகிய உங்கள் கரங்களிளேயே தங்கியுள்ளது. முயற்சியும், பயிற்சியும் முன்னேற்றத்தின் படிக்கட்டுகள் என்பதற்கேற்ப. எமது இளைஞர்கள் சோம்பலையும் சோர்வையும் நீக்கி துணிவும் உற்சாகமும் நிரம்பியவர்களாக, தற்பெருமையும், அகம்பாவத்தையும் அகற்றிவிட்டு, தன்னம்பிக்கையும், தன்மானமும் உள்ளவர்களாக சமூக சிந்தனை கொண்டு தமது அறிவையும், ஆற்றலையும், ஒற்றுமையையும், எமது சமூதாய முன்னேற்றத்திற்கு பயன்படுத்த வேண்டும் என மலர்த்தூவி வாழ்த்துகின்றேன்.

வாழ்க தமிழ் வளர்க இளைஞர் பணி.

கே.எம்.கே.ஞானசேகரம்,
இளைஞர் சேவை அதிகாரி.
வலப்பனை பகுதி
இராகலை மே.பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியம் கூறும் வாழ்க்கை நெறி

மனித வாழ்க்கையின் முக்கிய அடைவுகளில் இலக்கியமும் ஒன்றாகும். செய்யுளிலேனும் உரை நடையிலேனும் விரித்து எழுதப்படும் அனைத்தும் இலக்கியமாகும். இலக்கியத்தை வற்றிப்போகாத நதி என்றும் சூழ்நிலையின் கண்ணாடி என்றும் விதந்துரைப்பர். உலகில் ஓர் சமூகம் இருந்ததை வாழ்ந்ததை எடுத்து காட்டுவது இலக்கியமாகும்.இலக்கியம் தான் மனித வாழ்க்கையின் உணர்வுகளை வாகனத்தில் ஏற்றி வெளிக்காட்டுகின்றது. இலக்கியத்தின் தளபரப்பு மனித வாழ்க்கைதான்.

இந்தவகையில் காலத்தின் கண்ணாடியாக திகழும் இலக்கியமானது. மனித வாழ்க்கை நெறிகளை பற்றியும் எடுத்து கூறுகின்றது. அறநெறிகளாக திகழும் அறம், பொருள், இன்பம், வீடு என்பன பற்றியும், மானுடபண்பாடு பற்றியும், உலகநிலை பற்றியும்,நாகரீகத்தை பற்றியும் இலக்கியமானது சிறப்பாக எடுத்து காட்டுகின்றது.

மனித வாழ்வை செம்மைபடுத்தும் இலக்கியமானது அறம், பொருள், இன்பம், வீடு எனும் நால்வகை பொருள்நிலைபற்றி கூறும் போது , அறத்தினையும் பொருளினையும் புறத்திணையாக கொள்ளும் அதேவேளை இன்பத்தினையும் வீடுபேற்றினையும் அகத்திணை சார்ந்ததாகவே கொள்ளப்பட்டது. இலக்கியமானது நால்வகை பொருள் நிலைபற்றி கூறும் போது, அறம்,பொருள்,இன்பம், வீடு என்ற நான்கிலும் அறம் காணப்பட வேண்டும் என்கிறது. நால்வகை பொருள்களுமே மனித வாழ்க்கையின் தூண்களாக காணப்படுகின்றன. இந்த தூண்களில் ஏற்றப்படும் தீபம்தான் மனித வாழ்கை என இலக்கியம் கூறுகின்றது.

மானுடவியல் பண்பாட்டினை பற்றி இலக்கியம் கூறும் போது கவிஞன் மு.மேத்தாவின்

“ நம்பிக்கை நார்களை நமதாக்கி கொண்டால்
உதிர்ந்த பூவையும் ஒட்டிவிடலாம்”

என்ற கவிதை வரிகள் மனிதர்களுக்கு தன்னம்பிக்கையினை ஊட்டுகின்றது. நம்பிக்கைதான் வாழ்க்கை என்ற எண்ணத்தினை மனிதனின் அடிமனதில் ஆழப்பதிக்கின்றது. இதனையே பலநூறு வருடங்களுக்கு முன் வாழ்ந்த ஔவை எனும் மூதாட்டியார்

“ இன்சொல் விளைநலமாக ஈதலே வித்தாக
வன்சொல் களைகட்டி வாய்மை எருவூட்டி
அன்பு நீர் பாய்ச்சி அறக்கதிர் ஈன்றதோர்
பைன்கூழ் சிறுகாளை செய்......”

என்ற பாடல் மூலம் மானுட பண்பாட்டை மெய்ப்பித்து பாடியிருக்கிறார். உலக வாழ்க்கையினை பற்றி இலக்கியம் கூறுகையில் மனித வாழ்க்கையினை மேன்மையடைய செய்யும் வழிமுறைகளை கூறுகின்றது. புதியதோர் உலகம் படைக்க நினைக்கும் சங்ககால தமிழ் கவிஞன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாதும் ஊரெ யாவரும் கேளீர்"

என தன் சமூகத்தை மேன்மையடைய செய்யும் நோக்கத்தோடு பாடினான், அமரகவி, மகாகவி என திகழும் பாரதி என்ற கவிஞனும்

" வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கு"

என்ற வரிகளின் மூலம் இந்த சமூகம், உலகம் சிறப்புறவதற்காக இலக்கியங்களின் மூலம் உலகவாழ்க்கை சித்தரித்துகாட்டுகின்றார். இலக்கியமானது நாகரிகம் பற்றியும் சில கருத்துக்களை கூறுகின்றது. இன்று உலக பொதுமறையாக நிகழும் திருக்குறள் எனும் நூலின் ஆசிரியரான திரு வள்ளுவர் நாகரீகம் பற்றி குறிப்பிடுகையில்.

"கொல்ல நலத்து நோண்மை பிறர்
தீமை சொல்லா நலத்தது சால்பு"

என கூறுகின்றார். எதிரிகளுக்கும் கூட அருளவேண்டும். மன்னிப்பு தான் மனித வாழ்க்கையின் நெறி என இலக்கியம் கூறுகின்றது. இந்த உலகில் எல்லா மனிதர்களும் ஒரே இனம் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பாகுபாடு இல்லை, இதனை முண்டாசு கவிஞனாக திகழும் பாரதியார்.

"கேளடா மானிட சாதி கீழோர் மேலோர் இல்லை"

எனபாடிச்சென்றுள்ளார். இவ்வாறாகவே மனித நேயத்தை பற்றி இலக்கியம் கூறுகின்றது.

மேற்கூறிய கருத்துக்களின் படி ஆழமாக சிந்திக்கும் போது, மனித வாழ்க்கையின் மூச்சு இலக்கியம் தான் எனினும் நாம் இலக்கியத்தை விட்டு விட்டு வரண்ட பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.அறிவியலில் முன்னேற்றமடைந்து இயந்திரத்தை போல இயங்கி கொண்டிருக்கும் நாம் இன்று இருபத்தோராம் நூற்றாண்டில் வெற்றி படிகளில் நின்றுகொண்டிருக்கின்றோம்.ஆனாலும் எம்மை பெற்ற பூமி என்ற கருவறைக்கு கல்லறையே கட்டுகின்றோம். இத்தகையே தீய செயல்களை விட்டுவிட்டு இலக்கியம் கூறும் வாழ்க்கை நெறியை பின்பற்றுவோமாயின் வாழ்க்கையில் சிறப்பாக முன்னேற்றமடையலாம்.

கிருஸ்ணசாமி விஜயபானு.
12 கலை பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை வாழ்க்கையை பயனுள்ளதாக்குவோம்

பாடசாலைக் கல்வியினால் பெறப்படும் அறிவானது மனிதனது மதிப்பு நிலைக்குயர்த்த இன்றியமையாததாகின்றது.ஆழ்ந்த, அகன்ற அறிவினைப் பாடசாலையிலேயே பெற்றுக்கொள்ளலாம்.

தாயின் கருவிலிருந்து பிறந்ததோர் குழந்தை பிறந்த முதல் பாடசாலை புகும் வரை பல்வேறு வகையான அறிவு , அனுபவம், ஆற்றல், திறன்கள் பழக்கவழக்கங்கள் போன்றவற்றினை, உறவினர்கள், சமூகச்சூழல் என்பவற்றிலிருந்து பெற்றுக்கொள்கின்றது.

இவ்வாறு பல அனுபவங்களைப் பெற்றுவந்த குழந்தை ஒரு திட்டமிட்ட கல்வியினை பாடசாலையிலிருந்தே பெற்றுக்கொள்கின்றது. பாடசாலைக் கல்வியானது வாழ்க்கைக்குத் தேவையான பல்வேறு விடயங்களை வழங்குகின்றது.அதாவது கல்வி, விளையாட்டு , கலை கலாசாரம், நல்லொழுக்கம், பண்பாடு பழக்கவழக்கங்கள் ஆகியவற்றினை வழங்குகின்றது. இலங்கையின் கல்வி இலக்குகளில் சமூகப்பண்பாட்டு கலாசாரங்களோடு ஒத்துச்செல்லகூடிய வகையில் கல்வியின் கொள்கை அமையப்பெற்றுள்ளது. பிள்ளையிடம் காணப்படும் எல்லாத் திறன்களும்,மன ஆற்றல்களையும் இசைத்து வளர்ச்சிபெற செய்வது கல்வியின் நோக்கங்களில் ஒன்றாக கருதப்படுகின்றது. இதனை ஒருமைப்பாடுடைய ஆளுமை என்று கருதப்படுகின்றது.

இக்கல்வியின் நோக்கத்தை முதன் முதலில் கூறியவர் 'பெஸடலாரி' என்பவராவர்.இதன்படி கல்வியின் பணி குழந்தைகளிடம் அடங்கிக்கிடக்கும் ஆற்றல்களை வெளிக்கொண்டுவருவதாகும்.அத்துடன் கல்வியின் இறுதி நோக்கம் மாணவர்களிடையே நல்லொழுக்கத்தையும், நற்பண்புகளையும் வளர்ப்பதுடன் சமூகத்திற்கு பொருத்தமான நற்பிரஜை களை உருவாக்குவதாகும். இதனை உலகிற்கு முதலில் முன்மொழிந் தவர் கிரேக்க தத்துவஞானியான 'அரிஸ்டோட்டில்' என்பவராவார். அது போன்று 'வெறர்போட்' என்பவரின் கருத்துப்படி கல்வியின் உண்மையான கருத்து நல்லொழுக்கம் எனும் சொல்லுக்குள் அடங்குமென்பதாகும்.

அரிஸ்டோட்டில் இதுபற்றிக் கூறும் போது நல்லொழுக்கமுள்ள ஒரு மனிதன் தனது அறிவாற்றல்களால் பெற்றுக்கொள்ளும் மகிழ்ச்சி அனுபவங்களை தனது புலன்களால் நுகரும் மகிழ்ச்சி அனுபவங்களைக் காட்டிலும் உயர்ந்தவனாக மதித்து நடப்பான் என்றார்.

ஒழுக்கமானது பிறப்பினால் ஏற்படுவதில்லை.இதனாலேயே கவிஞர் கண்ணதாசன் " எந்தக்குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணிற் பிறக்கையிலே அவன் நல்லவனாவதும் , தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே" என்பது போல பெற்றோரின் வளர்ப்பு, வாழும் சூழல், கற்கும் பாடசாலை, பயிற்சி அனுபவங்கள், நண்பர்கள் என்பவற்றினூடாக ஒரு பிள்ளைக்கு ஒழுக்கம் அமையப்போகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு மாணவரும் தன்னை ஒழுக்கமுள்ளவராக மாற்றிக் கொள்ளும்போது அது ஒழுக்கமுள்ள பிரஜையாக, ஒழுக்கமுள்ள குடும்பமாக, ஒழுக்கமுள்ள சமூகமாக, ஒழுக்கமுள்ள நாடாக உருவாகின்றது.

எனவே ஒழுக்கம் நிறைந்த மாணவ சமுதாயத்தினை உருவாக்க சமயக்கல்வி அவசியமாகும். அத்தோடு பெற்றோர்கள்,குடும்பம்,சமூகம்,ஆசிரியர்கள் போன்றவர்களின் முன்மாதிரியை பின்பற்றுவதன் ஊடாக மாணவர்களின் ஒழுக்கத்தினை மேம்படுத்தலாம்.

இதனை இன்று இலங்கையிலுள்ள விகாரைகளில் அமைந்துள்ள பிரிவேனாக்கள், கிறிஸ்தவ சபைகள், அறநெறி பாடசாலைகள், குருகுலங்கள் ஸ்ரீராமகிருஸ்ண மிசன் போன்ற அமைப்புக்களும் தமது ஆன்மீக செயற்பாடுகள் மூலம் ஒழுக்க நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு பாடுபடுகின்றன. இன்று இயந்திர மயமக்கலானது மனித வலுவின் வேலையை பாரியளவில்குறைத்துள்ளது. எனவே மனிதனுக்கு எதிர்காலத்தில் ஓய்வு அதிகம். அதற்கேற்றவகையில் மாணவர்களுக்கு அதனை பயனுள்ளவகையில் எவ்வாறு போக்குவதென்பதுப்பற்றிய பயிற்சிகள் வழங்குவது அவசியம். இதனைச்செய்ய கல்விக்கூடங்கள் தவறுமேயானால் சமூதாயம் சந்திக்கவேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்படலாம்.

ஓய்வு நேரத்திற்கான கல்வியில் பயனுள்ள வேறு நற்செயல்களை உருவாக்க வேண்டும். ஆசிரியர்களின் உதவியுடன் இலக்கியம்,நாடகம், இசை, ஓவியம், கைப்பணிகள் போன்ற துறையில் ஈடுபாட்டை அதிகரிக்கலாம். நல்லொழுக்கமற்ற ஒரு மனிதன் அவன் மேதையாயினும் சமூகத்தோர் விரும்பத்தக்கவனாக இருக்கமாட்டான்.இன்று உலகில் காணப்படும் கெடுபிடிகள், பித்தலாட்டம் , ஏமாற்று கலப்படம், கொள்ளை, விபச்சாரம் போன்றவற்றிற்கு காரணம் ஒழுக்கமின்மையின் விளைவேயாகும். இவை இன்று பாடசாலைகள் தொடக்கம் சர்வ கலாசாலை வரை விரிவடைந்து உள்ளது. இவ்வொழுக்கமின்மையும், கீழ்படிவின்மையும் ஏற்படக் காரணம் ஆரம்பப்பாடசாலை முதல் ஒழுக்கம் சரிவர கடைப்பிடிக்காமையே ஆகும்.

எனவே பாடசாலைக் கல்வியின் நோக்கம் அறிவினைப் பெறுவது மட்டுமன்றி, நல்லொழுக்கம், நற்பண்புகள், என்பவற்றினூடாக சமூகத்திற்கு பொருத்தமான பிரஜையாக உருவாக்க வேண்டும் என்பதாகும். எனவே இவ்வனைத்து விடயங்களோடு பாடசாலைக்கல்வியும்.ஆசிரியர்களின் கருத்துக்களையும் பயன்தரும் வைரங்களாகப் பெற்று வாழ்வின் வசந்தங்களாக உருவாக்குவோமாக.

ஆக்கம்.
இரா. அபிலாசினி,
10 A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயம்

மலையகத்திற்கு
உயிராய்
உதயமாகினாய் ..!

உன்
வரவால்
வரம் பெற்றோம்
நாங்கள் !
கல்வி
இவ் மூன்றெழுத்தே
எம் சமூகத்தின்
சிந்தனை முகிழ்வுக்கு
முக்கிய காரணம்!

இதை வடிக்கும்
நீயே !
எங்களின்
அட்சயபாத்திரம்

உன்
உதயமே !
எம் சமூகத்தின்..
ஒளி ....!

ரா. கணகராஜ்

# நண்பனே

இன்று முதல் விழித்திரு
இறக்கும் வரை நன்மை செய்
பொறுமையை அகத்திற் கொள்
பொறாமையை அகற்று!

கல்வியை உயிரெனக் கொள்
கபடத்தை அலசிவிடு
மெய்மையை கரைத்துக்குடி
பொய்மையை துப்பிவிடு!

குருவை உள்ளளவும் நினை
தோல்வியைக் கண்டு தளராதே
உழைப்பை இலட்சியமாக்கு
உன் வாழ்வு உயர்வடையும் !

சி. எமோனா மியோரின்
தரம் - 10 A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருந்தோயா பொழிகிறது !

பச்சை நிற போர்வையில்
நவீன ஓவியன் தீட்டி விட்ட
வெள்ளை நிற ஓவியமாய் !

கற்பாறையை செதுக்கும்
கைதேர்ந்த சிற்பி போல்
வடித்து வைத்த
பளிங்கு சிலையாய் !

என்றோ ஓர் நாள்
வானிலிருந்து
மண்ணில் வீழ்ந்து நிலைத்துவிட்ட
மின்னல் கொடியாய் !
அழகிய குழந்தையின்
விழியிலிருந்து
வழியும்
கண்ணீர் முத்தாய் !

இமயத்தில் பெயர்த்தெடுத்து
இங்கு சிறை வைத்த
வெண்பனிக் கட்டியாய் !

மலையகத்துக்
குருந்தோயாவில்
நித்திய தவமாய் ஓர் நீர் வீழ்ச்சி
அழகாய் !
எழிலாய் !

ம. குமுதுமலர்
உயர்தரம்
கலைப்பிரிவு
இ.த.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் நுட்ப கல்வியும் தொழிற்பயிற்சியும்

நவீன விஞ்ஞான உலகமாகிய இவ் இருபத்தோராம் நூற்றாண்டில் உலகமே சுருங்கி கைக்குள் அடங்கிவிட்டது. தொழில் நுட்ப வளர்ச்சி, மருத்துவ வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி, உலகமயமாக்கல் போன்றவற்றால் பல முன்னேற்றங்களையும்அபிவிருத்தியும் உலக நாடுகள் கண்டு வருகின்றன. அதனால் அனைத்து நாடுகளும் அபிவிருத்தி பாதையை நோக்கி மிக வேகமாக செல்கின்றது. எனலாம். இவ்வாறான வளர்ச்சிக்கு காரணம் தொழில் நுட்பம் என்று கூறுதல் மிகையாகாது, உலகின் எங்கோ ஒரு மூலையிலுள்ள கிராமத்தை கூட தொழில் நுட்பத்தினால் அறியமுடிகின்றது. அன்று அனைவரும் தொழில்நுட்பத்தை கற்பதில் அதிகம் ஆர்வம் காட்டி வருகின்றனர்.இதனால் பலருக்கு பல நன்மைகள் ஏற்படுகின்றன.கல்வி கற்பதிலிருந்து தொழில் வாய்ப்பை பெற்றுக்கொள்ளும் வரை தொழில் நுட்பம் உதவுகின்றது. பொது மற்றும் பல்கலைக்கழக கல்வியை வலியுறுத்துகையில் தொழில்நுட்பம் மற்றும் தொழிற்பயிற்சியின் முக்கியத்துவம் காணப்படுகின்றது.

தொழில்நுட்ப கல்வியில் ஈடுபாடு கொண்ட மாணவர்களுக்கான தொழில் நுட்பம் சார்ந்த பயிற்சியையும், கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் பன்முகப்படுத்தலுக்கும், சுயதொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் அத்தியாவசியமான தொழில் நுட்ப அறிவையும், தேர்ச்சிகளையும் வழங்குவதை நோக்காகக் கொண்டு தொழில் நுட்ப கல்வி அறிமுகப்படுத்தப்பட்டன, இத்தொழில்நுட்ப கல்வி முறைக்கு பல்வேறு உதவிகள் கிடைக்கப்பெறுகின்றது. உதாரணமாக தொழில் நுட்ப கருவிகளை பெற்றுக்கொடுத்தல், கல்வி கூடங்களை அமைத்து கொடுத்தல். ஆசிரியர்களை நியமித்தல் போன்ற பல உதவிகள் கிடைக்கப்பெறுகின்றது. தனியார்துறைப் பயிற்சி நிறுவனங்களின் பயிற்சிகளின் தரம் மற்றும் அது தொடர்பான பயிற்சியை முன்னேற்றும் பொருட்டு அவற்றின் நடவடிக்கைகளை விரிவாக்கும் செயற்பாடுகளை மேம்படுத்துகின்றது. இலங்கை உயர் தொழில் நுட்பக்கல்வி நிறுவனம் மாணவர்களை டிப்ளோமா மட்டத்திலான கற்கை நெறிகளை பயிற்றுவித்தது. மற்றும் தொழில்நுட்பக்கல்வியிலும், தொழிற்பயிற்சி துறையிலும் உள்ள ஆசிரியர் பயிற்சி அபிவிருத்தியை முக்கியமாக கொண்டிருக்கின்றது.

தொழில்நுட்ப கல்வியிலும், தொழில் பயிற்சி துறையிலும், பயிற்சி பாடம் தொடர்பான அபிவிருத்தியில் முக்கிய ஈடுபாடு கொண்டியங்க வேண்டும். தொழில்நுட்ப கல்விப்பயிற்சியில் தேர்ச்சியுடையவர்களாய் தொழில்நுட்பப் பயிற்சி வழங்கப்படவேண்டும். தொழில் நுட்பப்பயிற்சி விதமான அபிவிருத்தியை அதிகரிப்பதன்மூலம் தொழில்நுட்ப பயிற்சியை முன்னேற்ற முடியும் தற்போதைய வியாபாரத்தை தரமுயர்த்துவதற்கு அதிக பங்களிப்பையும், வியாபாரத்தில் ஏற்படும் சவால்களையும், பிரச்சினைகளையும் தீர்ப்பதற்காக இக்கல்வி முறையும் பயிற்சிநெறியும் பெரிதும் உதவி வருகின்றது. கல்வி காலம் தொடக்கம் முதலீடு செய்து எதிர்காலத்தில் நன்மைபயக்கும் வரை உதவுகின்றது. எதிர்காலத் தேவைப்பாடுகளை ஈடுசெய்வதற்கான வழிகளையும் தொழில்நுட்ப கல்வி முறையில் பெற்றுக்கொள்ளமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்கால உலகில் ஆதிக்கம் செலுத்தக்கூடிய முதற்தர தொழில்நுட்பமானது பொறியியல், நுண்ணளவான தொழில்நுட்பம், கணனித் தொழில்நுட்பத்தில் பரவலான நுண்ணறிவு என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இத்துறைகளில் ஆதிக்கத்தினைப் பெற்றுக்கொள்வதற்கான போட்டி காணப்படுகின்றது. எதிர்கால தொழிற்சந்தையை விரிவுபடுத்து முகமாக பல்வேறு வேலைத்திட்டங்களை தொழில் நுட்ப தொழில் பயிற்சியிலிருந்து அறியலாம். இன்றைய மாணவர்களை எதிர்கால உலகப் பொருளாதாரத்தின் முக்கிய ஒரு பகுதியாகக்கருதித் தற்போதைய தொழில் நுட்ப கல்வி திட்டமிடல்வேண்டும். இல்லாவிடின் உலக ரீதியான சகல தொழில்களும் பல நாடுகளுடன் போட்டியிட்டு சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

எதிர்கால தொழிற்சந்தையை உலகமயமாக்கலும், கடல் கடந்து வியாபாரங்களை பகிர்ந்து கொள்ளவும் வினைத்திறன் மிக்க தொழில்களையும், தொழிலாளர்களையும் தோற்றுவிப்பதில் அதிக பங்களிப்பை தொழில்நுட்ப கல்வியும், தொழிற்பயிற்சியும் வழங்குகிறது. கல்வியை திட்டமிடுவதிலும், மூலவளங்களை ஒதுக்குவதிலும் இது உயர்ந்த முன்னுரிமையைப் பெற்றுத்தருகின்றது. அதிகளவான அந்நிய செலாவணியை பெறுவதில் தொழிற்பயிற்சி உதவுகின்றது. கல்விபயிலும் மாணவர்கள் வெறுமனே பாடப்புத்தகம் ரீதியான கல்வியை மட்டும் கற்காது. தொழில்நுட்பம் சார்ந்த கல்வியையும் கற்க வேண்டும். அப்போதுதான் கல்வியின் முழுமையான இலக்கை அடைய முடியும். இன்று தொழில்நுட்ப துறையில் ஈடுபட்டு பல சாதனை படைக்கும் மாணவர்களுக்கு அரசாங்கம் பல சலுகைகளை அளித்து வருவதை நாம் காணலாம். பாடசாலைக் காலங்கள்

தொழில்நுட்ப துறையில் ஈடுப்பட்டு சாதனை படைக்கும் வேலைவாய்ப்புக்களை பெற நேர்முகத் தேர்வுக்கு செல்லும் போது முன்னுரிமை அளிக்கப்படுவதையும் நாம் கண்கூடாக காண்கின்றோம். எனவே மாணவர்கள் யாவும் பாடத்தில் காட்டும் ஈடுபாட்டை தொழில்நுட்ப கல்வி செயற்பாடுகளிலும் காட்ட வேண்டும்.

உலக அபிவிருத்தி சார்ந்த செயற்திட்டங்கள் சார்ந்த தொழில்நுட்ப கல்வியும், தொழிற்பயிற்சியும் முதன்மை வகிக்கின்றது. தொழில் நுட்பக்கல்வியை பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்திருக்கின்றது. தொழில் நிலையில் ஏற்படும் பொதுவான பொருளாதார அபிவிருத்தியுடன் இணைந்து தொழில்நுட்பக்கல்வியும் முதலிடம் வகிக்கின்றது. இவ்வாறு அனைத்து செயற்பாடுகளுக்கும் தொழில்நுட்பகல்வியும் தொழிற்பயிற்சியும் பேருதவி செய்கின்றது எனலாம். நாட்டின் ஆக்கத்திற்காக மட்டுமே தொழில்நுட்பகல்வியை பயன்படுத்த வேண்டுமே தவிர அழிவிற்காக பயன்படுத்த கூடாது. எதிர்கால உலகை தொழில்நுட்ப கல்வியிலும், பயிற்சியினாலும் மட்டுமே அபிவிருத்திக்கு இட்டுச்செல்லலாமே தவிர வேறு எதனாலும் முடியாது. எனவே தொழில்நுட்ப கல்வியை சிறந்த முறையில் கற்று தேர்ச்சிப்பெற்று சிறந்ததொரு குடிமகனாக வாழ்வோமாக.

சு.மைதிலி
தரம் 12 A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் மண்சரிவுகளும் எதிர்கால நிலையும்

இலங்கையில் 2007 கால மண்சரிவுகளை இலங்கையின் மத்திய மலைநாட்டின் கிழக்கு பகுதிகளுக்கும், மலைநாட்டின் வடமேற்கு பகுதிகளுக்கும் பாதிக்கப்பட்டன.

01. நுவரெலியா - கண்டி பகுதிகள் ( புசல்லாவ )
02. இராகலை - கண்டி பகுதிகள் ( வலப்பனை ஹங்குரான்கெத)

நுவரெலியா, கண்டி சார்ந்த மலை பிரேதேசம் மலைநாட்டின் தென்மேல் பருவக்காற்றில் மழை பெறும் பிரதேசங்கள். இப்பிரதேசங்களின் அண்மைய காலநிலை மாற்றங்களுக்கான காரணிகள்.

01) கொத்மலை நீர்த்தேக்கம் அமைந்தமையும் வன அழிப்பும் ஆகும்.
02) நுவரெலியா, கண்டி வீதி அகலமாக்கியமை.
03) விளிம்பு நிலங்களில் குடியேற்றமும், முறையற்ற வடிகாலமைப்பும், கட்டிடங்களும், பயிர்ச்செய்கைகளுக்கும் மேற் கொண்டமை.
04) உயர்நில சேனைப்பயிர்செய்கை செய்தமை.
05) மண்ணின் தன்மை

- சீன அரசின் உதவியுடன் குத்துச்சரிவான நிலங்களுடாக செல்லும் வீதிகள். மண் பாரிய அளவில் கனரக இயந்திரங்களுடன் அகற்றியமை
- செங்குத்தான நிலம்
- மழை நீரும் பரந்த நீரை உறிஞ்சும் மண்ணும்,
- மண்ணின் நிறையும் சாய்வும்

காரணமாக பாறைப்படையின் மேல் நிலம் கழுவப்பட்டு அதன் தாக்கம் அதன் கீழுள்ள பிரதேசங்களை சேறு மற்றும் பாறைகளுடன் பாதிப்பினை ஏற்படுத்தியது. இதற்கு முறையற்ற வீதி அகலமாக்கல் பிரதான காரணமாகும். இந்த மண்சரிவுகள் இன்னும் பல வருடங்கள் நீடிக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இராகலை கண்டி வீதியில் டியனில்லை, வலப்பனை முங்வத்த, கும்பால்கமுவ, பதியபெலெல்ல, மதுரட்டை, ரந்தனிகலை நீர்த்தேக்கத்தில் தெற்கு மேற்கு பகுதிகள் அதிகளவு மண்சரிவுகளுக்கு உள்வாங்கியது. மண்சரிவில் பொதுவான அம்சங்கள் குத்துச்சரிவான இடங்களிலே ஏற்பட்டதும், பாறைப்படைகளில் பாறைகளோடு ஏற்பட்ட மண்சரிவு, மண்சேறு , மரங்கள் என்பவற்றை தாழ்நிலங்களுக்கு கொண்டு சென்றது 50மீ கொண்டதும் 1/ 4 கி.மீ நீளம் கொண்டதுமான அளவில் 50 க்கு மேற்பட்ட மண்சரிவுகள் ஏற்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக மண்சரிவுகளுக்கு பிரதான காரணங்கள்

01. இந்தோனேசிய பூகம்ப தாக்கம்

02. விக்டோரிய, ரந்தெனிகலை , ரந்தெம்பை நீர்த்தேக்கங்கள் அமைத்தமை.

03. விளிம்பு நில குடியேற்றம் (வீடுகள்)

04. விளிம்பு நில பயிர்ச்செய்கை:புகையிலை, சேனைப்பயிர்ச்செய்கை மேற்கொண்டமை.

05. நீரை உள்வாங்கும் மண்ணமைப்பும் , பாறை அமைப்பும் இருந்தமை.

06. தொடர்ச்சியான மிதமான மழைவீழ்ச்சி தொடர்ந்து ஏற்பட்டமை.

டியனிலை பாறைப்படையில் வடகிழக்கு பகுதி பெரிதும் சிதைவடைந்து அதனூடான அருவிகள் பாறை மண்ணை இலகுப்படுத்தி நிலம் பாரிய வெடிப்புக்களை ஏற்படுத்திய தோடு 2006 இன் இறுதியில் ஏற்பட்ட வெடிப்புகள் 2007 முற்பகுதியில் தொடர்ச்சியாக 50 எக்டயருக்கு மேல் நிலம் புதைந்து தொடர்ந்து கொண்டிருந்தது, இந்த பாரிய வெடிப்புகள் மண்சரிவுகள் பாரிய உயிர் சேதத்தையும் அழிவுகளையும் தடுத்து நிலம்பெரும் சமவெளியாக உள்ளதே காரணமாகும் எனலாம். இருப்பினும் தொடர்ச்சியான மழைவீழ்ச்சி ஏற்படுத்தும் நிலம் மிகப்பெரிய பாரிய அழிவுகளுக்கு முகங்கொடுக்க வேண்டிவரும்.

டியனில்லை மண்சரிவுகளுக்கான காரணிகள்

01) வடகீழ் பருவக்காற்றின் தொடர்ச்சியான மழைவீழ்ச்சி காணப்பட்டமை

02) பாறைப்படையில் அருகில் குடியேற்றமும், முறையற்ற பயிர்ச்செய்கையும் ஆக்கிரமிப்புகளும்

03) பிரதேச காடழிப்பு

04) இந்தோனேசிய பூகம்ப நிலை

05) மலையகத்தில் நிலநீர் சமனிலை மாறுதல், கொத்மலை விக்டோரியா நீர்த்தேக்கங்கள் அமைவு.

மண்சரிவுகள் ஏற்படப் போகும் இடங்களை அறிதல்

01) .இதற்கு முன்னர் மண்சரிவுகள் உட்பட்ட பகுதிகள். 1973 ம் ஆண்டு டியனில்லை மண்சரிவு 22 பேர் பலி.

02) அதிகளவான மழைவீழ்ச்சியும் மண் உறிஞ்சும் தன்மையும்

03) மரங்கள் சாய்வதும் மரங்கள் காய்ந்து போதலும்.

04) புதிய இடங்களில் ஊற்று நீர் வருவது அல்லது தொடர்ந்து வந்து கொண்டிருந்த ஊற்று நீர் வற்றிவிடல்

05) விலங்குகள்,பறவைகள் வழமைக்கு மாறாக ஒலி எழுப்புதல்

06) விளிம்பு பிரதேசம் மண்சரிவையும் அதனை தாழ்ந்த பகுதிகள் மண்சேறுகள் கற் பாறைகளில் மூடப்படல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக மண்சரிவின் தாக்கங்களை குறைக்க

01) இனங்கண்ட பகுதிகளை பாதுகாப்பு பிரதேசமாக்குதல்
02) மக்களை பொருத்தமான இடங்களில் குடியமர்த்துதல்
03) விளிம்பு நில பயிர்ச்செய்கையை தடைசெய்தல்
04) முறையான வடிகால் வசதியை ஏற்படுத்தல்
05) தேசிய வனமாக்குதல் காடுவளர்த்தல்

புஸ்ஸல்லாவ நகருக்கு அருகில் சிறந்த வடிகால் வசதி செய்தமை நகர மண்சரிவு தடுக்கப்பட்டது. இன்று மலையகத்தில் ஒரு சில பகுதிகளில் மாத்திம் மண் சரிவுகள் ஏற்பட காரணம் மனித நடவடிக்கையேயாகும்.

ஆங்கிலேயரால் தேயிலை பயிரிடப்பட்ட நிலங்களில் முறையான வடிகால் அமைப்பு சிறு வீதிகள் அமைப்பு வரண்ட நிலங்களில் பாதைகள் அமைப்பு வீடமைப்புகள் ஆங்கிலேயர் ஏற்படுத்திய தூர நோக்கம் கொண்ட திட்டம் மண்சரிவுகளை தடுத்தது. ஆனால் இன்று அரசு மண்சரிவுகளின் பின்பாவது தூரநோக்கம் கொண்ட திட்டங்களை அமுல்படுத்துவார்களா !!!

L.இராமச்சந்திரன் B.A. ( D.p ,.Ed)
நு/இ.த.ம.வி.
ஹல்கிரனோயா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்திரை சேகரிப்போம்

முத்திரை சேகரித்தல் நல்லதொரு பொழுது போக்கு முயற்சியாக அமைவதோடு, அறிவு வளர்ச்சிக்கும் பெருந்துணை புரிகிறது. தபாற் போக்குவரத்திற்கு பயன்படுத்திய முத்திரைகளே இவ்வாறு சேகரிக்கப்படுகின்றது.நாட்டின் அபிவிருத்தி நிகழ்ச்சிகளையும் சரித்திர முக்கியத்துவம்வாய்ந்த நிகழ்ச்சிகளையும் நினைவுகூறுத்துவதற்கான புதிய முத்திரைகள் வெளியிடப்படுவது வழக்கம்.முதல் நாள் உறை ஒன்றில் அன்று வெளியிடப்படும் புதிய முத்திரையை ஒட்டி, அது பயன்படுத்தியது என்பதற்கான தேதி அடையாளமிட்டு கொடுப்பது புதிய முறை வெளியீட்டு விழாவாக அமைகின்றது இத்தகைய முத்திரைகளும் பிற நாட்டு முத்திரைகளும் தனி மதிப்புக்கொண்டவை.இவற்றை மிக உயர்ந்த விலைக்கு விற்றலும் இயலும்.

போக்குவரத்து வசதி விருத்தியடையாத அக்காலத்தில் அரசர்கள் மாத்திரமே தமக்குக் கடிதம் எழுதினர். பண்டைய காலத்தில் கடிதம் திருமுகம் என வழங்கியது .முகத்திற்கு அளிக்கப்படும் மதிப்பு அக்கடிதத்திற்கும் அளிக்கப்பட்டமையினாலே கடிதம் திருமுகம் எனப்பட்டது.

அரசர் இத்திருமுகத்தை ஓலையில் எழுதி சுருட்டி அரசருக்கு இலட்சினை பொறித்து அனுப்புவர். அக்காலத்தில் கடிதங்கள் தூதுவர் மூலமே அனுப்பப்பட்டது. மேலை நாட்டில் அரச கடிதங்களை அனுப்ப அஞ்சலோட்டக்காரரை நியமித்தனர். அவர்கள் பல நாள் ஒடிச்சென்றே இக்கடிதத்தை உரியவருக்கு கொடுப்பர். அதன் பிறகு 1840 மே மாதம் 8 ஆம்திகதி முதன் முதலில் முத்திரை வழக்கிற் கொண்டுவரப்பட்டது.முத்திரை வெளிவந்ந அன்றே முத்திரை சேர்க்கும் பழக்கமும் ஆரம்பமானது.

இன்று எல்லா நாடுகளிலும் தபால் விநியோகம்,அரசாங்க நிருவாகம் ஆகிய கருமங்களில் முத்திரைகள் முக்கிய இடத்தை பெற்றுள்ளன. நம் பெற்றோருக்கோ உறவினருக்கோ வரும் கடிதங்களிலிருந்து முத்திரைகளை சிரமமில்லாமலே நாம் பெறலாம். உள்நாட்டு முத்திரைகளிலும் பார்க்க வெளிநாட்டு முத்திரைகளையும், மிக பழைய முத்திரைகளையும், அபூர்வமான முத்திரைகளையும் சேர்ப்பதே சிறந்ததாகும்.சிறுவர் பேனா நண்பர் மூலம் வேறு நாட்டு முத்திரைகளை பெறலாம். சில நாடுகளிலே முத்திரை சேகரிப்பதை பொழுது போக்காககொண்டவர்களுக்கென சில சங்கங்கள் அமைந்துள்ளன அவைகளில் அங்கத்தவராய் இருப்போர் தம்முடைய முத்திரையை பரிமாறிக்கொள்ளலாம். சில பெரிய நகரங்களிலே கிடைத்தற்கறிய முத்திரையை விற்பதற்கான சில நிலையங்கள் உள்ளன. அவற்றிலிருந்து முத்திரை பெறலாம்.

முத்திரைகளை சேகரிக்கும்போது கடித உறைகளில் ஒட்டபட்டிருக்கும் முத்திரையை பிரித்தெடுக்க வேண்டியிருக்கும் இதனை மிகவும் அவதானமாய் செய்தல் வேண்டும் முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையின் மூலையை நீரிற் சில நிமிடம் ஊற வைப்பின், முத்திரை உறையிலிருந்து தானாகவே கழன்று விடும். ஒரு சில முத்திரைகளை ஊற வைத்தால் முத்திரையும் ஊறிவிடும் அதற்கு ஈரமான ஒற்றுத்தாள் மீது இத்தகைய முத்திரையை படியவைத்து சில மணி நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டப்பின் அவற்றை பிரித்தெடுக்கலாம்.1918 இல் அமெரிக்க ஐக்கிய நாடுகள் முதன் முதலாக விமான தபால் முத்திரையை வெளியிட்டது. சில நேரத்தில் முத்திரை தவறாக அச்சிடப்படும் ஒருசமயம் பறக்கும் விமானம் தலைகீழாக தவறி அச்சிடப்பட்டது. அது விற்கப்பட்டபின்பே அத்தவறு அறிய வந்தது. அந்த பிழையான முத்திரை முத்திரை சேகரிப்பவரிடையே இன்று பெரும்மதிப்பு பெற்றுள்ளது. 1856 ஆம் ஆண்டு கயானா எனும் இடத்திலும் இத்தவறு நடைபெற்றது. ஆனால் முத்திரை சேகரிக்கும் ஆர்வமுள்ளோர் அதற்கு பெருந்தொகை பணங்கொடுத்து வாங்க முன் வந்தனர். இன்று அதன்பெறுமதி 15000 பவுண் ஆகும்.

சேகரித்த முத்திரைகளை நேர்த்தியாக ஒழுங்கு படுத்திப் பாதுகாப்பாக வைத்திருத்தல் அவசியம்.அல்லாவிடின். நமது முயற்சியெல்லாம் வீணாகிவிடும்.

முத்திரைகள் ஒட்டி பாதுகாத்தல் நன்று. நாம் வீணே ஓய்வு நேரத்தை கழியவிடாது இவ்வாறு முத்திரை சேகரித்தல் என்பவற்றில். கழிக்கலாம் இதனை நம் ஆன்றோர் 'அவப்பொழுதிலும் தவப்பொழுது நன்று' எனக் குறிப்பிட்டுள்ளனர்.இன்று முத்திரை பல வடிவத்திலும், பல வண்ணங்களிலும் பல்வேறு விவரங்கள் காட்டும் வகையிலும் வெளிப்படுகின்றன. அவற்றை சேகரிப்பதால் வரலாறு. புவியியல்,பெரியோர் சம்பந்தமான விடயம் என்பனவற்றை ஓரளவு அறிந்து கொள்ளலாம். நம் நாட்டு விபரங்கள் மாத்திரமின்றி பிறநாட்டு விபரங்களையும் அறியலாம். எனவே அப்பொழுது போக்கு முயற்சி பொது அறிவையும் வளர்க்கும் எனவே எல்லோரும் ஓய்வு நேரத்தை வீணாக்காமல் நல்ல அறிவு தரும் நேரமாக கருதி இவ்வோய்வை கழிக்க வேண்டும்.

J.தர்சிகா
11 C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி வளர்ச்சியில் இணையத்தின் பங்களிப்பு

நாம் வாழும் இவ் உலகமானது 21ம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைத்துள்ள இக்காலகட்டத்தில் நவீன தகவல் தொழில் நுட்பமானது மின்னல் வேகத்தில் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்றது. ஆதிகாலம் இருந்து இம்மண்ணில் நவீனமயமான யுகம் பிறந்துள்ளது. இன்றைய பெரும்பாலான சமுதாயம் தகவல்தொழில்நுட்பத்தால் விருத்தியடைந்துள்ளன. கைத்தொழில் புரட்சிக்கு அடுத்ததாக தகவல் புரட்சியே அமைகின்றது. இத்தகவல் யுகத்தின் பிரதான சாதனம் இணையம் என்றால் அது மிகையாகாது.

இணையமானது ஒரு வல்லரசின் தேவைக்காக பிறந்தது. இது உலக மயமாகும் சந்தையைப் பின்தொடர்ந்து உலகத்தில் பரவியது. இது தகவல்தொழில்நுட்பம், தொலைத்தொடர்பு என்கின்ற இரு இராட்சத தகவல் தொழில்நுட்பத் தொழில் துறைகளும் கைக்கோர்த்து கொண்டதால் உருவானது. மனித இனத்தின் முதல் பன்மொழி ஊடகம் இணையமாகும்.ஒரு உலக மக்களின் சொத்து என்பதனால் புதிய புதிய சேவைகளை ஆராய்ச்சியாளர்கள் காலத்துக்குகாலம் அறிமுகப்படுத்திக் கொண்டிருப்பார்கள் என நம்பப்படுகின்றது. தமிழில் குறுகிய காலத்தில் வளர்ச்சியடைந்த ஊடகம் இணையமாகும். எமக்கு இணையம் மிக உதவியாக உள்ளது. கணப்பொழுதில் பல விடயங்களை அறிய முடிகின்றது. இலகுவாகவும், விரைவாகவும் நம்மால் செயற்படமுடிகின்றது. இணையத்திலிருந்து பலவகையான சேவைகளை பெற்றுக்கொள்ளக் கூடியதாய் இருக்கின்றது.

இணையத்தின் இன்றைய வளர்ச்சி ஐந்து ஆண்டுகளுக்கு முன் பெரும்பாலோரினால் எதிர்பார்க்கப்படவில்லை கணிப்பொறி துறையிலும் தொலைத்தொடர்பு துறையிலும் ஏற்பட்ட தகவல்தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக உலகின் பல பாகங்களில் இருந்தும் வியத்தகு பல முன்னேற்றங்கள், பல நூதன சேவைகள் உருவாகி வருகின்றன, செய்தி பரிமாற்றம், கல்வி, வணிகம், சுற்றுலா, தொலைத்தொடர்பு, நூலகம், அருங்காட்சியகம், விளையாட்டுக்கள், விவாதங்கள், சினிமா போன்ற பல்வேறு பணிகளுக்கும் பொழுதுபோக்குக்கும் இணையம் இன்று இன்றியமையாத சாதனமாக வளர்ந்து வருகின்றது.

உலகம் முழுவதிலும் உள்ள ஒரு குறிப்பிட்ட இனத்தவரை அல்லது ஒரு குறிப்பிட்ட விடயங்களில் ஒற்றுமை உள்ளவர்களை இணைக்க இணையம்போல் ஒரு ஊடகம் இதுவரை வாய்த்ததில்லை. இது ஒரு வித்தியாசமான ஊடகம் புத்தகங்கள் ஒரே சமயத்தில் பல மொழிகள் பேசுவதில்லை, அதுப்போல் ஒரு குறிப்பிட்ட அலைவரிசை ஒரே சமயத்தில் பல மொழிகள் பேசவில்லை ஆனால் ஒரு குறிப்பிட்ட வலையகம் ஒரே சமயத்தில் பல மொழிகளை பேச முடியுமானது ஓர் சிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகமே இணையம். இன்று இனம் சார்ந்து மட்டுமே பேசப்படும் ஆயிரக்கணக்கான மொழிகளில் தமிழும் ஒன்று. பல நாடுகளில் பேசப்பட்டாலும் தமிழர்களால் மட்டுமே பேசப்படும் மொழியாகும். இது ஆங்கிலம், ஸ்பானிஸ் போல பன்னாட்டுத் தகவல் ஊடகம் அல்ல. தமிழை ஒத்த மொழிகள் விரைவில் பட்டுப்போய்விடும் என்றாலும் தமிழ் இனி சாகும் என்ற அவநம்பிக்கை ஊட்டப்பட்டது.

தமிழ் புதிய தலைமுறைகளால் கைவிடப்பட்டு பொருண்மிய வாழ்க்கைக்கு, ஆங்கிலக் கலாசாரத்திற்குத் தமிங்கிலம் என சூழல் மாற்றம் இருக்கும் என கூறப்பட்டது. இப்போது தமிழாய் இனி உயிர்ப்புடன் இயங்க முடியாதென்பதை சொல்ல தமிழ் மொழியினர் தயங்குவதில்லை. ஆனால் திடீரென இணையம் அந்த அவநம்பிக்கைகளிற்கு முகத்தில் அறைந்தாற்போல பதில் சொல்ல ஆரம்பித்திருக்கின்றது. இன்று வீட்டுக்கு வீடு இணையம் வந்து விட்டது. இந்த வேகத்தில் தமிழ்மொழியும் வளர வேண்டுமெனின் தமிழ் கணனிமயப்படுத்தல் வேண்டும். எல்லோரும் புரிந்து கொள்ளகூடிய விதமான கணனி தமிழ் உருவாவது அவசிமானது.

**இணையம் மூன்று விதமான தகவல் தொடர்புமறைகளை ஒருங்கே கொண்டுள்ளது.**

01) இரு தனிநபர்களுக்கிடையே மட்டும் நடக்கும் தனிநபர் நிலைப்பட்ட தொடர்புகளா. உதாரனம் - மின் அஞ்சல்

02) ஏதோ ஒரு வகையில் ஒன்றுபட்டவகைளிற்குள் நடக்கும் ஒரு குழுநிலைப் பட்ட தொடர்புகள். உதாரணம் மின் அஞ்சல், செய்தி குழுக்கள், அட்டவணைகள்

03) ஒரு தனி நபர் அல்லது நிறுவனம் தகவல் ஒன்றை பெறுவதற்காக நடத்தும் வெகுசன ஊடகங்கள் உதாரணம் வலையங்கள், மின்அஞ்சல், மின் இதழ்கள்

மேற்கண்ட 3 அடிப்படை தகவல் தொடர்பிலும் வளமாக கையாளப்படுகின்றதோ அம்மொழியை நிகழ்கால மொழி, உயிருள்ள மொழி, வளரும் மொழி ஆகும். மொழியின் வளர்ச்சியும் இரும்பும் கூட தொழில் நுட்பத்தின் கரங்களில் சிக்கியுள்ளது.தகவல் தொழில் நுட்பத்தேவையை மொழிக்காக நிறைவேற்ற முடிந்திருக்கின்ற வரலாறு உள்ளது அது தான் கணித தமிழ் வளர்சசி ஆகும்.

20 ம் நூற்றாண்டின் தமிழ் வளர்ச்சியின் திருப்பத்திற்கு தமிழும் கணிப்பொறி நுட்பமும் கை கோர்த்து கொண்டமை அற்புதமான நிகழ்வாகும் . ஆரம்பத்தில் கல்வெட்டிலும், ஓலையிலும் இருந்த தமிழை அச்சிட அச்சுப்பொறி கண்டுப்பிடிப்பு உதவியது. இவற்றோடு தொழிநுட்பம் வந்தது. தமிழ் இந்நூற்றாண்டில் கணனி நடைமுறைக்கு வந்தது. தற்போது உலகளாவிய ரீதியில் ஆங்கிலத்தை போன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழையும் கணிப்பொறியில் பயன்படுத்த குறியீட்டு முறையும், விசைபலகையும் தரப்படுத்தப்பட்டுள்ளதால் தமிழை இணையத்தில் பயன்படுத்துவதிலிருந்து முக்கிய தடை நீங்கியது. இன்று உலகம் முழுவதும் தமிழ் மென்பொருள் தயாரிப்பாளர்கள் வகை வகையான மென்பொருட்களை வெளியிடுகின்றனர்.

வளர்ந்து வரும் சமுகம் சூழலுக்கு ஏற்ப தமிழர்களும் கணிப்பொறி படிப்பை கற்றுக்கொள்ள வேண்டி இருக்கின்றது. மற்றும் அறிவியல், மருத்துவத்துறையில் தமிழ் சொற்கள் இல்லாமல் போய்விட்டன. இதற்கு காரணம் புதிய தொழிநுட்பம் அறிமுகமாகும் போது அதற்கான கலைச்சொற்கள் அறிமுகப்படுத்த படாததாகும்.

கணிப்பொறித்துறையில் புதுப்புது கருவிகளும், கணிப்பொறியில் பயன்படுததப்படும் தொழில்நுட்ப வார்த்தைகளும் தமிழ் சொற்களை உருவாக்கி கணித தமிழ் சங்க வெப் தளத்தில் அறிமுகப்படுத்தி இருக்கின்றமை. இப்படியாக மாதம் 200 சொற்களையாவது அறிமுகம் செய்யவுள்ளமை. தமிழ்மொழி வளர்ச்சியின் ஒரு முக்கியம் வாய்ந்த நிகழ்ச்சியாக இன்று தென்னகத்தில் உள்ள கணிப்பொறி விருத்திக்கான நிலையம் ( C DACI CENTRE FOR DEVELOPMENT OF ADVANCED COMPUTING ) அலுவலகப் பயன்பாட்டுக்கான தமிழ் மென்பொருள் தொகுதியொன்றை வெளியிட்டுள்ளமை குறிப்பிடலாம்.

தமிழ் நெட் 99 வகுத்துள்ள நியமனத்திற்கேற்ப இம்மென்பொருள் தயாரிக்கப்படடுள்ளது. எழுத்துப்பிழை பரிசீலனை செய்யும் சாதனம் (SPELLCHECKER) அகராதி, மின்னஞ்சல் ( E MAIL ) கொண்டதாக இம் மென்பொருள் தயாரிக்கப்பட்டுள்ளது. தமிழ் கனிமொழிகள் தமிழ் ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிக்கட்டளைகளையும் ஒரே சமயத்தில் ஏற்றுக்கொள்ளும். டிஜிட்டல் யுகத்திற்கு தயாராகி விட்டது எங்கள் தமிழ் எங்கும் மங்கினாலும் இங்கு மங்காது பொங்கி ஒலிக்கும் தமிழ் என்ற நம்பிக்கையைப் பகரும் வாக்கியத்துடன் வெளியாகியுள்ளது கொழும்புப் பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து உருவாகி உள்ள இணையத்தளம். இவ்விணையத்தளம் பல புதிய தகவல்களுடன் வெளி வந்திருக்கின்றது. இந்த இணையத்தளம் நாளைய சந்ததியினரிற்காகவும் தேசமெங்கும் வியாபித்திருக்கும் தமிழர்களிற்காகவும் தகவல் தரும் அரசியற் கலப்பற்ற ஒரு தளம் எனத் தெரிவிக்கப்படடுள்ளது.

இத்தளத்தில் யாழ்ப்பாண வரலாறு , ஊர்களின் சிறப்புகள், தலங்களின் சிறப்புகள், அறிஞர்கள் , புத்திஜீகள் பற்றிய தகவல்கள் என பல உள்ளடக்கப்பட்டுள்ளன. இலங்கை தமிழர்கள் தொடர்பான செய்திகளை இன்று தினசரி வெளியிடும் வெப்தளமாக தமிழ் நெட் உள்ளது. கடந்த சில வருடங்களாக ஆங்கிலத்தில் மட் டும் வெளியாகிய இத்தளத்தின் செய்திச் சேவையில் இப்போது தமிழ் மொழி மூலமான பரீட்சார்த்த செய்தி சேவையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. இலங்கையில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் பிரபலமான இத்தளம் http://



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.tamilnetcom.tamil என்ற முகவரியில் உள்ளது. செய்தி சேவைகளை பொருத்தமற்றிய தமிழ்நெட் ஒரு முக்கிய ஆகும்.

ஓலைச்சுவடிகள் வளர்ந்த தமிழ் இன்று தகவல் தொழிநுட்ப வளர்ச்சியின் உச்சக்கட்டமாகவுள்ள இணையத்தில் வளரத் தொடங்கியுள்ளது. இணையத்தின் செயற்பாடானது ஆசியாவிலுள்ள ஏனைய மொழிகள் அனைத்துடன் போட்டி போடக் கூடியளவிற்கு முன்னேறியுள்ளது.இதற்கான பங்களிப்பை இந்தியா., சிங்கபூர், மலேசியா, இலங்கை ஆகிய நாடுகளில் வாழும் தமிழர்களுடன் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களும் செய்துள்ளார்கள். தமிழ் சம்பந்தமான பத்திரிகைகள், சஞ்சிகைகள், செய்திதாள்கள், சினிமா, இலக்கிய ஆய்வுகள், ஆவனப்படுத்தப்படல், அரசியல் ஆய்வுகள், மென்பொருட்கள் என்பன இணையத்தில் தாராளமாக கிடைக்கின்றன.

பத்திரிகை, சஞ்சிகைகளை இணையத்தில் வெளியிடப்படுகின்றது. இலங்கை,இந்தியா,மலேசியா,சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் பத்திரிகை, சஞ்சிகை இணையத்தின் மூலம் வெளியாகின்றன.மின்சஞ்சிகைகளின் வரவுதான் தமிழ் இலக்கிய பரப்பில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. தமிழ் அகராதிகள், கலைச்சொற்தொகுதி, சுரக்க சொற்கள், நிகண்டுகள்,தமிழ் ஆவணகாப்பகங்கள் உருவாக்கப்படுகின்றன. பன்னாட்டு தமிழ் உறவை வேறு ஊடகங்கள் மூலம் சாத்தியப்படுத்த முடியவில்லை. ஆனால் மகத்தான வியூகங்கள் இல்லாமல் இணையம் சாதிக்கின்றது.இணையத்தின் மூலம் தமிழ் மட்டுமல்லாது உலகமும் வளர்ந்துள்ளது.இணையத்தின் வளர்ச்சியினை அடுத்த ஐந்து ஆண்டுகளின் போது மேலும் எந்த உச்ச நிலையை எய்தும் என அறுதியிட்டு கூறமுடியாது.

தொகுப்பு மா.மலர்மணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவை அறுபதில் ஆரம்பபிரிவு

1999ஆம் ஆண்டு முதல் தேசிய மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் ஆரம்பக் கல்வி பாடவிதானம் பல்வேறு விஷேடப்பண்புகளை தன்னகத்தே கொண்டுள்ளது. இதன்படி, ஆரம்பக்கல்வி பின்வருமாறு மூன்று நிலைப்படுத் தப்பட்டுள்ளது.

முதன்மை நிலை 1 - தரங்கள் 1,2

முதன்மை நிலை 11 தரங்கள் 3,4

முதன்மை நிலை 111 - தரம் 5

இந்நிலைகளில் பாடத்துறையானது நான்காக வகுக்கப்பட்டுள்ளது. அவையாவன.

1. மொழி 2. சமயம்
3. கணிதம் 4. சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

தாய்மொழியுடன் முதன்மை நிலை ஒன்றில் வாய்மொழி ஆங்கிலமும், முதன்மை நிலை இரண்டில் முறைசார் ஆங்கிலமும், இரண்டாம் தேசிய மொழியும் (தமிழ்/சிங்களம்) கற்பிக்கப்பட வேண்டும்.

மாணவ மையக் கல்வி முறைக்கேற்ப மூன்று பிரதான செயற்பாடுகளில் கற்றல் - கற்பித்தல் செய்முறை மேற்கொள்ளப்பட வேண்டும்.

1. விளையாட்டுக்களும் விநோத செயற்பாடுகளும்
2. செயற்பாடுகள்
3. எழுத்து வேலைகள்

யாவருக்கும் கல்வி என்ற நோக்குடன் ஒவ்வொரு முதன்மைநிலை இறுதியிலும் அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளில் பிள்ளைகள் பாண்டித்தியம் பெறுதலை உறுதிப்படுத்துதல்.

கல்வி தொடர்பான தேசியக் குறிக்கோள்களை அடைவதற்கான அத்தியாவசியமான அடித்தளம் பின்வருமாறு காணப்படுகிறது.

01) தொடர்பாடல் தகைமைகள்

1. எழுத்தறிவு
2. எண்ணறிவு
3. சித்திரவறிவு

02) சூழல் தகைமைகள்

1. சமூகச்சூழல்
2. உயிரியற் சூழல்
3. பௌதீகச் சூழல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03) ஒழுகலாறு சமயம் தொடர்பான தகைமைகள்

04) ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தலும், விளையாட்டுத் தகைமைகளும்.

05) "கற்றலுக்காக கற்றல்" தொடர்பான தகைமைகள்

மேற்கண்டவாறு கட்டமைப்புடன் தேசிய மட்டத்தில் காணப்படும் ஆரம்பக்கல்வி இராகலை தமிழ் மகா வித்தியாலத்தில் அமுலில் உள்ளது. 2007ஆம் ஆண்டில் ஆரம்பப்பிரிவில் 13 வகுப்புகள்-

| | |
|---|---|
| தரம் -1 | 3 வகுப்புகள் |
| தரம் -2 | 3 வகுப்புகள் |
| தரம் -3 | 3 வகுப்புகள் |
| தரம் -4 | 2 வகுப்புகள் |
| தரம் -5 | 2 வகுப்புகள் |

காணப்படுகின்றன.

500 ற்கும் மேற்பட்ட மாணவர்கள் இவ்வகுப்புகளில் கற்கின்றனர். 9 பயிற்றப்பட்ட ஆசிரியர்களும், தேசிய கல்வியற் கல்லூரி கட்டுறு பயிலுனர்களும் கற்பித்தலை மேற்கொள்கின்றனர்.

ஏற்கனவே, நாம் நோக்கிய பாடவிதானத்தை இப்பாடசாலையில் அமுல்படுத்தும் போது ஆசிரியர்கள் எதிர் நோக்கும் சவால்கள் எண்ணிலடங்காதவை. தரம் ஒன்றிற்கான மாணவர் அனுமதியிலிருந்து அச்சவால்களுக்கு ஆசிரியர்கள் முகம் கொடுக்கின்றனர்.

பிள்ளை விரும்பும் பாடசாலையில் கற்கலாம் என்ற அடிப்படையில் இப்பாடசாலைக்கான ஏந்துப் பிரதேசமான இராகலை தோட்டம், ஸ்டபோர்ட் தோட்டம், இராகலை நகர் ஆகிய இடங்களைச் சேர்ந்த மாணவர்களுடன், லிடஸ்டேல், ஹரஸ்பெத்த, சென்லியனாட்ஸ், ஆள்கரனோயா, எமஸ்ட் போன்ற இடங்களிலுள்ள மாணவர்களும் தரம் ஒன்றில் அனுமதி பெறுகின்றனர். இதன் காரணமாக 40 ற்கும் மேற்பட்ட பிள்ளைகளைக் கொண்டதாக இரு சமாந்தர வகுப்புகள் அமையப் பெறுகின்றன. கடந்த 3 வருடங்களில் இத்தொகை 50 தையும் தாண்ட வகுப்புகள் 3 சமாந்தர வகுப்புகளாக மாற்றம் பெற்றுள்ளன.

ஆரம்பப்பிரிவின் இறுதிக்கட்டத்தில் அதாவது தரம் ஐந்தில் மாணவர் எதிர் நோக்கும் புலமைப்பரிசில் பரீட்சை என்பது இன்று பலரின் கவனம் கவர்ந்த ஒன்றாக உள்ளது. இப்பரீட்சை தொடர்பான பிரமாணங்களில் கூறப்பட்டுள்ளன. இருவிடயங்களை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது. இப்ரீட்சைக்கான விடயப்பரப்பு தரம்-01 தொடக்கம் தரம் - 05 இன் இரண்டாம் தவணை வரையான பாடப்பரப்பு. இப்பரீட்சையில் தேசிய மட்டத்தில் குறிப்பிட்டளவு மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குதல், பிரசித்திப்பெற்ற பாடசாலைகளில் அனுமதி பெறல் என்பவற்றை நோக்காக கொண்டது.

எமது பாடசாலையைப் பொருத்தளவில் புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் நடைப்பெற்ற பரீட்சைகளின் பெறுபேறு வருமாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆண்டு | சித்தியடைந்தோர் |
|---|---|
| 2003 | 08 |
| 2004 | 07 |
| 2005 | 02 |
| 2006 | 04 |

மேற்படி பெறுபேறுகள் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் கூறப்படினும் மாணவர்களுக்கேயுரிய தனிப்பட்ட திறன்கள், வெட்டுப்புள்ளி என்பனவும் பெறு பேறுகளில் தாக்கம் செலுத்துகின்றதை மறுக்க முடியாது. தரம் 01 தரம் 04 வரையில் சாதாரண பிள்ளைகளாக இருக்கும் மாணவர்கள் தரம்-05 இல் அடியெடுத்ததும் பெற்றோர், பாடசாலை, சமூகம் என்பவற்றால் அதிக அழுத்தத்திற்கு உட்படு கின்றனர். திடீரென சுமத்தப்படும் சுமையால் மாணவர்கள் இப்பரீட்சைப்பற்றிய பயம், கசப்புணர்வு என்பன ஏற்பட்டு பெறுபேற்றில் வீழ்ச்சியை தருகின்றனர். இக்குறை பாடுகள் கலையப்படுவதற்கான நடவடிக்கைகள் தற்போது படிப்படியாக முன்னெடுக்கப்படுகின்றன.

பெற்றோர் பாடசாலையுடன் கொண்டிருக்கும் தொடர்பு ஆரம்ப பிரிவைப் பொருத்த வரையில் சிறப்பானதாக உள்ளது. பெற்றோருடனான கூட்டங்கள், சிரம தான நிகழ்வுகள் என்பன வெற்றிகரமாக நடைபெறுவதும், பாட அலகுகளின் போது தேவைப்படும் உதவிகளை வழங்கும் பெற்றோர்கள் என பெற்றோரும், பாடசாலையும் நெருங்கிய தொடர்புடையோராகக் காணப்படுகின்றனர்.

அதுமட்டுமன்றி, கோயில், தேவாலயம், பள்ளிவாசல், விகாரை என சகல வழிபாட்டுத் தலங்களுடனும் ஆரம்பப்பிரிவு மாணவர்கள் தொடர்புபட்டுள்ளனர். அத்துடன் இராகலை, லிடஸ்டேல் போன்ற தோட்டங்களில் உள்ள தொழிற்சாலை களும் மாணவரது கற்றலுக்கு துணை புரியும் நிலையில் உள்ளன.

புறக்கிருத்திய செயற்பாடுகள் என நோக்கும் போது, 2001 ஆம் நடைபெற்ற கலைவிழா, 2004ஆம் ஆண்டு நடைப்பெற்ற சிறுவர் தினம், 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற சிறுவர் ஆக்கக் கண்காட்சி என்பனவும், 2003 ஆம் ஆண்டு தரம்-02, தரம்-03 வகுப்பு மாணவர்களின் ஆக்கங்களைக் கொண்ட கையெழுத்துப் பிரதிகள் வெளி யிடப்பட்டமை என்பவற்றைக் குறிப்பிடலாம்.

நுவரெலியா மாவட்டத்தின் பல பிரபல்யமான பாடசாலைகளோடு ஒப்பு நோக்கி இராகலை தமிழ் மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவு பின்னடைவான நிலையில் இருப்பதாக கருதப்பட்டாலும், ஏலவே நாம் நோக்கிய ஆரம்பக்கல்வி பாட விதானத்தை முன்னெடுத்துச் செல்வதில் அதிகளவு மாணவர்கள் இடப்பற்றாக்குறை, நீர்வசதிக் குறைபாடு வலப்பனை வலயத்திற்கு சாபக்கேடாய் உள்ள தகவல்கள், செயலமர்வுகள் தாமதமாக வந்துச்சேர்தல், வழிகாட்டியாக உதவ ஆசிரிய ஆலோசகர் இன்மை போன்ற இன்னோரன்ன சவால்களை சந்தித்து, எதிர்கால சந்ததியின் நலனைக் கருத்திற் கொண்டு தம்மால் இயன்ற பணியை நிறை வேற்றிக் கொண்டுள்ளது ஆரம்பப்பிரிவு. எதிர் காலத்தில் பற்பல வெற்றிகளை பெற்று சிறப்பான கல்வி வளர்ச்சிக்கு உறுதியான அடித்தளத்தை ஆரம்பப்பிரிவு அமைத்துக்கொடுக்குமென நம்பிக்கை கொள்வோம்.

S. யோகராணி (ஆசிரியை
நு/வ/இராகலை த.ம.வி.
ஆள்கரனோயா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்கள் அமைதியின்மை

இளைஞர்கள் ஏன் அமைதியின்றி செல்கின்றார்கள் என்ற காரணத்தை விளக்க, இவர்கள் புறக்கணிக்கப்பட்டு விரக்தி நிலைக்கு இட்டுசென்று தாக்குதல் நடத்த வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு அதன் இறுதி வெளிப்பாடாகவே வன்முறை அரசியலை அவர்கள் தேர்ந்து எடுத்துள்ளனர். என்ற வரிசைக்கிரமத்தின் அடிப்படையில் அமைதியின்மைக் காரணத்தை விளக்கலாம். இதன் வெளிப்பாடாகவே இலங்கையில் 1990ம் ஆண்டு இளைஞர்கள் ஏன் அமைதியின்றி செல்கின்றார்கள் என்பதை ஜனாதிபதி ஆணைக்குழு ஆராய்ந்தது.

கல்விக்கும் தொழில் வாய்ப்பிற்கும் இசைவு காணப்படாமை, இலங்கையில் வருடா வருடம் சுமார் ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் (5,50 000) மாணவர்கள் கல்விப் பொதுத்தராதர சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். இவர்களில் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்துக்கு (1,50 000) மேற்பட்டோர் கல்விப் பொதுத் தராதர உயர்தரத்திற்கு சித்தி பெறுகின்றனர். மிகுதி நான்குஇலட்சம் மாணவர்கள் சுய முன்னேற்றத்திற்காகப் பிற வழிகளை நாடுகின்றமை, மிகுதி மாணவர்கள் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டோர் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி இதில் 50 000 மேற்பட்டோர் பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கப் படுகின்றனர். இவர்களில் சுமார் 16 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பல்கலைகழகத்திற்கு உள்வாங்கப் படுகின்றனர். இதன்படி மிகுதிப் பேர் நிறைவேறாத ஆசைப்படி விரக்தியடைந்து வெளியேறுகின்றனர். மேலும் பல்கலைகழகம் சென்று பட்டப்படிப்பை முடித்து விட்டு சமூகத்திற்குள் நுழையும் போது தகுதியான வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய திறன் அரசாங்கத்திற்கு இல்லாமையினால் இளைஞர்கள் மனமுடைந்து விரக்தி அடைந்துள்ளனர். இவ்வாறு சமூகத்தில் பல மட்டங்களிலும் விரக்தி அடைந்த குழுவினர் தோன்றுகின்றனர். பாராளுமன்றத்தில் தமது கோரிக்கைகள் பூர்த்தி செய்யப்படாததை உணர்ந்த இவர்கள் பாராளுமன்ற அரசியலுக்கு எதிரான வன்முறையைப் பிரயோகிக்க முயல்கின்றனர். இவ்வளவுக்கும் காரணம் என்னவெனில் இலங்கை கல்வி முறையில் தொழில் விருத்திக் கல்வி புகுத்தப்பட்டமையாகும். உதாரணமாக ஆங்கில மொழி பேசுகின்றவர்கள் சிங்களமும் தமிழும் பேசுகின்ற பெரும்பான்மை இளைஞர்கள் எப்போதும் வீழ்ச்சியடைகின்ற அதிகாரத்தைக் கொண்டுள்ளனர். தனியார்துறை நிறுவனங்களில் வேலை செய்வதற்கு ஆங்கிலத்தில் தகுதி இல்லாததைக் காரணம் காட்டி கிராமப் புற இளைஞர்கள் புறக்கணிக்கப்படுகின்றமை.

சமூக ஏற்றத்தாழ்வு, வளப்பகிர்வு திட்டமிட்ட குடியேற்றங்கள், இனப்பிரச்சினை போன்ற காரணங்களும் இளைஞர்கள் அமைதியின்றி சென்றமைக்கு காரணமாக உள்ளது, என்றுதான் கூறவேண்டும். அடக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களே இயக்க நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றமை வரலாற்று ஆய்வுகளின் பொதுவான அபிப்பிராயமாகும். இதைப்போன்று தமிழ் இளைஞர்கள் வட கிழக்கில் ஈழ கோரிக்கையை முன்வைத்து ஆயுதம் ஏந்தி போராடுகின்றமையை தென் மேற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள இளைஞர்கள் தாய் நாட்டைப் பாதுகாக்க போராடுகின்றமை. இதனால் யுத்த நடவடிக்கைகளில் இளைஞர்,யுவதிகள் ஈடுபடுகின்றமையால் மனச்சோர்விற்கு உள்ளாகி தற்கொலை என்ற விபரீதத்திற்குச் செல்கின்றனர். இக்காரணங்களே இளைஞர்கள் மத்தியில் அமைதியின்மையை தோற்றுவித்ததாகும்.

சமுதாயத்தை அரசியலுக்கு அப்பால்பட்ட தாக்கியமை, அதாவது அரசாங்க வேளையில் ஆளனியினரைச் சேர்ப்பதற்கு அதிகார துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை ஆளும் கட்சி ஆதரவாளர்களுக்கு அரசாங்க ஒப்பந்தம் அனுமதி சீட்டுகள் வழங்குவதில் அதிகாரம் தவறாக பயன்படுத்தப்பட்டமை. அரசியல் கட்சிகளின் தோற்றுவாய் நாளாந்த நிர்வாகத்தில் தேவையற்ற அரசியல் தலையீடுகள் லஞ்சம், ஊழல் போன்றவற்றால் அரசியலும் சமூகமும் அன்னியமயமாகியது. இதற்குச் சான்றாக 1982 இல் இலங்கை மக்களின் தேர்தல் உரிமை மறுக்கப்பட்டமை, குற்ற தீர்ப்பு அளிக்கப்பட்டவுடன் பொது மன்னிப்பு வழங்குதல் போன்றவற்றால் இளைஞர்கள் ஒதுக்கப்படுகின்றமை மற்றும் இலங்கை அரசியலில், சமூக நிறுவனங்களில் பொது மக்கள் வைத்திருந்த நம்பிக்கை சீரழிந்து காணப்படுகின்றது. இந்நிறுவனங்கள் இளைஞர்களுக்கு உரிய அந்தஸ்த்தை பெற்றுக் கொடுப்பதாக இல்லை. அத்துடன் இந்நிறுவனங்கள் இளைஞர்களின் மனக்குறைக்கு உண்மையான இடமளிக்கவில்லை. இளைஞர்கள் அரசியலில் பங்களிப்புச் செய்வதை மரபு ரீதியான அரசியல்வாதிகள் விரும்பவில்லை.

இளைஞர்களின் குறைபாடுகளை இனங்கண்டு தீர்த்து வைக்காமை. இலங்கையில் இளைஞர்களின் பிரச்சினைப் பற்றி எவரும் அக்கறை காட்டுவதில்லை, எனவும் கிராம மட்டதிலும் கூட இளைஞர்களது குரல் கேட்கப்படுவதில்லை என்று மிகவும் ஆதங்கப்படுகின்றனர். இதற்கு நல்ல உதாரணமாக வன்முறை அரசியலைப்பற்றி ஆராய்ந்த ரெட்றோபேட்கார் என்பவர் மனிதக் குறைகள் தீர்க்கப்படாமலும் இவர்களின் குரல்களுக்குச் செவிச் சாய்க்கப்படாமலும் இருக்கும் இடத்தில் ஜனநாயக நீரோட்டத்தின் வெளியில் இவர்கள் வன்முறையை நாடுபவர்கள் என்றார்.

இளைஞர்கள் மத்தியில் இருக்கின்ற அமைதியின்மை நீக்கப்பட்டு சமாதானமாகவும் சந்தோஷமான நிலை பிரகாசிக்க வேண்டுமாக இருந்தால் அகிம்சை என்ற சொல் அவர்கள் மத்தியில் எதிரொலிக்கப்பட்டு நடைமுறைக்கு கொண்டுவரவேண்டும்.

"இவ் உலகை எனக்கு ஏற்ற விதத்தில் மாற்ற வேண்டுமானால் முதலில் நான் மாறவேண்டும்."

S. இந்திரன்
மமா/வ/இராகலை.த.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானத்தின் முக்கியத்துவம்

காட்டுத்தீயை விட மிகவும் வேகமாகப் பரவி உலகை அச்சுறுத்தும் விடயமாகவும், மனித நாகரீகம், பண்பாடு போன்றவற்றை குழித்தோண்டி புதைக்கும் விடயமாகவும் இந்தப் போர் விளங்குகின்றது. இது பல மனித உயிர்களை பலி கொள்ளும் உலக எதிர்ப்பு நடவடிக்கையாகும். எனவேதான் உலகின் எல்லாப் புறங்களிலும் போர் எனும் பெரும் மரம் வேர்விட்டு பூமியினது ஆணிவேரையே அசைத்துக் கொண்டிருக்கின்றது. இப்போரானது உலகினில் சமாதானம் இல்லை என்பதனையே குறிக்கின்றது.

உலகத்தில் பயங்கரவாத இயக்கங்களாக சர்வதேச ரீதியில் சுமார் இருபத்தொரு (21) புரட்சிகர தீவிரவாத இயக்கங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இன்க்கோசங்கள், இன விடுதலை, விடுதலை இயக்கம் என்பதனை தவிர்த்து பயங்கரவாத இயக்கங்களாக பத்து (10) இயக்கங்கள் அடையாளப்படுத்தப்பட்டு உலக அரசுகளினால் தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக எமது நாடான இலங்கையை எடுத்துக்கொண்டால் வடக்கு கிழக்குப் பகுதிகளிலே ஒரே யுத்தமயமாயுள்ளது. சமாதானம் என்றால் என்ன? அது எப்படி இருக்கும்? என்பதே இன்றைய ஈழத்தமிழர்களது பரிதாபக் கேள்வி. யாழ் மாவட்டத்திலே அமைதி என்பதனைக் காணமுடியாத வண்ணம் போர் காணப்படுகிறது. அங்குள்ள மக்களது வாழ்க்கை நிலைபரிதாபக் கோலமாய் உள்ளது.

அடுத்ததாக, இலங்கை முழுவதுமே சமாதானம் இல்லை என்றே கூறலாம். நாளுக்கு நாள் கொலை, கொள்ளை என்ற செய்திகளே எம் அனைவரது காதுகளிலும் ஒலிக்கின்றது, இவ்வாறு அப்பாவி மக்களின் தொகை குறைந்துக் கொண்டேப் போகிறது. அதற்கு யார் பதில் கூறுவது? சற்று சிந்தியுங்கள்! யுத்தம் யுத்தம் என்றால் அது நின்றுவிடுமா? யுத்தம் வர யார் காரணம்? வாயில்லா ஜீவன்களா? இல்லையே! மனிதர்கள் தான்! அப்படியென்றால் நாம் அனைவரும் ஒன்றிணைந்தால் யுத்தத்தை ஒழித்து சமாதர்னத்தை நாடலாமல்லவா? சிந்தியுங்கள்!..........

உதாரணமாக நாம் ஒரு குச்சியை எடுத்து உடைத்தால் அது இலகுவாக உடைந்து விடும். அதே போல் நாம் பல குச்சிகளை ஒன்றாக இணைத்துக் கட்டி அதை உடைக்க முயன்றால் அதை உடைப்பது கடினம். இது முதியோர் வாக்கு. அதாவது நாம் பிறரை பகைத்துக் கொண்டு தனித்து நின்றால் பகைவர் எம்மை இலகுவாக வீழ்த்திவிடுவர். நாம் ஒன்று பட்டு இருந்தால் பகைவர் எம்மைத் தாக்குவது கடினம் என்பதே இதன் பொருள், ஒற்றுமைக்கு அவ்வளவு பலம்.

1983 ஆம் ஆண்டு நிகழ்ந்த வன்முறை அனைவரும் அறிந்ததே. சமாதானம் என்ற ஒன்று அவ்வேளையில் இருந்திருந்தால், பல உயிர்கள் தற்போது பூமியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்திருக்கும். பலர் இன்று அநாதைகளாக திகழ்ந்திருக்க மாட்டார்கள். அவர்களுக்கும் இன்று உறவுகள் இருந்திருக்கும். இன்றும் வடபகுதியில் கண்ணிவெடி, மனித வெடிகுண்டு என பலப் பல பயங்கரவாதங்கள். அணுக்களை கக்கும் ஆயுத குழுக்களாக இவை இருப்பதனால் நாட்டில் குழப்பத்தையும், அரசாங்கத்தின் நடத்தையையும் முடக்கிவிடுகிறுது. இந்த உலகம் முழுவதும் பயங்கரவாதம் எனும் செயன்முறைப் பரவி சுடுகாடாக மாறி வருகிறது. "இன்றைய சிறுவர்கள் நாளையத் தலைவர்கள்" என்பார்கள். இவ்வாறு போர் மூழ்கினால் இந்த சிறுவர்கள்தான் தலைவர்களாக முடியுமா? தலைவராக சிறுவர்தான் உயிருடன் இருப்பார்களா? எனவே யுத்தத்தை ஒழிக்க வேண்டும்,.இதனை நாம் மட்டும் கூறினால் போதாது,முழு உலகுமே நடவடிக்கை எடுக்க வேண்டும். "ஒரு கை தட்டினால் ஓசை வராது. இரு கைகளை தட்டினாலே ஓசை வரும்." எனவே உலகின் அமைதி இயக்கங்கள் இதன் பால் கவனம் செலுத்துவது அவசரமும் அவசியமுமானதாகும்.

"புதியதோர் உலகம் செய்வோம்
கெட்டு போரிடும் உலகை
வேரோடு சாய்த்து
புதியதோர் உலகம் செய்வோம்."

நன்றி
கோ. பிரஷாந்தினி
11A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயம் மிகு நாட்டார் பாடல்கள்

**முன்னுரை**

உணர்ச்சிமிகு கலைப்படைப்புகள்

நாட்டார் பாடலின் வகைகள்

நாட்டார் பாடல்களின் சிறப்புகள்

**முடிவுரை**

பாமர மக்களின் உள்ளத்து உணர்ச்சி பெருக்கினில் உருவானவை நாட்டார் பாடல்கள். அவை எளிமையும், இனிமையும் மிக்கன. இவற்றை நாடோடி பாடல்கள், நாட்டார் பாடல்கள், வாய்மொழி இலக்கியம், கிராமிய கவிதைகள் என பலப் பெயர் கொண்டு அழைப்பர். கற்று வல்ல கவிஞர்கள் மொழி யாப்பு மரபிற்கமைய உருவாக்கும் கவிதைகளுக்கும் நாட்டார் பாடல்களுக்கும் வேறுபாடு உண்டு. நாட்டார் பாடல்கள் எழுதாகிழவிகள். இவை மக்கள் அவ்வப்போது தம் உள்ளத்து எழும் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் பாடப்படுவன ஆகும். பரம்பரைப் பரம்பரை வழியாக வாய்மொழியாக கேட்கப்பட்டு மக்கள் மனதில் நிலைபெறுவனாகும். நாட்டு மக்கள் தம் உள்ளத்திலிருந்து வருபவை ஆதலின் இவற்றை நாட்டார் பாடல்கள் என அழைக்கின்றோம்.

"உணர்ச்சி பெருக்கே ஒரு பாடடுக்கு நிலைகளன்" என்றார் அறிஞர் ஒருவர் உள்ளத்து உதிப்பனவற்றை எவ்வித கட்டுப்பாடுமின்றி உள்ளதை உள்ளவாரே கூறும் உண்மைத்தன்மையானது, அதாவது ஒவ்வொரு மனிதனின் எண்ணங்களில் தோன்றும் உண்மை தத்துவங்களை வெளிப்படுத்தும் முகமாக நாட்டார் பாடல்கள் அமைந்துள்ளன. ஏட்டிலக்கியத்திலும் பார்க்க வாய்மொழி இலக்கியத்திலேயே பெரிதும் காணப்படுகிறது. எனவேதான் நாட்டுப்பாடல்களை உணர்ச்சிமிகு கலைபடைப்புகள் என்கிறோம். நாட்டார் பாடல்கள் குறித்து பல ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.நாட்டார் இயல் என்ற பரந்து பட்ட ஒரு பிரிவின் பகுதியாகவே நாட்டார் பாடல்கள் கருதப்படுகின்றன.

நாட்டார் பாடல்கள் பல வகைப்படும் அவை பாடப்படும் சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு வெளிப்படும் உணர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு பல வகையினதாக பிரிக்கப்படுகின்றன. குழந்தை பிறந்த நாள் தொட்டு அவன் மனிதனாகி மரணமாகும்வரை இசையால் மூழ்கின்றான். அந்த இசையிலும் நாட்டார் பாடல்கள் கலந்து சுவை தருகின்றன. அந்த வகையில் அழுது அடம்பிடிக்கும் குழந்தைகளை அடக்கும் ஆயுதமாக அன்னையரிடம் தாலாட்டு அமைகிறது. அதுமட்டுமா! விழித்துக் கொண்டிருக்கும் குழந்தைக்கு வேடிக்கை காட்டும் தாய், குழந்தை விழிகளை மூடி துயில வேண்டும் என்று என்னும் போது பாட்டு இசைக்கின்றாள். இப்பாட்டினையே தாலாட்டு என்கின்றோம் மகிழ்ச்சி ததும்பும் விழாக்களின் போது ஆனந்த களிப்பில் மகளிர் பாடும் பாடல்கள் மற்றொரு வகையினதாகும். தாலாட்டு, ஒப்பாரி, கும்மி, கோலாட்டம், ஊஞ்சல் போன்ற பாடல் வகைகள் பெண்களுக்கே உரியனவாகும்.

உழவர், மீனவர், வண்டி ஓட்டுவோர், இடையர், மற்றும் தொழில் புரிவோர் பாடும் பாடல்கள் வேறுவகையினவாகும். ஆலயங்களில் வழிபாடு செய்வோர் பாடும் பாடல்கள் தலச் சிறப்புக்குரியனவாகும். கரகம், காவடி, எடுத்து ஆடுவோரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடப்படும் பாடல்கள் இதற்கு ஏற்ற சான்றாகும். வயல் நிலங்களில் வேலை செய்வோர், உழவர், உழத்தியர் பாடும் பாடல்கள் வேறு வகையில் அமைவனவாகும். அறுவடை செய்தல், சூடுவைத்தல், சூடு மிதித்தல் போன்ற நிகழ்வுகளின் போது பாடப்படும் பாடல்கள் மற்றொரு வகையினதாகும். வீரர்களின் வீரச் செயல்களை உணர்ச்சி ததும்பக் கூறும் கதைப்பாடல்கள் வேறு வகையினதாகும்.

இவ்வாறு நாட்டார் பாடல்கள் பலவேறு வகைப்பட்டனவாயினும் அவற்றின் இனிமையான இசையும் தாளக் கட்டும் தனிச்சிறப்பை அளிக்கின்றன. குழந்தையைப் பெற்ற தாய் ஒருத்தி உலகில் மற்றெவரும் பெறாத பெரும் பாக்கியத்தை தான் அடைந்து விட்டதாக மகிழ்வு கொள்கின்றாள். அவள் உள்ளத்தில் எழுந்த ஆனந்தத்தை உணர்வு பூர்வமாக வெளிப்படுத்துகின்றாள். இவ்வாறு நாட்டுப்புற பாடல்களின் சிறப்பை கூறிக்கொண்டுச் செல்ல செல்ல மிகையாகாது. நாட்டுப்புற பாடல்கள் தொன்று தொட்டு இன்றுவரை பாமர மக்களுடன் பின்னிப் பிணைந்து வருகின்றது. எத்தனையோ படைப்புக்கள் அதாவது விந்தை மிக்க விஞ்ஞானம் இவ்வுலகை வியக்கச் செய்து படைப்புக்கள் பல உருவாக்கினாலும் நாட்டார் பாடல்கள் அன்றிலிருந்து இன்றுவரை தமக்கென ஓரிடத்தை பிடித்துக் கொண்டே வருகின்றது. இப்பாடல்களின் தனிச்சிறப்பு என்னவென்றால் கவிதைகள் மற்றும் ஏனைய பாடல்கள் வரிகள் கற்றிந்தோர் மட்டுமே அதன் உட்கருத்தை அறியமுடிகின்றது. ஆனால் நாட்டார் பாடல்கள் கல்வி கற்காத மானிடர்கள் கூட அதன் உட்கருத்தை அறிந்து கொள்ளலாம்.

நாள் முழுவதும் உடல் வருந்த பாடுபடும் தொழிலாளர்கள், கப்பல் ஓட்டிகள், மீனவர்கள் தம் உடல் அழுப்பை போக்க பாடும் பாடல்கள் தனிச் சிறப்பு வாய்ந்தன."ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது" என்பதற்கு அமைய அவர்கள் பாடும் பாடல்கள் சுவைமிக்கனவாக திகழ்கின்றன. தங்கள் உற்றார் உறவினர்களை இழந்து தவிக்கும் பெண்கள் பாடும் ஒப்பாரி பாடல்கள் கல் மனதையும் கரையச் செய்வன. ஓசை இன்பமும் இசை நயமும் பல்வேறு இலக்கிய சுவைகளும் கொண்ட நாட்டார் பாடல்கள் நெஞ்சை நெகிழச் செய்கின்றன. இதனாலேயே அமர கவி பாரதியாரின் "ஏற்ற நீர் பாட்டின் இனிமையிலும் நெல்லினிக்கும்." என்னும் பாடல் வரிகள் நெஞ்சை பறி கொடுத்து பாடுவது நயத்தகுப் பெருமையினை பறை சாற்றுவதாக அமைகிறது.

சுருங்கக் கூறின் நாட்டார் பாடல்கள் நாட்டு மக்கள் உள்ளத்து உணர்வுகளின் வெளிப்பாடு. அவை படிப்போர் உள்ளங்களை பற்றியிழுக்கும் பண்பினை இசையின்பமும் ஓசை நயமும் கொண்டவை. அவை வாய்மொழி இலக்கியமாக என்றும் வாழும் தன்மை மிக்கன எனலாம்.

த.கிருஷாந்தி
தரம்-11C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை சுற்றாடல் சார்பான மனித உரிமைகள் பாதுபாப்பு நிலை.

மலையகப் பாடசாலைகளில் இன்றைய காலக்கட்டத்தில் மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் கவனத்தை செலுத்துதல் மிக முக்கியமானதொரு இடத்தை வகிக்கின்றது. இதனடிப்படையில் பாடசாலை சுற்றாடல் சார்பான மனித உரிமைகளின் பாதுகாப்பு நிலை பற்றி சகலரும் அறிந்துக் கொள்ள வேண்டியது அவசியமானதொரு விடயமாக கருதக் கூடியதாக உள்ளது.

எமது கலாச்சாரத்தின் பாரம்பரியங்களை பேணுவதில் பொறுப்பும் கடமையும் உள்ளதுடன், சிறுவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான ஒரு பொதுவான சுற்றாடலை கட்டியெழுப்பவும் முன்வரவேண்டும். எனவே இதற்கமைய பாடசாலை சுற்றாடல் சார்பான மனித உரிமைகள் பாதுகாப்பு சாசனத்தின் முக்கிய ஆறு (6) பகுதிகள் பின்வருமாறு.

1. அனைத்து குழந்தைகளும் பிறக்கும் போது பெயருக்கும், இனத்துக்கும் உரிமையுடையவர்கள் என சிறுவர் உரிமை சாசனம் கூறுகிறது.

   - படசாலைப் பிள்ளைகளின் பெயர், அதனுடன் தொடர்பான அறிமுகப் படுத்தலும் அவர்களின் சுய கௌரவத்துடன் பெறுமதி வாய்ந்ததாக காணப்படும்.
   - குழந்தைகள் சரியான முறையில் தமது சொந்த சிந்தனைகளை வளர்க்க சுமூகமான சுற்றாடல் தேவை அவசியமாகும்
   - அவ்வாறான சுற்றாடலை பாடசாலைகளில் உருவாக்குதல் எமது கடமையும் பொறுப்புமாகும்.

2. கல்வியின் இலக்கானது ஒவ்வொருவருக்கும் இடையிலான அவதானத் துடனும் சமாதான எண்ணத்துடனுமான வாழ்க்கைக்கு பிள்ளைகளை இட்டுச் செல்லும்.

   - பிள்ளைகள் இடையே அந்நியோன்ய உறவுகளை ஏற்படுத்துவதுடன் ஒவ்வொருவரினதும் சிந்தனைகளை வகுப்புகளில் உருவாக்கக் கூடிய சுற்றாடலை உருவாக்கல்.
   - சிறுவர்கள் சமாதானமாகவும், பொறுமையுடனும் வாழக்கூடிய தாகவும், ஆசிரியருக்கும், மாணவருக்கும் இடையிலான ஒரு ஒன்றிணைந்த சூழலை உருவாக்கல்.

3. குழந்தைகளின் சிந்தனைகளை புரிந்துக் கொள்ளக்கூடிய ஒரு நிலைக்கு எம்மை மாற்றிக்கொள்ளல் எமது கடமை.

   - சிறுவர் சிந்தனையை சரியான முறையில் அவதானிப்பதோடு, வகுப்பின் சுற்றாடலை அதற்கு அமைத்தல் எமது கடமை.
   - மற்றவர் எண்ணத்துக்கு செவிமடுப்பதும், மதிப்பளிப்பதுமான ஒரு சுற்றாடலை உருவாக்கல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அவ்வாறான சுற்றாடலில் சிறுவர்களின் எ ண் ண த் தை யு ம் , உணர்ச்சிகளையும் பகிரக்கூடியதுமான மனிதர்களின் வெளிப்பாடுகள் தோன்றும்.
- நாட்டில் தற்கொலைகள் ஏற்படுவதை தடுக்க வேண்டுமாயின் இவ்வாறான சுற்றாடலை அமைத்தல் வேண்டும்.

4. கருத்துக்களை வெளியிடுவதற்கான உரிமை சிறுவர்களுக்கு இருத்தல் வேண்டும்.

- மற்றவர்களை கோபமூட்டாமல் கருத்துச் சுதந்திரத்தை பயன்படுத்தும் பாடசாலை மட்டங்களிற்கிடையில் மற்றவர்களின் உரிமைகள் பாதிக்காமல் இருக்க உதவுதல்.
- கருத்து சுதந்திரத்தை பாதிக்காத வகையில் பாடசாலை வெளியீடுகள் சரியான முறையில் கருத்துக்கள் பகிரப்படுதல்.
- கருத்துச் சுதந்திரம் மற்றவர் உரிமையையும், புகழையும் பாதுகாக்கும் பாடசாலை வெளியீடுகள் சரியான உருவாக்கத்திற்கு பிள்ளைகளை இட்டுச் செல்லும். இவ்வாறான சூழ்நிலையை கட்டியெழுப்புவது எமது கடமையும் உரிமையும் ஆகும்.
- சிறுவர்களின் எண்ணங்களை சரியானவை எனின் மரியாதை செலுத்தவும் பிழையாயின் சரியான வழியை காட்டவும் வழியமைத்தல்.

5. நடத்தைகள் ஒழுங்கான முறையில் சிறுவர் கௌரவத்திற்கு பாதிக்காமல் இருக்க வேண்டும்.

- பிள்ளைகளின் பிழைகளைக் கண்டு ஆவேசம் கொள்ளுதல் அவர்கள் அப்பிழையை மேலும் செய்வதற்கான காரணம் என்ன என்பதை அறிந்து அதற்கான சரியான தீர்மானத்தை எடுத்தல்.
- பிள்ளைகள் பிழைவிடும் போது ஆவேசம் கொள்ளாது நடுநிலையான தீர்மானம் மூலம் அவர்கள் கௌரவத்தை இழிவுபடுத்தாமல் இருப்போம்.
- இவ்வாறான சரியான செயற்பாட்டால் அவர்கள் பிழையில்லாமல் நேரிய வழியில் செல்ல முடியும்.

6. சிறுவர்கள் சிந்தனைகள், உளகருத்துக்கள் சுதந்திரமான காட்சிகளாக வெளிப்படுத்தும் உரிமைக்கு மதிப்பளித்தல்.

- வகுப்பில் தீர்மானத்தை மேற்கொள்ளும் போது சிந்தனைக்கும் உளகருத்துக்கும் சுதந்திரமான சாட்சியாக மதிப்பளிக்கும் போது, அவை ஒழுங்கான கருத்துக்களாக அமையும்.

மேற்கூறப்பட்ட 6 விடயங்களும் பாடசாலை சுற்றாடல் சார்பான மனித உரிமை பாதுகாப்பு நிலையில் முக்கிய பங்கினை வகிக்கின்றமையினால், இதனை பின் பற்றுவதன் மூலம் சிறப்பான கற்றல்- கற்பித்தல் சூழலை உருவாக்கி பாடசாலையினதும், எமது சமூகத்தினதும் வளர்ச்சி போக்கிற்கு ஓர் ஊன்று கோலாக தொழிற்படுவது ஆசிரியர்களாகிய எமது கடமையும் பொறுப்புமாகும்.

இரா. பரமேஸ்வரன் (ஆசிரியர்)
மமா/வ/இராகலை.த.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான ஆசானே

ஆசான் தொழிலில் அடிவைக்கும் உன்னிடம்
ஆயிரமாய் கற்க வேண்டுமென்ற
ஆவலுடன் அமர்ந்திருக்கின்றனர்
ஆனந்தமுடன் சிறுவர்கள் உன் முன்னால்!

அவர்களில் ஆட்டம்பாட்டமாய்
முன்வருவர் ஒரு சிலர்
அமைதியாய் அமர்ந்திருப்பர் இன்னும் சிலர்
ஒன்றும் புரியாமலிருப்பர் வேறு சிலர்

முன்னே பாய்ந்து வருபவர்கள் தான்
முயற்சி உடையவன் என்றும்
மூளை உள்ளவன் என்றும்
முன்னேற்றத் துடிப்பாய் .

அமைதியாய் அமர்ந்திருப்பவனிடம்
அயிரமாயிரம் ஆளுமைகள்
அமிழ்ந்து கிடக்கும் - அவற்றை
அவனிலிருந்து வெளிக் கொணர்வாய்

அப்போதே நீ நல்லாசானாய்
இத் தரணி மீதுயர்வாய் !

திருமதி.ம.வேமலா(ஆசிரியர்)
இ.த.ம.வி

# வாழ்ந்து காட்டு

எப்படியோ வாழலாம்
என்பதல்ல வாழ்க்கை
இப்படித்தான் வாழ்க்கையென
இலட்சிய தாகத்தோடு வாழ் !

பூத்த புது மலராய்
பூமியில் மணம் பரப்பிடு
அறியாமை இருள் அகற்றி
அறிவு ஒளி ஏற்றிடு!

முயன்றால் முடியாதது எதுவுமில்லை
முயன்று வெற்றி பெற்றிடு
பயணத்தை இன்றே தொடர்ந்திடு
பட்டம் பல பெற்றிடு!

சமாதான பூக்கள் மலர்ந்திட
சந்தோச தீபம் ஒளிர்ந்திட
அமைதியாய் பாரினில் வாழ்ந்திடு
அனைத்திலும் சாதனை படைத்திடு!

வாழ்வில் உயர்ந்து சென்றிட
வசந்தம் பூத்து குலுங்கிட
வழிக்காட்டிய நல் ஆசான்களை
வடிவமைத்த சிற்பிகளை
ஏணியாய் நினைத்திடு
எதிலும் வெற்றி பெற்றிடு

R.K.G. ரம்ஸியா (ஆசிரியர்)
இ.த.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்

நாமகள் வீற்றிருக்கும் சிம்மாசனம் - மானிடன்
யாவரும் தேட வேண்டிய அரியாசனம்!

நாமகள் தன் வீணையை எழுதுகோலாக்கி
வெள்ளை கமலத்தை பக்கமாக்கி
உயிர்களை உய்விக்கும் ஆலயம்!

வேதனை எனும் தடைக்கற்களால்
சோதனை பலக் கடந்து
சாதனை எனும் விண்ணை தொட்டவர்களை
மண்ணில் அறியவுதவும் தினப்பதிவேடு!

இருள் சூழ்ந்த மானிட தரித்திரத்தை
ஒளி வீசும் சரித்திரமாய்
செதுக்கும் சிற்பி!

இரா.சுரேஸ்
கலைபிரிவு
இ.த.ம.வி

# வைரங்கள் ஈடாகா!

ஓ பள்ளியே !
உனக்கு அறுபதாண்டு நிறைவா ?
உனைப் போற்ற அறுபது வைரங்களும் ஈடாகா!
அ......வெனக் கூறி எனை அரவணைத்தவள்
இன்று சர்வகலா சாலை சென்று
சர்வ கலையும் கற்க நீ செய்து விட்டாய்!

உன்னில் நான் தவழ்ந்து
ஓராயிரம் குறும்பு செய்தேன் நீ பொறுத்தாய்!
இன்று பலர் அறிவு கொண்டு மேன்மையுற
செய்து விட்டு
நீயிருக்கும் போது நாம்
போற்று கின்றோம் பணிகின்றோம் !

சந்தனம் ஜீவானந்தன்
கொழும்பு பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**MANGEMENT & BAND GROUP -- 2007**



**ENGLISH ASSOCIATION - 2007**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவப் பருவம்

எழு பிறவி என்ற போதிலும்
எமக்கு இப்பிறவியில் வரும்
ஓர் இனிமையான இன்பப் பருவம்!
ஓராயிரம் ஞாபகங்களைத் தரும்
உன்னதமான ஓர் பருவம் !

மறையா படிப்பினை தந்து எம்மை
மலையளவு உயர்த்திடும் ஓர் பருவம்!

ஏணிகளில் ஏற்றிவிடும் ஓர் சமூகம்
எப்போதும் உதவிட ஓர் தோழர் கூட்டம்

கூடியவர்கள் கை கொடுக்கும் போது
கூடிய முயற்சியுடன் உயர்ந்திட
இளமையிலே கல்வி கற்று
இவ் வையத்திலே பலசாதனை படைத்து
ஆசிரியருக்கும் பெற்றவருக்கும்
எம்மை நல்வழிப்படுத்தும் யாவருக்கும்
பெருமை பெற்றுத் தரும் பருவம்!

பி.மலர்விழி (ஆசிரியர்)
இ.த.ம.வி

---

# முத்தமிழ்

தமிழின் பெருமையை தரணிக்கு தந்த
தங்கத்தமிழே எங்கள் முத்தமிழே !
தமிழர் தம் வாழ்வை தழைத்தோங்க வைத்த
தரணிப் போற்றும் முத்தமிழே !

அறிஞர்கள் வாழ்விலும், கலைஞர்கள் நாவிலும்
கலைவளம் தந்த முத்தமிழே !
ஆயக்கலைகள் அறிந்திட செய்த
அழகுத் தமிழே !

கவிதைக்கு உரம் சேர்த்து
கலைகளுக்கு வளம் சேர்த்த
வள்ளுவன் முதல் கண்ணதாசன் வரை
கலை வளர்க்க களம் அமைத்த முத்தமிழ்

இயல் இசை நாடகமாய் இன்றும் மிளிர்கின்ற
இனிய எங்கள் முத்தமிழே எம்
உயிராக எந்நாளும் காத்திடுவோம்
எங்கள் இன்ப தமிழே முத்தமிழே !

செல்லத்துரை நவமலர்
செல்லத்துரை சுபாஷினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுபதுகளின் விடியலில்

அன்றே
அறிஞர்கள்
ஆண்டுக்கொரு விழா என
பெயர் சூட்டி சென்றனர்.
அந்த வரிசையில்
இன்றோ - நாம்
அறுபது ஆண்டுகளின்
காலடியில்.

எத்தனை மாறுதல்கள் - நம்
பள்ளியின் வளர்ச்சியில்
பாடங்களின் தேர்ச்சியில்
மாணவர்களின் உயர்ச்சியில்
கலைகளின் மலர்ச்சியில்

இம் முன்னேற்றங்கள் யாவும்
இன்று போல்
என்றும் தொடர
வேண்டுமல்லவா ஆதலால்
கால் மாற்றங்களில் -நாமும்
நம்மை எடை போட- சற்றே
உரசிப் பார்ப்போம்
அசலா ? நகலா ?
அறிந்து கொள்வோம்.

இன்றே
வார்த்தைகளுக்கு
வடிவம் கொடுத்து
எண்ணங்களை அரங்கேற்றுவோம்
மனசாட்சியை மந்திரியாக்கி
நமக்கு நாமே
தொண்டனாகுவோம்.

இனியும்
போலியாக வாழ்ந்து
உயர்வதை விட
ஒரே ஒரு நாள்
ஒரே ஒரு நிமிடம்
உண்மையாய் வாழ்ந்து
இறந்து போவோம்.

துன்பங்களை தொட்டுப்
பழக முயற்சிப்போம்.
இன்பங்களை எட்ட
நின்று பார்ப்போம்.
இரண்டையும் சமனாக்கும்
குணம்
தானாய் சரணடையும்
நம்மிடம்

உள்ளும் புறமும்
ஒருவனாய் வாழ்வோம்
மனத் தூய்மையுடன்
சொந்தமாய் உழைத்து
சுயமாய் சிந்தித்து
நம் காலில்
நாம் நிற்போம்

இவ்வாறு இருந்து விட்டால்
இனி வரும்
எந்த விழாக்களும்
நமக்கு மட்டுமல்ல
நம் சந்ததியினர்க்கும்
சொர்க்கமே பக்கமாகுமல்லவா.

செல்வி. பொ.ஷிவயோஷ்வரி
ஆசிரியை
இ.த.ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிகாட்டலும் ஆலோசனையும்

வழிகாட்டலும், ஆலோசனை கூறலும். இரு செயலல்ல இரண்டும் ஒரே செயலாகும். தன்னையும், தனது சுற்றாடலையும் பற்றிய ஒரு சிறந்த விளக்கத்தையும் பெற்றுக் கொடுக்கும் சேவையே இது எனச் சுருக்கமாக கூறலாம். சமுதாயத்தில் வாழும் ஒருவருக்கு தனது சுய முன்னேற்றத்திற்கு இச்சேவை உதவியாக அமையும். வழிகாட்டல் ஒரு குறிப்பிட்ட விஷேட பகுதியினருக்கு மட்டும் அவசியமானதல்ல. சகல தரத்திலுள்ளவர்களுக்கும். எல்லா வயது மட்டத்திலுள்ளவர்களுக்கும் அவசியமாகும்.

பண்டைக்கால சமுதாயங்களில் பெற்றோர்கள், வளர்ந்தவர்கள், குருமார்கள், ஒத்த வயதினர்கள் ஆகியோர் இச்சேவையை நிறைவேற்றினர். ஆனால் குடிப்பெருக்கம், கைத்தொழில் மயமாக்கம், நாகரீக முன்னேற்றம், புது யுகத் தோற்றம் என்பன காரணமாக மக்களின் செயற்பாடுகள் சிக்கல் வாய்ந்ததாக இருப்பதால் வழிகாட்டலின் தேவை இன்று அதிகரித்துள்ளது. குழந்தைகள், பிள்ளைகள், வாலிபர்கள், வளர்ந்தவர்கள் ஆகிய சகலருக்கும், இவ்வழிகாட்டல் உதவி அவசியமாகும். விஷேடமாக பாடசாலை மாணவர்களுக்கு இவ் வழிகாட்டல் அறிவுப் பற்றி கற்பிப்பது மிக அவசியமாக கருதப்பட்டு

அரசாங்கத்தால் அமுல்படுத்தப்பட்டுள்ளது. காரணம் பெற்றோர்கள் பலருக்கு வழிகாட்டலும் ஆலோசனையும் பற்றிய விளக்கம் இல்லை, சில பெற்றோர்களுக்கு இது தொடர்பான விளக்கம் இருந்தாலும், இதற்காக தங்கள் காலத்தை செலவழிக்க முடியாதுள்ளனர். ஆதலால் இத்துறைப் பற்றி அரசாங்கம் அதிக அக்கறைக் கொண்டு தனியாக ஒரு ஆசிரியரை நியமித்து அதற்கான பகுதியை ஒதுக்கி சகல மாணவர்களுக்கும் தேவை யான வழிகாட்டலை வழங்குகிறது.

பாடசாலை வாழ்க்கைக்குரியப்பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்கும், ஒரு குழுவில் அங்கத்தவராக இருப்பதற்கும், கற்றல் தொடர்பாக எதிர் கொள்ளும் பிரச்சினைகளை விடுத்துக் கொள்வதற்கும், தொழிற் பயிறசி ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்கும் சகல மாணவர்களுக்கும் வழிகாட்டல் அவசியமாகும். தன்னைப் பற்றிய ஒரு சரியான விளக்கத்தினைப் பெற்றுக் கொள்வதற்கும், பிரச்சினைகளின் தன்மைகளை அறிந்துக் கொள்வதற்கும் அப்பிரச்சினைகளை விடுவிப்பதற்கு உபயோகப படுத்திக் கொள்ளக்கூடிய வளங்கள், தீர்வுகள் ஆகியவற்றைஅறிந்து கொள்வதற்கும், மற்றொருவரின் உதவி அவசியமானதொன்றாகும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் சரியான முறையில் வழி நடத்தக் கூடிய ஆசிரியர் அளிக்கும் உதவியை ஏற்று மாணவர்கள் நடக்கும் போது அவர்களது இளம்பிராய வாழ்வு அர்த்தம் உள்ளதாக காணப்படும்.

தற்கால சமுதாயத்தில் வழிகாட்டலின்றி கல்வியின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது. எனவே பாடசாலைகளில் சகல மாணவர்களுக்கும் செயற்படுத்தக் கூடிய சில வழிகாட்டல் முறைகளை பெற்றுக் கொடுக்கலாம். அவையாவன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. மாணவர் தமது எதிர்கால வாழ்க்கை பற்றிய தீர்மானங்களை எடுப்பதற்கு உதவும் நோக்குடன் பிள்ளையையும், அவரது சூழலையும் பற்றிய தகவல்களை சேர்த்துக் கொள்வதற்கும், அத்தகவல்களை ஒழுங்கமைத்துக்கொள்வதற் கும் உதவுதல்.

02. வாழ்க்கை அனுபவங்களை பாடசாலை மூலம் பெற்றுக் கொள்வதற்கும், தன் திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கும், பயமுறுத்தல்களின்றி வாழக்கூடிய மாணவர் அதன் எல்லைகளை விளங்கிக் கொள்வதற்கும், சவால்களை ஏற்றுக் கொள்வதற்கும் உதவக் கூடிய ஒரு பாடசாலை சூழலை உருவாக்கல்

03. தலைமைத்துவம், குழு அங்கத்துவம் தொடர்பான திருப்தியான அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்கும், தனிப்பட்டவர் களிடையில் எழும் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் குழு நோக்கங்களை ஏற்படுத்திக் கொள்ளும் திறமையைப் பெற்றுக் கொள்வதற்குரிய சந்தர்ப்பங்களை வழங்குதல்.

04. தான் மற்றவர்களிலிருந்து வேறுபடும் விதத்தையும், மற்றவர்களுக்கும், தனக்கும் உள்ள தொடர்புகளையும் விளங்கிக் கொள்வதற்கும், மதிப்பதற்குரிய சந்தர்ப்பங்களை வழங்குதல்.

இவை போன்ற வழிகாட்டல்களை மாணவருக்கு செலுத்துவதன் ஊடாக அவர்களின் திறமைகளையும், ஆற்றல்களையும் முடியுமான அளவு வளர்த்துக் கொள்வதற்கும், வாழ்க்கை நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கும், இறுதியில் தான் அடையக் கூடிய இலக்குகளை அடைவதற்கும், ஜனநாயக சமுதாயத்தில் சிறந்த பிரஜையாவதற்கான பயிற்சியைப் பெற்றுக் கொடுப்பது ஒவ்வொரு ஆசிரியரினதும் கட்டாய கடமையும் வழிகாட்டலுமாகும்.

செ. ஜுட் பெனடிக்
பொறுப்பாசிரியர்
ம.மா/வ/இராகலை.த.ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் கிருஸ்ணன் கால அனுபவங்கள் சில......
# (ஒரு மாணவனின் பகிர்வு)

இராகலை தமிழ் மகா வித்தியாலயம் 2007/03/03 ஆம் திகதியுடன் அறுபதாவது ஆண்டு பூர்த்தியினை வெகு விமர்சையாக கொண்டாடுகிறது. இவ்வேளையில் இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக உழைத்த அனைவரையும் நன்றியுடன் நினைவுகூற வேண்டியவர்களாக உள்ளோம். அந்த வகையில் இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக இரவும், பகலும் ஓயாது உழைத்த முன்னால் அதிபர் அமரர் S. கிருஸ்ணன் அவர்கள் தொடர்பாக அக்காலத்தில் கல்வி பயின்ற மாணவன் என்ற ரீதியில் சில அனுபவங்களையும் படிப்பினைகளையும், பகிரலாமென நினைக்கிறேன்.

அதிபர் கிருஸ்ணன் அவர்கள் ஒரு விஞ்ஞான பயிற்சி ஆசிரியர் என்பதும் அவர் ஆங்கில புலமை மிகுந்தவர். என்பதும் எல்லோருக்கும் தெரியும். ஏலவே அவர் முற்போக்கு சிந்தனை உடையவராக இருந்ததனால் அவரால் ஒரு சிறந்த அதிபராக இயங்க முடிந்தது. மலையகத்தில் மட்டுமல்லாது அவர் வடக்கிலும் சேவையாற்றியிருந்தமையால், அவர் எல்லோராலும் அறியப்பட்டிருந்தார். ஓயாத உழைப்பும் சமூகம் மீதான அக்கறையும் கொண்ட அவரால் பல பாடசாலைகள் மிக உயர்வைப் பெற்றன.

இராகலை தமிழ் மகா வித்தியாலயம் பெருமளவில் கல்வியில் வீழ்ச்சியடைந்திருந்த கால கட்டத்திலேயே இவர் இப்பாடசாலையை பொறுப்பேற்றார். 1986-01-24 அன்று தமது பதவியை பொறுப்பேற்றார். இராகலைக்கு இவரது வருகை ஒரு வரப்பிரசாதம் தான் . மாணவர்களை கல்வி ரீதியாகவும் பண்பாட்டு ரீதியாகவும் உயர்த்த வேண்டும் என்ற எண்ணங்களை கொண்டிருந்த அவர், ஆசிரியர்களை இயங்க வைப்பதிலும் அவர்களிடமிருந்த பூரண உழைப்பை பெறுவதிலும் மிகுந்த உத்திகளை கையாள்வார். சில வேளைகளில் கண்டிப்பாகவும் சில வேளைகளில் அன்புடனும் நடந்துக் கொள்வார்.

இவரது காலத்தில் சிறந்த பெறுபேறுகள் கிட்டின. பல கட்டிடங்கள் கிடைக்கப் பெற்றன. இன்று கணனியை நோக்கி ஓடுகின்ற எமக்கு 1986 ஆம் ஆண்டு காலத்திலேயே காரியாலயத்தில் கணனியை வைத்து அறிமுகம் செய்தார். தொலைபேசி வசதியையும் ஏற்ப்படுத்தினார். (அன்றைய தொலைபேசி இலக்கம் - 052-5241) மாணவர் தொகை 2300வரை சடுதியாக உயர்ந்ததுடன் தளபாட வசதி அதிகரித்தும், இலட்சக்கணக்கான பெறுமதியான பாத்திரங்கள் பெறப்பட்டதுடன் தட்டச்சு இயந்திரங்கள் பெறப்பட்டு தட்டச்சு பயிற்சி வகுப்புகள் நடந்தேறின. ஆங்கில வகுப்புகளும் மாணவர்களுக்கான மேலதிக வகுப்புகளும் நடந்துள்ளன. அதே போன்று ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கான பயிற்சிகள் நடந்தன. பெற்றோர்கள், பழைய மாணவர்கூட்டங்கள் தொடர்ச்சியாக நடந்தன. இவற்றின் மூலம் கல்வி உயர்ந்த நிலையை அடைவதற்கு காரணமாக அமைந்தது. சிங்கள, தமிழ் மாணவர்களுக்கிடையில் ஒற்றுமையை மேம்படுத்துவதற்கான கலாசார நிகழ்வுகளை ஏற்பாடு செய்து நடாத்தி வந்தார்.அதுமட்டுடின்றி இவரது காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமானதும் சிறப்பானதுமான விடயம் 40 ஆவது ஆண்டு விழா மிக சிறப்பாக நடந்தேரியது சிறப்பம்சமாகும்.

இவரது காலத்திலேயே கனிஷ்ட இராகலை தமிழ் வித்தியாலயம் (தபாற் கந்தோருக்கு அருகில் இருந்த) இராகலை தமிழ் மகா வித்தியாலயத்துடனும், இராகலை கனிஷ்ட சிங்கள வித்தியாலய (இராகலை தமிழ் மகா வித்தியாலய வளவிலிருந்த) T.B.M. ஹேரத் வித்தியாலயத்துடனும் இணைக்கப்பட்டது. கொத்தணி அதிபராக இருந்த கிருஸ்ணன் அவர்கள் இப்பிரதேசம் முழுவதிலும் உள்ள பாடசாலைகளின் வளர்ச்சிக்காக தமது பங்களிப்பைச் செய்திருக்கிறார் என்பதை அறிவோம். அக்காலத்தில் இருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், வர்த்தகர்கள், நலன் விரும்பிகள் அனைவரிடமிருந்தும் பாடசாலைக்குத் தேவையான வளங்களைப் பெற்றுக் கொள்வதில் பின்னின்றதில்லை.

இவரது காலத்தில் பல உயர்தர மாணவர்கள் இப்பாடசாலையிலேயே தங்கி கற்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருந்தார். இம்மாணவர்களை கண்காணிப்பதற்கு இரவு ஒரு மணி அளவிலும் வந்து செல்வார்.

இவரது மாணவர்களாக இருந்த பலர் இன்று ஆசிரியர்களாகவும், சட்டத்தரனிகளாகவும், வைத்தியர்களா கவும், பல உயர் பதவிகளையும் வகித்து வருகின்றனர். இவ்வாறு அயராது உழைத்த அவரது வீட்டில் நடந்த கொள்ளை சம்பவம் இவரை பெரிதும் பாதித்திருந்தது. இதனால் பெரும் துன்பத்தை அடைந்த அவர் இப்பாடசாலையை விட்டு 31-12-1990 விலகிச் சென்ற அவர் மலையகத்தில் ஆங்கில தனியார் பாடசாலை ஒன்றை ஆரம்பித்து நிர்வகித்து வந்தார். என்றாலும் இவரது இறுதி மூச்சு இராகலை மண்ணிலேயே பிரிந்தது. இவரது ஞாபகங்கள் எம்மை விட்டு அகலா.

இவரிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டிய விடயங்கள் ஆயிரம் உண்டு. இவர் பற்றிய விடயங்களை வெளிக் கொணர வேண்டியது அன்னாரின் மாணவர்களது தலையாய கடமையாகும். இவர் போன்றே இன்னும் சில கிருஸ்ணர்கள் இம்மண்ணுக்கு தேவைப்படுகிறார்கள்.

இப்பாடசாலை இவர் போல பலரை உருவாக்குமா?

காத்திருப்போம்...

ஆசிரியர்
இரா.தயாகாந்தன்.
ம.மா/வ/இராகலை.த.ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகக்கல்வி ஒரு பாடசாலை பாடமாக ஆரம்பிக்கப்பட்டமை

சமூகத்தோடு உறவாடி வாழும் மிருகமாக மனிதன் கருதப்படுகின்றான். மனிதன் யாதாயினும் ஒரு சூழலில் வாழ்கின்றான். அத்தோடு யாதாயினும் ஒரு காலத்தில் வாழ்கின்றான். மனிதன் வாழும் சூழல் ஏதோ ஒரு விதமாக ஒழுங்கமைக்கப் பட்டுள்ளது. மனிதரது செயற்பாடுகளுக்கு, ஏற்ப அரசியல் பொருளாதார முறைமைகள் தீர்மானிக்கப்படுகின்றன. அரசியல், பொருளாதாரப் பங்கு என்பவற்றிற் இடையிலான தொடர்பு மற்றும் மனிதனது செயற்பாட்டுமுறையும் நடத்தையும் புதுத் தோற்றம் பெறுகிறது.

ஆரம்ப காலங்களில் சமூகத்தின் அடிப்படை ஒழுங்கு, நடத்தை, விரிவாக்கம் ஆகியவை தொடர்பான அறவும் தெளிவும் வேறு வேறாக பல பாடங்களினுடாக கற்பிக்கப்பட்டன. ஆயினும் அவை வரலாறு, புவியியல், பொருளியல், குடியியல் எனப்படும்.

மாணவர் தமது பௌதீக சூழலுக்கும் தனக்கும் இடையேயுள்ள தொடர்பையும் தனது சமூக சூழலுக்கும் தமக்குமிடையேுள்ள தொடர்பையும் விளங்கிக் கொள்ளச் செய்வது சமூகக் கல்வியாகும்.

சமூகக் கல்வி ஒரு பாடசாலை பாடமாக இருபதாம் நுற்றாண்டின் நடுப்பகுதியில் ஐக்கிய அமெரிக்காவின் பாடசாலையில் அறிமுகப் படுத்தப்பட்டது.

15 ஆம் நுற்றாண்டுக்கு பின்னரே வட ஆமெரிக்காவில் ஐரோப்பிய குடியேற்றங்கள் ஏற்பபடுத்தப்பட்டுள்ளன. 1976 ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்கா குடியேற்றங்கள் பதிமூன்றையும் (13) ஐக்கியப் படுத்தப்பட்டு ஐக்கிய அமெரிக்கா குடியரசு சமஷ் ஆட்சியாக பிரகடனப் படுத்தப்பட்டது.

ஐக்கிய அமெரிக்காவின் சுதந்திரத்தின் பின் பல்வேறு சமூக குழுக்களுக்கிடையே ஐக்கியத்தை ஏற்ப்புடுத்த முழு நாட்டிலும் பொதுவான பாடசாலை முறையை அமைத்தனர். இதன் மூலம் பொதுக் கல்வி திட்டமொன்று நடைமுறைப் படுத்தபபட்டது. இக்கல்வி திட்டத்தை பிரதான குறிக்கோளாக ஜனநாயக ஐக்கிய சமூகமொன்றை கட்டியெழுப்புதல் அமைந்தது. இதற்கான பல பாடங்களில் ஒன்றாக சமூகக் கல்வி ஆரம்பிக்கப்பட்டது.

ஐக்கிய இராச்சியத்தில் சமூகக் கல்வி ஒன்றினைந்த பாடமாகவே போதிக்கப் படுகிறது. ருஷ்யாவின் கலைத்திட்டத்தில் சமூகக் கல்வி பாடம் ஒரு வித்தியாசமான முறையில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. கீழ் வகுப்புகளில் வரலாறு, புவியியல், இயற்கை விஞ்ஞானம், இலக்கியம், உயிரியல், பௌதீக விஞ்ஞானம் போன்ற பாடங்களுடனும் சமூக விஞ்ஞானம் என்ற பாடம் பத்தாம் வகுப்பில் மற்றுமே கற்பிக்கப்படுகிறது.

சமூகக்கல்வியானது ஜப்பானில் 2 ஆம் உலக மகா யுத்தத்தில் தோல்வியடைந்த பின்னர் 1946 ஆம் ஆண்டில் கல்வி சீர்திருத்தத்தில் ஆரம்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைநிலைப் பாடசாலை பாட விதானத்தில் முக்கிய சில மாற்றங்களை மேற் கொண்டது. இதன்படி அறக்கல்வி, வரலாறு, புவியியல் ஆகிய பாடங்களுக்குப் பதிலாக ஒன்றினைந்த பாடத்தின் கீழ் சமூகக் கல்வி பாடம் கற்பித்தல் ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கையில் சமூகக்கல்வி 1972 ஆம் ஆண்டு சமூகக்கல்வி சீர்திருத்தத்தின் மூலம் சமூகக்கல்விபாடவிதானத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

- 1972 ஆம் ஆண்டுவரை கற்பிக்கப்பட்டு வந்த வரலாறு , குடியியல், புவியியல், பொருளியல் பேன்ற பாடப்பரப்பு கள் ஒன்றினைக்கப்பட்டு ஆரம்ப வகுப்புகளிலும் இடை நிலை வகுப்புகளிலும் ஓர் ஒன்றினைந் பாடமாக சமூகக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1972 ஆம் ஆண்டு கல்வி சீர்திருத்தத்தின் படி பாடங்களின் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட நான்கு தரங்களில் சமூகத்திரனை ஏற்றபடுத்தும் பணி சமூகக்கல்வி பாடத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1972 ஆம் ஆண்டு தரம் 01 தொடக்கம் தரம்- 05 வரை சுற்றாடல் கல்வி கற்பிக்கப்பட்டதுடன் தரம் 06 தொடக்கம் 09 வரை சமூகக்கல்விப் பாடம் கற்பிக்கப்பட்டது.
- நாட்டில் இடம்பெற்ற பிரச்சினைகள், உலக மாற்றங்கள் என்பனவற்றை தொடர்ந்து 1980 ஆம் ஆண்டில் இப்பாடம் புதிய சமூகக்கல்வி என்ற பெயரில் பல மாற்றங்களுடன் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1981 இல் சமூகக்கல்வி சீர்திருத்தத்தின் கீழ் தரம் 06 11 வரை சமூகக்கல்வி பாடம் க.பொ.த(சா/த) வரை உயர்த்தப்பட்டது.
- 1985 இல் சமூகக் கல்வி என்ற பெயருடன் இப்பாடநெறி அறிமுகப்படுத்தப்பட்டது. க.பொ.த(சா/த) கட்டாய பாடமாக்கப்பட்டது.
- 1989 ஆண்டிலிருந்து வரலாறும் சமூகக்கல்வியும் என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1990 இல் வரலாற்றுக்கு தனி நூலும், சமூகக் கல்விக்கு தனி நூலும் அச்சிடப்பட்டது.
- 2000 ஆம் ஆண்டு இப்பாடம் சில மாறறஙகளுக்கு உள்ளாக்கி சமூகக்கல்வியும் வரலாறும் என்ற பெயரில் கற்பிக்கப்பட்டது.
- 2001 ம் ஆண்டிலிருந்து உலகின் கல்வி மாற்றங்களுக்கு ஏற்ப இலங்கை மாணவர் அடைய வேண்டிய தேர்ச்சிகளாக


1. தொடர்பாடல் தேர்ச்சி
2. சுற்றாடல் சார்ந்த தேர்ச்சி
3. நல்லொழுக்கம், சமூகம் சார்ந்த தேர்ச்சி
4. விளையாட்டும் ஓய்வும் சார்ந்த தேர்ச்சி
5. கற்றலுக்காக கற்றல் வாழ்க்கை பூராகவும் கற்றல்

போன்ற தேர்ச்சிகளை அடைய தற்போது புவியியல் குடியுரிமைக் கல்வி வரலாறு என்ற வகையில் சமூகக்கல்வி கற்பிக்கப்படுகிறது.

மா.யோகநாதன்
ஆசிரியர்
மமா/இ/இராகலை.த.ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



SPORT ASSOCIATION - 2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் கல்வி வளர்ச்சியில் விளையாட்டு உடற்கல்வியின் பங்களிப்பும் அவற்றில் சில துளிகளும்.

இலங்கையின் கல்வி வளர்ச்சியில் விளையாட்டும் உடற்கல்வியும் என்ற பாடநெறிக்கு தனி ஒரு இடம் காணப்படுகின்றது. இன்றைய நிலையில் கல்வியினை தொடர்கின்ற மாணவர்கள் மட்டுமல்லாமல் சமுகத்தில் உள்ள அத்தனை பேருமே இந்த இயந்திரமயமான காலத்துடன் ஈடுகொடுத்துக் கொண்டு சக மனிதர்களோடும் போட்டிப் போட்டுக் கொண்டு வாழ வேண்டியவர்களாக இருக்கின்றோம். இங்கே உரமேரிய உடம்பும் உறுதியான மனம் இல்லாதவர்கள் ஓரங்கட்டப்படுவார்கள். உடற்பயிற்சி அல்லது விளையாட்டு ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுப்பது அவசியமாகும்.

இலங்கையில் முட்காலத்தில் ஆட்சி செய்த அரசர்கள் தங்களின் ஆட்சிகாலத்தின் போது பகைவர்கள் ஊடுருவாமல் இருப்பதற்கும் தங்களது பொழுது போக்கை கழிப்பதற்காகவும் யானைப்பயிற்சி, குதிரைப்பயிற்சி, வாட்போர், அம்பு எய்தல், நீர் விளையாட்டுகள் போன்றவைகளை விளையாடினர். இருப்பினும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் பொழுதைப் போக்கிக் கொள்வதற்காகவே விளையாடினார்களே தவிர இலங்கை மக்களில் எந்த ஒரு மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை . 1896 ஆம் ஆண்டே இலங்கையின் பாடசாலை கல்வி முறையில் “உடற்கல்வி” முதன் முதலாக அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

உடற்கல்வி பாடத்திற்கான அசிரியர் நியமனம் முதன் முதலாக 1896 ஆம் ஆண்டே வழங்கப்பட்டது. மேலும் 1902 ஆம் ஆண்டு எமது நாட்டில் உள்ள பாடசாலைகளில் உடற்கல்வியானது கட்டாய பாடமாக்கப்பட்டது, மேலும் 1947 இல இலங்கையின் கல்வியமைச்சராக இருந்த கௌரவ சீ.டபிள்யு.. டபிள்யு. கன்னங்கரா அவர்களின் மூலமே ஏனைய பாடங்களில் இருந்து விளையாடும் உடற்கல்வியும் பாடமானது தனி பாடமாக கொண்டவரப்பட்டது.

1972 ஆம் ஆண்டு இப்பாடநெறியானது க. பொ. த (ச/த) பரீட்சையில் ஒரு பாடமாக சேர்க்கப்பட்டது. இந்த பாடநெறியினை சிறப்படைய செய்வதற்காக பலாலி, மகரகமை போன்ற ஆசிரியர் பயிற்சி கலாசாலைகளில் விசேட பாடநெறியாக பயிற்றுவிக்கப்பட்டது. 1965 இல் ஆட்சி செய்த அரசாங்கத்தினால் விளையாட்டுத் துறைக்காக தனி அமைச்சும் வழங்கப்பட்டது. கௌரவ, வி. ஏ. சுகததாஸ அமைச்சராக நியமிக்கப்பட்ட காலத்தில் பாடசாலைகளுக்காக அகில இலங்கை ரீதியில் விளையாட்டுப் போட்டிகளை நடத்தவும் திட்டங்களை வகுத்தார். இதன் மூலமாகவே சர்வதேசரீதியில் விளையாட்டுப் போட்டிகளை நடத்தவும் திட்டங்களை வகுத்தார். இதன் மூலமாகவே சர்வதேச ரீதியில் விளையாட்டு தொடர்புகள் இலங்கையில் ஏற்பட ஏதுவாக அமைந்தது . எனலாம். கல்வி வளர்ச்சியில் உடற்கல்வியானது வளர்ந்து வந்தாலும் அவற்றினை மேலும் திறம்படச் செய்ய 1985 இல் பண்டாரவளை கல்வியற் கல்லூரியும், 1993,1994, ஆண்டுகளில் முறையே வவுனியா கல்வியற் கல்லூரியும், அட்டாளைச் சேனை கல்வியற் கல்லூரி என்பவற்றில் விளையாட்டும் உடற்கல்வி பாட நெறிக்கான விசேட டிப்ளோமா கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த போதிலும் இலங்கையில் 1921 ஆம் ஆண்டு ஜெனி கிறீன்னினாவாலால் வலைப்பந்தாட்டமும் கிரிக்கெட்டானது. இன்றைக்கு 160 ஆண்டுகளுக்கு முன் பிரித்தானியாவின் குடியேற்ற நாடாக இருந்த போது ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை நீண்ட காலமாக சர்வசே கிரிக்கெட் கட்டுபாட்டுச் சங்கத்தின் அங்கத்தவராக இருந்த ரேதிலும் 1981 ஆம் ஆண்டு டெஸ்ட்போட்டிகளில் பங்கேற்கும் உரிமையை பெற்றது. 20 ஆம் நுற்றாண்டின் கடைசிப் பகுதியில் 1996 ஆம் ஆண்டு உலகமே வியக்கத்தக்க வகையில் உலக கிண்ணத்தை சுவீகரித்தது. இதே வேளை இலங்கையின் தேசிய விளையாட்டான கரப்பந்தபட்டம் றொபேட் வோல்டர் கமக் என்பவரால் 1916 ஆம் ஆண்டு இங்கு ஆரம்பிக்கப்பட்டது. மேலும் மெய்வல்லுனர் நிகழ்ச்சிகளில் 1948 ஆம் ஆண்டு லண்டனில் இலங்கையை பிரதநிதித்துவம் படுத்திய டங்கன் வைட் பெற்ற வெள்ளிப்பதக்கமே இலங்கையின் இலங்கையில வரலாற்றில் மைல்கல்லாக காணப்படுகின்றது. இதன் பின்பு 1996 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் 100 மீற்றர் சுசந்திக்கா ஜயசிங்க வெண்கல பதக்கமொன்றை பெற்றுக்கொடுத்து பெருமை தேடி தந்தார். மேலும் ஆசியா பேட்டிகள், சார்க் போட்டிகள் என்று நடை பெற்றாலும் எமது நாடானது விளையாட்டுத் துறையில் ஏனைய நாடுகளை விட பின்னடைவில் தான் உள்ளது. பாடசாலை மட்டத்திலும் சரி இவ்வாரான பின்னடைவுக்கு அரசியல் காரணங்களா? அல்லது சமுகத்தில் ஏற்படும் மாற்றங்களா அல்லது விளையாட்டுத் துறையில் போதிய முன்னேற்றம் இல்லையா என்பது ஒரு கேள்விக் குறியாகவே இருக்க்ன்றது.

மைதானத்தில் வெல்கின்றவர் வாழ்க்கையிலும் வெல்வதற்கான ஆற்றலையும் பெறுவார் விளையாட்டுப போட்டிகளில் பங்கெடுக்கின்றவறால் எந்த ஒரு சவாலையும் எதிர் கொள்ள முடிகின்ற மனோ பாவத்தையும் உறுதியான உடற்கட்டமைப்பும் பெற்றுக் கொள்ளக்கூடிய திறமை உள்ளது. "உறுதியான உடலில் தான் உறுதியான மனம் குடியிருக்கிறது" என்பதாக ஒரு கிரேக்க பழ மெழி கூறுகின்றது.

இவ்வாறு 18 ஆம் நுற்றாண்டு காலப்பகுதியில் பொழுது போக்காக ஆரம்பிக்கப்பட்ட விளையாட்டும் உடற்கல்வியும் பின் வந்த காலங்களில் பல்வேறு வகையில் வளர்ச்சியடைந்து இப்பாட நெறியானது நாட்டு மக்கள் அனைவருக்கும் உரியது என்ற வகையில் கல்வியினூடாக மதிப்பளித்து அதன் நடவடிக்கைகளை அரசு செய்து வருகிறது. மேலும் எமது நாட்டில் பாடசாலை மட்டத்தில் இருந்து தான் இத்துறையை மேலும் வளர்க்கக கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றமையால் புதிய கல்விச் சீர்த்திருத்ததிற்கமைய மேலதிக பாடமாக இருக்கும் இப்பாடத்தினை கட்டாய பாடநெறியாக மாற்றி அனைவரும் பங்களிப்பு செய்வோமாயின் எமது நாட்டில் விளையாட்டு உடற்கல்வியை முன்னேற்றமடைய செய்யலாம் என்பதில் ஐயமில்லை.

ஆசிரியர்.
எஸ். ஜீவநேசன்.
மமா/வ/இராகலை. த. ம. வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஆறுமுக நாவலரின் பணிகள்

ஆறுமுக நாவலர் தமிழ் மக்களுக்காக பெரும் தொண்டாட்டியவர். இவர் கருத்தப்பர் சிவகாமி எனும் தம்பதியினருக்கு 12- 12- 1822 ஆம் ஆண்டு புகழ் புறீத்த யாழ் நல்லூரில் இவர் தரித்தார். இளமையில் இவர் கல்வியில் மிகவும் விசுவாசம் கொண்டிருந்தார். தமிழ், பாளி.வடமெழி,ஆங்கிலம் போன்ற பல மொழிகளைக் கற்று பாண்டித்தியம் பெற்றார் நாவலர் இளமை இடை நிலைப் படிப்பினை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூாயீல் மேற் கொண்டு அதனை வெற்றிகரமாக நிறைவு செய்தார். கல்லூரியிலே சுமார் ஏமு ஆண்டுகள் பிரதான தலைமை ஆசிரியராக கடமை புரிந்தார். தமிழ் இலக்கணம் மற்றும் இலக்கியத்தில் மிகுந்த விருப்பம் கொண்டு அறிவு கூர்மையாக விளங்கினார் மேலேநாட்டவர் வருகை காரணமாக சைவமும் தமிழும் இரண்டாம் நிலைக்கு தள்ளப்பட்ட போது அதற்கு பலமாக நின்று பெறும் தொண்டுகள் செய்தவர் என்பது இன்றியமையாதது. இவர் தமிழ் சமுதாயம் வாழ வேண்டும் பணிகள் செய்தார்.

இவர் பல மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தார். இவர் பல மொழிகளில் இலக்கியம் படைத்தார். அதனை தம் மக்கள் விரும்பும் வரையில் இலகுவாக்கினார். இவர் பல நூல்களை வெளியிட்டுள்ளார். இவர் சேனாதிராஜ முதலியார் மற்றும் முத்துக்குமார சுவாமிகளிடம் கல்வி கற்றார். இவர் 1848 ஆம் ஆண்டு வண்ணார்பண்ணையில் பரிகார பாடசாலையையும் 1804 ஆம் ஆண்டு இந்தியாவின் சிதம்பரத்தின் சைவ பரிகார பாடசாலையை நிறுவினார் தமிழுக்கு உண்மையாய் மாபெரும் சேவை செய்தார் இலங்கையில் அந்நியராட்சி நிலவியப்போதும் தமது தமிழ் சமய பணிகளில் இருந்து பயமில்லாம் தமது சமூகத்திற்கு சேவை செய்தார்.

சுவாமி அவர்கள் பல இலக்கிய தொகுப்பை இயற்றினார். என்ன வென்நால் புரணங்கள், திருக்கோயில் வழிப்பாடு பிரபந்தங்கள் என்பவற்றையும் இயற்றினார். அது மட்டும் அல்லாமல் 1505 ஆம் ஆண்டு போர்த்துக்கீசரின் படையெடுப்பால் சீரற்ற நிலையை அடைந்தது போர்த்துக்கீசர் தமது பண்பாட்டையும் மொழியையும், சமயத்தையும் சுதேசிய மக்களிடம் தினிப்பதற்காகப் பல வித அடக்குமுறைகளை கையாண்டனர் சைவ சமயம் புத்துயிர் பெற்று எழத்தொடங்கியது புதிய ஆலயங்கள் கட்டப்பட்டன தமிழில் புதிய இலக்கிய வடிவங்கள் தோன்றின.

ஆங்கிலேயர் தமது மொழியையும் தமது சமயத்தையும் ஆங்கில மொழியை வளர்பபதிலும். அதற்காக எதிரான பிரசாரங்கலை எழுப்பினர் இவர் யாழ் மத்திய கல்லூரியில் கல்வி கற்றார் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதமொழியிலும் மிக்க பாண்டித்தியம் உடையவராக விலங்கினார் தமிழிலும், இலக்கணதிலும், இலக்கியத்திலும் மிகுந்த அறிவும் கொண்டவர் சைவ சமயத்தை மட்டுமன்றி பிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்தை பற்றியும் நன்கு அறிந்து இருந்தார். நாவலர் இவர்கள் தமது பணியில் இருந்து 1848 ஆம் ஆண்டு தொழிலை விட்டு நீங்கினார் காரணம் சமயத்தையும் கல்வியையும் வளர்ப்பதற்கு சமுகப்பணியில் கலந்து கொண்டார்.

மேல்நாட்டவர்களின் ஆதிக்கம் நிலவியதால் சமுகத்தில் ஆலய போதனையும், கூட்டங்கலையும்,பிரசாரங்களையும், விளக்கி பொதுமக்களுக்கு அறிவுறை செய்தார் நாவலர்கள் நிறுவிய பாடசாலைகளுக்குத் தேவையான நூல்களை ஆக்கி வெளியிட்டார். 1849 இல் நல்லூரிலே வித்தியாநபாலன இயந்திரசாலை என்ற பெயரில் ஓர் அச்சியந்திர சாலையை நிருவினார் சைவ வினாவிடை இலக்கண சுருக்கம் இலங்கைப் பூமி சாத்திரம், சிவாலயதரிசன வதி, சிதம்பர மான்மியம் முதலான நூல்களை எழுதி வெளியிட்டார். அத்துடன் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நன்னெறி,போன்ற நூல்கலையும் வெளியிட்டார்.

இவர் கஞ்சித் தொட்டித் தருமம் செய்தார். இவர் செய்த தொண்டுகள் சேவைகள் என்பன காரணத்தால் இவருக்கு பாரதத்தில் உள்ள திருவாடுகறையாதி எனும் நாவலர் என்ற பெரும்பட்டத்தையும் பெற்றார். இலங்கை தமிழரின் சமய தமிழ் பணிகளில் வெற்றி பெற்று ஆறுமுக நாவலர் என்றும் போற்றத்தக்கவராக விளங்கினார்.

இவர் போன்ற சைவப் பெரியார்கள் எமது சமூகத்திற்கு பச்சை கொடி கட்ட வேண்டும், இவர் போல் நாம் ஒவ்வொறுவரும் தமிழ் சமய பணிகளுக்கு பணியாற்ற வேண்டும்.

ஆர்.சமித்குமார்
தரம் - 13கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களையும் கூட்டிச்செல்

கணணி மின்னஞ்சல்
இணையம் தொலைநகல்
என்று உயர உயர
பறக்கும் வித்தியாரமே
எங்களையும் சற்று
குனிந்து பார்

ஒரு சமுகத்தின் மாறுதலுக்காய்
விடிவுக்காய் வித்திடும்
ஞானமே !
உன் புதிய திட்டம்
எங்களையும் உயர்விக்க
உதவிக்கரம் நீட்டாதா?

உன் உள்ளீடுகள்
சுகமா அன்றி சுமையாக எங்களை
சுழல வைக்கிறது
உனது புதிய பரிணாமம்
எங்களையும் மலைக்க வைக்கிறது
உன் பயமுறுத்தலால்
தோட்டம் தோட்டமாய்
நாய் வாலாய்
எங்கள் இடைவிலகல்

ஆடை தொழிலகம் நோக்கி
கடைதெரு கதவு நோக்கி
பண பங்களா நோக்கி
குத்தகை தோட்டம் நோக்கி
இது தொடர்ந்தால்

உனது நோக்கமும்
மலையகமும் இணையாத
தண்டவாளமாகி விடும்
இதனால்......அது எங்களையும் கைகோர்த்து
கால சுழலோடு
காத்திரமாய் கால் பதித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பாரதியார் இன்றிருந்தால்.... ” என்ற தலைப்பில் ஒரு கற்பனை ஓவியம்

உலக மகாகவி எனப் போற்றிப் புகழப்படும் சுப்பிரமணிய பாரதியார் முப்பத்தொன்பது ஆண்டுகள்தான் இவ்வுலகில் இருந்தார். எட்டயப்புரத்தின் அட்சயபாத்திரமாக தோன்றி 'பார் அது யார்' எனறு உலகத்தோர் வியந்து போற்றும் அளவிற்கு பாட்டாலே இவ்வையத்தை பாவிக்க வந்த பாரதியார் 1882 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 11ஆம் திகதி பிறந்தர். இவர் 1921 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12 ஆம் திகதி இவ்வுலக வாழ்வை நீத்தார். புாரதியார் அந்த குறுகிய காலகட்டத்தில் தமது சிந்தனையாலும். செயலாலும் பல்வேறு விடயத்திற்கு சாதனைகளை புரிந்துள்ளார். ஆந்தவகையில் இவரை வரலாறுபடைத்த வரலாற்று நாயகன் என்றுதான் கூறவேண்டும்.

மேலும் இவரது சிந்தனைகள் கவிதை வடிவிலும், உறைநடை வடிவிலும் எமக்கு கிடைக்கின்றன. இவை “தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிகெட்ட” பாரத சமுதாயத்தின் போக்கினை மாற்றியமைக்கப் பேருதவியாக இருந்தன. பாரதியார் வெறுமனே கற்பனை புலவராக மட்டும் திகழ்ந்தவரல்ல .தாம் வாழ்ந்த உலகம், தேசம், நாடு என்கின்ற மட்டங்களில் இவரின் சிந்தனை சிறகடித்து “மனிதகுலம் சுதந்திரமாக வாழ வேணடும் வறுமை, சாதிக்கொடுமை, பெண்ணடிமைஎன்பன நீங்கி விஞ்ஞானத்துறையிலும், பொருளாதார ரீதியிலும் முன்னேற்றமடைந்த சூழலை காணவேண்டும்” என இவர் ஆசைப்பட்டார். இத்தகைய பாரதி இன்று இருந்திருந்தால் எனனென்ன செய்திருப்பார் என்று சிந்தித்து பார்ப்பது நாம் அனைவரின் தலையாய கடமையே ஆகும்.

அந்தவகையில் பாரதி, பாரதநாட்டு அந்நியரின் ஆட்சியிலிருந்துவிடுபட்டு, சுதந்திரநாடாக உலக அரங்கில் சிறந்த திகழ்வதைகண்டு துள்ளிக் குதித்து குதூகலித்திருப்பா. அதாவது,

“ஆடுவோமே பள்ளு பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் எனறு ஆடுவோமே”

என தாம் பாடியது

வெறும் கற்பனையல்ல, “உண்மை, உண்மை” என்று உறத்துக்கூறிஆனந்த களிப்பெய்திருப்பார்

தேசியம் பேசிய பாரதியார். தம் செந்தமிழ் நாட்டை மறக்கவில்லை. செந்தமிழ் நாடென்ற வார்த்தையைக் கேட்டவுடனேயே இவர் செவியில் தேன் வந்து பாய்கிறதாம். அதாவது பாரத நாடே விடுதலை அடைந்து விட்டதாக எண்ணி “தாயின் மணிக்கொடி பாரீர்! அதைத்தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்” என்று பாடியதோடு மட்டுமன்றி. வருகின்ற பாரதத்தை “ஒளி படைத்த கண்ணனாய் வா,வாவா உருதிக்கொண்ட நெஞ்சாய் வா,வாவா” என்றுவரவேற்கின்றார். அப்போதேஅப்படி பாடிய பாரதி இன்று தமிழகம் மலர்ந்திருப்பதனை கண்ட எவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ந்திருப்பார் என்பதனை வார்த்தைகளால் சொல்ல முடியாதள்ளது. அதேவேளையில் வேறு நாட்களில் தமிழ் மக்களது அடிமைகளாய் வாழும் நிலையினை போக்கவும் போர்க்கொடி உயர்த்திருப்பார்.

வறுமையின் பிடியிலே மக்கள் துடிப்பதை கண்டு அனறு கொதித்தெழுந்தார். பாரதி, அதாவது ஒரு நாடு சுதநநந்திரம் அடைந்துவிட்டால் மட்டும் போதாது, அது பொருளாதார ரீதியாகவும் விடுதலை அடைய வேண்டும். என்பதனை உணர்ந்த பாரதி, வறுமையினை ஒழிப்பதற்காக,

" தனியொருவனுக்கு உணவில்லையெனின் --- இந்த ஜகத்தினைஅழித்திடுவேம்"

என்று பாடினார்.

இன்றும் எத்தனையோ மக்கள் அரைவயிற்றுக்கு கஞ்சிக்கே அல்லற்படும் நிலையைக் கண்டு அதனை மாற்றியமைக்க முனைந்திருப்பார். மேலும் பெண்களின் விடுதலையைப் பிரக்ஞ பூர்வமாக எண்ணி அன்னை நிவேதிதாதேவியை ஞானகுருவாக கொண்ட பாரதி அவரின் வழிகாட்டலில் பேரில் பாலியல் விவாக எதிர்ப்பு, திருமணவிடயத்தில் பெண்களின கருத்துக்களுக்கு மதிப்பளித்தல், விருப்பமில்லாத கணவரிடமிருந்த விவாகரத்து பெறும் உரிமை.

பொண்களுக்குச் சொத்துரிமை, கணவா் இறப்பின் மறுமணம்புரியும் உரிமை, பெண்களை கௌரவமாக நடாத்துதல், பெண்சிசு கொலை தடுத்தல், பயம் காரணமாகவும் ஏற்படுத்தப்பட்ட அநாவசிய நிபந்தனைகளைத் தகர்த்தல், உயர்ந்த கல்வி, அரசியல் பங்கெடுக்கும் உரிமை முதலான விடயங்கள் தொடர்பில் ஓங்கி குரல் கொடுத்த பாரதி இன்றிருந்தால் பெண்களின் நிலையில் எவ்வளவு முன்னேற்றம் காணப்படுகின்றது. என்றும் நான் கண்ட புதுமைப்பெண்களா! இவர்கள் என்றும; வியர்ந்திருப்பார். உதாரணமாக,

"நிமிர்ந்த நன்னடை நேர் கொண்டபார்வையும்,
நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெரிகனும்
நிமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதா் திறம்புவதில்லையாம்"

எனும் பாடலுக்கேற்ப

ஞானசெருக்குடைய பெண்கள் பலரை பாரதி பார்த்திருப்பார். இந்திரகாந்தி, மகிறட் தச்சர் ஆகியோர் நாட்டின் ஆற்சிதலைமையை எற்றிருப்பதனை கண்டு அளவிலா மகிழ்ச்சி அடைந்திருப்பார். எனினும், பாரதியார் விரும்பிய சமத்துவம் எல்லாத் துறைகளிலும் ஏற்படவில்லை. சீதனக்கொடுமை இன்னும் நிலவுவதைக் கண்டு சீறியெழுந்திருப்பார். தமது பாட்டுதிரத்தாலே சீதனம் வாங்கும் ஆண்களை தலைகுனிய வைத்திருப்பார். பொருளாதார ரீதியல் பாரதியார் கண்ட கனவுகள் எல்லாமே நனவாகிக் கொண்டிருக்கின்றன. அதேவேலை விஞ்ஞானத் துரையிலே பாரத நாடு பாரிய முன்னேற்றம் கண்டுக் கொண்டிருக்கிறது. பாரதி விரும்பியது போல "காசி நகர்ப் புலவர் பேசும் உரையைக்காஞ்சியிற் கேட்பதற்கேறப" வானொலியை மட்டுமின்றிச் செய்மதியை விண்வெளிப் பயணங்களை மேற்கொள்ளவும் இந்தியா முனைந்து வெற்றியீட்டியதனைக் கண்டு வியப்படைந்திருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பாரத நாடு விவசாயத்துறையிலும், தொழிற்துறையிலும் கண்டிருக்கும் முன்னேற்றம் பாரதியாருக்கு மிக்க மகிழ்ச்சியை அளித்திருக்கும் நீதி, உயர்ந்த மதி, கல்வி, அனபு ஆகியன உடையவர்களையே பாரதி உயர்ந்தவர்களாக கருதினார். ஆனால், இன்றோ இனிய பண்புகளே இல்லாத பலர் மேலோராகக் கணிக்கப்படுவதனைன் கண்டு மனம் வெதும்பியிருப்பார்.

பொதுமக்கள் அனைவரும் விளங்கிக் கொள்ள வேண்டும் எனும் ஆசையுடன் கவிதைகளை யாத்தார். அதாவது பாரதி ஒரு போதுமே குறுகிய வட்டத்துகுள் நின்று சிந்திக்கவோ, பாடல் புனையவோ இல்லை. அதனால் பாரதியின் பாடல்கள் எல்லோராலும் ஏற்கக்கூடியதாய் இருந்தது. ஆனால், இக்கால புதுக்கவிதைகள் பொதுமக்களுக்கு விளங்காத விதத்தில் படைக்கப்பட்டு வருவதை கண்டு சிறியிருப்பார்.

இந்தவகையில் புறத்திலே ஏற்பட்ட வியத்தகு மாற்றங்கள் பாரதிக்கு மகிழ்ச்சியை ஊட்டினாலும் மக்கள் அகத்திலே, மனப்பங்கிலே தாம் விரும்பிய மாற்றங்கள் ஏற்படாதிருப்பதினைக் கண்டு சும்மா இருந்திருக்கமாட்டார். தமது பாட்டுத்திறத்தாலும், செயலாலும் இந்நிலையை மாற்றியமைக்க நிச்சயம் பாடுப்பட்டிருப்பார்.

ஜே.கிரிஜா
12. கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளுடன்

மேற்கு வானில் சூரியன் மறையத் தொடங்குகின்றான். செல்வானம் செவ்வனே மறைந்து வானத்தின் அழகும் மறைந்துகருமை படர்ந்து இருளகின்றது. அதனை இரசித்துக் கொண்டிருந்த குயிலியின் மனதும் அங்கனமே இருள் சூழ்ந்து சோகம் மனதை வருள்கிறது.

குயில் பதினேழு வயது நிரம்பிய பெண். பார்ப்போரைக் கவரும் இளமையின் வனப்பும் அழகும் ஒருங்கே பெற்று விளங்குகின்றாள். ஆமாம் உண்மையும் அதுதான் குயிலி மட்டக்களப்பு நகரில் உள்ள பிரதான பாடசாலையில் பெண்கள் தங்கும் விடுதியில் ஹோம் ஒன்றில் கா. பொ. த. உயர் தரம் கற்றுக்கொண்டிருந்தாள். அழகு நிரம்ப அமைந்தது போலவே கல்வியிலும் சிறந்து விளங்கினாள் குயிலி.

இவ்வாறு குயிலி வானத்தை வெறுப்பாவையுடன் வெளித்துப் பார்ததுக் கொண்டு இருக்கும் வேலையில் "ஏய் குயிலி: ஏய் குயிலி" என்று அவளோடு ஹோமில் படிக்கும் மாணவியும், நண்பியுமான அபினாயா குரல் கொடுத்து அவளது சிந்தனையையும் பார்வையையும் திசை திருப்பினாள்.

அவளை என்ன எனபது போல் குயில் கண்களால் பார்த்தாள். கவிதாமேடம் என்ற பெயரைக் கேட்டதும் தரையில் அமர்ந்திருந்த குயிலி எழுந்து உடனே ஓடிச் சென்றாள். கண்ணிமைகளை பட்டாம் பூச்சியின் சிறகினைப்போல் படபடவென இமைத்தால் . தனது கையால் இனனோரு கையை கிள்ளிப்பார்த்தாள் இது கனவல்ல நிஜம்! நிஜம்!

அவளுக்கு நாவறண்டு கண்களில் இருந்து பொல. பொல வென நீர் மலை சொரிந்தது என்ன் செய்வது எனத் தெரியாமல் தம்பி என வீரிட்டவாறு கத்தி ஓடி கட்டியணைத்து முத்த மழை பொழிந்து ஏங்கி ஏங்கி அழத் தொடங்கினாள்.

அவள் அழுவதைப் பார்த்து பதிமூன்று வயதுடைய தம்பி ரவீனும் அழத் தொடங்கினான். ஒன்றுமே பேசாமல் இருந்து கொண்டிருந்த கவிதா மேடமும், நண்பிகளும் அவர்களைத் தேற்றத் தொடங்கினர்.

"குயிலி, அழாதிங்கடா இங்க பாருங்க நீங்க அழ உங்க தம்பியும் அழுகிறான். உங்க தம்பி கிடைச்சது உங்களுக்கு எவ்வளவு சந்தோசம்" கவிதா மேடம் குயிலியின் தோளில் கையை வைத்து ஸ்பரிசத்தோடு தேற்றினாள்.

"குயிலி!,ரசுக்க தம்பியை நான் கூட்டிற்று எங்க வீட்டுக்கு போறன். சில நாட்களின் பின் ஆண்கள் விடுதியில் சேர்ப்பம். உடனே தம்பியை எங்களிடமிருந்து பிரிக்க இயலாது ஏன் என்றால் தம்பியும் நீங்களும் பல மாதங்களாக பிரிந்து இருந்தனீங்க கொஞ்ச நாளைக்கு உங்களோடு சந்தோசமா இருக்கட்டும்" என கவிதா மேடம் குயிலியிடம் ஆறுதல் வார்த்தைகளைச் சொன்னாள்.

"உங்களுக்கு எப்படி நன்றிகடன் செய்யப் போறன் என்று தெரியல்ல மேடம்" எனச் சொல்லி மீண்டும் குலுங்கி, குலுங்கி அழத் தொடங்கினாள். குயிலி என்ன இது சின்னப் பிள்ளை மாதிரி அழுதீங்க தம்பியை பாருங்க எப்படி இருக்கான தம்பியை குயிலி கையில் பிடித்து "நவீன் மேடத்தோடு இப்ப போ நாளைக்கு ஸ்கூல் முடிந்தும் வா"! எனச் செல்ல அவனும் அதற்கு தலையசைத்து கவிதா மேடத்துடன் சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்பு அவளுக்கென கொடுத்த அறையினுள் சென்று புத்தகத்தைப் புரட்டினாள். படிப்பு ஏற மறுத்தது. அவளுக்கு வீடும் இந்த அறைதான். புத்தகத்தை மூடிவிட்டு குயிலி அவளது இனிமையான அந்த நாட்களை மீட்டத் தொடங்கினாள்.

பாசமிகுந்த அம்மா பரமேஸவரி, அப்பா சிவப்பிரகாசம், அண்ணா ராஜேஸ், தம்பி ரவீன், தங்கை ரத்தினா இரண்டாவது பிள்ளையாக குயிலி குடும்பத்தில் எல்லோரையும் விட குயிலி மிகவும் துடுக்குத்தனம் அண்ணாவின் பொருட்களைத் திருடுவதும் அவன் தேடுவதைப் பார்த்து இனபுறுவதும் பின்பு அதை அவனிடம் கொடுத்து வென் வாயால் திட்டு வாங்குவதம், தம்பி, தங்கையுடன் விளையாடுவதும் எவ்வளவு சந்தோசமான நாட்கள் அந்த சந்தோசம் மீண்டும் கிடைக்குமா? குயிலிக்கு இல்லை, இல்லை என வாய்விட்டுச் சொல்லிக் கொண்டிருந்தாள் தன்னையும் அறியாதவளாய்.

உணவு சாப்பிட வரும்படி அழைத்து போக வந்த மேற்றன் அம்மா “குயிலி! ஏன்ன? இல்லை” என்று கேட்கவே குயிலி திடுக்கிட்டாள். ஒன்றும் இல்லை அம்மா எனச்சொல்லிக் கொண்டு உணவு அருந்தச் சென்று அனைவருடனும் இருந்து உணவை அருந்தினாள். ஆனால் குயிலிக்கு உணவு ஏனோ பிடிக்கவில்லை, உணவு உண்பது போல் சாடை செய்து விட்டு பின் தனது அறையினுள் நுழைந்தாள்.

குயிலிக்கு படிப்பு வர மறுத்தது. மீணடும் மீண்டும் நினைவுகளையே அசைப்போடத் தொடங்கியது அவளது மனது திருகோணமலையில் நிலாவெளி என்னும் இடமே குயிலின் சொந்த இடம். அப்பா தபால் அதிபராக கடமையாற்றினார். ஏவ்வளவு சந்தோசமான மனநிறைவான குடும்பம் 2004 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 26 ஆம் திகதியை மறக்க முடியுமா? பல ஆயிரம் மக்கள் கடல் கொள்ளை கொண்ட கோர சம்பவம் ஞாயிற்றுக்கிழமை குயிலி ரீயுசன் கிளாசுக்கு 2 மணிக்கே புறப்பட்டத் தயாரானாள்.

“ஏய் குயிலி இன்றைக்கு அடி வாங்கவா சாப்பிட்டு போடி, சாப்பிடாம மட்டும் சென்றால் என்ன செய்வனோ தெரியாது” என அதட்டினாள் அவளது அம்மா , எனக்கு வேணாம்மா பிளிஸ் நேரம் ஆகிவிட்டது” எனச் சொன்னாள்.

8.00 மணிக்குத்தான் ரியுஸன் கிளாஸ் இன்னும் ஒரு மணித்தியாலயம் இருக்கு சாப்பிடு என வற்புறுத்தி உணவு அருந்த வைத்தாள். அது தான் குயிலி அம்மாவின் கையால் உண்ட கடைசி உணவு சாப்பாடு முடிச்சதும் புத்தகத்தை அவசரமாய் எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள் அம்மா அதற்கிடையில் ஆயிரத்தெட்டு கவனம் சொல்லி வழமை போல் வழியனுப்பினாள்.

குயிலியும் சந்தோசமாகச் சென்றாள். ரியுசன் வகுப்பில் கற்றுக் கொண்டிருந்த குயிலிக்கு சனத்திரள் பாதையூடாக ஓடுவது தெரிந்தது. என்ன என்று வெளியில் வந்து பார்த போது தான் மக்கள் அவதியுற்று அல்லல்பட்டு கத்தி ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் ஆட்களேடு ஆட்கள் முட்டி மோதி அங்கும், இங்கும் தலைத் தெரிக்க ஓடிக்கொண்டிருக்கிறார்கள். அனைத்து மாணவர்களும், ஆசிரியர்களும் சின்னா பின்னம் என சிதறி ஓடினார்கள் அவர்களோடு குயிலியும் ஒருத்தியாய் ஓடினாள்.

மக்கள் தமது உறவுகளை அழைத்துக் கொணடே அழுது புலம்பினார்கள். குயிலிக்கு தனது குடும்பத்தவர்களின் நினைவு வந்தது. அவள் சென்றடைந்த கட்டடத்தினுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய், தந்தை, சகோதரர்களைத் தேடினாள். அங்கு அவர்கள் இல்லை. அவளுக்கு தொண்டைக்குள் என்னவோ செய்வது போல் இருந்தது. மக்கள் ஓடிவரும் எதிர்த்திசையை நோக்கி அப்பா, அம்மா என்று அழைத்தவாறே அழுது கொண்டு வீட்டுக்கு ஓடத் தொடங்கினாள். பாதை எல்லாம் கடல் நீர் பரவியது அதனால் ஓட இயலாமல் கால் துவண்டது குயிலிற்கு. அவள் ஓடி வருவதைப் பார்த்த அவளின் பெரியப்பா குயிலி எங்கே செல்கிறாய் என்ற வண்ணம் அவள் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனார். இவ்வளவு தான் குயிலிக்குத் தெரியும். தனது சுயநினைவை இழந்தாள்

எப்போது கண் விழித்துப் பார்த்தாள் என்பது அவளுக்குத் தெரியாது. கண் விழித்ததும் அவளை கட்டியணைத்து அவளின் பெரியம்மா, பெரியப்பா அழத் தொடங்கினார்கள். அவளுக்கு ஒனறுமே புரியவில்லை பின்பு தன் தனது குடும்ப அங்கத்தவர்களை கடல் கொள்ளை கொண்டததை அவள் புரிந்து கொண்டாள், சுனாமி எனனும் சூர அலையால் கொள்ளை போன தனது குடும்பத்தை நினைத்து குயிலி அழுது கொண்டே இருந்தாள். யாருக்கு யார் ஆருதல் கூறுவது என்றே தெரியாமல் ஒவ்வாருவரும் மனம் உடைந்து போய் உயிர், உடமைகளை இழந்து தனிமையில் தவித்தார்கள்.

இவ்வாறு நாட்கள் பல வாரங்களாயின வாரங்கள் மாதங்களாயின சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் பாடசாலைகள், ஆலயம், அரசகட்டிடங்கள் என்பவற்றில் தஞ்சம் புகுந்து இருந்தாகள் அதில் குயிலியும் அவளது பெரியப்பா குடும்பத்துடன் ஒரு பாடசாலையில் தங்கியிருந்தாள.

சில நாட்களின் பின் ஆதரவு அற்ற பிள்ளைகளை யுனிசெப் நிறுவனம் பாடசாலை விடுதிகளில் விட்டு கல்வி கற்க நடவடிக்கை எடுத்தது. அவ்வாறு மட்டக்களப்புக்கு கொண்டு வந்து சேர்க்கப்பட்டவர்களில் ஒருத்தி தான் குயிலி.

மட்டக்களப்பிற்கு வந்து ஒன்றரை வருடம் முடிந்து விட்டது. அதன் பினபே இறந்ததாக அவ்வளவு நாளும்நினைத்து இருந்த தம்பி ரவீனும் ஒரு குடும்பத்தாரால் காப்பாற்றப்பட்டு நிறுவனம் ஒன்றின் மூலம் அவளது அக்கா குயிலியைக் காண்கின்றான்.

இவ்வாறு யோசனையில் ஆழ்ந்திருந்த குயிலி கண்ணயர்ந்து தூங்கி விட்டாள். தூக்கத்தில் கனவும்கண்டாள். அவள் வாழ்ந்த வீடு, அம்மா, அப்பா, அண்ணா, தம்பி. தங்கை கலகலப்பாக சண்டை பிடித்து சந்தோசமாக உணவு அருந்துகின்றார்கள். அதே அம்மாவின் கண்டனப் பேச்சு அம்மா! என்று கூறிய வண்ணம் கண் விழித்தாள். இதுவும் நிஜம் அல்லவே கனவு! கண்ணீர் கண்களில் சுரந்தது. அக் கண்ணீர் நிலத்தில் சிந்துவதற்கு முதல் கண்களை இமைத்தாள் ஒரு முடிவுக்கு வந்தவளைப்போல்

கடிகாரத்தைப் பார்த்தாள் அதிகாலை ஐந்து மணி ஆகிக்கொண்டிருந்தது.

"நினைவுகளுடன் வாழும் குயிலிக்கு!
நினைவு எப்போ நிஜமாகும்"

முற்றும்

ஏ. என். நிஷாந்தி
தரம் - 12, கலைப்பிரிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போசிப்பதல்லவா உன் வேலை....

எத்தனை துறைகள்
இருந்தாலும்
நீ ஈன்றெடுத்த
பிள்ளைகள்
அத்தனை துறைகளிலும்
சரித்திரம் படைத்திடும்
சாதனையாளர்களாய் ..........

இமயம் போல்
உயர்ந்து நிற்கும்
இராகலை தமிழ் மகா வித்தியாலயமே.......
இமயத்தை விடவும்
உயர்ந்து விட்டாய்
சாதனையில் நீ........!
உனை கவியெழுத
ஆசை கொண்டேன்
எனை எழுதப் பழக்கியவளும்
நீ தானே.........
புகழ்ந்து பேசிட
எத்தனித்தேன்
எனை பேசப் பழக்கியவளும்
நீ தானே............

வாழ்த்துகின்றேன்!
வணங்குகின்றேன்!
எத்தனையோ ஜீவன்களுக்கு
கல்வி சுவாசத்தை
கொடுத்து உயிர்பித்த உன்னை !

பெருமைக்குரியவளே
இப் பிரதேசத்தவர்களின்
வைரமானவளே
அறுபது ஆண்டுகள்
கடந்து வந்து விட்டாய்
பல்லாண்டுகள் பாரில் மிளிர்வாய்
வாழ்கவென வாழ்த்துகிறேன்
வைர வரி கொண்டு..........!

செ.ஜுட்பெனடிக் (ஆசிரியர்)
இ.த.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுகத்தில் பாடசாலை

ஒரு பாடசாலையின் பரிணாம ஓட்டத்தில் வைர விழா ஒருமைல்கல், இதனால் சமுகம் இப்பரினாம வளர்ச்சியில் தனது பங்கினை செலுத்தியுள்ளது குறித்து உவகை ஏற்படுகின்றது. இது இயல்பான சமுக இயங்கியல் போக்கு.

சமுக நிருவனங்களில் பாடசாலை முதன்மை பங்கினை வகிக்கின்றது. அதன் வகிபாகம் பன்செயல் தழுவியதாகும் பாரதி கூறியதுபோல் ஆயிரம் அன்ன சத்திரங்கள. உருவாக்குவதற்குமேலான சேவை கல்வி நிறுவனங்களை ஏற்படுத்துவதாகும்.

மலையக சமுகம் கல்வியில் பின் தங்கியுள்ளது என்பது வாய்பாடாகியுள்ளது. கல்வியில் பின் தங்கியள்ளதாக அன்றி கல்விப் போதனையில் பின் தங்கியுள்ளதா என்ற வினா காலோசிதமானது. ஏனெனில் ஆசிரியர் அளனி அவர் தம் உயர்கல்வித் தகைமைகள் உயர்ந்தள்ளன அதேவேளை வளநல நிலைமையும் விரிவடைந்துள்ளது. இத்தகைய பின்புளத்தில் பாடசாலை சமுக வளர்ச்சியும். முன்னேற்றததிலும். மாற்றத்திலும் பாரிய பங்கினை வகிக்கின்றது: வகிக்க வேண்டும், இவ்வகிபாகம் ஆசிரியப்பணி ஊடாகவும், ஆசிரியத்துவத்தினுடாகவும் உதயமாகின்றது.

ஆயிரத்து தெள்ளாயிரத்து அறுபதுகளில் மலையகத்தில் சமூக விழிப்புணர்வு ஏற்பட்டது இதற்கு முன்னரும் விழிப்புனர்வு முகிழ்ந்தள்ளதற்கான தடயங்கள் உண்டு, எனினும் அக்கால கட்டத்தினை விழிப்புனர்வு கட்டமென்று கூறுவதற்கு விசேட காரணிகள் உண்டு. அதில் ஒன்று ஆசிரியர்களின் அவேசம் சமூகப் பிரவேசமும் பிரவாகமும் இப்பிரவாகத்தின் வளர்நிலை போக்கு இன்றைய தரிசனநிலையாகியுள்ளது. இத்தரிசன போக்கு அடுத்தக்கட்ட பரினாமத்தினை ஆசிரியர் குழத்திலிருந்து சமூகம் எதிர்பார்க்கின்றது.

சமுகத்தினால், சமுகத்திற்காக உருவான நிறுவனமே பாடசாலை. பாடசாலை இல்லாத சமூகம் இரக்க முடியும் இருந்துள்ளது. அதனால் சமுகமின்றி பாட சாலையை முடியாது சமுகமே பாடசாலையை போஷிக்கின்றது. இப்போஷனையில் பயன் பெறுவது அசிரிய சமுகம்.

மலையக மக்கள் வறியோர் எனினும் தேசிய பொருளாதாரத்தில் அவர்களது பங்களிப்பு கணிசமானது இதன் முலம் இந்நாட்டின் இதர துரைகள் பயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுகின்றன அதே போல் மலையக ஆசிரியசமுகம் பயன்பெறுகின்றது. ஆதனால் இவர்களது சமுகப் பெறுமானம் அளப்பெரியது. இதனை அரிவதும், உணர்வதும் உவப்பானது.

இந்த உவப்புணர்வு சமுகத்தில் பிரதிபலிக்கும் போது சமுக உவபபுணர்வாக பரிமளிக்கும். மலையகம் இனறு எதிர்பார்ப்பது இதற்கு உவர்ப்புணர்வாகும்.

சமுகத்தில் ஒரு சாரார் விளிம்பு நிலைக்காளாக்கப்படுகின்றனர். அவ்வாறான அவல நிலைக்காளானோரில் மலையகத்தாரும் அடஙகுவர். ஆரசியல், பொருளாதாரம், பாதுகாப்பு போன்ற விடயங்களில் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டவர்களாக மலையகத்தார் உள்ளனர். இந்நிலையிலிருந்து விழித்தெழவும், விலங் கொடிக்கவும் கல்வியே காத்திரமான கருவி இக்கருவியினை கூர்மையாக செயற்படுத்துவது கல்விசார் நடவடிக்கைகளின் சம்மந்தப்படுபேரின் கடமை என்பதனை வலியுறுத்த தேவையில்லை. நாட்டின் குடித்தொகையில் நமக்குக் கிடைக்க வேண்டிய சேவையாளர் வீதம் எவ்வளவு என்று கணக்கிடும்மளவுக்கு நாம் தேறியுள்ளோம். இத்தோற்றத்தினை சமுக வளர்ச்சி, உயர்ச்சி மாற்றம் ஆகியவற்றில் பாச்சல் வேண்டும். அதுவே சமுகத்தில் பாடசாலை. பாடசாலைகளுக்கான பங்களிப்பாகும்.

பீ. மரியதாஸ்.
முன்னால் கல்விப்பணிப்பாளர்
வலப்பனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைர விழா இலட்சினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org